திருமறை விளக்கம்

யோவான் எழுதிய நிருபங்கள்

A. Robin McGlashan.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய *7* ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் *200* ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு *10:8*) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

திருமறை விளக்கம்

யோவான் எழுதிய நிருபங்கள்

G.B. Sathyanesan, B.A.

திருப்பணிவிடையாளர் இறையியனூல் வரிசை

Published for the C. S. I. Theological Series
by the Bishop Gell Bible Examination Committee
Diocese of Tirunelveli.

Editor: **Rev. S. Daniel Abraham,** B. D., S. T. M.
(Convener, B. G. B. Examination Committee)

FIRST PRINTED 1969

Printed at the Thomas Printing Press, Palayamkottai.

பதிப்புரை

பரி. யோவானின் நிருபங்கள், குறிப்பாக முதலாம் நிருபம் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு மிகவும் பயனளிக்கும் ஒன்றாகும். ஒளி, ஜீவன், அன்பு என்பவை கிறிஸ்தவ வாழ்க்கையோடு எவ்வாறு தொடர்புடையன என்று இங்கு விளக்கப்பட்டிருப்பதுடன், தங்களையே கடவுளுடைய பிள்ளைகளென மதித்து, மற்றவர்களை கூறை கூறுபவர் தங்களைப் பரிசோதித்து அறிய ஒரு சோதனை நிருபமாகவும் இது அமைந்துள்ளது.

இந்த நிருபங்களின் இவ்விளக்கவுரை ஆக்கியோன், கனம் A. R. McGlashan ஐயரவர்கள், திருப்பணி விடையாளர் இக்கருத்துக்களை நன்கு அறிந்துகொள்ளும் நோக்கத்துடன், இந்தியப் பின்னணியத்தில் இந்து சமயக் கருத்துக்களுடன் ஒப்பிட்டு, மிகவும் எளிய நடையில் இந்நூலை ஆக்கித் தந்துள்ளனர். ஆங்கிலத்தில் எழுதி தமிழில் மொழி பெயர்ப்பதால் கருத்துக்கள் சிதைவு படக்கூடும் என்ற நோக்கோடு நேரிடையாக தமிழிலேயே அதிக முயற்சி எடுத்து எழுதினர். அவர்களது முயற்சியையும், பாண்டித்தியத்தையும் வெகுவாய்ப் பாராட்டுகிறோம். இந்நூலை ஊன்றிப் படித்துப் பயனடைவதனாலேயே அவர்களுக்கு நாம் நம் நன்றியை தெரிவிக்கக் கூடும்.

படித்துப் பயனடைவீர்களென நம்புகிறோம்.

மறுரூபத்திருநாள், 1969 } சா. தானியேல் ஆபிரகாம்,
திருமறையூர். } பதிப்பாசிரியர்.

நான்முகம்

இந்தச் சிறு நூல் குருப் பட்டம் பெறாத சபை ஊழியர்களுக்காக எழுதப்பட்டுள்ளது. அவர்களுக்கு மிகவும் தேவையானது, வேதத்தின் உண்மைகளைப் புரிந்து கொள்ளவும் அவற்றைச் சபை மக்களுக்கு விளக்கிக் காட்டவும் உதவும் ஒரு நூல். எனவே இந்நூலில் நான் இறையியல் ஆராய்ச்சிகளிலும் தர்க்கத்திற்குரிய காரியங்களிலும் அதிகமாக இறங்கவில்லை. அத்தகைய காரியங்களைப் படிக்க விரும்புவோருக்காக நான் கூடுதலான சில குறிப்புக்களைத் தனியாகச் சேர்த்துள்ளேன். அவை சிறிய எழுத்துக்களில் அந்தந்த வசனங்களின் விளக்கவுரையின் கீழ் அடிப்பக்களில் உள்ளன. நான் இந்த நூலை எழுதுவதில், யோவான் அக்காலச் சபை மக்களுக்கு என்ன செய்தியைத் தர முயன்றார், கடவுள் இந்த நிருபத்தின் மூலம் நமக்கு என்ன செய்தியைத் தர விரும்புகிறார் என்கிற இரு கேள்விகளுக்கு விடை அளித்தல் வேண்டும் என்பதே என் நோக்கமாயிருந்தது. இவ்வாறு எழுதப்பட்ட இந்த நூலைப் படிக்கின்ற ஊழியரல்லாத ஏனைய சபையார் பலரும் பயன் அடைவர் என நான் ஆண்டவருக்குள் நம்புகின்றேன்.

நான் 1954ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பரிசுத்த வேதாகமத்தின் திருத்திய மொழிபெயர்ப்பினை அடிப்படையாக வைத்து இந்த விளக்கவுரையை எழுதியுள்ளேன். இதனை வாசிப்போர் அந்த வேதாகம மொழிபெயர்ப்பினைப் பக்கத்தில் வைத்து இதனோடு சேர்த்துப் படிப்பது பயனுள்ளதாகும். அது அவர்களுக்கு இல்லையெனில், வேறெந்த மொழி பெயர்ப்பினையும் சேர்த்துப் படிக்கலாம். எப்படியாயினும் இந்த விளக்கவுரையை

மட்டும் வாசித்தால், பயனில்லை. சபை மக்கள் கடவுள் எழுதுவித்தருளிய வார்த்தையைப் படித்துத் தியானித்துத் தங்கள் ஆன்ம உணவாக உட்கொள்ளுமாறு இச்சிறு நூல் அவர்களைத் தூண்டட்டும் என்பதே எனது பிரார்த்தனை.

நான் நேரடியாகத் தமிழில் இந்நூலை எழுதத் துணிந்துள்ளேன். அதனால் ஏராளமான பிழைகளும் குறைகளும் இருக்கும் என நான் உணர்ந்துகொள்கிறேன். அவை வாசிப்போருக்கு மன வேதனை அளிக்கக்கூடியவையாயிருப்பின், நான் அவர்களது மன்னிப்பைத் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்கிறேன். இந்நூலை வாசித்துப் பல பிழைகளைத் திருத்திப் பல இடங்களில் அதன் உரை நடையை நயப்படுத்தித் தந்த பசுமலை வித்வான் வீ. ப. நடராசன் அவர்கட்கு என் உளங்கனிந்த நன்றி. இன்னும் காணப்படுகிற குறைகளுக்குரிய பொறுப்பு அவர்களை அன்று, என்னையே சாரும். என்னைப் பலவாறு ஊக்குவித்து உதவி செய்த இந்நூல் வரிசை பதிப்பாசிரியராகிய அருள் திரு. சா. தா. ஆபிரகாம் ஐயரவர்கட்கும் எனது மனமார்ந்த நன்றி.

திருமறையூர்
பெப்ரவரி, 1969.

A. R. McGlashan.

பொருளடக்கம்

பக்கம்

1. பதிப்புரை

2. நான்முகம்

முதலாம் நிருபம் ... 1-141

3. முகவுரை ... 1

4. விளக்கவுரை ... 15-140

5. 1 : 1-4 முகவுரை ... 15

6. A. 1 : 5 — 2 : 28 கடவுள் ஒளியே ... 23

7. B. 2 : 29 — 4 : 6 கடவுளின் பிள்ளைகள் ... 66

8. C. 4 : 7-5 : 4 கடவுள் அன்பே ... 100

9. D. 5 : 5-21 விசுவாசத்தின் முழு நிச்சயம் ... 118

இரண்டாம், மூன்றும் நிருபங்கள் 141-174

யோவான் எழுதிய முதலாம் நிருபம்

முகவுரை

1. ஆக்கியோன்

கருத்திலும் உரைநடையிலும் இந்நிருபங்கள் யோவான் எழுதிய நற்செய்தி நூலோடு நெருங்கிய தொடர்புடையன. ஆதலால் பலர் நிருபங்களையும் நற்செய்தி நூலையும் ஒரே ஆசிரியர் எழுதியிருப்பார் எனக் கருதுகின்றனர். அந்தக் கொள்கையை அடிப்படையாக வைத்துக்கொண்டு இந்த விளக்கவுரை எழுதப்பட்டுள்ளது. எனினும் C. H. Dodd எனும் இறையியல் அறிஞர், நிருபங்களுக்கும் நற்செய்தி நூலுக்கும் இடையே காணப்படுகிற சில நுட்பமான வேறுபாடுகளின் காரணமாக, வேறு ஆசிரியர்களே எழுதியிருத்தல் வேண்டும் எனக் கருதுகிறார். ஆயினும் அவரும் இந்நிருபங்களின் ஆசிரியர், நற்செய்தி நூல் ஆசிரியரின் சீடராய் இருந்திருப்பார் என்று ஒப்புக்கொள்ளக்கூடும்.

இந்த நிருபங்களை எழுதியவர் நான்காம் நற்செய்தி நூல் ஆசிரியர் என்று நாம் வைத்துக்கொள்வோமே யாகில், அவர் யார் என்கிற கேள்வி எழும். திருச்சபையின் பாரம்பரியப்படி, நான்காம் நற்செய்தி நூல் ஆசிரியர் செபெதேயுவின் குமாரனாகிய யோவானே. தற்காலத்தில் எல்லா அறிஞர்களும் அதனை ஒப்புக்

கொள்வதில்லை எனினும் ஒப்புக்கொள்வாரும் சிலர் உள்ளனர். அப்போஸ்தலனுகிய யோவான் தான் நற்செய்தி நூலையும் நிருபங்களையும் எழுதினுர் என்பதை வைத்துக்கொண்டுதான்" இந்த விளக்கவுரை எழுதப்பட்டுள்ளது. அது மிக விரிவான ஒரு தர்க்கம் ஆதலால், அதற்குரிய ஆதாரங்களை ஆராய இங்கு இடம் இல்லை.

அப்போஸ்தலனுகிய யோவான் நான்காம் நற்செய்தி நூலை எழுதவில்லை எனக் கருதுவோரில் சிலர், மூப்பனுகிய யோவான் அதனை எழுதியிருக்கலாம் எனக் கருதுகின்றனர். மூப்பனுகிய யோவான், ஏறக்குறைய கி. பி. 130-ம் ஆண்டில் இராப்போலி எனும் ஊரின் அத்தியட்சரான பேப்பியஸ் என்பவர் எழுதிய நூல் ஒன்றில் குறிக்கப்படுகிறுன். அவன் இயேசுவின் வாழ்நாட்களில் அவரைப் பின்பற்றிய ஒரு சீடன். அப்போஸ்தலர் காலத்திற்குப்பின் ஆசியாவிலுள்ள திருச்சபையில் ஒரு தலைவனுக விளங்கியவன். இதனையும் வேறு சிலர் ஒப்புக்கொள்வதில்லை. அவர்கள் கருத்துப்படி, அப்போஸ்தலனுகிய யோவானின் சீடரில் நமக்குப் பெயர் தெரியாத ஒருவன் இந்நற்செய்தி நூலை எழுதியிருக்கலாம். அப்படியாயின், நிருபங்களின் ஆசிரியர் அதே ஆளாயினும் வேருேர் ஆளாயினும், அவரும் நமக்குப் பெயர் தெரியாதவரேயாவார்.

2. காலம்

யோவானின் நிருபங்கள் எழுதப்பட்ட காலம் எது என்பதைப் பற்றித் திட்டமான ஒரு முடிவு செய்ய இயலாது. எனினும் மூன்று காரியங்களை ஒருவித உறுதியுடன் கூறலாம்:—

[அ] இந்த நிருபங்களின் ஆசிரியர் யாராயினும், அவை இரண்டாம் நூற்றுண்டின் இரண்டாவது

பத்தாண்டிற்கு முன் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஏனெனில், அந்தக் காலத்தில் சிமிர்னு சபை அத்தியட்ச ரான போலிக்கார்ப்பு என்பவர் பிலிப்பி சபைக்குக் கடிதம் ஒன்றை எழுதினர். அக்கடிதத்தில் அவர் யோவானின் முதலாம் நிருபத்திலிருந்து ஒரு மேற்கோளை எடுத்துக்கொண்டு பயன்படுத்தினர். அவர் தாமே அது யோவான் எழுதிய நிருபத்திலிருந்து வந்தது எனச் சொல்லவில்லை. ஆயினும் அதனையும் யோவான் எழுதின தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அது ஒரு மேற்கோள் தான் என்பது வெளிப்படையாகிறது.

[ஆ] முந்திய குறிப்பினை யாவரும் ஒப்புக்கொள்வர். அப்போஸ்தலனுகிய யோவான்தான் இந்நிருபங்களை எழுதினர் எனக் கருதுவோர் அவை முதலாம் நூற்றுண் டின் இறுதிக்குள்ளாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும் என்றும் கூறுவர். ஏனெனில், இயேசுவின் வாழ்நாட் களில் அவரோடு பழகினபோது யோவான் குறைந்த அளவில் இருபது வயதுள்ளவராயிருந்திருப்பார். அது ஏறக்குறையக் கி. பி. முப்பதாம் ஆண்டு எனலாம். அவ் வாருயின், முதலாம் நூற்றுண்டின் இறுதியில் யோவான் தொண்ணூறு வயதுள்ளவராயிருந்திருப்பார். அதன் பிறகு அவர் இன்னும் உயிரோடிருந்திருப்பினும் அவர் இப்படி எழுதக்கூடியவராயிருந்தார் என நம்ப இயலாது. அதே காரணத்தால் மூப்பனுகிய யோவான் உண்மையில் இயேசுவின் சீடனுயிருந்திருப்பின், அவன் முதலாம் நூற்றுண்டின் இறுதிக்குப்பின் பிழைத்திருப்பது அரிது. ஆகவே அவனே இந்த நிருபங்களின் ஆசிரியர் எனக் கருதுவோரும் அவை முதலாம் நூற்றுண்டில்தான் எழுதப்பட்டன என்பதை ஒப்புக்கொள்ளல் வேண்டும்.

[இ] இவ்வாறு நாம் யோவானின் நிருபங்கள் எதற்கு முன்பாக எழுதப்பட்டன என்று தெரிந்துகொள்

லாம். அப்போது அவை எதற்குப்பின் எழுதப்பட்டிருத்தல் வேண்டும் என்கிற கேள்வி எழுகிறது. அதனை அறிய, அவற்றிற்கும் யோவானின் நற்செய்தி நூலுக்கும் இடையுள்ள தொடர்பினை ஆராய்தல் வேண்டும். நற்செய்தி நூல் அப்போஸ்தலனாகிய யோவானால் எழுதப்பட்டிருப்பின், அது கி. பி. 80க்கும் 90க்கும் இடையே எழுதப்பட்டிருக்கும் என்று பொதுவாகக் கருதப்படுகிறது. யோவானின் நிருபங்கள் அவரது நற்செய்தி நூலுக்குப் பின்தான் எழுப்பட்டன என்று தெரிகிறது. அதற்கு ஒரு சான்று, நிருபங்கள் எழுதப்பட்ட நோக்கத்திற்கும் நற்செய்தி நூல் எழுதப்பட்ட நோக்கத்திற்கும் இடையில் காணப்படுகிற வேறுபாடு (1 யோ. 5[13] காண்க). அவ்வாறாகில், இந்த நிருபங்கள் கி. பி. 80ஆம் ஆண்டிற்கு முன் எழுதப்பட்டிருக்க முடியாது. அவை 85-க்கும் 95-க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் என்பது ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு முடிவு.

3. இடம்

இந்த நிருபங்கள் எங்கே எழுதப்பட்டன என்பதைக் குறித்தும் நமக்குத் திட்டமான சான்றுகள் கிடைக்கவில்லை. ஆயினும் அவை எபேசுவில் எழுதப்பட்டிருக்கலாம் என்கிற கருத்துக்குப் பின்வருகிற ஆதாரங்களைக் காட்டலாம்:

[அ] யோவானின் பெயரில் வெளியிட்ட நூல்கள் முதன்முதலில் ஆசியாவில் வழக்கத்தில் வந்தன.

[ஆ] இந்நிருபங்களில் கண்டிக்கப்படுகிற கள்ளப் போதனை ஆசியாவில் மிகப் பரவலாயிற்று. குறிப்பாகச் செரிந்து என்னப்பட்ட திரிபுக் கொள்கையினன் எபேசுவைச் சேர்ந்தவன். அவனது போதனையின் எதிரொலி இந்நிருபங்களில் தொனிக்கிறது. (அடுத்த பகுதியைக் காண்க).

[இ] ஆதித் திருச்சபையின் பாரம்பரியப்படி (உ-ம். பேப்பியஸ் என்பவர் நூலின்படி), அப்போஸ்தலனாகிய யோவான், மூப்பனாகிய யோவான் இவ்விருவரும் முதலாம் நூற்றாண்டின் பிற்பாகத்தில் எபேசுவில் தங்கி ஊழியம் செய்தனர்.

இம்மூன்று காரணங்களினால், யோவானின் நிருபங்கள் எழுதப்பட்ட இடம் எபேசுவே என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது.

4 சூழ்நிலை

இந்நிருபங்களின் செய்தியைப் புரிந்துகொள்ளல் வேண்டுமாயின், அவை எந்தச் சூழ்நிலையிலே, எந்த நோக்கத்துடனே எழுதப்பட்டன என்பதைப் பற்றி நமக்குத் தெளிவான அறிவு தேவை. அந்தச் சூழ்நிலையை நாம் இப்பொழுது ஆராய்வோம்.

சில இடங்களில் யோவான், பொய்யான போதனையைப் பரப்பி வந்த ஒரு கூட்டத்தினரைக் குறிக்கிறார். (உ-ம். 1 யோ. 2^{18-19}). இந்த நிருபங்களில் கண்டிக்கப்படுகிற அவர்கள் கொள்கைகளை அதே காலத்தில் எழுதப்பட்ட ஏனைய மத நூல்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவை அறிவு நெறிக் கொள்கையோடு தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. அந்த அறிவு நெறிக் கொள்கையானது இரண்டாம் நூற்றாண்டில்தான் முழு வளர்ச்சியையும் அடைந்தது, எனினும் அது முதல் நூற்றாண்டில் உருவாகவும், பரவவும் துவங்கியது என்பதற்குச் சான்றுகள் உள. (உ-ம். பவுல் கொலோசேயருக்கு எழுதிய நிருபம்), அதன் முக்கியமான அம்சங்களைப் பின்வருமாறு விளக்கலாம்.

[அ] ஜடப்பொருள் தன்னில் தானே தீயது, ஆவி மட்டும் நல்லது என்பதே அக் கொள்கையினரின் அடிப்

டையான கோட்பாடு. ஜடப்பொருள், ஆவி இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று நேர்மாறானவை. ஆகவே ஆவியின் மையமாயிருக்கிற பரம்பொருள் ஜடப்பொருளான உலகத்தைப் படைத்திருக்க முடியாது, அதனோடு தொடர்பு கொள்ளவும் முடியாது, மனிதனின் தன்மை யாதெனில், அவன் உடல் ஜடப்பொருள் தான். எனினும் அவன் ஆன்மா ஆவியாயிருக்கிறது. அந்த ஆன்மா, கூட்டிற்குள் அடைபட்டிருக்கும் ஒரு பறவைபோல, அல்லது சிறைக்குள் அடைபட்டிருக்கும் ஒரு கைதிபோல, உடலில் அடைபட்டுக் கிடக்கிறது. இந்தக் கோட்பாடு யோவானின் நிருபங்களில் நேரடியாகக் குவிக்கப்படவில்லை, எனினும் இதுவே அவர் கண்டிக்கிற பொய்யான போதனைக்கு அடிப்படை என்று தாராளமாய்க் கூறலாம்.

[ஆ] மனிதனின் நிலை இவ்வாறாயின், இரட்சிப்பு என்பதின் பொருள் யாது? இரட்சிப்பு எனும் சொல் தனிப்பட்ட மனிதனின் ஆன்மா, உடலிலிருந்து விடுதலை பெற்று இப்பரம்பொருளோடு இரண்டறக் கலத்தலைக் குறிக்கும். அந்த விடுதலை பரம்பொருளையும், உலகின் அமைப்பையும் பற்றி மறைவாயுள்ள அறிவை அடைவதனால் கிடைக்கக்கூடும். அதனால்தான் இந்தக் கொள்கைக்கு 'அறிவுநெறிக் கொள்கை' என்னும் பெயர் வந்தது. சில சமயங்களில் அவ்வித அறிவோடு இரகசிய சடாச்சாரங்களும் முக்கிய இடம் பெற்றன. யோவானின் எதிரிகள் அவ்வித அறிவை வற்புறுத்தினர் என்றும், அவர்கள் அது சாதாரணக் கிறிஸ்தவர்களிடம் இல்லை எனக் கூறினர் என்றும் 1 யோ. 2^{20}, ^{21}, 2 யோ. 9 போன்ற வசனங்களில் காணப்படுகிறது,

[இ] அப்படி இரட்சிப்பு அடைந்த மனிதன் கடவுளோடு நெருங்கிய உறவு கொண்டான், அந்த உறவு, ஒளியில் இருத்தல் என்றும், கடவுளில் நிலைத்திருத்தல்

என்றும், கடவுளை அறிந்திருத்தல் என்றும், கடவுளோடு ஐக்கியப்பட்டிருத்தல் என்றும் குறிக்கப்படலாம். யோவானின் எதிரிகள் தாங்கள் அடைந்த நிலையைக் குறித்து அவ்வாறே பேசினர் என்பதை நாம் இந் நிருபங்களில் காண்கிறோம் (உ-ம். 1 யோ. 2^{9}, 2^{6}, 2^{4}, 1^{6}).மேலும் இரட்சிப்பு அடைந்தவருக்குப் பரிசுத்த ஆவியின் விசேஷித்த வரம் கிடைத்தது எனக் கருதப்பட்டது. அந்த வரத்தைப் பெற்றவர் பரவசமாகித் தீர்க்கதரிசனம் உரைத்தனர் எனவும் தெரிகிறது. இவற்றை நாம் 1யோ.2^{20}, 4^{1-3} ஆகிய வசனங்களில் காண்கிறோம். இந்த அறிவு நெறிக் கொள்கையினரில் சிலர் 'நாம் இன்னும் நியாயப் பிரமாணத்திற்குட்படவில்லை, நாம் நன்மைக்கும் தீமைக்கும் அப்பாற்பட்ட நிலையில் இருக்கிறோம்' என்று கூறினராம். அந்த எண்ணத்தின் எதிரொலியும் இந்நிருபத்தில் காணப்படுகிறது (உ-ம் 1 யோ. 1^{8}, 3^{4}).

[ஈ] இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிவு நெறிக் கொள்கையினரது போதனை என்ன? எப்படியும் அவர்கள் பரம்பொருள் ஊனுடல் எடுத்துக்கொண்டு மனிதனாக இவ்வுலகில் வாழமுடியும் என ஒப்புக்கொள்வதில்லை. அவ்வாறு நடந்திருப்பின் பரம்பொருள் தீட்டுப்படுத்தப் பட்டிருக்கும். ஆகவே கடவுள் உண்மையில் அல்ல, வெளித் தோற்றத்தில் மட்டும் ஊனுடல் எடுத்துக் கொண்டு உலகில் வாழ்ந்தார் என்ற ஓர் எண்ணம் உண்டாயிற்று. அதற்குத் தோற்றக் கொள்கை என்று பெயர். அதனை ஏற்றவரில் ஒருவன் செரிந்து என்பவன். அவன் எபேசுவைச சேர்ந்தவன். ஆதித் திருச்சபையின் பாரம்பரியத்தின்படி, அவனுக்கும் அப்போஸ்தலனாகிய யோவானுக்கும் நேரடியாக மோதல் ஏற்பட்டது. அவன் இயேசு வேறு, கிறிஸ்து வேறு என்றும், இயேசு வெறும் மனிதன், கிறிஸ்து பரம்பொருளிலிருந்து புறப்பட்ட தெய்வீக சக்தி

என்றும் போதித்தான். அவன் கூறியபடி, கிறிஸ்து எனும் தெய்வீக சக்தி மனிதனுகிய இயேசுவின் மேல் அவர் ஞானஸ்நானத்தின்போது வந்திறங்கியது. பிறகு, பரம்பொருள் பாடனுபவிக்க முடியாதபடியினுல், இயேசுவின்பாடு மரணத்திற்குமுன் கிறிஸ்து அவரைவிட்டுப் பிரிந்து வானத்திற்குத் திரும்பியது. இயேசு வெறும் மனிதனுகச் சிலுவையில் மரணம் அடைந்தார். யோவானின் எதிரிகள், இயேசு, கிறிஸ்துவும் அல்லர், தேவ குமாரனும் அல்லர் என்றும் (1 யோ. 2^{22}, 4^{15}, 5^{5}), கிறிஸ்து மாம்சத்தில் வரவில்லை என்றும் (1யோ.4^{2},^{3}, 2 யோ. 7), கிறிஸ்து சிலுவையில் மரணம் அடையவில்லை என்றும் 1 யோ. 5^{6}) கூறியது செரிந்து என்பவனின் போதனைக்கு ஒத்ததாகத் காணப்படுகிறது.

இந்தக் காரணங்களால், பொதுவாக யோவானின் நிருபங்களில் கண்டிக்கப்படுகிற போதனை, அறிவு நெறிக் கொள்கையைச் சார்ந்ததாகும் என்றும், குறிப்பாக யோவான் எதிர்க்கிற கிறிஸ்துவியற்போதனை செரிந்து என்பவனின் போதனையோடு தொடர்புடையதாகும் என்றும் முடிவு செய்வது பொருந்தும். தற்காலத்தில் அந்த முடிவு அறிஞர் பெரும்பாலோரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

அடுத்தபடியாக இந்த நிருபங்களில் கண்டிக்கப்படுகிற கள்ளப் போதகரது ஒழுக்கத்தை ஆராய்தல் வேண்டும். அறிவு நெறிக் கொள்கையினர் ஒழுக்கப் போதனை இருவகைப்படும். ஒரு சாரார், ஊனுடலிலிருந்து தப்பித்துக்கொள்ள அந்த உடலை ஒடுக்கிக் கண்டிப்பான கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்வது அவசியம் எனக் கருதினர். மற்ற சாரார், ஊனுடலில் நாம் என்னத்தைச் செய்யினும் ஆன்மா அதனுல் பாதிக்கப்படாது, ஆதலால் நாம் இஷ்டம்போல நம் இச்சைகளை நிறைவேற்றி வாழ

லாம் என்றெண்ணினர். யோவான் எதிர்க்கிற போதகர்கள் இந்த இரண்டு கொள்கைகளில் ஒன்றையும் அப்படியே ஏற்கவில்லை என்று தெரிகிறது. ஆயினும் அவர்களது போதனை ஓர் அளவுக்கு இரண்டாம் கொள்கைக்கு ஒத்ததாகக் காணப்படுகிறது. எப்படியெனில், யோவான் அவர்களை மிகக் கேடான ஒழுக்கமுடையவர்களாகக் கண்டிக்காதபோதிலும், அவர்களுக்கு நல்லொழுக்கத்தைப்பற்றி அதிகக் கவலை இல்லைபோலும். குறிப்பாக, அன்பு, நேர்மை, தூய்மை ஆகிய நற்பண்புகள் அவர்களது வாழ்க்கையில் மிகவும் குறைவாகக் காணப்பட்டன என்று யோவான் மறைமுகமாகக் கூறுகிறார் (உ-ம். 1யோ.2^{9-11},3^{3},3^{7-10}). மேலும் அவர்கள் தங்களை நன்மைக்கும் தீமைக்கும் அப்பாற்பட்ட ஒரு நிலையை அடைந்தவராக எண்ணிக்கொண்டபடியினால், அவர்கள் கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடத்கவோ பாவத்தைத் தவிர்க்கவோ அதிக முயற்சி செய்யவில்லை என்று தோன்றுகிறது (1 யோ. 2^{4}, $3^{6,9}$).

இந்தக் கள்ளப் போதகர் முதற்கண் திருச்சபைக்குள்ளே தோன்றினர். ஆயினும் மற்றச் சபையார் அவர்கள் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே அவர்கள் திருச்சபையை விட்டுப் பிரிந்து ஒரு தனிக் கூட்டமாக இயங்கலாயினர். அவர்கள் தனியாக பிற மதத்தினர் மத்தியில் செய்த பிரசாரம் மிக வெற்றிகரமாக நடந்தது. அவர்கள் கொள்கைகள் கிரேக்க மதக் கொள்கைகளுக்கு ஒப்பாயிருந்தமையால், கிரேக்கர் அவற்றை எளிதில் ஏற்றுக்கொண்டனர். மேலும், அவர்கள் தொண்டர்களை ஏனைய இடங்களுக்கு அனுப்பி, அங்கும் தங்கள் போதனையைப் பரப்பி அங்குள்ள சபை மக்களைத் தங்கள் மார்க்கத்திற்கு இழுத்துக்கொள்ள முயன்றனர் (1 யோ. $2^{18,19}$, $4^{4,6}$, 2 யோ. 7-11).

இஃதெல்லாவற்றையும் கண்ட கிறிஸ்தவச் சபை மக்கள் மிகவும் அதிர்ச்சியுற்றனர். "நம் சகோதரர் நம்மைவிட்டுப் பிரிந்து போயினர், சபை பிளவுபட்டதே; அவர்களது ஊழியம்தான் வெற்றிகரமாக நடக்கிறது, நாம் இவ்வளவு காலம் நம்புகிற கொள்கைகள் பொய் தானே; அவர்கள்தானே உண்மையான கிறிஸ்தவர்கள்' என்பதைப்போன்ற பல சந்தேகங்கள் அவர்கள் மனதில் எழுந்தன. இந்த அவதி நிலையிலுள்ளவர்களுக்கே யோவான் தமது முதலாம் நிருபத்தை எழுதினார்.

5. நோக்கம்:

யோவான் எந்த நோக்கத்தோடு தம் நிருபத்தை எழுதினார் என்று அவர் தாமே தெளிவாகக் குறிப்பிடுகிறார் (1 யோ. 5^{13}). அவர் தமது நிருபத்தை வாசிப்போர் உண்மையான விசுவாசிகள் என அடிப்படையாக வைத்துக்கொண்டு, அவர்கள் "கள்ளப் போதகர் அல்லர், நாமே நித்திய ஜீவனையுடையவர்களாயிருக்கிறோம்" என்று நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளும்படிக்கு எழுதியதாகக் கூறுகிறார். அதாவது, யோவான் நாம் முன்னாலே ஆராய்ந்த அந்தச் சபையாருடைய நிலையைத் துவக்க முதல் கடைசி வரை மனதிற்கொண்டு எழுதுகிறார் எனக் கூறின் அது மிகை ஆகாது.

யோவான் இந்த நோக்கத்தை நான்கு முறைகளில் நிறைவேற்றுகிறார் எனலாம். அந்த நான்கு முறைகளாவன:

[அ] அவர் மெய்க் கிறிஸ்தவரையும் பொய்க் கிறிஸ்தவரையும் வேறுபடுத்தி அறிந்து கொள்ளும்படியான பல சான்றுகளைக் காட்டியுள்ளார். (உ-ம். 1 யோ. 1^{6}, —2^{11}).

[ஆ] அவர் தம் ஆத்மீகப் பிள்ளைகளைப் பார்த்து, "நீங்கள் கடவுளை அறிந்திருக்கிறீர்கள், நீங்கள் மெய்யான கிறிஸ்தவர்கள்தான்" என்று நேரடியாகக் கூறுகிறார். (உ-ம். 1 யோ. 2^{12-14}).

[இ] அவர் அந்தக் கள்ளப் போதகரைக் குறித்து நேரடியாக அவர்கள் பொய்யான கொள்கைகளைக் கண்டிக்கிறார். (உ-ம். 1 யோ. 2^{18-22}).

[ஈ] அவர், கிறிஸ்தவர் தங்கள் நிலையைக் குறித்து நிச்சயித்துக்கொள்ளும்படியான சில திட்டமான சான்றுகளை விளக்குகிறார். (உ-ம். 1யோ. 3^{14}, 3^{24}), என்பவையே.

இவ்வாறு யோவான் பலவிதமான சந்தேகங்களில் ஆழ்ந்திருந்த சபையாரை உறுதிப்படுத்தவும் அவர்கள் ஐயங்களையும் பயங்களையும் நீக்கவும் முற்படுகிறார். நாம் அவர்களது நிலையையும், யோவான் எழுதிய நோக்கத்தையும் நன்கு விளங்கிக்கொண்டால் மட்டும்தான், இந்த நிருபத்தின் போதனையைப் புரிந்துகொள்ளமுடியும்.

6. செய்தி

இங்கு இந்த நிருபம் நமது காலத்துத் திருச்சபைக்குத் தருகிற செய்தியை நாம் விவரமாக ஆராயப் போகிறதில்லை. நாம் அதனைப் பின்வரும் விளக்கவுரையிலே ஆங்காங்குக் கவனிப்போம். எனினும் இந்த இடத்தில் சில பொதுவான காரியங்களைச் சற்றுச் சிந்திப்பது நலமாயிருக்கும்.

நாம் மேலே ஆராய்ந்த கிரேக்க அறிவு நெறிக் கொள்கை சில விஷயங்களில் இந்திய தத்துவ சாஸ்திரத்துடன் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. அதற்குக் காரணம், இந்திய தத்துவ சாஸ்திரத்தின் செல்வாக்குக் கிரேக்கர் மத்தியிலும் பரவியிருந்தது என்பது

பண்டித ராதாகிருஷ்ணன் அவர்களின் கருத்து. அது எவ்வாறுயினும், யோவான் அறிவு நெறிக் கொள்கையினுல் பாதிக்கப்பட்ட அக்காலச் சபையாருக்குத் தந்த போதனே இந்தியாவில் வாழ்கின்ற சபை மக்களுக்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது என்பது உண்மை.

மேலே அந்த அறிவு நெறியின் கொள்கைகளே நாம் சுருக்கமாய் விளக்கினேம். இப்பொழுது அவற்றிற்கு ஒப்பான சில இந்திய மதக் கருத்துக்களே நாம் கவனிப்போம்:

[அ] இந்துக்கள் பலரும் இந்த மண்ணுலகத்தைப் பற்றி ஓர் இழிவான எண்ணம் கொண்டிருக்கின்றனர். அதற்கு ஆதாரம் யாதெனில், ஜடப்பொருள் வேறு, ஆவி வேறு என்கிற கருத்தன்று. உலகம் மாயை என்கிற கருத்தே. அதன்படி, இந்த மாயை உலகம் அல்பொருள், பரம்பொருள் மட்டுமே உள்பொருள் ஆகும்.

[ஆ] அவ்வாறு கருதுவோர், மோட்சம் அடைவது ஜீவாத்துமா மாயையிலிருந்து தப்பித்துக்கொண்டு பரமாத்துமாவோடு இரண்டறக் கலத்தலாகும் என்பர். அதற்குப் பல வழிகள் உண்டு; அவற்றில் ஒன்று ஞான மார்க்கம். அது சிலர் மட்டும் அடையக்கூடிய ஒரு சிறந்த அறிவில் அமைந்துள்ளது.

[இ] பரம்பொருள் நன்மையானது என்றே, தீமையானது என்றே சொல்ல இயலாது. அது அத்தகைய வித்தியாசங்களுக்கு அப்பாற்பட்டது. அதுபோலக் கடவுளேச் சேர்ந்தவன் நன்மைக்கும் தீமைக்கும் அப்பாற்பட்ட நிலையை அடைந்திருக்கிறுன் என்பது வேதாந்திகளின் கருத்து. அந்நிலையில் ஜீவாத்துமா பரமாத்துமாவோடு ஒன்றுகச் சேர்ந்த அனுபவம் மிகவும் முக்கியப்படுத்தப்படுகிறது.

[ஈ] கிறிஸ்துவியலைப்பற்றி, வேதாந்திகள் பரம் பொருள் இந்த மாயை உலகில் நிறைவாக வெளிப்படுத் தப்பட இயலாது என்பர். சைவர்களும் கடவுள் ஒரு பெண்ணின் வயிற்றில் பிறக்க இயலாது என்று கிறிஸ்தவ நற்செய்தியின் மையக் கருத்தினை மறுப்பர். மேலும் பலர், ஒவ்வொரு ஆத்துமாவும் பரமாத்துமாவின் ஓர் அம்சம். ஆதலால் ஒரே தனிப்பட்ட ஆள் மட்டுமே கடவுளின் பூரண வெளிப்பாடு எனக் கூறுவது பொருந் தாது என்று கருதுகின்றனர்.

இந்தக் கருத்துக்கள் ஓர் அளவுக்கு அறிவு நெறிக் கொள்கையினர் கருத்துக்களைப் போன்றவை என்பது உண்மை எனில், யோவான் அந்த அறிவு நெறிக்கொள்கை யினருக்கு மறுப்பாகக் கூறுவதை நாமும் கூர்ந்து கவனிப் பது மிக அவசியம்.

[அ] யோவான் இந்நிருபத்தில் கடவுள் உலகம் இவற்றின் தன்மையைப்பற்றி விவரமாகக் கூறவில்லை. எனினும் இங்கே சில காரியங்களைக் கவனிப்பது தகும். கிறிஸ்தவக் கருத்துப்படி, உலகமோ ஜடப் பொருளோ தன்னில் தானே தீயதன்று. உலகம் கடவுளால் மிகவும் நல்லதாகப் படைக்கப்பட்டது. அது தீய சக்திகளின் ஆட்சிக்கு உட்பட்டதாயினும் அது இன்னும் கடவுள் தம் மீட்பின் செயலை நிறைவேற்றும் அரங்கு எனலாம். யோவான் தம் நற்செய்தி நூலில் "வார்த்தையானவர் மாம்சம் ஆனார்" என்று சொன்னதால் இக்கருத்து மறைமுகமாக உணர்த்தப்படுகிறது. (யோ. 1[14]; I யோ. 1[1-3]-ஐயும் காண்க).

[ஆ] இரட்சிப்பு ஜடப்பொருளிலிருந்தோ, அறிவீ னத்திலிருந்தோ அடையும் விடுதலை அன்று. மனிதன் எதிலிருந்து விடுதலை பெறல் வேண்டும் எனில், பாவத்

தின் அடிமைத்தனத்திலிருந்தும், பாவம் சம்பாதிக்கிற தண்டனையிலிருந்துமேயொழிய வேறில்லை. அதுதான் மெய்யான இரட்சிப்பு (1 யோ. $3^{5,8}$). மேலும் அது அறிவினாலோ ஞானத்தினாலோ அன்று, விசுவாசத்தினாலேதான் கிடைக்கக்கூடும். (1 யோ. 3^{23}, $4^{4,5}$). அந்த இரட்சிப்புக்கு ஆதாரம், இயேசு கிறிஸ்து கிருபாதார பலியாகச் சிலுவையில் அடைந்த மரணமே (1 யோ. 2^{2}, 4^{10}).

[இ] பரிசுத்த ஆவியாகிய வரமும் மெய்ஞ்ஞானமும் ஒரு குறிப்பிட்ட கூட்டத்தினருக்கு மட்டும் அல்ல, இயேசுவின்மேல் நம்பிக்கை வைத்த எல்லாருக்கும் உரியனவாம் (1யோ. $2^{20,27}$). மேலும் இரட்சிப்பு அடைந்தவன் நல்லொழுக்கம் கைக்கொள்ளக் கடமைப்பட்டவன் அல்லன் என்று சொல்லுவது மகா தவறு. "நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்' என்று கூறிக்கொள்ளுகிறவன் தன் அன்பின் செயல்களினாலும் நேர்மையான நடத்தையினாலும் அதனை மெய்ப்பிக்கவில்லை எனில், அவன் கடவுளை அறியவில்லை. அவன் கூறுவது பொய் (உ-ம். 1யோ.2^{9-11}, 3^{7-10}). இரட்சிப்படைந்தவரது வாழ்க்கையில் பரவச அனுபவங்கள் அல்ல, ஒழுக்கமே முதலிடம் பெறல் வேண்டும்.

[ஈ] யோவான் இயேசுவே கிறிஸ்து என்றும் அவரே கடவுளை நிறைவாக வெளிப்படுத்தக்கூடியவர் என்றும் வற்புறுத்திக் கூறுகிறார். இதுவே ஆதி நற்செய்தி எனவும் சொல்லுகிறார். இந்த அடிப்படையில் மட்டும் நாம் கடவுளை அறிந்துகொள்ளவும் அவரோடு உறவுகொள்ளவும் முடியும் (உ-ம்.1 யோ.2^{22-24}). அந்த நற்செய்திக்கு ஆதாரமான சான்றுகளையும் யோவான் விவரித்து விளக்குகின்றார் (1 யோ. 5^{6-12}).

விளக்கவுரை

1 : 1-4 முகவுரை

1 : 1 இந்த வசனங்களில் யோவான் விளக்கப் போகிறபொருளைச் சுருக்கமாகக் குறிப்பிடுகிறார்.

அவர் விளக்கப்போகிற பொருள் ஜீவ வார்த்தை இந்தச் சொல் இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது எனக் கொள்க. அதில் ஜீவன், வார்த்தை ஆகிய இரண்டு கருத்துக்கள் அடங்கியுள்ளன. [அ] வார்த்தை: யோவான் எழுதிய நற்செய்தி நூலின் முகவுரையிலும் கிறிஸ்து வார்த்தை எனப்படுகிறார் (யோ. 1[1]). ஒரு மனிதன் தான் பேசுகிற சொற்களைக் கொண்டு தனது தன்மையை வெளிப்படுத்துகிறதுபோல, கடவுள் தம் வார்த்தையைக் கொண்டு தம்மை வெளிப்படுத்துகிறார். தம்மை வெளிப் படுத்தும்படி கடவுள் கூறிய வார்த்தை கிறிஸ்து. அவராலே கடவுளின் தன்மை மனித உருவமாக மனிதர் கண் முன் வெளிப்படுத்தப்படுகிறது.

[ஆ] ஜீவன்: நற்செய்தி நூல் முகவுரையில் யோவான் ஜீவன் கிறிஸ்துவில் இருந்தது எனக் கூறுகிறார் (யோ. 1[4]).

குறிப்புரை:

மூலத்தில் இந்த வசனங்களின் இலக்கண அமைப்பு சற்றுக் கருகலானது. முதலாம் மூன்றும் வசனங்களை ஒரே வாக்கியமாகவும், இரண்டாம் வசனத்தை அதற்கு இடையில் சேர்க்கப்பட்ட ஒரு தனி வாக்கியமாகவும் எடுத்துக்கொள்வது சரி.

1 : 1 **ஆதிமுதல் - அதாவது, உலகத் தோற்றமுதல்.** வேறு சில இடங்களில் ஆதி எனும் சொல் கிறிஸ்தவ நற்செய்தி

ஜீவன் எனும் சொல் மெய்யான நிறைவான வாழ்வைக் குறிக்கிறது. அது கடவுளோடு கூடிய தொடர்பில் அமைகிறது; அது இயேசு கிறிஸ்துவின் மூலமாக இம்மையில் கிடைக்கிறது. ஜீவன் என்பது வார்த்தை என்பதோடு சேர்ந்து நிற்பதால், வார்த்தையானவராகிய கிறிஸ்துவில் இந்த மெய் வாழ்வு உலகத்தில் வெளிப்பட்டது என்றும் அதை மனிதர்களுக்குத் தரக்கூடியவர் அவரே என்றும் விளங்குகிறது.

இந்த ஜீவவார்த்தை எத்தகையது? இவ் வசனத்தில் இன்னும் இரண்டு காரியங்கள் அதைப்பற்றிச் சொல்லப் படுகின்றன. [அ] ஆதி முதல் இருந்தது: யோவான் தம் நற்செய்தி நூல் முகவுரையில் குறிப்பிடுகிறது போல (யோ. 1^1), தம் நிருபத்தின் முகவுரையிலும் வார்த்தையானவர் ஆதிமுதல் இருந்தார் என்று குறிப்பிடுகிறுர். சிலர் கிறிஸ்தவம் இந்தியாவில் நேற்றுத் தோன்றிய மதம் எனக் கூறினும், அதன் மையப் பொருளாகிய கிறிஸ்து ஆதி முதல் இருந்தவர். அதாவது, அவர் உலகின் தொடக்க முதல், உலகின் தொடக்கத்திற்கு முன்னிலும் இருந்தவர் (கொலொ. 1^{16} காண்க). அதற் கேற்ப அவர் சகல உலகங்களும் உண்டாவதற்கு முன்னே தமது பிதாவினுலே ஜெனிப்பிக்கப்பட்டவர் என்று விசுவாச அறிக்கை செய்கிறோம்.

முதன்முதலாக வாசிப்போர் மத்தியில் அறிவிக்கப்பட்ட காலத்தைக் குறிக்கும் (உ-ம். 2^7, ^{24}, 3^{11}). இந்த வசனத்திலும் அப்படிக்கொள்வாரும் உளர்.

நாகங்ள் கண்டது — அப்போஸ்தலனுகிய யோவான் இந் நிருபத்தை எழுதியிருப்பின் இச் சொற்களை எழுத்தின்படி பொருள் கொள்ளலாம். யோவான் அதை எழுதவில்லை என்று சாற்றுவோர், நாங்கள் என்பது முழுக் கிறிஸ்தவ சபையையும் குறிக்கிறது என்று சொல்வர். அவர்கள் எல்லா

[ஆ] நாங்கள் கேட்டோம், கண்டோம், தரிசித்தோம், தொட்டோம்: அனுதியாய்க் கடவுளோடிருந்த வார்த்தையானவர் உலகில் தோன்றி மனிதனுனர். மனிதர் கண்கள் காணும்படி அவர் ஒரு மனிதனுக வாழ்ந்து கடவுளை உலகின் வரலாற்றிலே வெளிப்படுத்திஞர். நாங்கள் இதன் உண்மையைக் கண்ணுரக் கண்டோம், அவர் உடலை எங்கள் கைகளினுல் தடவினேம் என்கிருர் யோவான். இந்த இடத்தில் நாங்கள் என்பது இயேசு சாட்சிகளாக ஏற்படுத்திய அப்போஸ்தலர்களைக் குறிக்கிறது.

ஆதி முதல் இருந்த வார்த்தையானவர் மாம்சமாகி உலகத்தில் பிறந்தார் என்பது கிறிஸ்தவ நற்செய்தியின் அடிப்படையான கருத்தாகும். ஆயினும் அதில் ஒரு முரணபாடு இருக்கிறது என்று ஒப்புக்கொள்ளல் வேண்டும். மனிதன் அற்பமானவன், அவனுடைய வாழ்க்கை எம்மாத்திரம். கடவுளின் தன்மை ஒரு மனிதனின் ஆள் தத்துவத்தில் எப்படி அமைய முடியும்? தெய்வத்துவத்தின் சகல பரிபூரணமும் இந்தக் குறுகிய எல்லைக்குள் எப்படி அடங்கியிருக்க முடியும் (கொலொ. 2⁹)? இது மறைப்பொருள்தான். எனினும் இம் மறைப்பொருளிலே கிறிஸ்தவ நற்செய்தி முழுவதும் அமைந்திருக்கிறது. ஆதி பகவன் முதற்றே உலகு என்பதை வள்ளுவரும் உணர்ந்து அறிவுறுத்திஞர். உலகுக்கு முதற்

ரும் தங்களை ஒன்ருகக் கருதி வந்தனர்; இந்த ஏக சிந்தையின் அடிப்படையில் நேரில் இயேசுவைக் காணுதவர்கள் நேரில் கண்டவர்களோடு தங்களை ஒன்றுபடுத்தி "நாங்கள் கண்டோம்" என்று சொல்ல முடிந்தது. ஆயினும் கள்ளப் போதகர்களுக்கு மறுப்பாக அத்தகைய சாட்சியில் எவ்வளவு வலிமை இருக்கும் என்பது சந்தேகத்திற்கு இடமாய் இருக்கிறது.

பொருளாகிய ஆதி பகவன் உலகிலே மனிதனாக உதித்தார் என்னும் உண்மை கிறிஸ்துவிலே வெளிப்படுத்தப்பட்டது.

1 : 2 இங்கு யோவான் தாம் விளக்கப்போகிற பொருள்யாது என்கிற வினாவைத் திரும்பவும் எடுத்து, வேறுமுறையிலே அதற்கு விடை அளிக்கிறார். அவருடைய பொருள் 'ஜீவன்'. இந்தச் சொல்லும் கிறிஸ்துவைக் குறிக்கும் முறையில் இந் நிருபத்திலும் (5^{11}) நற்செய்தி நூலிலும் (யோ. 11^{25}, 14^{6}) பயன்படுத்தப்படுகிறது. அதன் பொருளை அறிய முந்திய வசனத்தைக் காண்க. இங்கு நித்திய எனும் சொல் அதனோடு சேர்ந்து வருகிறது. இச் சொல்லின் மையப் பொருள் எந்நாளும் முடிவின்றி நீடிக்கும் காலம் என்பதன்று. நித்திய ஜீவன் ஒருகாலும் அழியாத ஜீவன் என்றால் அது தவறு அன்று, ஆயினும் இச் சொல் முக்கியமாக வற்புறுத்தித் தருகிற பொருள், அந்த ஜீவனின் நிறைவான தன்மை ஆகும்.

இந்த வசனத்தில் யோவான் நித்திய ஜீவனாகிய கிறிஸ்துவைப்பற்றி நான்கு காரியங்களைக் கூறுகிறார்.

[அ] பிதாவோடிருந்தார்: யோ. $1^{1,2}$-இல் நாம் காண்கிறதுபோல ஆக்கியோன் இவ்வாறு கிறிஸ்து அநாதியாய்ப் பிதாவாகிய கடவுளோடு தொடர்புடையவராக இருக்கிறார் எனச் சொல்லுகிறார். யோ. 1^{18}-இல்

1 : 2 ஜீவவார்த்தை - யோ. $1^{1,4}$-ஒடு இதைத் தொடர்புப் படுத்தி இது இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும் ஒரு சொற்றொடர் என மேலே கூறினோம். அதற்கு மாறாக இது கிறிஸ்துவைப் பற்றிய செய்தியைக் குறிக்கிறது எனக் கொள்வாரும் உளர். அதற்குச் சான்றாக இதே சொற்றொடர் கிறிஸ்துவைக் குறிப்பதாக வேறோர் இடத்திலும் வரவில்லை என்றும், அது வருகிற இடங்களிலே கிறிஸ்தவ நற்செய்தியைக் குறிக்கிறது (பிலி. 2^{16}, யோ. 6^{68} காண்க) என்றும் கூறுவர். எனினும் இந்த இடத்தில் யோவான் அதைத்

குமாரன் பிதாவின் மடியில் இருக்கிறார் என்கிற உருவகத்தினால் அத்தொடர்பு எத்துணை நெருங்கியது என்றும் வெளிப்படுத்துகிறார்.

[ஆ] வெளிப்பட்டார்: நித்திய ஜீவனாகிய கிறிஸ்து பிதாவினிடமிருந்து உலகத்தில் வந்து தோன்றினார், திரு அவதாரம் எடுத்தார், கடவுளைக் காண்பித்தார் (யோ. 16[28] காண்க).

[இ] அவரைக் கண்டோம் — இந்த முகவுரையான வசனங்களில் யோவான் பலதடவை தாம் நேரில் கண்டதாக அழுத்திச் சொல்லுகிறார். உலகில் ஜீவன் வெளிப்பட்டது வெறும் கற்பனையோ, கட்டுக் கதையோ, தோற்றமோ அன்று, உண்மையில் நடந்த நிகழ்ச்சி. யோவான் தாம் அதைக் கண்டதாகச் சொல்லுமிடத்து ஊனக் கண்ணினால் மட்டும் என்பது பொருள் அன்று. அவர் மனித உருவத்தில் வெளிப்பட்ட தேவமகிமையைக் கண்டு உணர்ந்து விசுவாசித்தார் என்பதே பொருள் (யோ. 1[14] காண்க).

[ச] சாட்சி கூறுகிறோம் — யோவான் கண்டது மன்றித் தாம் கண்டதற்குச் சாட்சியாக முன் நிற்கிறார் கண்டால் மட்டும் பயன் இல்லை. மற்றவர்களுக்கும் எடுத்துரைத்தல் வேண்டும். எனினும் கண்டாலொழிய சாட்சி சொல்லுவது எங்ஙனம்? இந் நிருபத்திலும் (4[14]) யோவான் எழுதிய நற்செய்தி நூலிலும் (19[35], 21[24]) காண்பதற்கும் சாட்சி சொல்லுவதற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. யோவான் தாம் கண்டதை சாட்சியாக உரைத்து, அது உண்மை எனச் சாற்றுகிறார்.

தனிப்பட்ட முறையில் பயன்படுத்தியிருக்கலாம் மேலும் முன்சொன்ன பொருள் இங்கு மிகப்பொருத்தம் எனக் காண்க.

அப்போஸ்தலனுடைய முழுப் பொறுப்பும் இதுவே (அப். $1^{22,23}$ காண்க).

1 : 3 இந்த வசனத்தில் யோவான் எதற்காக இந்தச் செய்தியை அறிவிக்கிறார் என்று விளக்குகிறார். அப்படி அறிவிப்பதன் நோக்கமாவது வாசிப்போர் ஐக்கியத்தில் பங்குபெற வேண்டும் என்பது. இந்த ஐக்கியமானது அவருடைய சமயப் பணியின் குறிக்கோளாகும். ஐக்கியம் எனும் சொல் பல ஆட்களுக்கு இடையுள்ள கூட்டுறவு என்று பொருள்படும்; அது மனிதர் ஒருவரோடொருவர் கொள்ளும் ஒரு கூட்டுத்தன்மை. அதில் ஒரு மனிதன் தன் தனி மனிதத் தன்மையை இழப்பதில்லை. மற்றவர்களோடு கொள்ளும் உறவினால் அவனது மனிதத்தன்மை நிறைவடைகிறது. அத்வைத வேதாந்தத்தின் குறிக்கோள் ஜீவாத்துமா பரமாத்துமாவோடு இரண்டறக் கலத்தல் ஆகும். அதற்கும் யோவானின் போதனைக்கும் உள்ள வேறுபாடு கவனிக்கத் தக்கது.

யோவானின் கூற்றுப்படி யாரோடு ஐக்கியப்பட வேண்டும்? [அ] எங்களோடு: நாங்கள் என்பதனால் யோவான் இங்கு முழு திருச்சபையையும் குறிக்கிறார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் அப்போஸ்தலர்களின் சாட்சியில் அமைந்த அந்த ஐக்கியத்தில் சேர்ந்து நிலைநிற்க வேண்டும். அதிலே நாம் எல்லோரும் சகோதரர்கள். இந் நிருபத்தை வாசிப்போர் அந்த ஐக்கியத்தை விட்டுப் பிரிந்து போகக்கூடிய ஆபத்தான நிலையில் இருந்தனர்.

---

1 : 3 ஐக்கியத்தில் பங்குபெற வேண்டும் - வாசிப்போர் ஏற்கனவே கிறிஸ்தவர்கள். அதற்கேற்ப யோவான் இங்குப் பயன்படுத்துகிற வினைச் சொல், அவர்கள் புதிதாக ஐக்கியம் கொள்ளவேண்டும் என்றல்ல, முன்னால் கொண்ட ஐக்கியத்தில் தொடர்ந்து நிலைநிற்க வேண்டும் என்றே பொருள் தருகிறது.

ஆகவே யோவான் இப்படித் தமது நோக்கத்தை அவர் களுக்கு எடுத்துச் சொல்லுகிறார்.

[ஆ] பிதாவோடும் கிறிஸ்துவோடும்: கிறிஸ்தவர் கள் திருச்சபையிலே ஒருவரோடொருவர் கொள்ளும் ஐக்கியம் ஒரு சாதாரண மனித ஐக்கியம் அன்று. அதற்கு ஆதாரம் அவர்கள் கிறிஸ்துவின் மூலம் பிதா வாகிய கடவுளோடு கொண்ட ஐக்கியமே ஆகும். அவர் கள் ஒவ்வொருவராகக் கடவுளோடு உறவு கொண்டதால் தான் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட முடியும்.

1 ; 4 யோவான் இவ் வசனத்தில் திரும்பவும் எந்த நோக்கத்தோடு இந்தக் காரியங்களை அறிவித்து எழுது கிறார் என்றும் சொல்லுகிறார். முந்திய வசனத்தில் தமது நோக்கம் ஐக்கியம் என்றார். இங்குத் தமது நோக் கம் மகிழ்ச்சி என்கிறார். இந்த இடத்தில் மூலச் சொல்லை 'எங்கள்' என்று மொழி பெயர்க்காமல் 'நம்முடைய' என்று மொழி பெயர்ப்பது பொருந்தும். ஏனெனில் யோவான் தம்முடைய சொந்த மகிழ்ச்சியை மட்டும் அன்று, வாசிப் போர் உட்பட முழுத் திருச்சபையின் மகிழ்ச்சியை எதிர் நோக்கி எழுதுகிறார். அவர்கள் எல்லாரும் கிறிஸ்துவுக் குள் அடைகிற ஐக்கியத்தின் பலன் பேரானந்தம் ஆம். அதுவே அவருடைய நிருபத்தின் இலட்சியம். (யோ. 15[11] ஒப்பிட்டுக் காண்க).

இந்தப் பகுதியில் யோவான் சாட்சி சொல்வதைப் பற்றி நமக்கும் பொருத்தமான சில காரியங்களை அறி வுறுத்துகிறார்.

[அ] நமது சாட்சியின் பொருள்: யோவான் அறிவிக்கிற விசேஷம் என்னவெனில், ஜீவ வார்த்தை யாகிய கிறிஸ்து, ஆதி முதல் இருந்தவரும் உலகில் மனிதனாக வெளிப்பட்டவருமாகிய கிறிஸ்து ஆவார்.

அதுபோல நாம் சாட்சி சொல்லுமிடத்து, நம் சொந்த ஆவிக்குரிய அனுபவங்கள் அல்ல, இயேசு கிறிஸ்து மையப் பொருளாய் இருத்தல் வேண்டும். சில சமயம் நாம் அடைந்த அனுபவங்களைச் சாட்சியாகக் கூறுவது பயனுள்ளதாய் இருக்கலாம். இருப்பினும் பொதுவாகக் கிறிஸ்துவுக்கே முதல் இடம் கொடுப்பது தகும்.

[ஆ] சாட்சி சொல்லுவதற்குத் தகுதி: இந்த முதல் நான்கு வசனங்களில் மூன்று தடவை யோவான் நான் அதைக் கண்டேன் எனச் சொல்கிறார். யோவானும் மற்ற அப்போஸ்தலர்களும் இயேசுவை நேரில் கண்டு அவரோடு பழகினவர்கள். அதனால் அவர்கள் சாட்சி சொல்வதற்குத் தகுதியுள்ளவர்கள் ஆனார்கள். நாம் நேரில் இயேசுவைக் காணவில்லை; எனவே நாம் சாட்சி சொல்வதற்கு எப்படித் தகுதியுள்ளவர்களாய் இருக்க முடியும்? நாம் நேரில் அவரைக் காணமுடியாவிட்டாலும் நமது வாழ்க்கையில் அவருடைய அருளையும் அன்பையும் அனுபவித்திருத்தல் வேண்டும். அவருடைய வல்ல செயலை உணர்ந்திருத்தல் வேண்டும். நமது சாட்சியின் பொருளாக அன்று, நாம் சாட்சி சொல்வதற்கு ஆதார மாகவும் தகுதியாகவும், இத்தகைய அனுபவம் இன்றி யமையாதது.

[இ] நமது சாட்சியின் குறிக்கோள்: தற்காலத்தில் கிறிஸ்தவர்கள் பலர், மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு திருச்சபையைச் சேர்வதைக் காண எதிர் பாராமல் நற்செய்திப் பணி புரிகின்றனர். சிலர், அத் தகைய பலனைக் காண எதிர் பார்த்து அப்பணி புரிவது தவறு என்பர். வேறு சிலர் "இந்துக்கள் தங்கள் உள்ளத் தில் கிறிஸ்துவை விசுவாசித்தால் போதும், அவர்கள் ஞானஸ்நானம் பெறவோ, திருச்சபையைச் சேரவோ வேண்டியதில்லை" என்பர். யோவானோ திட்டவட்ட

மான ஒரு நோக்கத்தோடு சட்சியிடுகிருர் என்று எழுது கிருர். அந்த நோக்கமானது நீங்கள் எங்களோடு ஐக்கியத்தில் சேர வேண்டும் என்பதே. ஏனெனில் இந்த ஐக்கியம் கடவுளோடு கூடிய ஐக்கியமாய் இருக்கிறது. ஆகவே நாம் அதை வெளியே சொல்லினும் சொல்லாவிடினும், நற்செய்தியைக்கேட்போர் இயேசு கிறிஸ்துவை உள்ளத்திவ் விசுவாசிப்பதுடன் திருச்சபையின் ஐக்கியத்தில் பங்குபெறல் வேண்டும் என்பது நமது நற்செய்திப் பணியின் நோக்கமாய் இருத்தல் வேண்டும்.

A. 1:5 - 2:28 கடவுள் ஒளியே

நிருபத்தின் முதலாம் பெரும் பிரிவிலே கடவுள் ஒளியே என்பது செம்பொருன் ஆகும். இச் செம்பொருளை யோவான் ஆரம்பத்திலே தெளிவுர எடுத்துரைக்கிருர். அதைத் தொடர்ந்தும் அடிப்படையாகக் கொண்டும், அவர் சில பரிசோதனைகளை வரிசையாகக் கொண்டு வருகிருர். அந்தப் பரிசோதனைகளைக் கொண்டு அவர் மெய்யான கிறிஸ்தவ வாழ்க்கையையும் பொய்யான கிறிஸ்தவ வாழ்க்கையையும் வேறுபடுத்திக் காண்பிக்கிருர். இப் பிரிவின் அமைப்பைப் பின்வருமாறு காட்டலாம்:

1:5 -	செம்பொருள்:	கடவுள் ஒளியே	
1:6, 7 -	1 ஆம் பரிசோதனை:	ஒளியில் நடப்பது	இருளில் நடப்பது
1:8-2:2 -	2 ஆம் ,, ,,	பாவத்தை அறிக்கை செய்தல்	பாவத்தை மறைத்தல்
2:3-6 -	3 ஆம் ,, ,,	கீழ்ப்படிதல்	கீழ்ப் படியாமை
2:7-12 -	4 ஆம் ,, ,,	அன்பு	பகை

2 : 13-17 - ஓர் எச்சரிக்கை

2 : 18-26 - 5 ஆம் பரிசோதனை: உண்மை பொய்

1 : 5 செம்பொருள்:

கடவுள் ஒளியே — பழைய ஏற்பாட்டில் இந்தக் கருத்து இப்படியே வரவில்லை, எனினும் இதைப் போன்ற பல கூற்றுக்களை அங்கும் இயேசுவின் அருள்மொழிகளிலும் நாம் காணலாம். அதனோடு கிரேக்கத் தத்துவ சாஸ்திரிகளும், அறிவு நெறியினரும் இத்தகைய கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். அக் காலத்தில் இது எல்லா மதத்தினருக்கும் விளங்கக்கூடிய ஒரு கூற்றாக இருந்தது. தற்காலத்திலும் சைவர்கள் சிவம் ஒளிமையமாகவே இருக்கிறான் எனக் கூறுவர். ஆகவே எல்லாரும் இந்தச் சொற்களை ஒரே பொருளில் பயன்படுத்துகிறார்கள் என்றும் எல்லாருடைய கடவுட்கொள்கை ஒன்று தான் என்றும் முடிவு செய்தல் வேண்டுமா? ஓர் அளவுக்கு ஒற்றுமை இருக்கிறது. எப்படியெனில், அனைவரும் கடவுள் எல்லாச் சரீர ஆத்தும நன்மைகளுக்கும் ஊற்று ஆவர் என்பதை ஒப்புக்கொள்வார்கள். இதுவே கடவுள் ஒளியாயிருக்கிறார் என்பதின் பொதுக் கருத்து எனலாம். ஆயின் யோவான் இப்படிக் கூறுமிடத்து, கடவுளைப்பற்றி வேறே இரண்டு முக்கியமான உண்மைகளையும் அறிவுறுத்துகிறார்.

குறிப்புரை:

1 : 5 கடவுள் ஒளியே — ஆதி. 1[3], சங். 27[1], ஏசா. 50[10] ஆகிய பழைய ஏற்பாட்டு வசனங்களிலும், மத். 5[14], 6[22], மாற். 4[21], யோ. 8[12], 12[46] ஆகிய புதிய ஏற்பாட்டு வசனங்களிலும் ஒளி என்பது சிறந்த இறையியல் கருத்துடன் வந்தது.

[அ] கடவுள் பூரண சற்குணர்; அவரிடத்தில் கறையோ மாசோ இல்லை. அவர் தூய்மையுள்ளவர், அறம் தவருதவர், நல்லவர். இதற்கு மாருக அத்வைத வேதாந்தம், பரம்பொருள் நன்மைக்கும் தீமைக்கும் அப்பாற்பட்டது, அது நல்லது என்றும் தீயது என்றும் சொல்லமுடியாது எனக் கூறுகிறது. கிறிஸ்தவக் கருத்துப்படி கடவுள் தாமே பூரண சற்குணராயிருக்கிருர், அன்றியும் அவரே எல்லா நன்மைக்கும், சற்குணத்திற்கும் முன்மாதிரியும், அளவுகோலுமாயிருக்கிருர். அவராலே யன்றி எது நன்மை, எது தீமை என்று அறியமுடியாது.

[ஆ] கடவுள் தம்மை வெளிப்படுத்துபவர்: ஒளி வீசும்போது அது மறைந்திருக்க இயலாது. அது தாளுகவே கண்ணுக்குத் தெரிகிறது. கடவுளும், தம்மை வேறு முறையில் அறிய முடியாத மனிதருக்குத் தம்மை வெளிப்படுத்துகிருர்; தமது மெய்த் தன்மையைக் காண்பிக்கிருர். அவர் அருளுகிற வெளிப்பாட்டின் ஒளியில் மனிதர் அவர் இருக்கிறவண்ணமாகவே அவரை அறிந்து கொள்ளமுடிகிறது. மேலும் ஒளி தன்னைக் காட்டுவதோடு, அது எதன்மேல் படுகிறதோ அதையும் அது வெளிப்படுத்துகிறது. அதுபோல ஒளியாகிய இறைவன் தம்மையும் வேறெந்தப் பொருளையும் வெளிப்படுத்துகிருர். அவர் ஒளியில் ஒன்றும் மறைந்திருக்கமுடியாது, ஒவ்வொரு பொருளின் மெய்த் தன்மையும் வெளிப்படுத்தப்படுகிறது, மனிதனும் தான் இருக்கிற வண்ணம் காணப்படுகிருன்.

கடவுள் ஒளியே என்கிற இக்கூற்றினை அடிப்படையாகக்கொண்டு, யோவான் மெய்க் கிறிஸ்தவ வாழ்க்கையையும் பொய்க் கிறிஸ்தவ வாழ்க்கையையும் வேறுபடுத்திக்காட்டும் சில பரிசோதனைகளைக் கையாளுகிருர். அவர் ஏன் இப்படிச் செய்கிருர் என அறிந்து கொள்ளு

மாறு, முகவுரையைக் காண்க. இந்நிருபத்தை வாசிக்கப் போகிற சபையார் மத்தியிலே கள்ளப் போதனை நுழைந் திருந்திருந்தது. அந்த கள்ளப் போதனை அறிவு நெறி யைச் சார்ந்தது. அதன் காரணமாகச் சபையில் பிரிவு ஏற்பட்டது, அறிவு நெறிப் போதனையை ஏற்ற ஒரு சாரார் சபையை விட்டு வெளியேறிவிட்டனர், மீதியான சபையார் மனதில் "மெய்க் கிறிஸ்தவர்கள் அவர்களா, நாமா" என்பதைப் போன்ற பல சந்தேகங்கள் எழுந்தன, மெய்க் கிறிஸ்தவர்கள் யார் என்று காட்டவும் சபை யாரை விசுவாசத்தில் உறுதிப்படுத்தவும் யோவான் இப் பரிசோதனைகளைக்கொண்டு கிறிஸ்தவ வாழ்க்கையின் மெய்த்தன்மையை விளக்குகிறார்.

I யோ. 1^{6-7} : முதலாம் பரிசோதனை:

கடவுள் ஒளியாயிருக்கிறது போல, ஒளியில் நடக்கிற வர்கள் அவரோடு ஐக்கியப்பட்டவர்கள், இருளில் நடக் கிறவர்கள் அவரோடு ஐக்கியப்படவில்லை. இது எல்லாருக் கும் எளிதாக விளங்கும். ஆயினும் இன்னொரு கேள்வி யைக் கேட்கவேண்டும். ஒளியில் நடப்பது என்பதன் பொருள் யாது? ஒளியில் நடப்பது எப்படி? இதை அறிய முந்திய வசனத்தைப் பார்த்தல் வேண்டும். அங்குக் கடவுள் ஒளியே என்பது கடவுள் பூரண சற்குணர் என்று பொருள்படும் எனக்கண்டோம். அப்படியானால் கடவுள் ஒளியாயிருக்கிறது போல நாமும் ஒளியில் நடப் பது நாம் பூரண சற்குணராயிருப்பதே ஆகும். ஒளியில் நடக்கிறவர்கள் அறம் தவறாதவர்கள், நல்லொழுக்க வாழ்க்கை செய்கிறவர்கள்.

நாம் கடவுளோடு தொடர்பு கொள்ள நன்னடக்கை அவசியம். இக்கருத்து வேதத்தில் பல பாகங்களில் வலியுறுத்தப் பெறுகிறதை நாம் காணலாம். உதாரண

மாக, இயேசு தாமே மலைப் பிரசங்கத்தில் "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல நீங்களும் பூரண சற்குணராயிருங்கள்" எனக் கூறினுர் (மத். 5^{48}). பவுலும் "அவிசுவாசிகளோடு ஒரே நுகத்தில் விபரீதமாய் இணைக்கப்படாதிருங்கள்; நீதிக்கும் அக்கிரமத்துக்கும் சம்பந்தமேது? வெளிச்சத்திற்கும் இருளுக்கும் ஐக்கியமேது?" எனக் கேட்கிறுர் (2 கொ.6^{14}). ஒளியாகிய கடவுளோடு ஐக்கியப்பட்டோம் என்பதை ஒளிக்கேற்ற நன்னடக்கையே மெய்ப்பிக்கிறது. யோவான், ஒளியில் நடக்கிறுர்களா இருளில் நடக்கிறுர்களா என்கிற பரிசோதனையைக் கையாளுவதில், இதுதான் அவருடைய கருத்து.

1^{6} : யோவான் இப்பரிசோதனையைக் கையாளும் முறையை நாம் கவனிக்கும்போது அவர் "நாம் கடவுளோடு ஐக்கியப்பட்டவர்கள்" என்று பெருமை பாராட்டி வந்த ஒரு கூட்டத்தாரை மனதில்கொண்டு எழுதுகிறுர் என்று தெரிகிறது. இக் கூட்டத்தார் சபையில் தோன்றிய அறிவு நெறிக் கொள்கையினர். அவர்கள் தாங்களே கடவுளோடு ஐக்கியப்பட்டுச் சிறந்த ஆவிக்குரிய நிலையை அடைந்திருந்ததாக நினைத்துக்கொண்டனர். அவர்கள் சொல்லுகிறது மெய்யா பொய்யா என்று அறிந்து கொள்ள யோவான் அவர்களது வாழ்க்கைக்குத் தமது அளவுகோலை வைக்கிறுர்; அவர்கள் நடக்கை எத்தகையது? ஒளியிலா இருளிலா நடக்கிறுர்கள்? இருளில்

1:6 அவரோடு நாம் ஐக்கியப்பட்டவர்கள — இதனைப் போன்ற கள்ளப் போதகர் கூற்றுக்களை நாம் பல இடங்களில் காணலாம். உ-ம் 1^{8}, 1^{10}, 2^{4}, 2^{9} 2^{9}, 2^{22}, 4^{20}. அவர்களின் கூற்றுக்களின் மறைமுக எதிரொலி வேறு பல இடங்களிலும் வருகிறது. உ-ம். 2^{20}, 3^{4}, 3^{7}.

எனின், அவர்கள் பெருமையாகச் சொல்லிக்கொள்ளுகிற தெல்லாம் பொய். அவர்கள் பேச்சு மாத்திரம் அன்று, அவர்கள் வாழ்க்கையும் பொய். பொய்யானது பேச்சிலும் கருத்திலும் காணப்படும் ஒரு தன்மை மாத்திரம் அன்று, அது வாழ்க்கையிலும் செயலிலும் காணப்படக் கூடியதாம். நமது வாழ்க்கை நம்மைக் குறித்த தவருன ஓர் எண்ணத்தில் அமைந்திருப்பின், அவ்வாழ்க்கை தானே முற்றிலும் உண்மையற்றதாய்விடும். யோவான் இவ்வசனத்தில் நேரடியாக ஒருவரையும் குறிக்கவில்லை எனினும், அவர் மறைமுகமாக அறிவு நெறியினர் நிலையைக் குறித்தே எழுதுகிருர் எனலாம்.

7: யோவான் ஒவ்வொரு பரிசோதனையையும் எதிர் மறையாகவும் உடன்பாடாகவும் விளக்குகிருர். முதலில் இருளில் நடந்தால் என்ன என்று கூறிவிட்டு, அடுத்து ஒளியில் நடந்தால் என்ன என்று குறிப்பிடுகிருர். யோவான் "நாம் ஒளியில் நடப்போமாகில் கடவுளோடு ஐக்கியப்படுவோம்" என்று சொல்வதாக நாம் எதிர் பார்க்கிறோம். ஆயின் அவர் அப்படிச் சொல்லவில்லை. அப்படிச் சொல்லியிருக்கலாம், அதுவும் உண்மைதான், எனினும் அவர் கருத்து வேறு வழியில் செல்கிறது. ஒளியில் நடப்பதால் உண்டாகும் வேறு இரண்டு பலன்களை அவர் குறிப்பிடுகிருர்.

[அ] ஒருவரோடொருவர் கொள்ளும் ஐக்கியம்: இந்த ஐக்கியமானது கிறிஸ்தவர்கள் ஒளியில் நடப்பின் உண்டாகும். சபையில் கிறிஸ்தவர்கள் நல்லொழுக்க வாழ்க்கை செய்யாவிடில் ஐக்கியம் செழிப்பது அரிது. நேர்மை, உண்மை, அன்பு முதலிய நற்பண்புகள் ஐக்கியத்திற்கு அடிப்படையாகும்.

[ஆ] சுத்திகரிப்பு: ஒளியில் நடப்பின் இயேசுவின் இரத்தம் நம்மைச் சுத்திகரித்துக்கொண்டிருக்கும்.

சுத்திகரிப்புப் பாவ மன்னிப்பையும் குறிக்கிறது. பரிசுத்தத்தில் அடையும் வளர்ச்சியையும் குறிக்கிறது. ஒளியில் நடக்கிறவர்கள் கடந்த காலத்தில் செய்த பாவங்களுக்காக மன்னிப்பைப் பெறுவதோடு, பாவம் தங்கள் வாழ்க்கையில் செலுத்துகிற வல்லமையிலிருந்தும் படிப்படியாக விடுதலை அடைகின்றனர். இதுவே சுத்திகரிப்பு.

இதை அவர்களுக்காக உண்டாக்குவது இயேசுவின் இரத்தம். பலி செலுத்துவதில் இரத்தத்தைச் சிந்துவது முக்கியமான ஓர் அம்சம். இரத்தத்தைச் சிந்துவதால் தான் பலி பயன் தரும் சக்தியுடையதாகும் (எபி. 9[22] காண்க). ஆகவே இரத்தம் எனும் சொல் பலிப்பொருளின் மரணத்தையும், அதனால் உண்டாகும் நன்மைகளையும் குறிக்கிறது. இயேசுவின் இரத்தம் என்பது அவர் நமக்காகப் பலியாய் மரித்ததை உணர்த்துகிறது. ஆகையால் இவ்வசனத்தில் யோவான் ஒளியில் நடக்கிறவர்களுக்குச் சுத்திகரிப்புக் கிடைப்பதற்கு ஆதாரம் இயேசுவின் சிலுவை மரணம் என்றும், அவர் சிலுவை மரணம் பலியின் தன்மையுடையது என்றும் எடுத்துரைக்கிறார்.

இம் முதலாம் பரிசோதனையின் உட்கருத்து, கடவுளோடு கூடிய உறவு நன்னடக்கையில் வெளிப்படவேண்டும் என்பதே. இந்தப் போதனை நமது நாட்டிற்கும் நமது நிலைக்கும் மிகப் பொருத்தம். இந்துக்களில் தாங்கள் பரம்பொருளோடு இரண்டறக் கலந்து மேலான ஒரு நிலையை அடைந்துவிட்டதாகச் சொல்லிக்கொள்ளுகிறவர்கள் உண்டு. கிறிஸ்தவத் திருச்சபையிலும் தாங்களே இரட்சிக்கப்பட்டவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் உண்டு. பொதுவாக எல்லாக் கிறிஸ்தவர்களும் தங்களுக்குக் கடவுளைப்பற்றி மெய்யான அறிவு கிடைத்துள்ளது எனக் கூறுவர். இவர்கள்

இப்படிச் சொல்வது உண்மையா என்று எப்படிப் பரிசோதிக்கலாம்? அவர்களுடைய வாழ்க்கையைப் பாருங்கள். அது அவர்கள் சொல்வதற்குத் தக்கபடி அமைகிறதா? இதுவே கிறிஸ்தவ வாழ்க்கையில் அடிப்படையான கோட்பாடு. இயேசுவும் தாமே இப்படி நம்மை எச்சரிக்கிறார். "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" (மத். 7^{17}).

1 யோ. 1 : 8-2 : 2 இரண்டாம் பரிசோதனை:

தங்கள் பாவ நிலையை ஒப்புக்கொள்ளுகிறவர்கள் பாவ மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் பெறுவர்; தங்கள் பாவ நிலையை ஒப்புக்கொள்ளாதவர்கள் பொய்யரும் கடவுளை அறியாதவர்களும் ஆவர். இந்தப் பரிசோதனையும் கடவுள் ஒளியே என்றும் உண்மையில் அமைந்துள்ளது. எப்படியெனில், ஒளி எதன்மேல் படுகிறதோ, அது அந்த ஒளியால் வெளிப்படுத்தப்படுகிறது. அதுபோல, ஒளியாகிய கடவுளை அணுகுகிற மனிதன் தன் நிலையை உணர்ந்துகொள்ளுகிறான். தன் பாவத்தை மறைக்கமுடியாமல் அதை ஒப்புக்கொண்டு கடவுளிடம் அறிக்கை செய்கிறான். கடவுளின் ஒளியில் வராதவனோ தன்னைக் குற்றமற்றவன் என எண்ணிக்கொண்டு, தன் பாவத்தை ஒப்புக்கொள்ளவும், அறிக்கையிடவும் மாட்டான். (இதே உண்மை யோ. 3^{19-21}-இல் விளக்கப்படுகிறது). ஆகவே ஒளியில் நடப்பது நன்னடக்கை மட்டும் அன்று, தன் பாவத்தை ஒப்புக்கொண்டு அறிக்கையிடுவதே ஆகும். இவ்விரண்டும் மனிதன் கடவுளோடும், மனிதன் மனிதனோடும் (வ. 7-ஐக் காண்க) உறவு கொள்வதற்கு நிபந்தனைகள் ஆதலால், இவை ஒரு மனிதனின் வாழ்க்கையில் காணப்படாவிடில் அவன் கடவுளை அறியவில்லை எனப் புலனாகும்.

1 யோ. 1:8,10. இங்கும் அறிவு நெறிக் கொள்கை யினர் கூற்றுக்களை நாம் காணலாம் (1[6] காண்க). அவர்கள் நம் நிலை பாவ நிலை அன்று எனவும் (வ. 8) நாம் தனிப் பாவச் செயல்களைச் செய்யவில்லை எனவும் (வ. 10) சொல்லிக்கொண்டனர். இந்த எண்ணத்திற்கு அவர்கள் அறிவு நெறிக் கொள்கைகளே அடிப்படை. அவற்றின் படி, ஆவிக்குரிய நிலையை அடைந்தவன் பாவம் செய்ய முடியாது. அவன் தன் சரீரத்தைக்கொண்டு எதைச் செய்தாலும், அது அவனது ஆன்மாவைப் பாதிக்காது; அது பாவமாக எண்ணப்பட முடியாது (முகவுரை காண்க).

இந்த எண்ணத்தை யோவான் சுத்தப் பொய்யாகக் கண்டிக்கிறார். இப்படி எண்ணிக்கொள்வோர் மாயத் திற்கு ஆளாகி, உண்மைப் பொருளாகிய கடவுளையும் அவர் வார்த்தையையும் அறியவில்லை. மேலும் அவர்கள் கடவுளைப் பொய்யர் ஆக்கியிருக்கிறார்கள். எப்படி யெனில் அவர் மனிதர் யாவரும் பாவிகள் என்று சொல்லியிருந்தும் (ரோமர் 3[10-20, 23]), அவர்கள் அதை ஒப்புக்கொள்ளவில்லை.

1 யோ. 1:9 தங்கள் பாவத்தை ஒப்புக்கொள்ளாதார் நிலை அவ்வாறிருக்க, நாம் நமது பாவ நிலையை உணர்ந்து கடவுள் முன் நம் பாவங்களை ஒப்புக்கொண்டால் என்ன? அவர் நம்மை மன்னித்து நம்மை முற்றிலும் சுத்திகரிப்பார் (வ. 7-ஐக் காண்க). அவர் ஏன் நமக்கு அப்படிச் செய்வார் எனில், அவர் அப்படிச் செய்வதாக வாக்களித்திருக்கின்றார். அவர் நம்பிக்கைக்குரியவரும் நேர்மையுள்ளவருமாய் இருப்பதால், அவ்வாக்கை நிறை வேற்றத் தவறிவிடமாட்டார். அவர் இத்தன்மை படைத்தவர் என அறிந்த நாம் தைரியமாய் அவர் முன்னிலையில் வந்து, ஒன்றும் மறைக்காமல் நமது

பாவத்தை அறிக்கையிட்டுப் பூரண மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளலாம்.

தன் குற்றத்தை உணராமலிருப்பது மனிதனுக்கு இயற்கை. உணர்த்தப்பட்டாலும் அவன் அதை ஒப்புக்கொள்ளமாட்டான். "நான் என் குற்றத்தை ஒப்புக்கொண்டால் தண்டிக்கப்படுவேன்" என்ற பயம் அதற்குக் காரணமாம். இஃதெல்லாவற்றையும் நாம் ஆதாம் ஏவாள் என்பவர்கள் வரலாற்றில் தெளிவாகக் காணலாம். (ஆதி. 3^{10-13}).

இந்து மதத்தினர் மனிதன் பாவி என்பதை வெறுப்புடன் மறுப்பர். சுவாமி விவேகானந்தர் மனிதன் பாவி என்று சொல்வது தேவதூஷணம் எனக் கூறினர். அவர் கருத்துப்படி மனிதன் துணிகரமாக, வேண்டும் என்று இறைவன் திருக்கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் பாவம் செய்தவன் அல்லன். உலகத்தில் தெரிகிற தீமைகளுக்கு, மனிதன் செய்கிற பாவம் அன்று, அவன் அறியாமையே காரணம். ஆகவே அறியாமையிலிருந்து விடுதலை பெற்று மெய்யறிவை அடைவது மீட்பு. மாணிக்க வாசகர் போன்ற தமிழ்ப் பக்தர்களுடைய பாடல்களில் பாவ உணர்வு ஓர் அளவுக்குக் காணப்படினும், மனிதன் செய்கிற பலவித வினைகளுக்கு இன்றும் கடவுள்தான் காரணர். முழுப்பொறுப்பும் மனிதனுடையதன்று. எனவே ஒரு இந்து, கிறிஸ்தவன் ஆவதற்குத், தன் பாவ நிலையைக் குறித்து உணர்வடைதல் இன்றியமையாதது.

கிறிஸ்தவர்கள் ஆன பிறகு நாம் இன்னும் பாவிகளாகவே இருக்கிறோம் என்று மறந்துவிடக்கூடாது. யோவான் காலத்தில் வாழ்ந்த அறிவு நெறிக் கொள்கையினர் போல். "நாம் பாவம் செய்யவில்லை, பாவ அறிக்கை இன்னும் வேண்டியதில்லை" என்று சொல்லுகிற ஒரு கூட்டத்தார்

கிறிஸ்தவச் சபையில் இருக்கிறார்கள். அவர்கள் இரட்சிப்பு அடைந்தபின் ஒரு வேளை தூய வாழ்க்கையில் அதிகமாக முன்னேறியிருக்கலாம். வெளிப்படையான பாவங்களை அதிகமாகச் செய்யாதிருக்கலாம். ஆயினும் பாவம் எனும் சொல் நம் வெளிச் செயல்களை மட்டும் அல்ல, நம் உள்ளத்தின் நிலையைக் குறிக்கும். இயேசுபெருமான் அருளிய மலைப் பிரசங்கத்தின் ஒளியில் தனது உள்ளத்தை ஆராய்ந்த பின், "நான் குற்றமற்றவன்" எனச் சொல்ல யார் துணிவான்? உண்மையிலே யார் கிறிஸ்தவ வாழ்க்கையில் அதிகமாக முன்னேறியிருக்கிறாரோ அவருக்குப் பாவ உணர்வு மிகுதியாயிருக்கும். ஏனெனில் நாம் கிறிஸ்துவோடு நெருங்கிப் பழகப் பழக அவரது ஒளியில் நம்மிடமுள்ள ஒவ்வொரு மாசும் கறையும் தெளிவுற வெளிப்படுத்தப்படுகிறது.

1யோ. 2:1—3. முந்திய வசனங்களில் யோவான் ஒளியில் நடப்பது பாவத்தை ஒப்புக்கொள்வதாகும் என்றும், பாவத்தை ஒப்புக்கொண்டால் மன்னிப்புப் பெறலாம். என்றும் கூறினார். இப்போது அவர், சிலர் தமது கூற்றைத் தவறாகப் புரிந்து கொள்ளாலாம் என்று உணர்ந்து கொண்டு இன்னொரு விளக்கம் சேர்க்கிறார். முந்திய வசனங்களை வாசித்த சிலர், "பாவம் செய்தால் அதை ஒப்புக்கொள்வதால் மன்னிப்புப்பெறலாம் என்றால், பாவ மன்னிப்பு இலகுவான காரியம் ஆயிற்றே! நாம் விருப்பம் போல பாவம் செய்து மன்னிப்புப் பெற்றுக் கொண்டே இருக்கலாம்" என்று நினைக்கலாம். அந்தத் தப்பெண்ணத்தைத் தவிர்க்க யோவான் "நீங்கள் பாவம் செய்யாதபடி இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்" என மிகவும் கண்டிப்பாக எழுதுகிறார். (2.1 முற்பகுதி) தங்கள் பாவங்களை ஒப்புக்கொள்வோரைக் கடவுள் மன்னிப்பார் என்பதால் விருப்பம் போல் பாவம் செய்ய அனுமதி கிடைத்திருக்கிறது என்று நினைப்பது தவறு. ஆனால்

(2 : 1 பிற்பகுதி) பாவம் செய்ய நேரிட்டால் ஒரு பரிகாரம் உண்டு. அந்தப் பரிகாரம் இன்னதென்று அவர் முன்னிலும் விரிவாக இங்கு விளக்குகிருர்.

யோவான் கூறுகிற பரிகாரம் இயேசு கிறிஸ்து. அவர் இரண்டு முறைகளில் நம் பாவங்களுக்காகப் பரிகாரம் செய்துள்ளார்:

[அ] 1 யோ. 2 : 1 அவர் நமக்காகப் பரிந்து பேசுகிற சகாயர்; மூலத்திலுள்ளசொல் 'கிட்டவர அழைக்கப்பட்டவன்' என்று பொருள்படும். எதற்குக்கிட்டவர அழைக்கப்பட்டவன் எனில், சகாயம் செய்வதற்கே. இச் சொல் நியாய விசாரணையில் கைதிக்குச் சகாயம் செய்யும் ஒரு வக்கீலைக் குறிக்கும்படி அடிக்கடி பயன்படும். நீதி மன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட கைதிக்காக ஒரு வக்கீல் பரிந்து பேசுவது போல, இயேசு கிறிஸ்து கடவுள் முன் விசாரிக்கப்படுகிற பாவிகளுக்காகப் பரிந்து பேசுகிருர். சகாயம் செய்கிருர். (ரோமர் 8^{34}, எபிரேயர் 7^{25}, 2^{17}, 4^{14-16} காண்க). இது நீதிமன்றத்திலிருந்து எடுத்துக் கொண்ட ஒரு சான்று. இதைக் கொண்டு யோவான் கிறிஸ்து நமக்

---

2 : 1 பரிந்து பேசும் சகாயர் — மூலத்தில் வருகிற பதம் 'பரகிளேற்றெஸ்' என்பது. யோ. $14^{16,26}$, 15^{26}, 16^{7} ஆகிய வசனங்களில் அது பரிசுத்த ஆவியானவரைக் குறித்துப் பயன்படுத்தப்படுகிறது. அவ் வசனங்களில் பழைய திருப்புதலில் அது ":தேற்றரவாளன்" என்பதாக மொழி பெயர்க்கப்பட்டது. ஆயின் அங்கும் "சகாயர்" என்னும் பொருள் பொருத்தமாய் இருக்கிறது. இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடம் பரிந்து பேசுகிருர் எனச் சொல்லுமிடத்து, பிதா தாமே நம் மீது ஆக்கறையாய் இராமல் வேண்டா வெறுப்புடன் நாம் கேட்டுக்கொண்டவற்றைத் தருவார் என்று பொருள் கொள்ளுவது தவறு. இயேசு தாமே அந்த எண்ணத்தைத் திட்டமாய்த் தவிர்க்கிருர் (யோ. $16^{26,27}$).

காகத் தொடர்ந்து செய்கிற ஊழியத்தை விளக்குகிறார். இந்த உருவகத்தின் அடிப்படையான கருத்து யாதெனில், இயேசு கிறிஸ்துவினாலேயன்றி கடவுள் முன் நிற்கும் உரிமை பாவிகளாகிய நமக்கு இல்லை. ஆயினும் அவர் நமக்காகப் பரிந்து பேசுகிற படியினால் கடவுள் நம்மைக் குற்றமற்றவர்களாகத் தீர்த்துத் தம் பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளுகிறார். யோவான் நீதிபரர் எனும் சிறப்புப் பெயரைக் கிறிஸ்துவுக்குத் தருவதும் குறிப்பிடத் தக்கது கிறிஸ்து தாமே நீதி நேர்மை தவறாதவர் ஆனபடியினால் மட்டும் அவர் குற்றவாளிகளாகிய நமக்காகப் பரிந்து பேசக் கூடியவராயிருக்கிறார்.

[ஆ] 1 யோ. 2:2 நம் பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி: இயேசு தொடர்ந்து நமக்காகப் பரிந்து பேசுகிறார், எனினும் அவர் ஒரே தரம் தம்மைப் பலியாக ஒப்புக் கொடுத்தார். அது மட்டும் அன்று, அவர் அப்படிப் பலியாக அடைந்த மரணமே அவர் பின்னால் நமக்காகப் பரிந்து பேசுவதற்கு ஆதாரமாயிருக்கிறது. பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்தில் போய்ப் பலி மிருகத்தின் ரத்தத்தைப் படைத்ததுபோல, இயேசு கிறிஸ்து தாம் சிந்திய ரத்தத்தை முன்னிட்டு நமக்காகக் கடவுள் முன்னிலையில் பரிந்து பேசுகிறார். (எபி. 9[7, 12]) யோவான் முன்னால் சொன்னது போல் (1[7]) இங்கும் இயேசுவின் மரணம் ஒருபலியாக நமக்குப் பயன் தருகிறது எனக்

2:2 கிருபாதார பலி — கடவுளின் கோபத்தை தணிக்கும்படி பிற மதத்தினர் தங்கள் தெய்வங்களுக்குப் பலி செலுத்தி வந்தனர். இப் பதம் அந்தப் பலிகளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. ஆயினும் யூதர் அந்த எண்ணத்தோடு பலிகளைச் செலுத்தவில்லை. அவர்கள் கடவுள் அப்படிக் கோபம் தண்ணிக்கப்பட வேண்டியவர் அல்லர். யூதர் பலி முறைமைகள், கடவுள் தாமே தம் மக்கள் தம்மை அணுகுவதற்குத் தயவாய் ஏற்படுத்தித் தந்த ஒரு வழி.

கூறுகிறார். யூதக் கருத்துப்படி பாவம் மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையே ஒரு தடையாய் நிற்கிறது. புது உறவும் ஐக்கியமும் ஏற்படுவதற்கு மனிதனின் பாவம் நீக்கப்படல் வேண்டும். அல்லது கடவுள் அதைப் பாராதபடிக்கு அது மூடிமறைக்கப்படல் வேண்டும் (சங். 32[1]). அவ்வாறு பாவத்தை மறைத்து அப்புறப் படுத்திக் கடவுளையும் மனிதனையும் ஒரு புது ஐக்கியத்தில் இணைப்பது பலி. கிறிஸ்து தாமே பழைய ஏற்பாட்டுப் பலிமுறைகளை நிறைவேற்றி இத்தகைய ஒரு பலியாகத் தம்மை ஒப்புக் கொடுத்தார் (4[10], ரோமர் 3[26] காண்க). இந்த நிறைவான பலி ஒரு சில பெயருக்கு, அல்லது ஏற்கனவே விசுவாசித்த கிறிஸ்தவர்களுக்கு மட்டும் அன்று, உலகிலுள்ள எல்லா மனிதருக்கும் பயன் தரக்கூடியதாயிருக்கிறது. அவர்கள் இன்னும் அதை உணர்ந்து கொண்டு கிறிஸ்துவின் மீட்பைச் சொந்தமாக்கிக் கொள்ளவில்லை, எனினும் அவர்களுக்காகவும் அது ஆயத்தப் படுத்தப்பட்டிருக்கிறது. அதே கருத்தில் யோவான் இயேசுவை 'உலக மீட்பர்' என அழைக்கின்றார் (4[14]; யோ. 1[29] ஐயும்காண்க)

இயேசு நம் பாவங்களுக்காகச் செய்த நிறைவான பரிகாரத்தை யோவான் இவ்வாறு விளக்குகிறார். இவ் வசனங்கள் பாவத்தின் பாரத்தால் வருத்தப்படுகிறவர்களுக்கு மிக்க ஆறுதலையும் நன்னம்பிக்கையும் ஊட்டக்கூடியவை. திருவிருந்து ஆராதனையில் இவை பாவ அறிக்கை ஜெபத்திற்குப் பின் இடம் பெற்றிருப்பது சாலப்பொருந்தும்.

1. யோ. 2:3-6. மூன்றும் பரிசோதனை:

உண்மையாக் கடவுளை அறிந்திருக்கிறவன் யார் என்று அறிந்துகொள்ளுமாறு, அவருடைய கட்டளை

களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவன் யார் என்று சோதித்துப் பார் என்பது யோவானின் மூன்றும் பரிசோதனை. கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவனே கடவுளை அறிந்திருக்கிறவன் என்று வலியுறுத்திக் கூறுகிறார். அப்படியே இயேசு "என் கட்டளைகளைப் பெற்றுக்கொண்டு அவற்றைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான்" என்று சொல்லியிருந்தார் (யோ. 14^{21}). கீழ்ப்படிதல் அன்புக்கு அறிகுறி. கடவுளின் சித்தத்தை மீறி நடந்துகொள்ளுகிறவன் அவரோடு அன்பின் உறவில் எப்படி நிலைத்திருக்க முடியும்? இந்த வெளிப்படையான உண்மைகளில் யோவான் தமது வாதத்தை அமைக்கிறார்.

1 யோ. 2:3, 5. கடவுளின் கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரை அறிந்திருக்கிறான். இங்கு கடவுளை அறிகிற அறிவு கிறிஸ்தவ வாழ்க்கையின் சாராம்சமாகக் காணப்படுகிறது. "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" என்னும் வசனம் இதற்கு ஒப்பானது (யோ. 17^{3}). இந்த அறிவு கடவுளைப் பற்றி அறியும் மூளை அறிவு அன்று, அவரோடு நேரடியாக உறவு கொள்வதனால் ஏற்படுகிற ஓர் அறிவு என்க.

கடவுளின் கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரை அறிந்திருக்கிறதுமல்லாமல், தான் அவரை அறிந்திருக்கிறான் என்று அறிவான் என யோவான் எழுதுகிறார். சபையில் பரவியிருந்த கள்ளப் போதனையின் காரணமாகச் சபையாரில் பலர் இந்த நிச்சயத்தை இழந்திருந்தனர். அவர்களை மறுபடியும் நிச்சயப்படுத்த வேண்டும் என்பது யோவான் இந்த நிருபத்தை எழுதியதில் ஒரு முக்கிய நோக்கமாயிருந்தது (5^{13}). ஏனெனில், "நான் கடவுளை அறிந்திருக்கிறேன்" எனச் சொல்வது தற்

பெருமையோ செருக்கோ அன்று. அந்த நிச்சயத்தை ஒவ்வொரு கிறிஸ்தவனும் அடைய வேண்டும் என்று கடவுள் சித்தம் கொண்டிருக்கிறார் எனலாம் (உதாரணமாக 2 தீமோ. 1[12] காண்க). அந்த நிச்சயத்தை அடைவதெப்படியெனில், யோவான் அதற்கான ஓர் ஆதாரத்தை இங்கே எடுத்துக் காட்டுகிறார். நீங்கள் உங்களால் ஆனவரைக்கும் கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்துகொள்கிறீர்களானால், நீங்கள் அவரை அறிந்திருக்கிறதாகத் தெரிந்து கொள்ளலாம் என்கிறார். இது சொந்த முயற்சிக்கும் நற்கிரியைகளுக்கும் இடம் கொடுப்பதால், இது தன்னில்தானே போதுமானது என்று சொல்லமுடியாது. ஆயினும் யோவான் இன்னும் சில ஆதாரங்களைப் பின்னால் எடுத்துரைக்கப் போகிறார் (உதாரணமாக 3[14], 3[24]). இதை அவற்றோடு தொடர்பு படுத்தி எடுத்துக்கொள்ளல் வேண்டும். கடவுளின் கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் இந்த நிச்சயத்தை அடைவதோடு கடவுளின் அன்பை நிறைவாகப் பெற்றுக் கொள்ளுகிறான். (வ. 5). அதாவது கடவுள் நம்மேல் வைக்கும் அன்பு அவனிடத்தில் நிறைவாகத் தங்கும்.

1. யோ. 2:4. இவ்வசனத்தில் யோவான் தமது பரிசோதனையை எதிர்மறையாக விளக்குகிறார். கீழ்ப்படியாதவன் கடவுளை அறியாதவனும் பொய்யனுமாவான். இப்படி கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் நடந்து கொண்டவர்களில் சிலர் நாம் கடவுளை அறிந்திருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டனர் எனத் தெரிகிறது. அவர்கள்தான் தாங்கள் கடவுளோடு கொண்ட சிறந்த தொடர்பில் பெருமை பாராட்டி வந்த அறிவு நெறிக் கொள்கையினர் (1[6], [8], [10] காண்க). அவர்கள் தங்கள் சொல்லுக்கு ஏற்றதாய் நடந்துகொள்ளவில்லை என்பதனால், யோவான் "நாம் கடவுளை அறிந்திருக்கிறோம்"

என்ற அவர்களது கூற்றினைப் பெருமையும் பொய்யுமாகக் கண்டிக்கிறார்.

2 : 6 யோவான் முன்சொன்ன பொருளை வேறு சொற்களில் இங்கு மறுபடியும் எடுத்துச் சொல்லுகிறார். தன்னைக் கிறிஸ்தவனாகச் சொல்லிக்கொள்ளுகிறவன் கிறிஸ்துவுக்கு ஏற்றதாய் நடந்துகொள்ளல் வேண்டும், "அவருக்குள் நிலைத்திருக்கிறேன்" என்பது கள்ளப் போதகருடைய கூற்றுக்களில் இன்னொன்றாக இருந்திருக்கும். "அவரை அறிந்திருக்கிறேன்" என்பதைவிட இது கிறிஸ்துவோடு கூடிய அதிக நெருங்கிய தொடர்பைக் குறிக்கிறது, கிறிஸ்து எப்பக்கமும் நம்மைச் சூழ்ந்து கொள்ளுகிறார் என்பது அதன் கருத்தாகும். யோவான் நற்செய்தி நூல் 15ஆம் அதிகாரத்தில் அது விளக்கம் பெறுகிறது. அங்கே இயேசு பெருமான் "நான் திராட்சைச் செடி, நீங்கள் கொடிகள். என்னில் நிலைத்திருங்கள்" என்று அறிவுறுத்துகிறார் (யோ. 15[1,4]). பவுல் அப்போஸ்தலனும் "கிறிஸ்து சரீரம், நாம் அவயவங்கள்" எனக் குறிப்பிடுகிறார் (1 கொரி. 12[12]). ஆகவே கொடியானது செடியோடும் அவயவம் சரீரத்தோடும் ஒன்றாக இணைக்கப்படுவதுபோல, கிறிஸ்தவன் கிறிஸ்துவோடு ஒன்றாகச் சேர்ந்து அவருக்குள் இருக்கிறான். கள்ளப் போதகர்கள் இந்த நிலை தாங்களே அடைந்த ஒரு சிறந்த பாக்கிய நிலை என்றனர். யோவான் இது ஒவ்வொரு மெய்க் கிறிஸ்தவனுடைய நிலை என்கிறார் (வ. 5 பிற்பகுதி).

கிறிஸ்து நடந்தபடியே கிறிஸ்தவனும் நடக்கவேண்டும் என்று சொல்வதனால், யோவான் கிறிஸ்துவை நமக்கு முன் மாதிரியாக வைக்கிறார். கிறிஸ்து நமக்கு முன் மாதிரி மட்டும் அல்ல, தமது உயிரைக் கொடுத்து நம்மைப்பாவத்திலிருந்து மீட்டுக்கொண்டவரே, எனினும்

அவர் தம் வாழ்க்கையில் காட்டிய முன் மாதிரியை நாம் பின்பற்ற வேண்டும் என்பதையும் திருமறை பல இடங்களில் நமக்கு நினைப்பூட்டுகிறது (உதாரணமாக யோ. 13^{15}, 1 பேதுரு 2^{21} காண்க). ஒழுக்கத்தில் அவரே நமக்குக் குறிக்கோளாவர்.

1 யோ. 2 : 7-11. நான்காம் பரிசோதனை.

பிறனில் அன்பாயிருப்பவன் கடவுளின் ஒளியில் இருக்கிறான், பிறனைப் பகைக்கிறவன் இருளில் இருக்கிறான். அன்பு மெய்க்கிறிஸ்தவனுக்கு அறிகுறி. இந்தப் பரிசோதனை முந்திய பகுதியோடு தொடர்புடையதாம். எப்படியெனில், அங்கு யோவான் கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்பவன் கிறிஸ்தவன் எனச் சொல்லியும், கடவுள் கட்டளையிட்டதென்ன என்று அவர் சொல்லவில்லை. இங்குக் கடவுளின் முதன்மையான கட்டளை அன்பே என்று தெளிவுபடுத்துகிறார்.

1 யோ. 2 : 7, 8. யோவான் தம் பரிசோதனைக்கு அடிப்படையாக வைத்த கட்டளை எத்தன்மையது என முதலில் விளக்குகிறார்.

[அ] 2 : 7 அது பழைய கட்டளை: கள்ளப் போதகர்கள் செய்தது போல், யோவான் தம் நிருபத்தில் புதிய போதனையை புகட்ட முன்வரவில்லை. அவர் இங்குக் கூறுகிற அன்பின் கட்டளை அச்சபையாரால் கொஞ்சக் காலமாக மறக்கப்பட்டதாயினும், ஆதி நற்செய்தியில் இன்றியமையாத ஓர் பங்கு. ஆகவே அது அவர்கள் ஒரு போதும் கேட்காதது அன்று. நற்செய்தி முதன் முதலாக அவர்கள் மத்தியில் அறிவிக்கப்பட்டதிலிருந்து (ஆதி முதல்) அவர்கள் அதை அறிந்திருந்தனர்.

1 யோ. 2:8 ஆ] அது புதிய கட்டளை: இயேசு தாமே நீங்கள் ஒருவரில ஒருவர் அன்பாயிருங்கள் என்ற கட்டளையைக் கொடுத்தபோது இது புதிதான ஒரு கட்டளை என்று சொன்னார் (யோ. 13:34). பிறனில் அன்பு கூறுவாயாக என்ற கட்டளை மோசேயின் நியாயப் பிரமாணத்தில் அடங்கியிருக்கிறது (லேவி. 19:18), எனினும் இயேசு நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல அன்பாயிருங்கள் என்றமையால் அன்பு என்னும் சொல்லுக்குப் புத்தம் புதிய அர்த்தத்தைக் கொடுத்தார். இது அவரிலும் உங்களிலும் உண்மையானது: எது உண்மையாயிருக்கிறது எனில், யோவான் எழுதுகிற கட்டளை புதிய கட்டளையாயிருக்கிறது என்பதே. அதன் புதுமை முதலில் இயேசுவின் வாழ்க்கையில் மெய்ப்பிக்கப்பட்டது. அவர் தம் போதனையினாலும் சாதனையினாலும் அன்பு இன்னதென்று புதிய முறையில் காண்பித்தார். மேலும் இந்தக் கட்டளையின் புதுமை கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் காணப்படுகிறது. எப்படியெனில் அவர்கள் காட்டிய அன்பு உலகம் முன்னால் பாராத ஓர் அன்பு. அது மாத்திரம் அல்ல, இக் கட்டளை அடிக்கடி

2;8 இது அவரிலும் உங்களிலும் உண்மையானது — எது உண்மையானது எனும் கேள்விக்கு இரண்டு விடைகளைக் கொடுக்கலாம்.

[அ] அந்தக் கட்டளை புதியது என்பது உண்மையாய் இருக்கிறது. அப்போது அவரிலும் உங்களிலும் என்பது, அவரது வாழ்க்கையிலும் உங்களது வாழ்க்கையிலும் எனப் பொருள்படும். இது நாம் முன்னால் தந்த வியாக்கியானம்.

[ஆ] அந்தக் கட்டளை அவரது வாழ்க்கையிலும் உங்களது வாழ்க்கையிலும் நிறைவேறுகிறது எனப் பொருள் கொள்வோரும் உண்டு. அது பொருத்தமான பொருள்தான். எனினும் மூலத்தில் உள்ள சொற்கள் அப்பொருளைத் தர முடியுமோ என்பது சந்தேகத்திற்கிடமாயிருக்கிறது.

முன்னல் கேட்கப்பட்டதாயினும், நாடோறும் அது நமக்குப் புதுப் பொருளைத் தருகிறது. நேற்று இக்கட்டளைக்கிணங்க நாம் ஒரு முறையில் நம் பிறனுக்கு அன்பு காட்டினோம். ஆனல் இன்றைக்கு நாம் இன்னொரு முறையில் அன்புகாட்ட அதே கட்டளையினல் ஏவப்படுகிறோம். ஏனெனில் அன்புக்கு எல்லையும் அளவும் இல்லை. ஒவ்வொரு புதிய சூழ்நிலையிலும் எப்படி அன்புகூற வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் நமக்குக் காட்டுவார், படிப்படியாக நம்மை வழிநடத்துவார். எனவே "நான் அன்பாயிருக்கக் கற்றுக் கொண்டு விட்டேன்" என ஒருவனும் ஒருபோதும் சொல்ல முடியாது. ஆகையால் யோவான் எழுதுகிற இக்கட்டளை புதியது என்னும் கூற்றின் உண்மைக்கு இயேசுவின் வாழ்க்கையும் நமது அனுபவமும் சான்றுகளாகும்.

இந்தக் கட்டளை ஏன் புதிதாயிருக்கிறது என்று விளக்க யோவான் வேறொரு காரணத்தைக் கூறுகிறார்: இருள் நீங்கிப் போகிறது, மெய்யான ஒளி இப்பொழுது பிரகாசிக்கிறது. யூதர் உலக வரலாற்றைப் பழைய யுகம் புதிய யுகம் ஆகிய இரு யுகங்களாகப் பிரித்தனர். பழைய யுகம் இப்பொழுது நடக்கிறது, அது தீய சக்திகளது ஆட்சிக்கு உட்பட்டது. மேசியா வரும்போது அவர் தீமையை ஒழித்துக் கடவுளின் அரசை நிறுவுவார். அதுவே யூதர் எதிர்பார்த்து வந்த புதிய யுகம். இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொண்ட ஆதிக் கிறிஸ்தவர்கள் புதிய யுகம் அவர் மூலம் செயலாற்றத் தொடங்கியது எனக் கருதினர். பழைய யுகமாகிய இருள் நீங்கிப் போகிறது. புதிய யுகமாகிய சூரியன் ஏற்கனவே உதித்துக் கொண்டிருக்கிறது. இப்புது யுகத்தில் பழையவை ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின (2 கொரி. 5:17). இயேசுவின் அன்பின் கட்டளையும் இப்புது யுகத்

திற்குரியதாகும். எனவே அதுவும் புதியது எனச் சொல்வது பொருந்தும்.

யோவான் கூறுகிற கட்டளை பழையதும் புதியதும் ஆகும். ஏனெனில் அது ஆதி நற்செய்தியில் ஒரு பாகமாயிருந்தது; இன்னும் இயேசு பெருமான் அதற்குப் புதுப் பொருளைக் கொடுத்துப் புது யுகத்தின் வைகறையில் அதைப் புதிதாகத் தந்தருளினர். அந்தக் கட்டளை இன்னதென்று யோவான் திட்டமாகச் சொல்லவில்லை. பின் வரும் வசனங்களிலும் அவர் சொல்லவில்லை. ஆயினும் அது இயேசு தந்தருளிய அன்பின் கட்டளையே என்பது யோவான் சொல்லாமலே விளங்குகிறது.

1 யோ. 2 : 10 யோவான் அன்பை அளவு கோலாக வைத்துப் பிறனில் அன்பு கூருகிறவனே மெய்க் கிறிஸ்தவன் எனக் கூறுகிறார். அப்படி அன்பு கூருகிறவனது நிலையை யோவான் இரண்டு விதமாக் குறிப்பிடுகிறார்.

அ] அவன் ஒளியில் நிலைத்திருக்கிறான்: கடவுள் ஒளியே (1:6), ஆகையால் ஒளியில் இருப்பவன் கடவுளோடு உறவு கொண்டவன்; பாவம், அறியாமை, பகை ஆகிய இருள் நீக்கப் பெற்றுக் கடவுளின் தன்மையில் பங்கு பெற்றவன்.

ஆ] இடறி விழுவதற்கான காரணம் அவனிடம் இல்லை. ஒருவன் இரவு நேரத்தில் வழியில் நடந்து போகும் போது, தெரியாமல் தன் காலால் ஒரு கல்லில் தடுக்கி இடறி விழுந்து விடுகிறான். அவன் அப்படி விழுந்து விடுவதற்குக் காரணம் அவன் காலில் தட்டியகல். ஆவிக்குரிய வாழ்க்கையிலும் ஒருவன் பாவம் செய்தால், அல்லது ஒருவன் இயேசுவின் மேல் நம்பிக்கை வைக்காமலிருந்தால், அவன் இடறி விழுகிறான் என்று சொல்லலாம். அவன் அப்படி

இடறி விழுவதற்கு ஒருவேளை வேருெருவன் செய்த பாவம், அல்லது அவனுக்குள்ளேயே எழுகிற தீய ஆசை காரணமாய் இருக்கலாம் (மத் 18^{6-9} காண்க). இப்படித் தவறி விழுவதற்கான காரணங்கள் திருமறையில் இடறல்கள் எனப்படும். இங்கு யோவானின் கருத்து யாதெனில் தன் சகோதரனில் அன்பாயிருப்பவனிடத்தில் தானே பாவத்தில் தவறிவிழுவதற்கேதுவான காரணமும் இல்லை அவனைப் பார்க்கிற வேருெருவன் பாவத்தில் தவறி விழுவதற்கேதுவான காரணமும் இல்லை. (யோ. 11^{9-10} காண்க). அவன்தானே பாவ இச்சைகளுக்கு ஆளாக மாட்டான். மற்றவர்களும் அவன் நடக்கையைப் பார்த்துப் பாவம் செய்யத் தூண்டப்படமாட்டார்கள்.

1 யோ. 2:9, 11 தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளில் இருக்கிறுன்: யோவான், அன்பு கூராதவன் என்று சொல்லாமல் பகைக்கிறவன் என்று சொன்னது கவனிக்கத்தக்கது. நம்மிடம் அன்பில்லை எனின், நாம் பகைக்கிறோம் என்றே சொல்ல வேண்டும். நடு நிலை இல்லை. இப்படிப் பகைக்கிறவனது நிலையைப் பற்றி யோவான் மூன்று காரியங்களைக் கூறுகிறுர்.

[அ] இதுவரைக்கும் இருளில் இருக்கிறுன்: கடவுள் ஒளியாயிருக்க, இருளில் இருப்பவன் கடவுள் தொடர்பு அற்றவன் ஆவான். மெய்ப்பொருளை அறியாத இருள் அவனைச் சூழ்ந்து கொள்ளுகிறது. யோவான் 'இது வரைக்கும்' என்றமையால், அவன் இடைவிடாமல் ஒரே இருளில் கிடக்கிறுன், மெய்யொளி ஒருபோதும் சற்றேனும் அவன் உள்ளத்தில் உதிக்கவில்லை எனக்கொள்க.

[ஆ] இருளிலே நடக்கிறுன்: அவன் உள்ளத்தின் நிலை எப்படியிருக்கிறதோ அவன் நடக்கையும் செயல்களும் அப்படியே இருக்கும். அவன் செய்கைகள் அன்பும் அருளும் நேர்மையும் அற்றவையாகக் காணப்படும்.

[இ] தான் போகும் இடம் இன்னதென்று அவன் அறியவில்லை: அவன் வாழ்க்கையில் உறுதியான ஒரு குறிக்கோள் இல்லை. எப்படி செயலாற்ற வேண்டும் என்றும், என்னத்தைத் தேடவேண்டும் என்றும் அவனுக்குத் தெரியாது. அவன் குருடனைப்போலவே இருப்பான்.

இப்படித் தங்கள் சகோதரரைப் பகைக்கிறவர்கள் சிலர் தாங்கள் ஒளியில் இருக்கிறோம் என்று சொல்லித் தாங்கள் அடைந்ததாக எண்ணிக்கொண்ட ஆவிக்குரிய நிலையில் பெருமை பாராட்டி வந்தனர் (வ. 9). இதில் சபையில் கலகம்பண்ணின அறிவு நெறிக் கொள்கையினர் கூற்றுக்களில் இன்னொன்றை நாம் காண்கிறோம். யோவான் நேரடியாக அவர்களைக் குறித்து, அவர்கள் இப்படிச் சொல்லியும் அவர்களிடம் அன்பு இல்லை எனச் சொல்லவில்லை. ஆயினும் யோவான் அவர்களை அன்பில் குறைவுள்ளவர்களாக எண்ணினர் என்று அனுமானிக்க இடம் உண்டு. அப்படி இருந்திருப்பின், அது ஆச்சரியம் இல்லை. ஏனெனில் சபையில் விவாதம், கட்சிப்பாடு, பிரிவினை இவைகள் காணப்படும் போது அன்புத் தாழ்ச்சியும் ஏற்படுவது இயற்கை. எப்படியாயினும் அந்தக் கள்ளப் போதகர் தீய ஒழுக்கத்தில் ஈடுபட்டிருந்தனர் எனத் தோன்றவில்லை. அவர்கள் அப்படிச் செய்திருப்பின் யோவான் அதை நேரடியாகக் கண்டிக்காமலிருந்திருக்கமாட்டார். இந்த நிருபத்தில் கேடான ஒழுக்கத்தைப் பற்றி திட்டவட்டமான குறிப்பும் கண்டனமும் இல்லாதிருப்பதால், அதிலே அவர்களுக்கு அதிகமான ஈடுபாடு இல்லை என்று தெரிகிறது.

யாரிடம் அன்பு உண்டு என்ற பரிசோதனையினால் யோவான் இங்கு மெய்க் கிறிஸ்தவர்களையும் பொய்க் கிறிஸ்தவர்களையும் வேறுபடுத்திக் காட்டுகிறார். தங்களைப் பெரிய பக்தர்களாகக் காண்பிக்கிறவர்களிடம் உலக

மக்கள் எந்நாளும் எதிர்பார்க்கிறது அன்புச் செயல். அன்பின் வழி அறம் பிறக்கிறது. அதற்கு,

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

என்னும் வள்ளுவரின் கூற்றும் சான்ருகும். அத்தகைய இரக்கமுள்ளவர்கள்தான் அந்தணர் எனும் பட்டப்பெயரைப் பெறத் தகுதியுடையவர்களாவர். அன்பானது எவ்வாறு தோன்றும், எவ்வாறு வளரும், எவ்வாறு செயல்படும் எனக் கேட்டால், யோவான் பின்னுல் அதன் முழு இலக்கணத்தையும் விளக்கப்போகிருர். ஆகையால் இந்த இடத்தில் அதைப்பற்றி விரிவாக ஆராயத் தேவை இல்லை. (3^{11-19}, 4^{7-21} காண்க).

1 யோ. 2:12-15 ஒரு எச்சரிக்கை

யோவான் அன்பே மெய்க் கிறிஸ்தவனுக்கு அறிகுறி எனச் சொன்னுர். அதைத் தொடர்ந்து அவர் பொய்யான அன்பைக்குறித்துத் தம் நண்பரை எச்சரிக்கப்போகிருர் (வ. 15-17). அப்படி எச்சரிக்குமுன் எந்த அடிப்படையிலே எச்சரிக்கிருர் என்பதைத் தெளிவாக்குகின்ருர். (வ. 12-14).

1 யோ. 2 : 12-14. இந்த வசனங்களில் யோவான் தம் நிருபத்தை வாசிப்போர் கிறிஸ்தவர்கள் அல்லர் என்பதனுல் அல்ல, அவர்கள் உண்மையிலே கடவுளை அறிந்தவர்களும் பாவ மன்னிப்புப் பெற்றவர்களுமாய் இருப்பதால் தான் இப்படி அவர்களுக்கு எழுதுகிருர் என்கிருர். அந்தச் சபையாரில் சிலர் கள்ளப் போதகர் செய்த பிரசாரத்தினுல் நாம் உண்மையில் கிறிஸ்தவர்

---

2 : 12-14 இந்த வசனங்களில் இன்னும் சில பிரச்சினைகள் உண்டு.

G.B. Sathyanesan, B.A.

களா என்று கேட்டுக்கொண்டு சந்தேகத்தில் ஆழ்ந்திருந் திருந்தனர் ($2^{3,5}$ காண்க). யோவான் அவர்களுடைய சந்தேகங்களை நீக்கி, அவர்களை நம்பிக்கையில் உறுதிபடுத்த விரும்புகிறார். ஆகவே அவர் "நீங்கள் கிறிஸ்தவர்கள் அல்ல எனில் இப்படி நான் எழுதமுடி யாது. நீங்கள் மெய்க் கிறிஸ்தவ அனுபவத்தை அடைந்த தால்தான் இப்படி எழுதுகிறேன்" எனக் கூறுகிறார். (வ. 2^{21} காண்க).

இந்த வசனங்களில் செய்யுள் போன்ற அமைப்புக் காணப்படுகிறது. ஆறு வாக்கியங்கள் உண்டு. முதல் மூன்றில் 'எழுதுகிறேன்' என்று நிகழ்காலத்தில் எழுது கிறார், அடுத்த மூன்றில் 'எழுதியிருக்கிறேன்' என்று இறந்த காலத்தில் எழுதுகிறார். இன்னும் அவர் பிள்ளை

[அ] யோவான் நிருபத்தை வாசிப்போரை மூன்று வகுப்பினராகப் பிரித்து, ஒவ்வொரு வகுப்பினருக்கும் எழுது வதற்கு ஒவ்வொரு காரணத்தைக் கூறுகிறார். முதன் முத லாகப் பார்க்கும்போது, அந்தந்த வகுப்பினருக்கு மிகப் பொருத்தமாகக் காணப்படுகிறது. உ-ம். வாலிபர்கள் பெல முள்ளவர்கள, போர் செய்து வெற்றிபெறக்கூடியவர்கள்; ஆதி முதலிருந்தவரை அறிகிற அறிவும் பிதாக்களுக்குப் பொருத்தமே. ஆயினும் கூர்ந்து பார்க்குமிடத்து, சந்தேகம் எழும்புகிறது. உ-ம் பாவ மன்னிப்பு சிறு பிள்ளைகளுக்கே உரியதா? பிதாக்களும் சாத்தானை ஜெயிக்கவில்லையா? ஆகவே யோவான் விசேஷித்த கருத்தோடு அல்ல, உரைநடையின் நயத்திற்காகவே இப்படி மூன்றாகப் பிரித்து எழுதுகிறார் என்க

[ஆ] யோவான் மூன்று தடவை "எழுதுகிறேன்" என்கி றார் பின் வினைச் சொல்லின் காலத்தை மாற்றி மூன்று தடவை "எழுதியிருக்கிறேன்" என்கிறார், இந்த வித்தியாசத் தில் பொருள் ஏதாகிலும் உண்டா? 'எழுதியிருக்கிறேன்' என் னும் கடந்த கால வினைச் சொல்லை எழுத்தின்படி எடுத்துக்

கள், பிதாக்கள், வாலிபர் என்று அந்தச் சபையாரை மூன்று வகுப்பினராகப் பிரித்துக் கூறுகிறார். ஒவ்வொரு வாக்கியத்திலும் ஒவ்வொரு வகுப்பினரை விளித்து, ஏன் அவர்களுக்கு எழுதுகிறார் என்பதற்கு ஒரு காரணம் காட்டுகிறார். யோவான் இங்குச் செய்யுள் முறையில் எழுதுகிறபடியால் இந்த வேறுபாடுகளைப் பெரிதாக எண்ணி ஒவ்வொன்றிலும் ஞான அர்த்தத்தைத் தேட வேண்டாம். "நீங்கள் யார் ஆனாலும் சரி, நீங்கள் சரியான கிறிஸ்தவர்கள்தான். அந்த அடிப்படையிலே நான் உங்களுக்கு இவ்வாறு எழுதுகிறேன்" என்பதே அவருடைய கருத்து.

யோவான் இங்கே கிறிஸ்தவர்கள் பெற்ற பாக்கிய நிலையை மூன்று விதமாகக் குறிப்பிடுகிறார்:

[அ] பாவ மன்னிப்பு (வ. 12): ஒளியில் நடப்பதாலும் நம் பாவங்களை வெளிப்பட ஒப்புக்கொள்வதாலும்

கொண்டால். அது யோவான் இதுவரைக்கும் எழுதியதைக் குறிக்கும் (அதாவது 1^1—2^{11}). ஆயின் அப்படிச் சொல்வதில் அவ்வளவு கருத்து இல்லை என்று தெரிகிறது. இந்த இடத்தில் நாம் கிரேக்கர் தங்கள் கடிதங்களில் கையாண்ட ஒரு முறையை கவனித்தல் வேண்டும். அதன்படி அவர்கள் எழுதிக்கொண்டிருக்கிறதைக் குறித்து 'நான் இதை எழுதியிருக்கிறேன்' என்று சொல்வர். ஏனெனில் வாசிப்போர் அதை வாசிக்கும் சமயத்தில், எழுதுவோர் அதை எழுதிய காலம் கடந்த காலமாகவே இருக்கும் (இந்த முறைக்கு 'epistolary aorist' என்று பெயர்), அப்படி எடுத்துக் கொண்டால், 'எழுதியிருக்கிறேன்' என்பதிலும் 'எழுதுகிறேன்' எனும் பொருள் இருக்கும்; முதல் மூன்று வாக்கியங்களுக்கும் அடுத்த மூன்று வாக்கியங்களுக்கும் பொருளில் வேறுபாடு இருக்காது. யோவான் இப்படி இந்த வினைச்சொல்லின் வேறு காலங்களைப் பயன்படுத்தியதும் உரைநடையின் நயத்திற்காகவே என்க.

நாம் பாவ மன்னிப்புப் பெற்றுக்கொள்ளலாம் என்பது முந்திய அதிகாரத்தில் விளக்கப்பட்டது ($1^{7,9}$). இன்னும் இயேசு கிறிஸ்து ஒரு பலியாக மரித்ததே நாம் அப்படிப் பாவ மன்னிப்புப் பெறுவதற்கு ஆதாரம் என்பதைப் பார்த்தோம் ($2^{1,2}$). இங்கு அவருடைய நாமத்தினிமித்தம் உங்கள் பாவங்கள் மன்னிக்கபட்டன என்கிறார். அவருடைய நாமம் என்பது நமக்கு வெளிப்படுத்தப்பட்ட அவர் ஆள் தன்மையையும் அவர் நமக்காக நிறைவேற்றிய மீட்புச்செயலையும் குறிக்கிறது (3^{23}, 5^{15}, யோ. 20^{31} காண்க). எனவே அவராலே நாம் பாவ மன்னிப்புப் பெற்றுக்கொண்டோம் என்பது பொருள்.

[ஆ] கடவுளை அறிகிற அறிவு: இந்த அறிவு கிறிஸ்தவ வாழ்க்கையின் சாராம்சம் என முன்னாலே பார்த்தோம் ($2^{3,4}$). ஆதிமுதலிருந்தவர் என்பது 1^{1}இல் கிறிஸ்துவைக் குறித்தது. ஆயினும் இவண் அது பிதாவைக் குறிக்கிறது எனலாம்.

[இ] சாத்தான்மேல் வெற்றி: பாவ மன்னிப்புப் பெற்றுக்கொண்டு கடவுளோடுநேரடியாக உறவுகொண்ட கிறிஸ்தவன் தீயோன் என்று அழைக்கப்படுகிற சாத்தானை ஜெயிக்கிறான். அவன் எப்படி ஜெயிக்கிறான் எனில், கடவுளின் வார்த்தை அவனிடத்தில் தங்கி அவனைப் பலப்படுத்துகிறது (வ. 14 பிற்பாகம்).

இம்மூன்று விதங்களில் விவரிக்கப்பட்ட நிலையில் உள்ளவர்க்கே யோவான் தம் போதனையைக் கொடுக்கிறார். ஏனெனில் கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்தவர்களுக்குத்தான் கிறிஸ்தவ போதனை பொருள் தரும். கிறிஸ்துவின் மூலம் கடவுளை அறிந்தவர்கள்தான் உலகத்தில் அன்பு கூராமலிருக்கமுடியும். (வ. 15). ஆகவே மக்களைக் கிறிஸ்துவினிடம் கொண்டுவருவது கிறிஸ்த ஊழியனின் முதல் கடமை ஆகும். அவர்கள் மெய்க்

கிறிஸ்தவ அனுபவம் அடைந்தபோதுதான் அவர்களுக் குக் கிறிஸ்தவ நன்னெறிக் கொள்கைகளையும் இறையியற் கருத்துக்களையும் போதிப்பது பயனுள்ளதாயிருக்கும்.

1 யோ. 2:15. எந்த அடிப்படையிலே எழுதுகிறார் என்று தெளிவுபடுத்தி யோவான் தமது எச்சரிக்கையை விளக்குகிறார். உலகத்தில் அன்புகூராதிருங்கள். இந்த இடத்தில் உலகம் என்னும் பதம் கடவுளை அறியாத மனிதர் சமுதாயம் எனப் பொருள்படும். உலகம் கடவு ளால் படைக்கப்பட்டதாயினும் தீய சக்திகளின் ஆட்சிக் குட்பட்டுக் கடவுளின் தொடர்பையும் பிரசன்னத்தையும் இழந்துவிட்டது. அதுவும் அதிலுள்ள யாவும் சாத்தா ளுல் ஆண்டு நடத்தப்படுகிறது (5[19] காண்க). ஆதலால் உலகத்தில் அன்புகூர்ந்தால் பிதாவினிடத்தில் அன்பா யிருக்கமுடியாது என்கிறார் யோவான். நாம் எதில் அன்புகூரப்போகிறோம் என்று தீர்மானம் செய்தல் வேண் டும் (மத். 6[24] காண்க).

1 யோ. 2:16. ஒருவன் ஒரே சமயத்தில் உலகத்தி லும் கடவுளிலும் அன்புகூரமுடியாது, ஏனெனில் உலகத் திற்கும் கடவுளுக்கும் நேர் விரோதம் உண்டு. உலகமும் அதிலுள்ள யாவும் கடவுளுக்கு அல்ல, கடவுளின் பகைஞ ஞகிய சாத்தானுக்கே உரியன. உலகத்திலுள்ளவை யாவை என்றும் யோவான் இந்த வசனத்தில் விளக்கு கிறார். மூன்று காரியங்களைக் குறிப்பிடுகிறார்:

[அ] மாம்சத்தின் இச்சை: இது சிற்றின்பம் முதலிய தீய ஆசைகளைக் குறிக்கிறது.

[ஆ] கண்களின் இச்சை: இது நமது பார்வைக்கு அழகாகவும் கவர்ச்சிகரமாகவும் தோன்றுகிற பொருட் களைப் பறித்து வைத்துக்கொண்டு சொந்தமாக அனுப விக்க வேண்டிய ஆசையாகும்.

[இ] ஜீவியத்தின் வீண் பெருமை: இது நான் பிறந்த குலம், நான் சம்பாதித்த சொத்து, நான் அடைந்த பதவி போன்ற காரியங்களில் பெருமை பாராட்டி இறுமாப்புக் கொள்வதாகும். யோவான் வாழ்ந்த காலத்தில் இத்தகைய தீமைகளும் பலவித ஒழுக்கக் கேடுகளும் சமுதாயத்தில் மிகுதியாகக் காணப் பட்டன. இவைதான் உலக வாழ்க்கையின் குணாதிசயங் கள் எனலாம். ஆகவே இப்பேர்ப்பட்ட உலகில் அன்பு கூருகிறவன் கடவுளிலும் அன்புகூரமுடியாது என்பது தெளிவு.

1 யோ. 2:17. உலகத்தில் ஏன் அன்புகூர வேண் டாம் என்பதற்கு யோவான் இன்னொரு காரணத்தைச் சொல்லுகிறார். உலகம் பலவிதத் தீமைகளால் நிறைந் திருக்கிறது மாத்திரம் அல்ல, அது நிலையானது அன்று. ஒழிந்து போகக்கூடியது. பழைய யுகத்தோடு உலகத்தி லுள்ள எல்லாத் தீமைகளும் இச்சைகளும் நீங்கிப்போகும் (2^8 காண்க). கடவுளின்சித்தப்படி செய்கிறவனே நிலைநிற் பான். கடவுளின் சித்தம் என்னவெனில், உலகில் அல்ல தன் சகோதரனில் அன்பு கூருவதே (3^{23}).

இந்து மதமும் உலகத்தில் பற்றுதல் வைக்க வேண் டாம் எனப் போதிக்கிறது. அதற்கும் யோவானின் போதனைக்கும் வேறுபாடு என்ன? இந்துக்கள் சிலர், உலகம் உள்பொருள் அன்று, மாயையே எனக் கூறுகிறார் கள். உலக மக்கள் அதன் மெய்த்தன்மையை அறியா மல் அது உள்பொருள்தான் என்று கருதி அதிலே பற்று தல் வைத்து அதற்குரிய அலுவல்களிலும் கவலைகளிலும் மூழ்கி வாழ்கின்றனர். உலகம் உள்பொருள் என்னும் தப்பெண்ணத்தை அகற்றினால்தான் ஆன்மா ஜடப் பொருளிலிருந்து விடுதலைபெற்று பரம்பொருளோடு இரண்டறச் சேரமுடியும். ஆகையால் மாயை உலகம்

கடவுளைப் பாராதபடி நம் கண்களை மறைக்கிற ஒரு முக்காடு என்று சொல்லலாம்.

கிறிஸ்தவக் கருத்துப்படி உலகம் மாயையோ, தன்னில்தானே தீயதோ அன்று. அது கடவுளால் படைக்கப்பட்டது, அது மிகவும் நல்லதாகக் காணப்பட்டது (ஆதி. 1^{31}). அது பாவத்திற்கு ஆளான போதிலும், கடவுள் தொடர்ந்து அதில் அன்பு கூர்ந்து, அது பாவ மன்னிப்பையும் அழியா வாழ்வையும் பெறும்படி தம் முடைய ஒரே குமாரனை அதன் மீட்பாராக அனுப்பினார் (2^{2},4^{14}, யோ. 3^{16}). இயேசுவின் அடியார்கள் உலக மெங்கிலும் அம்மீட்பின் நற்செய்தியைக் கூறி அறிவிக்கக் கட்டளை பெற்றனர் (மாற். 16^{15}). இன்னும் பவுல், பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையதே என்றும், ஒரு பொருளும் தன்னிலேயே தீட்டுள்ளதன்று என்றும் மிகத் தெளிவாகச்சொல்லுகிறார் (1 கொரி. 10^{26}, ரோமர் 14^{14}). பூமியும், மனிதர் சமுதாயமும், கடவுளின் சித்தம் நிறைவேற்றப்படவேண்டிய இடம் (மத். 6^{10}).

இஃதெல்லாம் உண்மை ஆயினும், உலகம் சாத்தான் எனும் தீயோனின் ஆட்சிக்குட்பட்டதால், அது சோதனைகளும் ஆபத்துகளும் தீமைகளும் நிறைந்ததாயிற்று (5^{19}). அந்தத் தீய தன்மை ஜடப்பொருளிலேயே அன்று, மனிதனுடைய உள்ளத்திலும் சித்தத்திலும் அமைந்திருக்கிறது (2^{16}). எனவே கடவுளை மறந்து உலகத்தில் பற்றுதல் வைப்பவன் அதில் செயலாற்றி வருகிற தீமைக்கு ஆளாகிக் கடவுளை விட்டுத் தூரமாக விலகிச் செல்வான். இதுவே யோவான் எச்சரிக்கையின் பொருள்.

ஆகவே நாம் உலகத்தைக் குறித்து எப்படிக் கருதல் வேண்டும்? உலகத்தோடு தொடர்பு கொள்ளாமல் உலக மக்களைவிட்டுப் பிரிந்து வாழுதல் வேண்டுமா? அது இந்து மதம் போதிக்கிற வழி. உலகம் முற்றிலுமாகத் தீமை

யானது என்கிற எண்ணம் அதற்கு அடிப்படை ஆகும். உலகம் கடவுளால் படைக்கப்பட்டதும், மீட்கப்பட்டதும், அவர் ஆட்சிக்குக் கீழ்ப்படுத்தப்பட வேண்டியதுமாய் இருப்பின், அந்த வழியில் நாம் செல்ல முடியாது. அப்படிச் சென்றால், கடவுளின் சித்தம் உலகிலே நிறைவேற்றப் பட முடியாது. அவர் அரசும் உலகிலே பரவ முடியாது. இந்தக் காரியத்தில் கிறிஸ்து தாமே மெய்க் கிறிஸ்தவக் கொள்கையை மிகத் தெளிவாக விளக்கித் தந்துள்ளார் (யோ. 17^{14-18}). கிறிஸ்தவன் உலகத்திற்குரியவன் அல்லன், அதாவது ஏனைய உலக மக்களைப்போல அவன் சாத்தானின் ஆட்சிக்குட்பட்டவன் அல்லன் (2^{14} காண்க). ஆயினும் கிறிஸ்து அவன் உலகத்திலிருந்து எடுக்கப்பட வேண்டும் என விரும்பாமல், அவனை உலகத்தில் அனுப்பியிருக்கிறார். அங்கு அவன் கடவுளின் வார்த்தையினாலும் அருளினாலும் தீமையினின்று காக்கப்பட்டு, அன்புடன் மக்களோடு பழகிக், கடவுள் அவனை அனுப்பிய நோக்கத்தை நிறைவேற்றல் வேண்டும். இதற்குக் 'கடவுளின் பரிசுத்தர்' என்றும் 'பாவிகளின் நண்பர்' என்றும் அழைக்கப்பட்ட இயேசு தாமே சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றார்.

இந்தக் காலத்தில் கிறிஸ்தவர்கள் எவ்வளவுதூரம் உலகத்தோடு தொடர்புகொள்ளல் வேண்டும் என்பதைப் பற்றி விவாதம் அதிகம். பொதுவாகச் சொல்லப்புகின், நம் சபை மக்கள் உலகத்தோடு சம்பந்தம் வைக்க வேண்டாம் எனக் கருதி, பிறமதத்தினரோடு நட்புகொள்வதுமில்லை, அரசியல், தொழிற் சங்கம் போன்ற பொதுக் காரியங்களில் அவர்களுடன் அதிகமாகப் பங்குபெறுவதுமில்லை. அதே சமயத்தில் பொருளாசை, குலப்பெருமை, பொறாமை முதலிய பல உலகத்திற்குரிய எண்ணங்கள் மற்றவர்களிடம் காணப்படுவது போல நம்மிடமும்

காணப்படுகின்றன. இந்தச் சூழ்நிலையிலே நாம் உலகத்தின் ஆதீனத்தை நம் உள்ளத்திலின்று அகற்றிவிட்டு, கிறிஸ்தவச் சிந்தையுடன் உலக மக்களோடு தொடர்பு கொள்ளவும், அவர்களோடு சமுதாய வாழ்க்கையில் பங்கு பெறவும் கற்றுக்கொள்வது மிகவும் அவசியம். இப்படி நோக்குமிடத்து, யோவானின் எச்சரிக்கை நமக்கும் அதிகப் பொருத்தமாயிருக்கிறது.

1 யோ. 2 : 18 - 28 ஐந்தாம் பரிசோதனை:

இதுவரைக்கும் யோவான் ஒழுக்கத்தைப்பற்றிப் பேசியிருக்கிறார். ஒருவன் கடவுளை அறிந்திருக்கிறானா இல்லையா என்பதை அவனுடைய ஒழுக்கத்தினால் அறிந்து கொள்ளலாம் என்று கூறியிருக்கின்றார். இந்த ஐந்தாம் பரிசோதனை ஒழுக்கத்தை அன்று, போதனையைப்பற்றியது. இயேசுவைக் குறித்து ஒருவனுடைய எண்ணம் உண்மையா, பொய்யா என்பது யோவான் இங்கு எழுப்புகிற கேள்வி. இந்தப் பகுதியில் அவர் முதன் முதலாக அந்தக் கள்ளப் போதகர்களைக் குறித்து, அவர்கள் பொய்ப் போதனையை நேரடியாகக் கண்டிக்கிறார்.

1 யோ. 2 : 18-19 முதலில் யோவான் சபையில் நேரிட்டது என்ன என்பதையும், அதன் பொருள் யாது என்பதையும் விளக்குகிறார். சபையிலிருந்து ஒரு கூட்டத்தார் பிரிந்து போயிருக்கின்றனர். அவர்களை யோவான் அந்திக்கிறிஸ்துகள் என அழைக்கிறார். அந்திக்கிறிஸ்து இப்படித் தோன்றியதால், கடைசிக் காலம் வந்தாயிற்று எனத் தெரிகிறது என்கிறார்.

இந்தக் கள்ளப்போதகர் சபையில் தோன்றிக் கலகம் பண்ணியதற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றிச் சபையார் மிகவும் கவலையுற்றனர். ஆகவே யோவான் இது ஏன் இப்படி நடைபெற்றது என்று விளக்கம் தருகி

ரூர். அந்தக் கள்ளப் போதகர் சபையைச் சேர்ந்தவர் களாய் இருந்தபோதிலும், உண்மைக் கிறிஸ்தவர்களா யிருந்ததில்லை. அவர்கள் சபையைவிட்டு வெளியேறிய தால், அவர்கள் மெய்த்தன்மை விளங்கியது. அதனைக் குறித்து மீதியான சபையார் கவலைப்படுவது அவசியம் இல்லை. ஏனெனில் அது கடவுளின் சித்தப்படி நடந்தது. அவர்கள் வெளியேறியதால் அவர்கள் எல்லாரும் பொய்க் கிறிஸ்தவர்கள் என்று வெளிப்பட்டது அவருடைய செயலாகும்.

'இப்படியாயின் சபையைவிட்டுப் பிரிந்து போகிறவர் எல்லாரும் அந்திக் கிறிஸ்துகள்தானா?' என்கிற கேள்வி நம் மனதில் எழக்கூடும். அந்தக் கேள்விக்கு இல்லை என் பதே விடை என்று திருச்சபை வரலாறு கற்பிக்கிறது. ஏனெனில், சபை வரலாற்றில் அவ்வப்பொழுது சபைச் சீர்திருத்தம் செய்ய விரும்புவோர் சபையின் தலைவர்க ளால் சபையிலிருந்து துரத்தப்பட்டனர். அவர்கள் அல்ல, சபைத் தலைவர்களே தவறான கொள்கைகளைக் கைக்கொண்டிருந்தனர். இந்த இடத்திலோ வெளி யேறினர்கள் கிறிஸ்துவின் தன்மையைப்பற்றித் தவறாகப் போதித்துக்கொண்டிருந்தனர் (வ. 22). ஆகையால் சபையிலிருந்து வெளியேறுவது தன்னில்தானே அந்திக் கிறிஸ்துவின் செயல் எனச் சொல்லமுடியாது. எவருடைய கொள்கைகள் உண்மை, எவருடையவை தவறு என்று ஆராய்ந்து, அதன்படியே முடிவு செய்தல் வேண்டும்.

அந்திக் கிறிஸ்து என்பதன் பொருளையும் நாம் கவ னித்தல் வேண்டும்.

[அ] "அந்தி" எனும் கிரேக்கப்பதம் எதிராக என் றும், பதிலாக என்றும் பொருள்படும். எனவே அந்திக் கிறிஸ்து என்பது "தானே கிறிஸ்துவாக நடித்து உண்மை

யில் கிறிஸ்துவுக்கு விரோதமான எதிரியானவன்" என்று பொருள்படும்.

[ஆ] இறுதிக் காலத்தில் தீய சக்திகள் ஒருமித்துத் தோன்றிக் கடவுள் அனுப்பிய மேசியாவுக்கு எதிர்த்துப் போராடும் என்பது யூதத் தரிசன இலக்கியங்களின் கருத்து.

[இ] அதே கருத்து கிறிஸ்தவப் போதனையில் இடம் பெற்றிருந்தது. அதனால் கிறிஸ்தவர்களும் அத்தகைய தீய வெளிப்பாட்டை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர் (மார்க்கு $13^{6, 14, 22}$, 2 தெச. 2^{3}, யோ. தரி. 16^{13}, 19^{19} காண்க). அதற்கு அந்திக் கிறிஸ்து வருகிறான் என்று நீங்கள் கேள்விப்பட்டபடி என்பதும் சான்று (2^{18}).

[ஈ] இதற்கு யோவான் மட்டும் தம் நிருபங்களில் அந்திக் கிறிஸ்து எனும் பெயரைக் கொடுக்கிறார் (4^{3}, 2 யோ. 7). இங்கு அது இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு மிருகமாக அன்று, சபையைவிட்டுப் பிரிந்து போன மனிதர் உருவத்தில் காட்சி அளிக்கிறது. அவர்களது பொய்ப் போதனையின் சாரம்சம் 22ஆம் வசனத்தில் தரப்படுகின்றது. அவர்கள் இயேசுவே கிறிஸ்து என்பதை முறுமுறுத்ததால் தான் யோவான் அவர்களை அந்திக் கிறிஸ்துகள் என அழைக்கிறார்.

யோவான் இது கடைசிக்காலம் எனக் கூறுகிறார். ஆயின் அதற்குப் பத்தொன்பது நூற்றாண்டுகளுக்குப்பின்

2^{19} அவர்களில் எவரும் — 'அனைவரும்' என்றும் இந்தச் சொற்களைத் திருப்பலாம். அப்பொழுது 'சபையார் அனைவரும் மெய்க் கிறிஸ்தவர்கள் அல்லர், சிலர் மெய்க்கிறிஸ்தவர்கள்தான் என்று வெளியாவதற்கே இப்படியாயிற்று' என்பது இந்த வசனத்தின் பொருள் ஆகும். 'இப்படியாயிற்று' என்பதற்குக் கிரேக்கத்தில் சொல் இல்லை. எனினும் அப்படிப்பட்ட ஒரு வினைமுற்றை வருவிப்பது தேவை.

உலகம் இன்னும் இயங்கிவருகிறது. எனவே நாம் யோவானின் கூற்றுத் தப்பு என்று சொல்லல் வேண்டுமா? யூதர்கள் மேசியாவின் வருகை, உயிர்த்தெழுதல், பரிசுத்த ஆவி ஊற்றப்படுதல் ஆகியவை இறுதிக் காலத்திற்குரிய நிகழ்ச்சிகள் எனக் கருதி வந்தனர். ஆகவே அவை நடந்தேறியபோது ஆதிக்கிறிஸ்தவர்கள் உலகத்தின் முடிவு விரைவாக வரும் என்று எதிர்பார்த்தனர். அது இயற்கைதான், ஏனெனில் அவர்களும் யூதர்களே. அந்த எதிர்பார்ப்பை நாம் புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் காணலாம், உதாரணமாக மார்க்கு 13[30], அப். 2[16], 3[20], ரோமர் 13[11–12], யோ. தரி. 22[20]. ஆயினும் அவர்கள் எதிர்பார்த்தபடி முடிவு விரைவாய் வரவில்லை. மேசியாவின் முதல் வருகைக்கும் அவரது இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலம் அதிகமாய் நீடித்தது. இன்னமும் நீடிக்கிறது. ஆகையால் ஒரு நோக்கில் பார்க்கும்போது, யோவான் எழுதிய காலம் இறுதிக் காலம் அன்று என்றே ஒப்புக்கொள்ளல் வேண்டும். ஆயினும் இன்னொரு நோக்கில் பார்க்கும்போது அந்தக் காலமும் நாம் வாழ்கின்ற காலமும் இறுதிக் காலம்தான் என்று சொல்வது தகும். எப்படியெனில் இறுதிக் காலம், புதுயுகத்தின் பேறுகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய காலம், இயேசுவைப் பின்பற்ற வேண்டுமோ வேண்டாமோ என்று தீர்மானம் செய்தல் வேண்டிய காலம், அவரது இரண்டாம் வருகைக்காக நம்மை ஆயத்தஞ்செய்து கொள்வதற்காகத் தரப்பட்ட காலம், கிறிஸ்தவர்கள் தங்கள் ஆண்டவரின் பொருட்டுத் துன்பம் அடைகின்ற காலமும் ஆகும். யோவான் வாழ்ந்த காலத்தைப்போல, நம்முடைய காலமும் அத்தகையதன்றோ.

1 யோ. 2 : 20, 21. இந்தச் சூழ்நிலையில் சபையார் கள்ளப் போதகரது தன்மையை அறிவதற்கும், விசுவாசத்தில் நிலைநிற்பதற்கும் உதவியாய் இருக்கக்கூடியதென்ன?

'நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகவரத்தைப் பெற்றிருக்கிறீர்கள், அந்த வரத்தைக் கொண்டு நீங்கள் உண்மையையும் பொய்யையும் பகுத்தறிய முடிகிறது' என்கிறார் யோவான். அபிஷேக வரம் என்பது பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டில் அரசர், ஆச்சாரியார், தீர்க்கதரிசிகள் முதலியோர் எண்ணெய் பூசியதால் தங்கள் பதவிக்கு ஏற்படுத்தப்பட்டனர். எண்ணெய் பூசியதால் அவர்கள் தங்கள் பதவிக்கு வேண்டிய பலத்தையும் ஆவியின் வரங்களையும் பெறுவர் எனக் கருதப்பட்டது (உ-ம். 1 சாமு. 16[13]). மேலும் கிறிஸ்து என்கிற பதத்தின் நேரடியான பொருள் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பதாம். ஏனெனில் கிறிஸ்து எனும் மேசியா எல்லாப் பதவிகளிலும் உயர்ந்த பதவிக்கு அபிஷேகம் செய்வதால் ஏற்படுத்தப்படுபவர். கிறிஸ்து வாகிய இயேசு தம் ஞானஸ்நானத்தின்போது அப்படிப் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டுத் தம் ஊழியத்தைச் செய்யத் தொடங்கினார் (அப். 10[38]). யோவான் இவ்வசனங்களில் குறிக்கிற அறிவு நெறிக் கொள்கையினர் அநேகமாக, "நாங்கள்தான் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் விசேஷித்த ஞானத்தையும் பெற்றவர்கள்" என்று சொல்லிக்கொண்டு மற்றவர்களைக் கீழ்த்தரக் கிறிஸ்தவர்களாக எண்ணி வந்தனர். இதற்கு யோவான் "எல்லாக் கிறிஸ்தவர்களும் அந்த வரத்தைப் பெற்றிருக்கின்றனர்; அதனால் ஒரு தனிக் கூட்டத்தார் மட்டும் அல்ல, எல்லாரும் சத்தியத்தை அறிகிற அறிவை உடையவர்கள் ஆவர்" என்று சொல்லுகிறார்.

2[20] ......வரத்தைப்பெற்று அனைவரும் அறிவடைந்திருக்கிறீர்கள்—சில கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகளில் '......வரத்தைப் பெற்று அனைத்தையும் அறிந்திருக்கிறீர்கள்' என்கிற பாடமும் காணப்படுகிறது.

யோவான் சொல்லுகிற இந்த உண்மை நம் காலத்துச் சபையின் நிலைக்கு மிகப் பொருத்தம். இன்றைக்கும் "நாங்கள்தான் பரிசுத்த ஆவியின் வரத்தையும் அபிஷேகத்தையும் ஞானஸ்நானத்தையும் பெற்றவர்கள்" என்று சொல்லிக்கொள்ளுகிற ஒரு கூட்டத்தார் உண்டு. யோவான் கிறிஸ்துவின் நாமத்தில் நம்பிக்கை வைத்த கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார் (5^{13}). அவர்கள் வேறொரு விசேஷித்த அனுபவத்தை அடைந்திருந்தனர் எனத் தெரிகிறதில்லை. அவர்கள் அப்படி நம்பிக்கை வைத்ததின் அடிப்படையில்தான் யோவான் அவர்களைப் பார்த்து "நீங்கள் அனைவரும் அபிஷேக வரத்தைப் பெற்று அறிவடைந்திருக்கிறீர்கள்" எனக் கூறுகிறார். அதுபோல இயேசுவின் நாமத்தில் நம்பிக்கை வைத்த நம் சபையார் ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டிருப்பர். அவர்கள் அந்த ஆவியின் செயலுக்குத் தங்கள் வாழ்க்கையில் இடம் கொடுக்காததனால் அவரை அணைத்துப் போடலாம் (1 தெச. 5^{19}), துக்கப்படுத்தலாம் (எபே. 4^{30}). எனினும், அவர்கள் கிறிஸ்துவுக்குரியவர்கள் ஆனால், பரிசுத்த ஆவியானவர் அவர்களிடத்தில் வாசம் செய்கிறார் என்பது ஒருவரும் மறுக்கமுடியாத உண்மை (ரோமர் 8^{9} காண்க).

அவர்கள் இந்த வரத்தைப் பரிசுத்தர் என்பவராலே பெற்றிருந்தனர் எனப் பார்க்கிறோம். அவர் இயேசு கிறிஸ்து. கடவுளின் பரிசுத்தர் எனப்பட்டவரும் (மார்க்கு 1^{24}, யோ. 6^{69}, அப். 3^{14}), பரிசுத்த ஆவியானவரைத் தருபவரும் அவரே (யோ. 16^{7}, அப். 2^{33}).

1 யோ. 2:21. நாம் முன்னால் பார்த்ததுபோல (2^{3}, 2^{12-14}), யோவான், சபையார் நிலையைக் குறித்த அவர்கள் சந்தேகங்களை நீக்க விரும்புகிறார். ஆனால் சபையார், அவர் எளிய முறையில் இந்த அடிப்படைக்

காரியங்களை எடுத்துரைத்ததைக் கண்டு, "அவரும் நாம் சரியான கிறிஸ்தவர்கள் அல்ல" என்று நினைத்திருக்கக் கூடும். அந்த எண்ணம் அவர்கள் மனதில் எழாதபடி, யோவான் திரும்பவும் "நீங்கள் உண்மையில் கிறிஸ்தவர்களாயிருக்கிறீர்கள். நீங்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்டதால் உண்மையை அறிந்திருக்கிறீர்கள், இதனால்தான் நான் உங்களுக்கு எழுதுகிறேன். மற்றபடி நான் இப்படி உங்களுக்கு எழுதுகிற இந்தக் காரியங்களை நீங்கள் புரிந்துகொள்ள முடியாது. நான் இப்படி எழுதுவதும் வீணாகும்" என்று வலியுறுத்தி அவர்களை உறுதிப்படுத்தப் பார்க்கிறார்.

1 யோ. 2 : 22, 23. கள்ளப் போதகருடைய பொய்ப் போதனை: இந்த வசனங்களில் யோவான் சபையை விட்டு வெளியேறியவர்களது போதனையின் சாரம்சத்தைக் குறிப்பிட்டு, அதனை ஏற்றுக்கொள்வதின் பிரதிபலனையும் விளக்குகிறார்.

நாம் முன்னால் பார்த்த அந்திக்கிறிஸ்துவானவன் (2^{18}) பொய்யன் எனவும் அழைக்கப்படுகிறான். ஏனெனில் அவன் போதனை சுத்தப் பொய். அந்தப் பொய்ப் போதனையின் சாரம்சம், இயேசு, கிறிஸ்து அல்லர் என்பது. ஆதி சீஷர் இயேசுவே கிறிஸ்து என்று அறிக்கை செய்தபோது (மார்க்கு 8^{29}, அப். 2^{36}), அவர் யூதர் வருவதாக எதிர்பார்த்த மேசியா என்கிற அர்த்தத்தில் கிறிஸ்து என்ற சிறப்புப் பெயரைப் பயன்படுத்தினர். யூதர் கருத்துப்படி மேசியா கடவுள் அல்லர், கடவுளால் அனுப்பப்பட்டவரே. சீஷர்களும் ஆதியிலே இயேசுவுக்கும் கடவுளுக்கும் இடையேயுள்ள விசேஷித்த தொடர்பைக் குறிக்கும்படி கிறிஸ்து என்ற பெயரைப் பயன்படுத்தவில்லை. அதற்குத் தேவகுமாரன், ஆண்டவர் போன்ற வேறு சிறப்புப் பெயர்களைப் பயன்படுத்தினர்.

கிரேக்கரில் சிலரோ கிறிஸ்து என்பதனுல் பரம்பொருளி லிருந்து புறப்படுகின்ற ஒரு தெய்வீக புருஷனைக் குறித் தனர். இந்த இடத்தில் கிறிஸ்து என்பதனை அவ்வாறு பொருள் கொள்வது பொருந்தும். அப்போது இயேசுவே கடவுளின் நிறைவான வெளிப்பாடு என்பது, கள்ளப் போதகர் மறுத்ததும் யோவான் ஆதரிக்கிறது மான உண்மை ஆகும். அறிவு நெறிக் கொள்கை யினர் ஏன் அந்த உண்மையை ஏற்றுக்கொள்ள வில்லை எனில், அவர்கள் கொள்கையின்படி ஜடப் பொருள் வேறு, பரம்பொருள் வேறு. பரம்பொருள் ஜடப்பொருளான ஒரு மனித சரீரத்தில் வாசம்பண்ணித் தன்னை வெளிப்படுத்த முடியாது. இயேசுவானவர் பிறந்தார், மரித்தார். பரம்பொருள் அப்படி பிறக்கவோ மரிக்கவோ முடியாது. ஆகவே இயேசுவே கடவுளின் நிறைவான வெளிப்பாடு என்று சொல்வது அவர்களுக்குப் பைத்தியமாகக் காணப்பட்டது.

இந்த உண்மையை மறுத்ததனுல் உண்டான இரண்டு விளைவுகளை யோவான் விளக்குகிருர்.

[அ] யோ. 2 : 22-b தேவகுமாரனுகிய இயேசுவின் தெய்வீகத் தன்மையை ஒப்புக்கொள்ளாதவன் பிதா வாகிய கடவுளின் மெய்த்தன்மையையும் அறியான். கடவுள் தன்னுடைய ஒரே குமாரனைத் தந்தனுப்பும்படி உலகத்தில் அவ்வளவாய் அன்புகூர்ந்தவராக இயேசு கிறிஸ்துவினுல் வெளிப்படுத்தப்பட்டார். இயேசு கிறிஸ்து தேவகுமாரன் அல்லர் எனில், கடவுள் நம்மேல் அவ்வள வாய் அன்புகூரவில்லை. நம்மேல் ஓரளவுக்கு அன்புகூர்ந் திருக்கலாம். ஆயினும் தம்முடைய குமாரனைத் தந்த னுப்புமாறு அவ்வளவாய் அன்புகூரவில்லை என்றே சொல்லல் வேண்டும். ஆகவே கிறிஸ்துவைப் பற்றிய

உண்மை மறைக்கப்பட்டமையால் கடவுளைப்பற்றிய உண்மையும் மறைந்தாயிற்று.

[ஆ] 2:23-உ இயேசு கிறிஸ்துவின் மெய்த்தன்மையை மறுப்பவன் கடவுளோடு உறவு கொள்ள முடியாது. அவன் பிதாவையுடையவன் அல்லன். இயேசு தாமே "என்னாலேயன்றி ஒருவனும் பிதாவினிடம் வரான்" என்றும் (யோ. 14[6]), "என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான்" என்றும் (மத். 10[40]) கூறினார். அவரே கடவுளின் தன்மையைப் பற்றிய உண்மையை வெளிப்படுத்தினார். அந்த உண்மையின் அடிப்படையிலேயன்றி கடவுளோடு உறவுகொள்ள முடியாது. எனவே கிறிஸ்துவைப் புறக்கணிக்கிறவனுக்கும் கடவுளுக்கும் இடையே தொடர்பு ஏற்படுவது இயலாத காரியமே.

இதுவே கிறிஸ்தவ நற்செய்தியின் அடிப்படையான கருத்து- இந்தியாவிலும் பலர் அதை மறுப்பர். உதாரணமாகச் சிலர், யோவானின் காலத்து அறிவு நெறிக் கொள்கையினர் சொன்னது போல, பரம்பொருள் இந்த மாயை உலகில் வெளிப்படுத்தப்பட முடியாது எனச் சொல்வர். வேறு பலர் இயேசுவை ஒரு மகாத்துமாவாக அல்லது ஒரு சிறந்த மதத் தலைவராக மதிப்பர். திருச்சபையிலும் சிலர் அவரைப்பற்றி அவ்வாறே எண்ணுவர். அதற்குக் கிறிஸ்தவர்கள் "குமாரனை மறுதலிக்கிற எவனும் பிதாவையுடையவன் அல்ல" என்று தைரியத்தோடும் மனத்தாழ்மையோடும் எடுத்துக்கூறல் வேண்டும். அதே சமயத்தில் இது வெறும் பிடிவாதமாகவோ தற்பெருமையாகவோ காணப்படாதபடி அவர்கள் தங்கள் விசுவாசத்திற்கு ஆதாரமான நியாயங்களைக் காட்டக்கூடியவர்களாய் இருத்தலும் வேண்டும்.

1 யோ. 2 : 24, 25 இந்த ஆபத்தான நிலை திருச்சபையில் உண்டாகும்போது, நற்செய்தியின் உண்மையை விட்டு விலகாத சபையார் செய்ய வேண்டியதென்ன? அவர்கள் ஆதிமுதல் கேட்ட செய்தி அவர்கள் உள்ளத்தில் நிலைத்திருக்கட்டும் என்பது யோவான் அவர்களிடம் கூறுகிற ஆலோசனை. அது அப்படி நிலைத்திருந்தால், அவர்கள் கடவுளோடு கூடிய தொடர்பில் நிலைத்திருப்பர், கடவுள் வாக்களித்த அழியா வாழ்வையும் பெற்றுக் கொள்வர் ($1^{1,2}$). அந்த வாழ்வு கடவுளோடு கூடிய தொடர்பிலும், அவரை அறிகிற அறிவிலும் அமைந்துள்ளது என்பதை நாம் முன்னுல் பார்த்தோம் (2^3, யோ. 17^3-ஐயும் காண்க).

யோவான் ஆதி நற்செய்தியை உறுதியாய்க் கடைப் பிடிப்பதின் அவசியத்தை அதிகமாக வலியுறுத்துகின்றார். ஏனெனில் அந்த நற்செய்தியினுல் மட்டும் கடவுளை அறிந்துகொள்ள முடியும் (1^{1-3} காண்க). அதன் மையமான உண்மைகளை மறுத்ததால்தான் அறிவு நெறிக் கொள்கையினர் சத்தியத்தைவிட்டு விலகிக் கடவுளின் தொடர்பையும் இழந்திருந்தனர். நாம் ஆதியில் கேட்ட பழைய சொற்களைச் சிந்திக்காமல் ஓதிக்கொண்டே இருத்தல் வேண்டும் என்பது இதன் பொருள் அன்று. நாம் கேட்ட செய்தியை ஆராய்ந்து, அதன் உட்கருத்தை விளங்கிக்கொண்டு, நமது காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு அதை விளக்குவது நமதுபொறுப்பாகும். யோவான் நம் காலத்தில் அப்படியே செய்திருந்தார். அவருடைய நற்செய்தி நூலிலும், நிருபங்களிலும் காணப்படுகின்ற தனிப் போக்கு அதற்குச் சான்று.

1 யோ. 2 : 26-28 இந்த வசனங்கள் இந்தப் பாகத்திற்கு முடிவுரையாக அமைகின்றன. இங்கு யோவான்

பரிசுத்த ஆவியின் அபிஷேக வரத்தைப்பற்றிச் சபையாருக்கு நினைப்பூட்டி, கிறிஸ்துவில் நிலைத்திருக்க அவர்களைத் தூண்டி முடிக்கிறார்,

1 யோ. 2 : 26 இவைகளை எனும் சொல் வ. 18-26 ஆகிய பாகத்தைக் குறிக்கிறது.

1 யோ. 2 : 27 யோவான் திரும்பவும் அவர்கள் பெற்றிருக்கும் அபிஷேக வரத்தைப்பற்றி எடுத்துரைக்கிறார். அவர்களைச் சூழ்ந்துகொள்ளுகிற சிக்கல்களில் அதுவே அவர்களுக்குப் போதுமான பாதுகாப்பும் துணையும் ஆகும் என்கிறார். முன்னுலே அதைப்பற்றி நாம் சில காரியங்களைப் பார்த்தோம் (வ. 20).

[அ] அவர்கள் எல்லோரும் அதைப் பெற்றிருந்தனர்.

[ஆ] அது பரிசுத்தர் எனும் இயேசு கிறிஸ்துவினுல் அவர்களுக்குத் தரப்பட்டது.

[இ] அதனுல் அவர்கள் அறிவை அடைந்திருந்தனர். இந்த வசனத்தில் இன்னும் சில காரியங்களைப் பார்க்கிறோம்.

[ஈ] அந்த வரம் நிலையான ஒரு பேறு ("உங்களில் நிலைத்திருக்கிறது").

[உ] அதன் போதனை தன்னில்தானே அவர்களுக்குப் போதுமானது. வேறெதுவும் அவர்களுக்கு வேண்டியதில்லை.

[ஊ] அது முற்றிலும் நம்பத்தக்கது.

[எ] அதன் போதனையின் பொருள், கிறிஸ்துவில் நிலைத்திருங்கள் என்பது (அது உங்களுக்குப் போதித்தபடியே......").

1 யோ. 2; 28 யோவான் மிகவும் உருக்கமாக அவரில் நிலைத்திருங்கள் என்கிற தமது ஆலோசனையை மறுபடியும் எடுத்துக் கூறுகிறார். இதுவே பரிசுத்த ஆவி கொடுக்கிற போதனையின் செம்பொருள். அப்படிச் செய்வது மிக அவசியம். கிறிஸ்துவை விட்டு விலகினதே கள்ளப் போதகர் செய்த அடிப்படையான தவறு. அதனால்தான் இந்தப் பூசல் சபையிலே எழுந்தது. யோவான் இத்தகைய உருக்கமான முறையில் ஆலோசனை கூறும்போது சபையாரை "சிறு பிள்ளைகளே" என அழைப்பது வழக்கம் (உ-ம். 5[21]). அருமை எனும் சொல் கிரேக்கத்தில் இல்லை எனினும், இவ்வழைப்பு யோவான் அவர்கள் மேல்வைத்த அன்பின் மிகுதியை வெளிப்படுத்துகிறது என்று சொல்லலாம்.

இந்த வசனத்தில் கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டியதற்கு இன்னொரு காரணம் சொல்லப்படுகிறது, யாதெனில், அவரது இரண்டாம் வருகை. அவர் வரும்போது அவரில் நிலைத்திருக்கிறவர்கள்தான் வெட்கமில்லாமல் அவர்முன் நிற்க முடியும். இங்கு நாம் கவனிக்க வேண்டிய இரண்டு சொற்கள் உண்டு.

[அ] தைரியம்: பழைய கிரேக்க இலக்கியங்களில் இப்பதம் நகரச் சபைகளில் ஒவ்வொரு குடியானவனும் பெற்ற பேச்சுரிமையைக் குறிக்கிறது. புதிய ஏற்பாட்டிலும் அது அடிமைத்தனத்திலும் பயத்திலும் இருந்து விடுதலை அடைந்த ஒரு சுதந்திர நிலை என்கிற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. சிறப்பாக அது கிறிஸ்வைப் பற்றிச் சாட்சி சொல்லும் தைரியத்தையும் (அப். 4·3) ஜெபத்தின் மூலம் கடவுளை அணுகும் துணிவையும் (3[21], 5[14], எபி. 4[16]), நியாயத் தீர்ப்பு நாளில் கடவுள்முன் நிற்கிற கிறிஸ்தவனது பயமற்ற நிலையையும் (4[17]) குறிக்கிறது.

[ஆ] வருகை: பொதுவாக இந்தச் சொல் ஓர் அரசன் தன் குடிமக்களைச் சந்திக்க வருவதைக் குறிக்கும். அத்தகைய சமயத்தில் குடிமக்கள் அவனை ஆரவாரத்துடன் வரவேற்பார். அந்தக் கருத்தில் கிறிஸ்தவர்கள் தங்கள் அரசனாகிய கிறிஸ்து கடைசி நாளில் மிக மகிமையோடு வருவதைக் குறிக்கும்படி இச்சொல்லைப் பயன்படுத்தலானார்கள் (உ-ம். மத் 24^{27}, 1 தெச. 4^{17}).

நிருபத்தின் முதலாம் பெரும் பிரிவு இரண்டாம் வருகையைப் பற்றிய ஒரு குறிப்போடு முடிவடைகின்றது. அடுத்த பகுதியின் முதல் சில வசனங்களில் அதே பொருள் வருகிறது (3^{2}). இவ்வாறு யோவான் இரண்டு பகுதிகளையும் இணைப்பது வழக்கம் (உ-ம், 3^{24}-4^{1}).

B. 2:29-4:6 கடவுளின் பிள்ளைகள்

யோவான் தம் நிருபத்தின் முதலாம் பிரிவிலே செய்தது போல, இங்கும் ஒரு செம்பொருளை அடிப்படையாக வைத்து, மெய்க்கிறிஸ்தவ வாழ்க்கையையும், பொய்க்கிறிஸ்தவ வாழ்க்கையையும் வேறுபடுத்திக் காண்பிக்கும் சில பரிசோதனைகளைக் கொண்டு வருகிறார். இந்தப் பிரிவின் செம்பொருள் கடவுளின் பிள்ளைகள் என்பதே. யோவான் தம் பரிசோதனைகளை விளக்குகையில், இங்கும் சபையில் தோன்றிய கள்ளப் போதகர்களை மனதில் கொண்டு எழுதுகிறார். அவர் நேரடியாக அல்லாமல், மறைமுகமாகவே அவர்களுடைய கூற்றுக்களை எடுத்துப் பரிசோதிக்கிறார் (உ-ம், 3^{4}, 3^{7}). மேலாம்பரமாகப் பார்க்கும்போது, யோவான் முன்னால் சொன்ன கருத்துக்களை இங்கே திரும்பவும் சொல்லுகிறார் எனத் தோன்றுகிறது. ஆயினும் கவனித்துப் படிப்பின், அவர் வாதம் படிப்படியாக வளர்ச்சி அடைகிறது

என்றும், அவர் பல புதிய கருத்துக்களையும் கூறுகிறார் என்றும் காணப்படும்.

2:29-3:3 — செம்பொருள்: கடவுளின் பிள்ளைகள்

3:4-10 — 1ஆம் பரிசோதனை: நீதி, பாவம்

3:11-18 — 2ஆம் பரிசோதனை: அன்பு, பகை

3:19-24 — ஊக்குவித்தல்

4:1-6 — 3ஆம் பரிசோதனை: சத்திய ஆவி, வஞ்சக ஆவி

1 யோ. 2:29—3:3 செம்பொருள்.

யோவான் உடனடியாகக் கடவுளின் பிள்ளைகளைச் சுட்டிக் காட்டும் அறிகுறி இன்னதென்று விளக்குகிறார் ஒரு பிள்ளை தன் தந்தைபோல் இருப்பான்; ஆகவே கடவுள் நீதியுள்ளவர் எனின் அவருடைய பின்ளைகளும் நீதி நேர்மை செய்பவர்கள் ஆவர். நேர்மை செய்வது கடவுளின் பிள்ளை ஆகும் முறை அன்று, அவர் பிள்ளை யாக மாறின பின் உண்டாகும் ஒரு நற்பண்பே என்ப ' கவனிக்கத்தக்கது. இன்னும் உயர்ந்த அனுபவங்கள் அல்ல, நேர்மையான நடக்கையே கடவுளின் பிள்ளைக ளுக்கு அறிகுறி ஆகும். யோவான் இதனை வலியுறுத்தும் போது, ஆவிக்குரிய அனுபவங்களை முக்கியப்படுத்திவந்த அறிவு நெறிக் கொள்கையினரை மறைமுகமாகத் தாக்குகி றார் எனலாம்.

கடவுளின் பிள்ளைகள் என்பது வேதத்தில் பல பாகங் களிலும் வருகின்ற ஒரு பொருள்.

அ) கடவுள் நம்முடைய பரம பிதா என்பது, இயே சுவின் போதனையின் அடிப்படையான கருத்துக்களில் ஒன்று (உ-ம், மத். 6 ^{4,8,26},7^{11} முதலியன). அவருடைய பிள்ளைகளாகிய நாம் அவர் காட்டுகிற நற்பண்புகளை நம்

வாழ்க்கையில் காட்டல் வேண்டும்; அப்பொழுது நாம் உண்மையாய் அவர் பிள்ளைகள் ஆவோம் (மத். 5^{44-48}) எனவும் போதித்தார்.

ஆ) பவுல் அப்போஸ்தலனும் கிறிஸ்தவர்கள் கடவுளின் மக்கள் என அறிவுறுத்துகின்றார். அதற்கு அவர் பயன்படுத்துகிற சொல் மகன் என்று பொருள்படும். அது இயேசுவுக்கும் கடவுளுக்கும் இடையுள்ள தொடர்பையும் குறிக்கச் சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் சொல். பவுலின்போதனைப்படி நாம் புத்திரசுவிகாரத்தினால் கடவுளின் மக்கள் ஆனோம் (கலா. 4^{4-7}, ரோ 8^{14-17}).

இ) யோவான் கிறிஸ்தவர்களைக் குறித்து 'மகன்' என்கிற சொல்லை பயன்படுத்தவில்லை. இயேசு மட்டும் கடவுளின் 'மகன்' (அல்லது குமாரன்) என்று அழைக்கப்படக்கூடியவர். கிறிஸ்தவர் கடவுளின் 'பிள்ளைகள்' என்று அழைக்கப்படுகின்றனர். யோவானின் போதனைப்படி நாம்புத்திரசுவிகாரத்தினால் அல்ல, மறு பிறப்பினால் கடவுளின் பிள்ளைகள் ஆனோம் (யோ. $3^{3,5}$,1^{12-13}). அவ்வாறே இந்த வசனங்களில் மெய்க் கிறிஸ்தவன் கடவுளால் பிறந்தவன் என அழைக்கப்படுகிறான்.

2:29 அவரால் பிறந்தவன் — யாரால்? யோவன் பின் னால் "கடவுளால் பிறந்தவன்" எனக் குறிப்பிடுகிறார் (3^{5}), ஆகவே இங்கும் நாம் அப்படிப் பொருள்கொள்ளலாம். எனி னும் 'அவர்' எனும் சொல் யாரைக் குறிக்கிறது என்பது பல இடங்களில் சந்தேகத்திற்குரியதாயிருக்கிறது. சில வசனங் களில் அது கடவுளையும் (உ-ம். 2^{29} பிற்பாகம்) வேறுசில வசனங் களில் கிறிஸ்துவையும் குறிக்கிறது போலும் (உ-ம். 2^{28}, 3^{2-3}).

மறு பிறப்பு என்பது, கிரேக்க இரகசியச் சமயங்களில் அதிகமாய் வழங்கி வந்த ஒரு கருத்து. அந்தச் சமயத்தினர் ஒருவன் கடவுளைப்பற்றிய அறிவினாலும் தங்கள் இரகசியச் சடங்குகளினாலும் மறுபடியும் பிறந்து ஒரு புது வாழ்க்கையை

இத்தகைய சிறு வேறுபாடுகள் இருப்பினும், வேதத்தின் பொதுவான கருத்து ஒன்றே. எல்லா மக்களும் கடவுளால் படைக்கப்பட்டமையால் ஒருவாறு அவருடைய சந்ததி என்று அழைக்கப்படக்கூடும் (அப். 17[29]); எனினும் கிறிஸ்தவர்கள்தான் அவருடைய பிள்ளைகள் அல்லது மக்கள் ஆவர். இதனுல் நமக்குக் கிடைத்த தனிப் பாக்கிய நிலையும் கடவுளோடுகூடிய நெருங்கிய உறவும் வெளிப்படுத்தப்படுகின்றன. புத்திரசுவிகாரம் அல்லது மறுபிறப்பு என்பதனுல், நாம் இந்நிலையை அடைந்தது கடவுளின் அருளினுலேயே எனவும் விளங்குகிறது. மறுபடியும் பிறப்பது, ஒருவனும் தன் சொந்த முயற்சினுல் அடைய முடியாதது. பிள்ளைகள் தங்கள் தந்தைக்கு ஏற்றவாறு நடந்து கொள்ளல் வேண்டும் என்றும் பல இடங்களில் வலியுறுத்தப்படுகின்றது.

1 யோ. 3:1,2 இந்த வசனங்களில் யோவான் கடவுள் நம்மீது வைத்த அன்பையும் அதனுல் நமக்குக் கிடைத்த

அடையலாம் எனப் போதித்தனர். இயற்கையான பிறப்பு இயற்கையான வாழ்க்கைக்கு ஆரம்பமாய் இருப்பதுபோல, இந்த மறுபிறப்பு ஆவிக்குரிய வாழ்க்கைக்கு ஆரம்பம் ஆகும் என்பது இப்போதனையின் உட்கருத்து. கிறிஸ்தவச் சபையில் தோன்றியிருந்த அறிவுநெறிக் கொள்கையினரும் ஒருவேளை இப்படிப் பேசியிருக்கலாம். அப்படியானுல், யோவான் அவர்கள் தவருக உபயோகித்த வார்த்தைகளை எடுத்துக் கொண்டு கிறிஸ்தவ அர்த்தத்தில் பயன்படுத்துகிருர்; மெய்யான மறுபிறப்பு கோட்பாடுகளிலும் சடங்குகளிலும் மட்டும் அமையாமல், நேர்மையான நடத்தையில் வெளிப்படல் வேண்டும் எனவும் அறிவுறுத்துகிருர்.

புதிய ஏற்பாட்டில் மறுபிறப்பு என்கிற கருத்து வருகின்ற ஏனைய இடங்களில், அது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலோடும் (1 பேதுரு 1[3]), கடவுளின் வார்த்தையோடும் (1 பேதுரு 1[23]), பரிசுத்த ஆவியோடும், ஞானஸ்நானத்தோடும் (யோ. 3[3,5], தீத்து 3[5]) தொடர்புடையதாகக் காணப்படுகிறது.

உயரிய நிலையையும் சிறப்பித்துக் கூறுகிறார். அறிவு நெறிக் கொள்கையினர் போதனையின் காரணத்தால் அந்தச் சபையார் ஒருவேளை சோர்வுற்றிருந்தனர். அவர்களுக்குப் புதுத்தைரியத்தையும், நிச்சயத்தையும் ஊட்ட யோவான் இப்படிக்கூறுகிறார் போலும்.

யோவான் கடவுள் பிள்ளைகளின் நிலையைக் குறித்து ஐந்து காரியங்களைக் குறிப்பிடுகிறார்;

அ) நாம், பெயரில் மட்டும் அல்ல உண்மையிலும் கூடக் கடவுளின் பிள்ளைகள் ஆவோம்.

ஆ) இந்தப் பேறு கடவுளின் அதிசய அன்பினால் நமக்குத் தரப்பட்டது. இதனால் நாமே அதற்குத் தகுதியுள்ளவர்களாய் இருக்கிறோம் என்ற எண்ணம் தவிர்க்கப் படுகிறது. அது கடவுள் அருளிய அன்பின் ஈவே ஆகும்.

இ) நாம் இவ்வாறு கடவுளோடு உறவு கொண்டதனால், உலகம், அதாவது கடவுளை அறியாத மக்கள், நம்மைப் புரிந்து கொள்ள முடியாது. உலகத்தார் நம்மைப் பகைத்தாலும், அது ஆச்சரியம் இல்லை. எனெனில் இயேசு கிறிஸ்துவுக்கு அப்படியே செய்தனர் (3^{13},யோ. 15^{18-25}).

ஈ) இந்த உலகத்தில் கடவுள் பிள்ளைகள் பல பேறுகளைப் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். வரும் காலத்தில் நம் நிலை என்ன ஆகும் எனத் தெரியாது. ஆயினும் அதனைப் பற்றிக் கவலை இல்லை. கடவுள் நம்மை ஆட்கொண்டது போல அவர் நம்மைக் காப்பாற்றுவார் என்று உறுதியாய் நம்புகிறோம்.

உ) வரும் காலத்தைப் பற்றி ஒன்றுதான் தெரியும் இயேசு திரும்பி வரும்போது நாம் அவரை முகமுகமாய்ப்

3:2 அவர் வெளிப்படும்போது — இந்தச் சொற்கள் இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறிக்கின்றன (2^{28} ஐயும் காண்க). 3^5, 3^8 ஆகிய வசனங்களில் அதே சொற்கள் இயேசு திரு அவதாரம் எடுத்து உலகத்தில் தோன்றியதைக் குறிக்கின்றன.

பார்ப்போம் (1 கொ. 13^{12} காண்க). அவரை முகமுகமாய்ப் பார்ப்பதனுல், நாம் அவருக்கு ஒப்பாக மறுரூபமாக்கப்படுவோம். ஏற்கனவே அந்த மறுரூபமாகுதல் நடைபெறுகிறது (2 கொ. 3^{18} காண்க), அப்பொழுது அது நிறைவேறும். நம் அன்பர் இயேசுவை நேராகக் காண்பதனுல், நம் உள்ளத்தின் பேராவலும் நிறைவேறும். அதற்காக நாம் இங்குக் காத்திருந்து தவிக்கிறேம்.

1 யோ. 3:3 இயேசுவை நேரில் கண்டு அவருக்கு ஒப்பாய் மறுரூபமாக்கப்படுவதாக நம்புகிறவன் எவனும் இம்மையிலே அந்தச் சந்திப்புக்குத் தன்னை ஆயத்தப் படுத்திக் கொள்கிறுன் (2^{28} காண்க). இங்கே இயேசு தூயர் எனக் குறிப்பிடப்படுகிறுர். ஆகவே அவரைக் காணப் போகிற அடியார்களும் தூய்மையை நாடித் தேடுவர். கடவுளின் திருச்சமுகத்தில் வந்து நிற்கு முன் இஸ்ரவேல் மக்களும் பிரதான ஆச்சாரியரும் தங்களைச் சுத்திகரித்துக் கொண்டது போல (யாத். 19^{10}, லேவி. 16^{4}, யோ. 11^{55}) நாமும் நம்மைச் சுத்திகரித்துக் கொள்ளல் வேண்டும். அவர்கள் தங்கள் உடம்பையும் ஆடைகளையும் சுத்தமாக்கினர், நாமோ சுத்த உள்ளத்துடன் காணப்படல் வேண்டும் (மத். 5^{8}). முன்னுல் யோவான் நம்மைச் சுத்திகரிப்பது இயேசுவின் இரத்தம் எனக் கூறினுர் (1^{7}), இங்குக் கிறிஸ்தவன் தன்னைத் தானே சுத்திகரித்துக் கொள்கிறுன் என்கிறுர். இவ்வாறு அவர்,

---

3;3 அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல — இயேசு
உலகிலே வாழ்ந்தபோது சுத்தமுள்ளவராயிருந்தார். உல
கிலே அவர் எவ்வாறு இருந்தாரோ, அவ்வாறே இப்போதும்
பரலோகத்தில் இருக்கிறுர். ஆகவே அவர் இன்னும் சுத்த
முள்ளவராயிருக்கிறுர். அதுபோல. யோவான் அவர் நீதி
யுள்ளவராயிருந்தார் என்று சொல்லாமல், அவர் நீதியுள்ளவ
ராயிருக்கிறுர் என்று சொல்லுகிறுர் (3^{7}).

நாம் தூய்மையை அடைவதில் கடவுளின் பங்கு பெரிது என்ற போதிலும் நமது ஒத்துழைப்பும் தேவை என்று உணர்த்துகின்ருர்,

1 யோ. 3:4-10 முதலாம் பரிசோதனை

உண்மைக் கிறிஸ்தவர்கள் கடவுளின் பிள்ளைகள் என்பது முந்திய வசனங்களில் விளக்கப்பட்டது. இங்கு அவர்களை எப்படிக் கண்டு கொள்ளலாம் என்ற கேள்விக்குப் பதிலாக, யோவான் தமது முதலாம் பரிசோதனையைக் கொண்டு வருகிருர். கடவுளின் பிள்ளைகளுக்கு நல்லொழுக்கமே அறிகுறி என்பது இப்பரிசோதனையின் கருத்து.

1 யோ. 3:4-6 சபையில் தோன்றிய கள்ளப் போத
கர், " நாங்கள் நியாயப் பிரமாணத்திற்கு, அப்பாற்பட்ட
ஒரு நிலையில் இருக்கிருேம். நம்மேல் இன்னும் அதற்கு
அதிகாரம் இல்லை. நீங்கள் சொல்லுகிறபடி, நாங்கள்
பாவம் செய்யினும், அது நியாயப்பிரமாணத்தை மீறு
வதாக எண்ணப்பட முடியாது" என்று சொல்லி வந்த
னர் எனத் தெரிகிறது. அதற்கு யோவான் "பாவத்தைச்
செய்கிறவன் நியாயப்பிரமாணத்தை மீறுகிருன், ஏனெ
னில், நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம்," என்று
சொல்லுகிருர். அதாவது, நியாயப்பிரமாணத்திற்கு
அப்பாற்பட்ட நிலை கிடையாது. எல்லாரும் அதன்.
பொதுவான கோட்பாடுகளுக்கு உட்பட்டிருக்கின்றனர்.
அது கடவுளின் சித்தத்தின் வெளிப்பாடு, எனவே அது
எக்காலத்திலும் பாவத்தையும் நல்லொழுக்கத்தையும்
வெளிப்படுத்தும் ஒரு அளவுகோலாய் இருக்கும். பாவத்
தைச் செய்வதும், நியாயப்பிரமாணத்தை மீறுவதும்
ஒன்று தான். இரண்டும் குற்றமாகவே கருதப்படும்,

1 யோ. 3:5 யோவான் தம் விவாதத்தின் முதல் படியாக, நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம் எனக் காட்டினார். அத்துடன் அவர் கள்ளப்போதகர் நியாயப் பிரமாணத்தை மீறுகிறார்கள், பாவத்தைச் செய்கிறார்கள் என்றும் மறை முகமாக உணர்த்தினார். அடுத்த ப்டியாக, இயேசு பாவங்களை ஒழித்துவிட வந்தார் அவரிடத்தில் பாவம் இல்லை என்று கூறி. இயேசுவுக்கும் பாவத் திற்கும் இடையுள்ள நேர் விரோதத்தை எடுத் துக் காட்டுகிறார். இங்கு இயேசு பாவத்தை நீக்கி விடுகிறார் எனச் சொல்லப்படுகிறது. யோ. 1^{29}இல் அவர் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறார் எனச் சொல்லப்படுகிறது மூலத்தில் இரண்டு இடங்களில் ஒரே வினைச் சொல் பயன் படுத்தப்படுகிறது. இந்த வசனம் யோ. 1^{29}இன் எதிரொலி எனலாம். இயேசுவின் பாவமற்ற தன்மை யோ. 7^{18},2கொ 5^{21}, எபி.4^{15} ஆகிய வசனங்களிலும் குறிப்பிடப்படுகிறது.

1யோ. 3:6 இங்கு யோவான் இந்தச் சிறு வாதத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருகிறார். இயேசு பாவத்திற்கு விரோதமாகப் போர் செய்ய வந்தார் எனில், அவர் சார் பில் இருப்பவன் பாவம் செய்ய மாட்டான். ஒருவன் கட்டுப்பாடின்றி பாவச் செயல்களில் ஈடுபடின், அவனுக் கும் கிறிஸ்துவுக்கும் சம்பந்தம் இல்லை எனத் தெரியும். இதனால் யோவானின் எண்ணப்படி கள்ளப் போதகர் யார் சார்பில் இருந்தனர் என்று விளங்குகிறது. ஆயி னும் அவர்கள் செய்த பாவங்கள் என்னென்ன என்று யோவான் திட்டமாய்ச் சொல்லவில்லை (2^{11} காண்க).

இங்கு ஒரு பிரச்சினை எழுகிறது. இந்த வசனங்களில்

யோவான், கடவுளால் பிறந்தவன் பாவம் செய்ய மாட்டான் எனவும் பாவம் செய்ய முடியாது எனவும் கூறுகிறார் (3 ,5). ஆயினும் முன்னாலே அவர் தன்னிடம் பாவம் இல்லை என்று சொல்கிறவன் பொய்யன் எனவும் மெய்க் கிறிஸ்தவன் தன் பாவத்தை ஒப்புக் கொள்வான் எனவும் கூறினர் (1 ,). இது ஒரு முரண்பாடாகத் தோன்றுகிறது. கிறிஸ்தவன் பாவம் செய்வானா, பாவம் செய்யாமலிருப்பானா?

கிறிஸ்தவன் அவ்வப்பொழுது பாவத்தைச் செய்வான் என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளல் வேண்டும். நாம் இம்மையில் பூரண வளர்ச்சி அடைவதில்லை, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில்தான் அவரைப் போலப் பாவம் நீங்கினவர்களாகத் திகழ்வோம் (3[2]). மேலும் நம் குறைகளை உணர்ந்து கொள்ளாவிடில் நாம் மன்னிப்புப் பெற்று அவற்றை மேற்கொள்ள முடியாது. இவை யோவான் முதலாம் அதிகாரத்தில் உணர்த்திய உண்மைகள். இங்கு அவர், கிறிஸ்தவன் துணிகரமாகவோ, வேண்

---

3 : 6, 8 ...பாவம் செய்கிறதில்லை...பாவம் செய்ய முடியாது—கிரேக்கத்தில் பாவம் செய்தல் எனும் பொருளில் வந்த வினைச்சொல் இங்கு நிகழ்காலத்தில் பயன்படுத்தப்பட்டது. நிகழ்காலம் தொடர்ந்து செய்யப்படுகிற ஒரு செயலைக் குறிக்கும். ஆகவே இந்தச் சொற்றொடர்களின் பொருள், மெய்க் கிறிஸ்தவன் பாவம் செய்துகொண்டே இருப்பதில்லை. அவன் பாவம் செய்வது வழக்கமில்லை என்பதே. "ஒருவன் பாவம் செய்வானானால்" என்கிற வசனத்தில் (2[1]), தனிப்பு இறந்த காலம் (aorist) பயன்படுத்தப்பட்டது. அது குறிப்பிட்ட ஒரு சமயத்தில் செய்யப்படும் ஒரு செயலைக் குறிக்கிறது. ஆதலால் கிரேக்கத்தை நோக்கும்போது முரண்பாடில்லை, கிறிஸ்தவன் அவ்வப்பொழுது பாவச் செயல்களைச் செய்ய நேரிடலாம், எனினும் பாவம் செய்வது அவன் முக்கிய நோக்கமும் இயல்பும் அல்ல என்பதே யோவானின் கருத்து.

டும் என்றே பாவம் செய்வதில்லை எனக் கூறுகிறார். அவன் கிறிஸ்தவனானபோது அவன் இயல்பும், நடக்கையும் மாறி விட்டன. இன்னும் பாவம் செய்வது அவனுக்கு வழக்கம் இல்லை. பாவம் செய்ய நேரிடின், அவன் அதனைக் கடவுள் முன் ஒப்புக் கொண்டு வெறுத்துத் தன்னைத் திருத்திக் கொள்கிறான். இதிலே கிறிஸ்தவனுக்கும் மற்றவருக்கும் இடையிலே ஒரு பெரிய வேறுபாடு காணப்படல் வேண்டும். அது காணப்படவில்லை எனில், தன்னைக் கிறிஸ்தவன் எனச் சொல்லிக் கொள்ளுகிறவன் உண்மையாய்க் கடவுளால் பிறந்தவனா என்பது சந்தேகம் (2[1] காண்க).

இவ்வாறு யோவான் சபையிலே எழுந்த இரண்டு தப்பெண்ணங்களுக்கு விடை அளிக்கிறார். முதலில் சிலர் தங்கள் பரவசமான அனுபவங்களை பெரிதாக எண்ணி, 'பாவம் செய்ய முடியாத நிலையை அடைந்து விட்டோம்' என்று சொல்லிக் கொண்டனர். அவர்களைப் பார்த்து யோவான் "இம்மையில் நீங்கள் இருக்குமளவும் நீங்கள் பாவிகளாகவே இருப்பீர்கள். நீங்கள் பாவம் செய்யாத நிலையை அடைந்து விட்டதாக நினைத்துக் கொள்வது வெறும் ஆத்மீக குருட்டாட்டம்" எனக் கூறுகிறார் (1[8,10]). வேறு சிலர் தங்கள் ஆவிக்குரிய அனுபவங்களின் அடிப்படையிலே "நாங்கள் கடவுளை அடைந்து விட்டோம், இனி நாங்கள் எப்படி நடந்து கொண்டாலும் சரி பரவாய் இல்லை, பாவமானது எங்களைப் பாதிக்க முடியாது" என்று சொலலி வந்தனர். அவர்களிடம் யோவான் "பாவம் பாவமே. அதனைப்பற்றி உங்களுக்குக் கவலை இல்லை என்றால், நீங்கள் உண்மையாய்க் கடவுளை அடைந்திருக்கமுடியாது" எனக் கூறுகிறார் (3[6,9]).

இப்படி நோக்கும்போது நாம் முரண்பாடாகத் தோன்றுகிற இவ்விரண்டு கூற்றுக்களை முரண்பாடில்லாமல் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தக் கூடும். இரண்டும்

நமது நன்னெறிப் போதனையில் இடம் பெற வேண்டிய உண்மைகளாம்.

1 யோ. 3:7 யார் நீதியுள்ளவன் என்கிற கேள்வி இங்கே எழுப்பப்படுகிறது. யோவான் முதலில் 'ஒருவனும் உங்களை வஞ்சிக்க இடம் கொடாதிருங்கள்' என்று சொன்னதனால் சிலர் அப்படியே செய்து கொண்டிருந்தனர் எனத் தெரிகிறது. அநேகமாக அந்தக் கள்ளப் போதகர் "நாங்கள்தான் நீதியுள்ளவர்கள், நீங்களும் எங்கள் போதனையை ஏற்றுக் கொண்டால் எங்களைப் போல் நீதியுள்ளவர்கள் ஆவீர்கள்" என்று சொல்லிச் சபையாரை ஏமாற்றி வந்தனர். இதற்கு யோவான் தருகிற விடை, நீதியைச் செய்கிறவனே நீதியுள்ளவன் என்பதே. நீதி பரவசமான அனுபவங்களை அடைவதிலோ, இரகசியச் சடங்குகளை அனுஷ்டிப்பதிலோ, ஞானப் போதனையைக் கற்றுக் கொள்வதிலோ அன்று, நேர்மையான நடக்கையிலே அமைகிறது. அது நம் செயல்களிலே காணப்படல் வேண்டும். அதற்கு ஆதாரமாக யோவான் 'அவர் நீதியுள்ளவராயிருக்கிறது போல' என்கிறார். இங்கு மறுபடியும் யோவான் கிறிஸ்து காட்டிய முன்மாதிரியைத் தம் போதனைக்கு அடிப்படையாக வைக்கிறார் (2⁶, 3³ காண்க). கிறிஸ்து எப்படிப்பட்டவர்? அவரிடத்தில் காணப்பட்ட நீதி எத்தகையது? அவரின் செயல்களிலும் நேர்மை இல்லையா? அப்படியாயின் நாம் நீதியைச் செய்யாமல் நம்மை நீதியுள்ளவர்களாக எப்படிச் சொல்லிக் கொள்ள முடியும்? இவ்வாறு யோவான் அந்தக் கள்ளப் போதகரது வஞ்சனையைக் காண்பித்துச் சபையாரை விசுவாசத்திலும் நல்லொழுக்கத்திலும் உறுதிப்படுத்துகிறார்.

1 யோ. 3:8,9 'கடவுளின் பிள்ளைகள் யார்? பிசாசின் பிள்ளைகள் யார்?' என்பது யோவான் அடுத்தப்படியாகக்

கேட்கிற கேள்வி. அறிவு நெறிக் கொள்கையினர் இரகசியச் சடங்குகளினாலும் ஞானப் போதனையினாலும் தாங்கள் மறுபிறப்பு அடைந்து, கடவுளின் பிள்ளைகளாயினர் என்று சொல்லிக் கொண்டனர். இது நமக்குக் கிரேக்க மத நூல்களின் வாயிலாகத் தெரியும். இச்சபையிலும் அந்தக் கள்ளப் போதகர் அப்படிப் பெருமை பாராட்டி வந்தனர் போலும். அவர்கள் கூற்று மெய்யா பொய்யா எனச் சோதிக்கும்படி யோவான் முன்னால் கையாண்ட வகையான வாதத்தை இங்கு மறுபடியும் கையாளுகின்றார் (வ. 4-6). பிசாசு பாவம் செய்பவன், பாவம் செய்வது அவனது இயல்பு. கிறிஸ்து அவன் செயல்களை ஒழித்து விட வந்தார். இவ்விருவரும் ஒருவருக்கொருவர் பகைஞர். ஆகவே பிசாசின் செயல்களைச் செய்பவன் கிறிஸ்துவின் சார்பில் இருக்க முடியாது, அவன் பிசாசின் பிள்ளைதான். கடவுளின் பிள்ளையோ கிறிஸ்துவின் சார்பில் இருப்பதால் பாவம் செய்ய மாட்டான். இப்படி ஒருவன் கடவுளின் பிள்ளையோ பிசாசின் பிள்ளையோ என்பது அவன் செயல்களினால் தெரியவரும்.

---

3 : 8 பிசாசினால் உண்டாயிருக்கிறான் — மூலத்தில் இங்கு வருகின்ற 'எக்' எனும் சொல் பாவம் செய்கிறவனது பிறப்பிடத்தைக் குறிக்கிறது அவன் பிசாசிலிருந்து தோன்றியவன் ஆதலால், அவன் பிசாசைச் சார்ந்தவன், பிசாசைப் போன்றவன், பிசாசின் கிரியைகளைச் செய்கிறவன். அதே சொல் பின் வரும் வசனங்களிலும் பயன்படுகிறது 2^{16} (பிதாவுக்குரியது, உலகத்திற்குரியது), 3^{19} (நமக்குரியவர்கள்), 2^{21} (சத்தியத்திற்குரியது), 3^{10} (கடவுளால் உண்டானவன்), 3^{19} (சத்தியத்தினால் உண்டானவன்). ஆழமான பொருளையுடைய இச்சொல்லை எல்லா இடங்களிலும் ஒரே முறையில் மொழிபெயர்க்க முடியாது.

1 யோ. 3:9 **அவருடைய வித்து அவனுக்குள் நிலைத்திருக்கிறதே**— அவருடைய வித்து என்பது கடவுளின் இயல்பு என்று பொருள்படும். கடவுளின் இயல்பு அவருடைய பிள்ளைகளுக்குள் நிலைத்திருந்து அவர்கள் பாவம் செய்யாதபடி அவர்களைக் காக்கும் என்பது யோவானின் கருத்து.

அவன் பாவம் செய்ய முடியாது- யோவான், கடவுளின் பிள்ளைகளுக்கும் பிசாசின் பிள்ளைகளுக்கும் இடையுள்ள வேறுபாட்டைக் கூடிய தெளிவாக எடுத்துக் காட்ட வேண்டும் என்று அதை மிகைப்படுத்திக் கூறுகிறார் எனலாம் (வ.6 காண்க).

1 யோ. 3:10 இந்த வசனம் இந்தப் பகுதிக்கு முடிவாக அமைகிறது. யோவான் கடவுளின் பிள்ளைகளையும் பிசாசின் பிள்ளைகளையும் வேறுபடுத்தி அறிந்து கொள்ளும் தமது பரிசோதனையை இன்னொரு முறை சுருக்கமாகச் சொல்லுகிறார். நேர்மை செய்யாதவன் கடவுளுக்குரியவன் அல்லன். கடைசியிலே யோவான் அன்பைப்பற்றிய ஒரு குறிப்பைக் கொண்டு வந்து இந்தப் பகுதியை அடுத்த பகுதியோடு இணைக்கிறார் (2[28] காண்க).

---

3 : 9 அவருடைய வித்து — இங்கு "வித்து" என்று மொழி பெயர்க்கப்பட்ட சொல் "சந்ததி" என்று பொருள்படலாம். அப்படித் திருப்பினால், இவ்வாக்கியத்தின் பொருள், "கடவுளால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய சந்ததி (அதாவது, கடவுளின் பிள்ளைகள் எல்லாரும்) அவரில் (அதாவது கடவுளிடத்தில்) நிலைத்திருக்கிறது" என்பதாகும், அவர்கள் கடவுளோடு கொண்டுள்ள நிலையான உறவு. பாவம் செய்யாதபடி அவர்களைக் காத்துக்கொள்கிறது.

3 : 10 மூலத்தில் இவ் வாக்கியத்தின் பொருள் தெளிவாக இல்லை. இன்றும் மூன்று முறைகளில் அதனை மொழி பெயர்க்கலாம்.

14 G.B. Sathyanesan,

யோவான் நல்லொழுக்கத்தை இவ்வளவாய் முக்கியப் படுத்தி, நல்லொழுக்கம் செய்கிற புறமதத்தினரையும் கடவுளின் பிள்ளைகள் ஆக்கியிருக்கிறாரா என்கிற சந்தேகத் திற்கு இந்த வசனங்கள் இடம் தருகின்றன. எனினும் யோவான் 'பாவம் செய்பவன் எவனும் கடவுளின் பிள்ளை அல்லன்' என்றும், 'கடவுளின் பிள்ளை பாவம் செய்ய மாட்டான்' என்றும் கூறுகிறாரேயன்றி, 'பாவம் செய்யா தவன் எவனும் கடவுளின் பிள்ளை' என்று அடிக்கடி சொல்லவில்லை. இப்பகுதியில் அவர் அப்படிச் சொன்ன ஒரே இடத்தில் (2^{29}-நீதியைச் செய்கிறவன் எவனும் அவரால் பிறந்தவன்), யோவான் சபைக்குள்ளே எழுந்த சிக்கல்களை மனதிற்கொண்டு, தங்களைக் கிறிஸ்தவர்களா கச் சொல்லிக்கொள்ளுகிறவர்களை மாத்திரம் பரிசோதிக் கும் ஒரு முறையாக அதைச் சொன்னார் எனலாம். "குமாரனை மறுதலிக்கிற எவனும் பிதாவையுடையவன் அல்ல, குமாரனை அறிக்கை பண்ணுகிறவன் பிதாவையும் உடையவன்" எனக் கூறிய (2^{23}) யோவான் எப்படிக் குமாரனை அறிக்கை பண்ணாத புற மதத்தினரைக் கடவுள் பிள்ளைகளின் தொகையில் சேர்த்துக்கொள்ள முடியும்?

---

1. ...அறிந்துகொள்வதுமன்றி, நமது இருதயம் நம்மைக் குற்றவாளிகளாய்த் தீர்த்தாலும், கடவுள் நமது இருதயத்தை விடப் பெரியவராய்ச் சகலத்தையும் அளித்திருக்கிறபடியால், அவர் முன்பாக தமது இருதயத்தைச் சாந்தப்படுத்திக்கொள் வோம்.

2 ...அறிந்துகொள்வதுமன்றி, நமது இருதயம் நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்கும் எந்த விஷயத்தைக் குறித்தா கிலும், கடவுள் நமது இருதயத்தைவிடப் பெரியவராய்ச் சகலத் தையும் அறிந்திருக்கிறார் என்று அவர் முன்பாக நமது இருதயத்தை நிச்சயப்படுத்திக் கொள்வோம் (அதாவது நமது இருதயத்தில் நிச்சயமாய் அறிந்துகொள்வோம்).

எப்படியாயினும் யோவானின் வார்த்தைகள் சபை மக்களுக்கு மிகத் தேவையான ஓர் எச்சரிக்கையாகும். இக்காலத்திலும் கிறிஸ்தவர்கள் சிலர் நியாயப்பிரமாணத்தைப் புறக்கணித்து அன்பே நமது குறிக்கோள் என்று சொல்லிக்கொண்டு கேடான ஒழுக்கத்தில் ஈடுபடுவதுண்டு. அவர்கள் அப்படிச் செய்வதால் தாங்கள் மற்றவர்களோடு உறவு கொண்டு அவர்களைக் கிறிஸ்துவினிடம் இழுத்துக்கொண்டு வர முடியும் என நினைக்கின்றனர். ஆனால் கிறிஸ்து பாவத்தை நீக்கிவிடவே வந்தார். ஆகவே வேதத்தில் பல இடங்களில் பாவங்களாகக் கண்டிக்கப்பட்ட செயல்களில் ஈடுபடுவதால் நாம் கிறிஸ்துவின் அன்பை எடுத்துக்காட்ட முடியும் என நினைப்பது தவறு. நாமே உண்மையாய்க் கிறிஸ்துவை அறிந்திருக்கிறோமா என்னும் சந்தேகம் ஏற்படுமே ஒழிய வேறில்லை.

---

3. ...அறிந்துகொள்வதுமன்றி, நமது இருதயம் நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்த்தால், ...(மீதி 2-ஆவுள்ளபடியே)

நம் வேதத்திலுள்ளதும் மேற்கண்ட முதலாம் திருப்புதலும் மனநிம்மதியற்றோருக்கு ஆறுதலையும் தைரியத்தையும் ஊட்டும் பொருளைத் தருகின்றன: "நமக்கு மனநிம்மதி இல்லாவிடினும், எல்லாவற்றையும் அறிந்த கடவுள் நாம் உண்மையுள்ளவர்கள் என்று அறிந்து நம்மை ஏற்றுக் கொள்ளுகிறார்".

மேற்கண்ட இரண்டாம் மூன்றும் திருப்புதல்களில் ஓர் எச்சரிப்பு உண்டு: "நீங்களே உங்களைக் குறித்துச் சில காரியங்களை அறிந்துகொண்டு மனநிம்மதியற்றவர்களாயிருக்கிறீர்கள். கடவுள் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறாரே. ஆகையால் அவர் உங்களை நியாயந் தீர்க்கும்போது, உங்கள் நிலை என்ன ஆகும்!"

இந்த இடத்தில் இத்தகைய பயமுறுத்துதலைவிட, முந்திய திருப்புதல்கள் தந்த ஆறுதலான பொருள் பொருத்தமாகத் தோன்றுகிறது.

1 யோ. 3 : 11-18 இரண்டாம் பரிசோதனை:

யோவான் முந்திய வசனத்தில் இப்பகுதியின் கருத்தினைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டார். "தன் சகோதரனில் அன்பு கூராதவன் கடவுளால் உண்டானவனல்ல" (3^{10}). ஆகவே இப்பகுதிக்கும், 2^{7-11} ஆகிய பகுதிக்கும் ஒரு நெருங்கிய சம்பந்தம் உண்டு. அங்கும் யோவான் அன்பை அடிப்படையாக வைத்துக் கள்ளப் போதகரது வாழ்க்கையைப் பரிசோதித்தார். எனினும் இங்கு யோவான் முன்னிலும் அதிக விரிவாக அன்பின் தன்மையையும் பகையின் தன்மையையும் விளக்குகிறார். சிறப்பாக இயேசுவின் சிலுவை மரணத்தை அன்பின் நிறைவான வெளிப்பாடாகக் குறிப்பிடுகிறார் (வ. 16).

1 யோ. 3 : 11 அன்புத் தாழ்ச்சி நாம் கடவுளுக்குரியவர்கள் அல்ல என்று உறுதியாய்க் காட்டுகிறது (வ. 10). ஏனெனில் அன்பின் கட்டளை ஆதி நற்செய்தியின் அடிப்படையான ஓர் அம்சம் ஆகும். சபையார் இந்த கட்டளையை ஆதி முதல், அதாவது நற்செய்தி முதன் முதலாக அவர்கள் மத்தியில் அறிவிக்கப்பட்டதிலிருந்து, கேட்டறிந்திருந்தனர். ஆகையால் அதன் முக்கியத்துவத்தைப் பற்றிச் சந்தேகப்பட இடம் இல்லை (2^{7} காண்க).

ஒருவரில் ஒருவர் அன்புகூர வேண்டும் — இதனால், கிறிஸ்தவர்கள் புறமதத்தினரிடம் அன்புகூர வேண்டியதில்லை என்று யோவான் சொல்லவில்லை. இயேசுவும் (யோ. 13^{34}, 15^{12}) அப்போஸ்தலர்களும் (உ-ம். கலா 6^{10}) இப்படிக் கட்டளையிட்டனர்; ஏனெனில் கிறிஸ்தவச் சபைக்குள்ளே ஒரு சிறந்த அன்பு இருத்தல் வேண்டும். சகோதரருக்குள் அந்த அன்பின் கட்டு இருந்தால்மட்டும் அவர்கள் மற்றவர்கள் மீதும் அன்பாயிருக்கமுடியும். சகோதரரில் அன்பு கூருவதோடு நின்றுவிடலாம் என்பது யோவானின் கருத்து அன்று (லூக்கா 10^{25-37} காண்க).

1 யோ. 3: 12-16 இந்த அன்பிற்கு நேர் விரோதமா னது பகை. பகைக்குச் சிறப்பான எடுத்துக் காட்டு காயீன் என்பவன் (ஆதி. 4 1-16 காண்க). யோவான் அவனது வரலாற்றிலிருந்து பகையின் தன்மையைப் பற்றி நான்கு காரியங்களை எடுத்துக் கூறுகிறார். அவர் தம் நிருபங் களில் இந்த இடத்தில் மட்டும் பழைய ஏற்பாட்டைப் பயன்படுத்துகிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

[அ] 1 யோ. 3:12 காயீன் தீயோன் எனப்படுகிற சாத்தானால் உண்டானவன், அல்லது சாத்தானுக்குரிய வன். சாத்தானின் இயல்பு அவனிடத்திலும் காணப்படு கிறது. ஒவ்வொருவனும் சாத்தானுக்குரியவனாய் அல்லது கடவுளுக்குரியவனாய் இருப்பான். யோவானின் கருத்துப் படி நடுநிலை இல்லை (2 9,11 காண்க). சாத்தானால் உண் டானவனுக்குப் பகையே அறிகுறியாயிருக்கிறது.

[ஆ] காயீன் தன் சகோதரனைக் கொலை செய்தான். பகை கொலை செய்வதற்குச் சமம். ஏனெனில் பகைக்கிற வன் ஏற்கனவே தன் சகோதரனைத் தன் மனதில் கொலை செய்திருக்கிறான் (வ. 15 காண்க). இதிலே யோவானின் போதனை இயேசுவின் போதனைக்கு ஒத்ததாகும் (மத். 5 21, காண்க). பாவத்தின் வேர் உள்ளத்தில் இருக்கிறது (மார்க்கு 7 21-23). கடவுளின் பார்வையில் பாவச் சிந்த னைக்கும் பாவச் செயலுக்கும் வேறுபாடு இல்லை.

[இ] காயீனைத் தன் சகோதரனைக் கொலை செய்யத் தூண்டியது பொறாமை. அவன் தன் சகோதரன் செய்த நேர்மையான செய்கைகளைப் பார்த்துப் பொறாமை கொண்டானும். இதற்குப் பழைய ஏற்பாட்டில் சான்று இல்லை எனினும், அப்படி ஊகிக்க இடம் உண்டு (எபிரேயர் நிருபத்தின் ஆக்கியோன் இந்த நிகழ்ச்சியைப் பற்றிச் சொன்னதும் ஊகம் எனக் காண்க, எபி. 11 4). எப்படியா யினும் நல்லவன் செய்கிற நேர்மையான செய்கைகள்

தீயவனை இன்னும் அதிகமான பகைக்கும் பொறாமைக்கும் தூண்டிவிடலாம் என்பதை யாவரும் ஒத்துக் கொள்வர் (இதன் தொடர்ச்சியை 15ம் வசனத்தில் காண்க).

1 யோ. 3:13 இந்தக் காரணத்தால் உலகம் திருச்சபையாரைப் பகைத்தால், ஆச்சரியப்பட வேண்டாம் என்கிறார் யோவான். நாம் கடவுளின் பிள்ளைகளாய் இருப்பதால் உலகம் நம்மை அறிந்து கொள்ள முடியாது என முன்னரே கூறியுள்ளார் (3^1;யோ. 3^8 ஐயும் காண்க).

இப்போது உலகம் நம் நேர்மையான செய்கைகளின் காரணமாக நம்மேல் பொறாமை கொண்டு நம்மைப் பகைக்கும் எனக் கூறுகிறார் (யோ. 15^{18-25} காண்க). இந்தக் காரணத்தால் உலக மக்கள் கிறிஸ்தவர்களைப் பகைத்தல் சரிதான். ஆயினும் கிறிஸ்தவர்கள் எப்போதும் தங்களைச் ஆராய்ந்து, உலகம் நம்மைப் பகைக்கிறது இந்தக் காரணத்தால்தானா என்று தற்பரிசோதனைசெய்து கொள்ள வேண்டும்.

1 யோ. 3:14 உலகம் நம்மைப் பகைத்தாலும், நாம் ஒரு காரியத்தை நிச்சயமாய் அறிவோம். யாதெனில், நாம் மரணத்தின் ஆதீனத்தை விட்டு அகன்று அழியா வாழ்வை அடைந்திருக்கிறோம். இங்கு மரணமும் வாழ்வும் இரு இராச்சியங்களாகக் குறிக்கப்படுகின்றன. நாம் கிறிஸ்தவர்களாகும்போது, இடையேயுள்ள எல்லையைக் கடந்து ஒரு இராச்சியத்தை விட்டு மறு இராச்சியத்திற் குட்புகுவோம். இங்கேயும் யோவானின் கருத்துப்படி நடுநிலை இல்லை என்று பார்க்கிறோம். நாம் கிறிஸ்துவைச் சேர்ந்து மெய்யான வாழ்வை அடைந்திருக்கிறோம் அல்லது மரணத்தின் ஆட்சிக்குள் கிடக்கிறோம். கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் கிறிஸ்துவை அறியாத வாழ்க்கைக்கும் இடையேயுள்ள வேறுபாடு அவ்வளவு பெரிதாயிருக்கிறது.

உலக இன்பத்துன்பங்களின் மத்தியில், நாம் கிறிஸ்துவுக்குள் அழியா வாழ்வை அடைந்திருக்கிறோம் என்கிற நிச்சயம் நம்மைத் தாங்குகிறது. அந்த நிச்சயத்திற்கு நாம் நம் சகோதரரிடத்தில் அன்பாயிருப்பதே ஆதாரம். இந்த இடத்தில் ஒருவன், "ஆனால் நான் சகோதரரில் அன்பாயிருக்கிறேனோ என்பது சந்தேகம். என்னை ஆராய்ந்து பார்க்கும் போது, அன்பு என்னிடத்தில் அதிகமாய் காணப்படுகிறதில்லை. ஆகவே நான் இன்னும் மரணத்தின் ஆதீனத்தில் இருக்கிறேன் என்று முடிவு செய்ய வேண்டுமா?" என்று கேட்கலாம், கிறிஸ்தவர்கள் பலர் அவ்வாறு தங்கள் அன்புத் தாழ்ச்சியை உணர்ந்து துக்கத்துடன் ஒப்புக்கொள்வர். எனினும் நாம் உண்மையாய்க் கிறிஸ்துவை அறிந்திருக்கிறோம் ஆகில், அவரை அறிந்திருக்கிற நம்முடைய சகோதரரோடு நம்மிடம் ஒரு சிறந்த ஐக்கிய உணர்ச்சி ஏற்படும். அவர்களோடு பழகுவது, ஜெபம் செய்வது, பணி புரிவது முதலியன நமக்கு மிக மகிழ்ச்சியைத் தரும். அவ்வப்பொழுது நாம் தவறி விடுவோம். ஆயினும் அந்த அன்பின் கட்டு நீங்காது, ஏனெனில் நாம் யாவரும் ஒரே மீட்பரை அறிந்திருக்கிறோம்.

இப்படி நம் சகோதரரில் அன்பாயிருப்பதால் நாம் மெய்வாழ்வை அடைந்து விட்டோம் என நமக்கு நிச்சயமாய்த் தெரியும் (வ .3 காண்க). அன்பு கூருகிறவன் மெய்வாழ்வடைந்திருக்கிறான் என்பதால், அன்பில்லாதவன் மரணத்தின் ஆட்சிக்குள் இருந்து கொண்டே இருக்கிறான் என்பதும் தெளிவு. அதனையும் யோவான் திட்டமாய்ச் சொல்கிறார் (வ .14பிற்பாகம்). அதனோடு,

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு

என்ற வள்ளுவரது கூற்றினை ஒப்பிடலாம். எல்லா மதத்தினரும் அன்பை உயர்த்திப் பேசுவர். அதனைப் பற்றிய

கிறிஸ்தவர்களது சிறந்த தனிக் கருத்துக்களைக் கீழே காண்க (3^{16},4^{7-21}).

1 யோ. 3:15. 13ஆம், 14ஆம், வசனங்களில் யோவான் காயீனை விட்டு விட்டு நேரடியாகக் கிறிஸ்தவர்களது நிலையைப் பற்றிப் பேசினார். இப்போது பகையின் தன்மையையும் அதனால் உண்டாகும் விளைவையும் தொடர்ந்து விளக்குகிறார்.

ஈ) பகைக்கிறவன் கொலைபாதகனாயிருப்பதால்(வ.12) மெய்வாழ்வடைய முடியாது, அவன் நிலை மரணமே. இவ்வாறு யோவான் பகையின் இலக்கணத்தை விளக்கி முடிக்கிறார். பகைக்கிறவன் செயலில் கொலை பாதகன் அல்லன் எனினும், அவன் கருத்தில் கொலை செய்திருக்கிறான். ஆதலால் அவனுக்கும் கொலை பாதகனுக்கும் ஒரே கதி, மரணமே.

1 யோ. 3:16 ஒருவரில் ஒருவர் அன்பாயிருங்கள் என்பது கிறிஸ்தவ நற்செய்தியின் அடிப்படையான கருத்து. பிற மதத்தினரும் அன்புக்கு முக்கியமான ஓர் இடம் தருகின்றனர் எனவும் நாம் பார்த்தோம். இவ்வாறு பலரால் சிறப்பித்துக் கூறப்பட்ட அன்பு எத்தகையது? அதன் தன்மையும் அளவும் என்ன? இந்தக் கேள்விக்கு யோவான் இவ்வசனத்தில் விடை அளிக்கிறார். இயேசு கிறிஸ்து நமக்காகத் தமது உயிரை நீத்ததனால் அன்பு இன்னதென்று வெளிப்படுத்தப்பட்டது. யோவான் நாம் இதனால் அறிந்து கொண்டோம் என்றமையால், நாம் வேறு விதமாக அறிந்திருக்க முடியாது என உணர்த்துகிறார். இயேசுவின் சிலுவை மரத்தின் அடியிலேயன்றி நாம் மெய்யன்பை இவ்வுலகத்தில் காண்பதில்லை.

கிறிஸ்து தம் உயிரை நமக்காகத் தியாகம் செய்ததனால், நாமும் நம் சகோதரருக்காக நம் உயிரைக் கொடுத்

தல் வேண்டும் என்கிருர் யோவான். கிறிஸ்து நம்மை மீட்கும் ஒரு பலியாக மட்டும் அல்ல, நாம் நமது வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய ஒரு முன்மாதிரியாகவும் மாண்டார். நாம் நம் சகோதரரில் அன்பாயிருத்தல் வேண்டும் என்பதை மட்டும் அன்று, அவர் அன்புகூர்ந்த அளவுக்கே நாம் அன்புகூரல் வேண்டும் எனபதையும் அவர் தம் மரணத்திஞல் காட்டினுர். நாம் அவர் சிலுவை மரணத்தில் நமது கடமையின் ஆதாரத்தையும், நமது வாழ்க்கையின் உயர்ந்த குறிக்கோளையும் காண்கின்ருேம்.

அன்பு என்பதற்கு மூலத்திலுள்ள சொல் அகபீ என்பதாகும். புதிய ஏற்பாட்டின் காலத்திற்கு முன், அகபீ எனும் சொல் கிரேக்கர் மத்தியில் அதிகமாக வழக்கத்தில் இல்லை. அவர்கள் காதல், ஆசை, நட்பு எனறு பொருள்படும் வேறு சில சொற்களைப் பயன்படுத்தி வந்தனர். அகபீ என்பதிலோ அழுத்தமான பொருள் இல்லை. இயேசு கிறிஸ்து உலகத்தில் வந்தபோது, முன்னுல் ஒருவரும் காணுத ஒரு பண்பை வெளிப்படுத்திஞர். அதனை உணர்த்தும்படி ஆதிக் கிறிஸ்தவர்கள் அதிகமாக வழக்கத்தில் இல்லாத ஒரு சொல்லை எடுத்துக் கொண்டு இந்தப் புதிய அர்த்தத்தை அதில் புகட்டினர். அவ்வாறே புதிய ஏற்பாட்டிலும் ஏனைய கிறிஸ்தவ இலக்கியங்களிலும் அகபீ எனும் சொல் இயேசு கிறிஸ்துவில் காணப்பட்ட சிறந்த தனித் தன்மையைக் குறிக்கப் பயன்படுத்தப்படலாயிற்று.

கிறிஸ்தவ வழக்கில் அன்பு என்பதின் பொருள் யாது? அன்பு என்பது ஓர் உணர்ச்சியைக் குறிப்பதில்லை. 'அன்பு ஈனும் ஆர்வம் உடைமை,' என்ற வள்ளுவர் கூறியதற்கு மாருக, அன்பாயிருப்பவன் எல்லோரிடமும் விருப்பமுடையவனுய் வாழுவான்

என்று சொல்ல முடியாது. அத்தகைய விருப்பம் இருப்பினும் இல்லாவிடினும், அவன் எல்லோரிடமும் இரக்கமும் தயையும் காட்டிச் செயலாற்றுவான். ஏனெனில் அன்பு நம் உணர்ச்சியிலோ விருப்பத்திலோ அன்று நம் செயலிலும் சித்தத்திலும் அமையும். அன்பின் உட்கருத்து பிறரின் நலனுக்காகத் தன் அருமைப் பொருட்களையும் தன்னையுமே ஈவதாகும். அதில் அன்பாயிருப்பவன் பிறரின் தகுதியைக் கருதுவதுமில்லை. தனக்குக் கிடைக்கக்கூடிய கைமாறு கருதுவதுமில்லை. இஃதெல்லாம் இயேசு நமக்காகத் தம் உயிரைக் கொடுத்த தியாகச் செயலில் சிறப்பாகக் காணப்படுகிறது (3[16]). எனவே அன்பு என்கிற சொல் முதலில் கடவுள் நம்மேல் வைத்த அன்பைக்குறிக்கும். மேலும் அவர் அப்படித் தம்மைக் கொடுத்ததுபோல நாமும் ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்க வேண்டும் என்பதால், அன்பு என்கிற சொல் நாம் ஒருவரில் ஒருவர் வைக்கும் அன்பையும் குறிக்கும்.

1யோ. 3:7 முதல் அன்பு வெறும் உணர்ச்சி அன்று என்பதை யோவான் வலியுறுத்திக் கூறுகிறுர். நம் உயிரைக் கொடுக்கவேண்டிய சமயங்கள் அடிக்கடி வரா எனினும், அன்ருட வாழ்க்கையில் செயல்முறையாக அன்பு காட்டக்கூடிய சந்தர்ப்பங்கள் எண்ணிலடங்காதவையாகும். அந்த வாய்ப்புக்களை நாம் பயன்படுத்தாமல் விட்டுவிடின், நம் அன்பு வெறும் வெளிவேஷமாயிருக்கிறது என்று வெளிப்படும். யோவான் இவ்வுண்மையை ஓர் உதாரணத்தைக் கொண்டு விளக்குகிறுர் (வ. 17). அதிலே நாம் நல்ல சமாரியன் உவமைக் கதையின் எதிரொலியைக் கேட்கிறேம் எனலாம் (லூக்கா. 10[25–37]). ஆச்சாரியனும் லேவியனும் காயப்பட்டவனது நிர்ப்பந்தமான நிலையைக் கண்டும் அவனுக்குச் செய்யக்கூடிய உதவி செய்யாமையால் அன்பில்லாதவர்களாகத் தங்களைக் காண்பித்தனர்,

யோவான் இங்குக் கூறுகிறபடி, செயல்முறையாய் அன்பு காட்டுவதில் மூன்று அம்சங்கள் உண்டு;

[அ] இவ்வுலகப் பொருளை உடையவனாயிருப்பது — இங்குக் குறிக்கப்பட்ட பொருள் பணமாயிருப்பது அவசியம் இல்லை. அது அறிவு, பலம், செல்வாக்கு முதலியன வாகவும் இருக்கலாம். நாம் பிறருக்கு எதனைக் கொண்டு உதவிசெய்ய முடியுமோ அதுவே நமக்குரிய பொருள். அத்தகைய பொருள் நம்மிடம் இருப்பதனால், செயலிலே அன்புகாட்ட நம்மால் கூடும். "அத்தகைய பொருள் என்னிடம் இல்லை" என எவரும் சொல்லமுடியாது.

[ஆ] தன் சகோதரனுக்குக் குறைச்சல் உண்டென்று காண்பது — நமக்குரிய பொருளை எப்படிச் செலவிடல் வேண்டும்? தேவை எங்கே இருக்கிறதோ, அங்கே நம் பொருளைப் பயன்படுத்த வாய்ப்பு உண்டு. எனினும் யாருக்குக் குறைச்சல் உண்டென்றும் நாம் எப்படி அவனுக்கு உதவி செய்ய முடியும் என்றும் காணும் கண்கள் நமக்குத் தேவை.

[இ] அவன்மேல் மனமிரங்குவது — பிறனின் தேவையை நாம் காணும்போது, அவனுக்கு உதவி செய்யத் தீர்மானம் செய்தல் வேண்டும். செயலாற்றத் தொடங்கல் வேண்டும். அப்படிச் செய்ய நம்மைத் தூண்டக்கூடியது நம்மிடமுள்ள இரக்கச் சிந்தை. ஆயினும் அவன்மேல் அனுதாபம் கொள்ளாதபடிக்கும் அவனுக்கு உதவி செய்யாதபடிக்கும், நாம் அந்த இரக்க சிந்தையை அடக்கி அடைத்துக்கொள்ளலாம். உண்மையாய் அன்பு கூருகிறவனோ தன் இரக்கச் சிந்தையை அடக்கிக்கொள்ளாமல், பிறனுக்கு உதவி செய்யத் தீர்மானித்து, எவ்வளவு செலவிடவேண்டுமாயினும் அத்தீர்மானத்தை நிறைவேற்றிவிடுவான். அதுவே அன்பு.

அவ்வாறு உலகம், கிறிஸ்தவர்கள் சொல்லில் அன்று, செயலில் அன்பு காட்டுவதைக் காண ஆவலோடு காத்திருக்கிறது. வள்ளுவர் சொன்னது போல,

சொல்லுதல் யாவர்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

இந்த வசனங்கள் கிறிஸ்தவர்கள் சமுதாயப்பணி புரிவதற்கு ஓர் ஆதாரமாயிருக்கின்றன. அன்பு மக்களுடைய ஆன்மீகத் தேவைகளை மட்டும் அல்ல, அவர்கள் சரீப்பிரகாரமான தேவைகளையும் நிறைவாக்க நம்மை ஏவுகிறது. இதனால்தான் நாம் இத்தனை பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், கைத்தொழிற் பயிற்சிசாலைகள் ஆகியவற்றை நிருவியிருக்கின்றோம். அது மாத்திரம் அன்று, இதே அன்பு ஊராட்சி அரங்கிலும், முழு நாட்டரங்கிலும், அரசியல்துறையிலும் ஈடுபட நம்மை ஏவிவிடுகிறது. ஏனெனில் தற்காலத்தில் வீடுவசதி, தண்ணீர் வசதி, சுகாதாரம் முதலியன அரசாங்கத்தின் பொறுப்பாகும். நாம் அரசியலில் ஈடுபட்டு அரசாங்கத்தின் மூலம் முயற்சி செய்யாவிடில், அந்தக் காரியங்களில் நாம் மக்களுடைய தேவைகளை நிறைவாக்க இயலாது. ஆகவே ஏழை மக்களுடைய தேவைகளைப் பார்த்தும், "நான் அரசியலில் ஈடுபடமாட்டேன்" என்று சொல்லுகிறவனிடத்தில் கடவுளின் அன்பு நிலைத்திருக்கிறது என எப்படிச் சொல்ல முடியும்?

1 யோ. 3:19-24 ஓர் ஊக்குவித்தல்

யோவான் கள்ளப் போதகரது வஞ்சனையை வெளிப்படுத்துவதோடு, தங்கள் நிலையைக் குறித்துச் சந்தேகப்பட்டுவந்த மீதியான சபையாரை அன்பிலும் விசுவாசத்திலும் உறுதிப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் எழுதுகிறார் என்பதை நாம் முன்னால் பார்த்தோம் (2^{3}, 2^{12-14}). இங்கு மறுபடியும் யோவான் அந்தச் சபையா

ருடைய சந்தேகங்களை நீங்கும் வகையில் நாம் கிறிஸ்தவ வாழ்க்கையில் நிச்சயத்தை அடைவதெப்படி என்று விளக்குகிறார். அந்த நிச்சயத்திற்கு அவர் இப்பாகத்தில் மூன்று ஆதாரங்களைக் குறிப்பிடுகிறார். அவையாவன: அன்பு (வ. 19), கீழ்ப்படிதல் (வ.22), பரிசுத்த ஆவி (வ.24) என்பனவே.

1 யோ. 3 : 19 இந்த வசனம் இப்பாகத்தை முந்திய பாகத்தோடு இணைக்கிறது. முந்திய வசனங்களில், அன்பு கடவுளின் பிள்ளைகளுக்கு அறிகுறி எனச் சொல்லப்பட்டது. இங்கே யோவான் அந்த அறிகுறி நம்மிடம் இருப்பின் நாம் உண்மைக்குரியவர்கள் என்று நிச்சயித்துக் கொள்ளலாம் எனக் கூறுகிறார் (இதனாலே என்பது அன்பினால் எனப் பொருள்படும்). வேறு சொற்களில் அதே காரியத்தை 14-ஆம் வசனத்தில் கூறினார். ஆகவே நமது நிச்சயத்திற்கு அன்பே முதல் ஆதாரம்.

1 யோ. 3 : 20 ஆயினும் நம்மில் சிலருக்கு இன்னும் மன நிம்மதி இல்லை. நமது மனச்சாட்சி இன்னும் நம்மைக் குற்றப்படுத்துகிறது. அதற்கு யோவான் நமது மனச்சாட்சி எவ்வளவு நம்மைக் குற்றப்படுத்தினும், நாம் இன்னும் மனச்சமாதானமாய் இருக்கலாம் என்கிறார். அவர் நமது மனச் சமாதானத்திற்கு இரண்டு ஆதாரங்களைக் காட்டுகிறார்:

[அ] கடவுள் —அவர் நம் மனச்சாட்சியிலும் பெரியவர், அவருக்குத் தெரியாத காரியம் ஒன்றும் இல்லை. நம் நிலை நமக்குச் சரியாய்த் தெரியாவிடினும், அவர் அதை அறிந்திருக்கிறார். நாம் அவரை உண்மையாய் நேசிக்கிறோம் என்பதும் அவருக்குத் தெரியும். ஆகவே நாம் நமது அரைகுறையான அறிவைச் சார்ந்திராமல், அவரில் நம் நம்பிக்கையை வைத்து அவரிடம் நம்மைத் தைரியமாய் ஒப்புக்கொடுத்தல் வேண்டும்.

[ஆ] நமது அன்பு - 'இதனாலே' என்பதை முந்திய வசனத்திலிருந்து இந்த வசனத்தோடும் எடுத்துக்கொள்ள வேண்டும். நம்மிடம் அன்பு சற்றேனும் இல்லாவிடினும் நாம் கடவுளை அப்படிச் சார்ந்திருக்க முடியும் எனச் சொல்வதற்கில்லை. நம்மால் கூடியதைச் செய்துவிட்டால் தான் நாம் நம்மை அவரிடம் நன்னம்பிக்கையோடே ஒப்புக்கொடுக்கலாம் என்பது யோவானின் கருத்து.

மனச்சமாதானத்தை இழந்து தங்கள் மனச்சாட்சியினுல் குற்றப் படுத்தப்படுகிறவர்கள் பலர் நம் சபைகளிலும் உண்டு. யோவான் இங்குக் கூறுகின்ற ஆறுதல் அவர்களுக்கும் மிகவும் பொருத்தம். முதலில் நம்மால் செய்யக் கூடியதைச் செய்தாக வேண்டும். உண்மையிலே அன்புகூர முயல வேண்டும். அப்படி முயன்றபின், "ஐயோ, அந்தச் சமயத்தில் நான் அன்புகூரத் தவறிவிட்டேனே, என்னிடம் அன்பு இல்லை, நான் எப்படிக் கடவுளின் பிள்ளையாய் இருக்க முடியும்" எனக் கவலைப்பட வேண்டாம். கடவுள் எல்லாவற்றையும் அறிந்தவரும் மிகுந்த இரக்கமுள்ளவருமாய் இருக்கிறார் என நாம் உணர்ந்து, நம் உள்ளத்தில் எழுகிற சந்தேகங்களின் மத்தியில் அவர் அருளிய வாக்குகளில் கவனம் செலுத்தி, அவரே நம்மை நியாயந்தீர்க்கும்படி நம்மை அவர் கரத்தில் ஒப்புவித்தல் வேண்டும். நமது உள்ளத்தைச் சாந்தப்படுத்திக் கொள்ளும்படி யோவான் கூறுகிற முறை இதுவே.

1 யோ. 3:21,22 சிலர் தங்கள் மனச்சாட்சியினுல் குற்றப்படுத்தப்படலாம். யோவான் அதைப்பற்றி 20 ஆம் வசனத்தில் பேசினர். வேறு சிலர் தங்கள் மனச்சாட்சினுல் குற்றப்படுத்தப்படாமல் மனச்சமாதானமுடையவர்களாயிருக்கலாம். அவர்களைப்பற்றி யோவான் இந்த வசனங்களில் பேசுகிறுர் (மூலத்தில், இந்த இரண்டு வசனங்களும் ஒரே வாக்கியமாக அமைந்துள்ளன, இடையில் முற்றுப்

புள்ளி இல்லையென்பது கவனிக்கத்தக்கது). யோவான் நமது மனச்சாட்சி நம்மைக் குற்றப்படுத்தாவிடில், இரண்டு காரியங்கள் விளையும் எனக் கூறுகிறார்.

[அ] கடவுள் முன்னிலையில் நமக்குத் தைரியம் உண்டு-தைரியம் எனும் சொல்லின் பொருளை அறிய, 2^{28} காண்க. இங்கே அது, பிள்ளைகள் தங்கள் தந்தையை அணுகுவதுபோல, கிறிஸ்தவர்கள் பயமின்றித் தங்கள் பரம பிதாவின் முன்னிலையில் வந்து தங்கள் உள்ளத்தைத் திறந்து அவரிடம் தங்கள் தேவைகளைத் தெரிவிக்கும் சுதந்திரத்தைக் குறிக்கிறது.

[ஆ] நாம் வேண்டிக்கொள்ளுபவற்றை அவரிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளுகிறோம் - நம் தேவைகளை அவரிடம் தெரிவிப்பதோடு, அவற்றைப் பெற்றுக் கொள்ளுகிறோம். நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ என்பதனால் ஒருவன் என்னத்தைக் கேட்டாலும் சரி அது கொடுக்கப்படும் எனக் கொள்ளகக் கூடாது. தைரியமாகத் தன் பரம தந்தையை அணுகும் கிறிஸ்தவன் அவர் சித்தப்படியும் (5^{14}), இயேசுவின் நாமத்திலும் (யோ. $14^{13,14}$) விண்ணப்பங்கள் செய்வான். இத்தகைய விண்ணப்பங்களைக் குறித்தே இந்த வாக்குக் கொடுக்கப்பட்டது (யோ. 15^{7} காண்க). இந்த நிபந்தனை இந்த வசனத்திலும் வலியுறுத்தப்படுகிறது. யோவான் 'அவர் கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவர் பார்வையில் பிரியமானவைகளை செய்கிறபடியினால்' இப்படி ஆகும் என்கிறார். அதனால் நாம் தைரியமாய்க் கடவுளை அணுகி நம் விண்ணப்பங்களை அவரிடத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்குக் கீழ்ப்படிதலும் முக்கியமான நிபந்தனை.

எப்படியாயினும் இந்தப்பேறு சுத்த மனச்சாட்சி யுடையவனுக்கே கிடைத்துள்ளது. தனது மனச்சாட்சியி

ளல் குற்றப்படுத்தப்பட்டு பலவிதமான சந்தேகங்களில் ஆழ்ந்து கிடக்கிறவன் அதை அடைய முடியாது.

1 யோ. 3:23 கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப் படிந்து நடப்பவன் கடவுளின் சித்தப்படி விண்ணப்பம் செய்து அதைப் பெற்றுக் கொள்ளுகிறான் என யோவான் முந்திய வசனத்தில் சொன்னார். அதனால் கடவுளின் கட்டளைகள் யாவை என்கிற கேள்வி எழும். அதற்கு யோவான் இங்கு விடை அளிக்கிறார். கடவுளின் முக்கிய கட்டளைகள் இரண்டே. அல்லது திட்டமாய்ச் சொல்ல வேண்டும் ஆயின், அவர் கட்டளை ஒன்றே. ஏனெனில் அந்த ஒரே கட்டளையிலுள்ள இரு அம்சங்களும் பிரிக்க முடியாத் தொடர்பில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன.

[அ] அவர் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நம்பிக்கை வைத்தல் வேண்டும் - இயேசுவின் நாமம் அவரது முழு ஆள் தன்மையையும் குறிக்கிறது (2[12] காண்க). ஆகவே அவர் நாமம் என்பது அவரையே குறிக்கிறது எனலாம். அவரில் நம்பிக்கை வைப்பது அவரைப்பற்றி உண்மையான எண்ணம் கொள்வதும், அவரிடம் தன்னை ஒப்புக் கொடுப்பதும் ஆகும்.

[ஆ] ஒருவரில் ஒருவர் அன்புகூரல் வேண்டும். இந்தக் கட்டளை நற்செய்தியில் இன்றியமையாத ஓர் அம்சம் எனவும் (2[7], 3[11]), கிறிஸ்தவர்கள் அதைக் கடைப்பிடிப்பது எவ்வளவு அவசியம் எனவும் (2[1-11], 3[10,14]) முன்னால் விளக்கப்பட்டது.

இந்த இரண்டும் ஒன்றே. ஏனெனில் நாம் கிறிஸ்து வைப்பற்றி உண்மையான எண்ணம் கொள்ளவில்லை எனில், நம்மிடம் அன்பு வளர முடியாது. சிலுவையில் மாண்ட இயேசுவில் காணப்பட்ட அன்பு கடவுளின் அன்பே என உணரும்போதுதான் அதே தெய்வீக அன்பு

நம் உள்ளத்திலும் பொங்கி எழும்பும். அதே சமயத்தில் அந்த மெய்யுணர்வு நம் வாழ்க்கையில் நற்பலனைத் தராவிடில் அது செத்ததாகும் (யாக். 2^{26}). அந்தக் காரணத்தால் பவுல் அன்பின் மூலமாய்க் கிரியை நடப்பிக்கிற விசுவாசத்தைக் கிறிஸ்தவ நற்செய்தியின் குறிக்கோளாகக் குறிப்பிடுகிறார் (கலா. 5^{6}). சரியான விசுவாசம் சரியான நடக்கைக்கு அடிப்படையாகும். சரியான நடக்கை அவ்விசுவாசத்தைச் சரியானதாக மெய்ப்பிக்கிறது.

1 யோ. 3:24. முந்திய வசனங்களில் யோவான் கடவுளின் கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் தைரியமாகக் கடவுளை அணுகலாம் எனச் சொன்னார். இங்கே கடவுளின் கட்டளைகளைக் கைக்கொள்ளுவதனால் உண்டாகும் இன்னொரு விளைவு சொல்லப்படுகிறது. அதுயாதெனில், அவன் அவரில் நிலைத்திருக்கிறான். அவரும் அவனில் நிலைத்திருக்கிறார் (2^{5},^{6}, பே. 15^{7-10} காண்க) நாம் அவரில் நிலைத்திருக்கிறோம், அவர் நம்மில் நிலைத்திருக்கிறார் என்பது மிக நெருங்கிய ஒரு தொடர்பைக் குறிக்கிறது எனப் பார்த்தோம் (2^{6}). அந்த நெருங்கிய தொடர்புக்குக் கீழ்ப்படிதலே ஆதாரம். ஆயினும் அப்படிக் கடவுளோடு தொடர்பு கொண்டிருக்கிறோம் என்று எவ்வாறு அறிந்துகொள்ளலாம்? அவர் நமக்குத் தந்தருளிய ஆவியினாலேயே (2^{5}, 3^{14}, 3^{19} காண்க).

முன்னாலே யோவான், ஒவ்வொரு கிறிஸ்தவனும் பரிசுத்த ஆவியாகிய அபிஷேகவரத்தைப் பெற்றிருக்கிறான் எனக் கூறினார் (2^{20}). அங்கு பரிசுத்த ஆவியின் முக்கியத் தொழில் பொய்யையும் மெய்யையும் வேறுபடுத்தி அறிகிற அறிவைத் தருவதாகச் சொல்லப்பட்டது (2^{20}). இங்கு யோவான் ஆவி எனும் சொல்லை முதன் முதலில் பயன்படுத்துகிறார். இந்த வசனப்படி அவ

ருடைய தொழில், கடவுள் நம்மில் நிலைத்திருக்கிறார் என்கிற நிச்சயத்தைத் தருவதாகும். ஆவியானவர் எப்படி நம்மை நிச்சயப்படுத்துகிறார் என யோவான் சொல்லவில்லை. அதைச் சொல்லவும் முடியாது, ஏனெனில் அது விவரமாக விளக்கிச் சொல்ல முடியாத ஒரு தனி அனுபவம். நாம் கிறிஸ்தவர்களான பிறகு அவர் நம் உள்ளத்தில் செயலாற்றி நாம் உண்மையில் கடவுளின் பிள்ளைகள் என்னும் உறுதியான அறிவைத் தருகிறார். அப்படியே பவுல் அப்போஸ்தலனும், "புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்; அந்த ஆவியினால் நாம் அப்பா பிதாவே என்று அழைக்கிறோம். நாம் கடவுளின் பிள்ளைகள் என்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியோடுகூடச் சாட்சி கொடுக்கிறார்" என்று அறிவுறுத்துகிறார் (கலா. 4[6] காண்க). யோவானும் 5[10]-இல் பரிசுத்த ஆவியானவர் நம் உள்ளத்தில் தருகிற சாட்சியை மறுபடியும் குறிப்பிடுகிறார்.

1 யோ 4:1-6 மூன்றும் பரிசோதனை:

முந்திய பாகத்தின் இறுதியில் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி வந்த குறிப்பு அந்தப் பாகத்தை இந்தப் பாகத்தோடு இணைக்கிறது. எப்படியெனில் யோவான் இங்கே பரிசுத்த ஆவியானவரைப் பற்றி விவரமாக எழுதப் போகிறார். நாம் கடவுளோடு உறவு கொண்டிருக்கிறோம் என்பதைப் பரிசுத்த ஆவி நம்மில் வாசம் செய்வதால் அறிகிறோம் எனச் சொன்னார் (3[24]). அதனால் இன்னொரு கேள்வி எழுகிறது: பரிசுத்த ஆவி நம்மில் வாசம் செய்கிறார் என்பது எப்படி நமக்குத் தெரியும்? இக் கேள்விக்கு விடை அளிக்க யோவான் இங்கே முற்படுகிறார். இந்த வசனங்களுக்கும் 2[18-28] ஆகிய பகுதிக்கும் தொடர்பு உண்டு. ஏனெனில் இரண்டு பகுதிகளிலும் இயேசு கிறிஸ்துவின் திரு அவதாரத்தின் உண்மை யோவானின் பரிசோதனைக்கு அடிப்படையாயிருக்கிறது.

தன்மையைச் சுட்டிக் காட்டுகின்றன. இயேசு பெருமான் ஒரு வெறும் தெய்வீக தோற்றம் அல்லர். அவர் மனிதத் தன்மையோடு உலகத்தில் பிறந்து, வாழ்ந்து, இறந்து, உயிர்த்தெழுந்து, பரத்திற்கு ஏறினார். அச் சபையில் தோன்றிய கள்ளப் போதகர் இந்த உண்மையை மறுத்தனர். ஆதலால் அவர்களில் வாசம் செய்து அவர்களை ஏவி வந்த ஆவி கடவுளின் ஆவி அன்று, அந்திக் கிறிஸ்துவின் ஆவியே ($2^{18, 19}$ காண்க).

பவுல் நிறுவிய சபைகளில் இதே பிரச்சனை இருந்தது என 1 கொ. 14ஆம் அதிகாரத்திலிருந்து தெரிய வருகிறது. கொரிந்துவில் ஆவியைக் கொண்டு நாவு வரத்தால் பேசுகிறவர்களும் தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்களும் இருந்தனர். ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தை உடையவர்களும் இருந்தனர் (1 கொ.12^{10}). பவுலும் ஆவிகளைச் சோதித்தறியும் ஒரு முறையைச் சபையாருக்குக் கற்றுத் தருகிறார். அதற்கும் யோவான் இங்கே கற்றுத் தருகிற பரிசோதனைக்கும் பெரும் வேறுபாடில்லை. இரண்டும் இயேசுவைப் பற்றிய விசுவாச அறிக்கையில் அமைந்திருக்கின்றன (1 கொ. 12^{3} காண்க).

நம் காலத்திலும் இத்தகைய ஒரு பரிசோதனை தேவையே. நம் சபைகளில் தங்களை ஆவிக்குரியவர்கள் எனச் சொல்லிக் கொள்ளுகிறவர்கள் உண்டு. அவர்களில் செயலாற்றுகிற ஆவி கடவுளின் ஆவிதானா என்று பரிசோதிக்கும்படி, யோவான் அவர்களது ஒழுக்கத்தை மட்டும் அல்ல அவர்களது போதனையையும் ஆராய நம்மை ஏவுகிறார்.

1 யோ. 4:4 யோவான், கடவுளின் ஆவி, அந்திக் கிறிஸ்துவின் ஆவி ஆகிய இருவகை ஆவிகளும் உண்டு

---

4 : 4 இவ்வசனத்தின்பின் முற்றுப் புள்ளியை வைப்பது பொருந்தும்.

என்றும், கள்ளப் போதகர்கள் இயேசுவைப் பற்றித் தவருகப் போதித்து வருகிறதனுல் அந்திக் கிறிஸ்துவின் ஆவியால் ஏவப்படுகிருர்கள் என்பது தெளிவு என்றும் அறிவுறுத்தினுர் (வ. 1-3). அதனைக் கேட்ட சபையார் மனதில் ஒரு சந்தேகம் எழுந்திருந்தது. "கடவுள் நம் சார்பில் இருக்கிருர் எனில், ஏன் அவர்கள் தங்கள் முயற்சி எல்லாவற்றிலும் வெற்றி காண்கின்றனர், நாமோ தோல்வி அடைந்து கொண்டே இருக்கிருேம்? ஏன் எல்லாரும் அவர்களது செய்தியை விரும்பிக் கேட்கின்றனர், நம் செய்தியையோ ஒருவரும் கவனிக்கிறதில்லை?" என்பதே அந்தச் சந்தேகம். அதனைத் தீர்க்க, யோவான் இரண்டு காரியங்களைக் கூறுகிருர்.

அ) கள்ளப் போதகருக்கு அன்று, சபையாருக்கே வெற்றி: கள்ளப் போதகர் முழுச் சபையையும் தங்கள் வசமாக்க விரும்பினர், ஆயினும் முடியவில்லை. சிலரேனும் கிறிஸ்துவை விட்டு விடாமல் உண்மை நற்செய்தியில் உறுதியாய் நிலைத்திருந்தது அவர்களுக்குப் படுதோல்வி, சபையாருக்கு வெற்றி. சபையாரில் வாசம் செய்கிற கடவுள் கள்ளப் போதகரில் வாசம் செய்கிற அந்திக் கிறிஸ்துவின் ஆவியை விட வல்லவர். எனவேதான் சபையார் அந்தப் போராட்டத்தில் வெற்றிபெற முடிந்தது. வெற்றி பெற்றமையால், சபையாரே கடவுளின் பிள்ளைகள் என விளங்கியது. (யோவான் விசுவாசத்தினுல் அடையும் வெற்றியை மறுபடியும் 5^{4-6}-இல் குறிப்பிடுகிருர்: அவ்வசனங்களையும் காண்க).

(ஆ) 1 யோ. 4:5 முதல். மக்கள் கள்ளப் போதனையை விரும்பிக் கேட்பதற்குக் காரணம் என்ன? அப்போதகர்கள் பொது மக்களைத் தங்கள் செய்தியினுல் அதிகமாய்க் கவர்ந்திருந்தனர். அதனுலே தான் சபையார் அவர்களை

வெற்றி அடைந்திருந்தனர் என நினைத்தார்கள். அது உண்மையிலே வெற்றி அன்று எனினும், அவர்கள் எப்படி மக்களை அவ்வளவு கவர முடிந்தது என்பது அறிய வேண்டியதே. அதற்கு விடையாக யோவான் அக்கள்ளப் போதகர்கள் உலகத்திற்குரியவர்கள், ஆதலால் அவர்களுக்கும் உலக மக்களுக்கும் தொடர்பு உண்டு; அவர்களது செய்தி உலக மக்களுக்கு ஏற்றதும், அத்தகையோரைப் பிரியப்படுத்தக் கூடியதுமாம் எனக் கூறுகிறார். கடவுளின் செய்தியோ எல்லாருக்கும் கவர்ச்சியாய் இருக்காது, கடவுளால் உண்டான ஒரு சிறுபான்மையோர் மட்டும் அதனை விரும்பிக் கேட்பர். ஆகவே அவர்களுடைய ஊழியத்தின் பலனைக் கண்டு, அவர்களே கடவுள் பிள்ளைகளும், கடவுளின் ஆவியைப் பெற்றவர்களும் என்று சொல்ல முடியாது.

இப்போதனை நமது நற்செய்திப் பணிக்குப் பொருத்தமான சில உண்மைகளை உணர்த்துகிறது:

அ) வேதம், நம் நற்செய்திப் பணியில் மிகுந்த பலனைக் காண்போம் என்கிற எண்ணத்திற்கு இடம் தருகிறது இல்லை. இயேசு தாமே "ஜீவனுக்குப் போகும் வாசலோ இடுக்கம், வழியும் நெருக்கம்; அதைக் கண்டு கொள்ளுகிறவர்கள் சிலர்" என நம்மை எச்சரித்தார் (மத்.7^{13-14}).

ஆ) அதனால் நம் ஊழியம் பயனற்றுப் போகும் சமயங்களில், "நாம் கடவுளால் உண்டானவர்கள், அவர்கள் உலகத்தார், ஆகையால்தான் நமது செய்தியை ஏற்றுக் கொள்ள வில்லை" என்று சொல்லிக் கொண்டு நாம் நமது முயற்சியை விட்டு விடலாகாது. கேட்கிற மக்களில் யார்யார் கடவுளினால் உண்டானவர்கள் என்று நமக்குத் தெரியாது. ஒருவேளை அவர்கள் இந்த சமயத்தில் இயேசுவைக் கண்டடையாதபடி நமது நிர்விசாரத்

தாக் தடைபட்டால், அது நமது குற்றம்தானே. நாம் மக்களுக்கு இயேசுவின் செய்தியை விளக்கிச் சொல்லவும் அவர்களை இயேசுவினண்டை இழுத்துக் கொண்டு வரவும் நம்மால் ஆனதைச் செய்தாக வேண்டும்.

இ) எனினும், கடைசியில் சிலர் ஏன் இயேசுவை ஏற்றுக் கொள்ளுகிறார்கள் என்றும், வேறு சிலர் ஏன் அவரைப் புறக்கணிக்கிறார்கள் என்றும் நமக்குத் தெரியாது. அது மனித அறிவுக்கு எட்டாத மறைபொருள். கடவுளால் உண்டானவர்கள், பிசாசினால் உண்டானவர்கள் என்றதால், யோவான் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளக் கூடிய தன்மை பிறப்பிலிருந்தே சிலரிடம் உண்டு. வேறு சிலரிடம் இல்லை என்று உணர்த்துகிறார் (யோ. 8^{41-47} காண்க). புதிய ஏற்பாட்டில் வேறு சில இடங்களில், இது கடவுள் சிலரை முன்குறித்துத் தேர்ந்தெடுத்ததைப் பொறுத்தது எனச் சொல்லப்படுகிறது (உ-ம் ரோமர் 8^{29}, 9^{10-18}, எபே. 1^{4-6}, 1 பே. 2^{8}). எப்படியாயினும், இதுவும் கடவுளின் ஆளுகைக்கு அப்பாற்பட்டதன்று. ஆனபடியால் இதிலும் அவரது அன்பின் சித்தம் நிறைவேறுகிறது எனலாம்.

C. 4:7-5:4 கடவுள் அன்பே

இந்தப் பிரிவு யோவானின் நிருபத்தின் உச்சக் கட்டம் எனக் கூறின் அது மிகை ஆகாது. இப் பிரிவின் செம்பொருள் அன்பு என்பதே. யோவான் முன்னாலே அன்பை மெய்க் கிறிஸ்தவனை அறிந்து கொள்ளும் ஒரு பரிசோதனையாகக் குறிப்பிட்டிருக்கிறார் (2^{7-11}, 3^{11-18}). இப்பொழுது அவர், கடவுள் அன்பாகவே இருக்கிறார் என்னும் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு ($4^{8,16}$), அன்பின் தன்மையையும் அது செயலாற்றும் முறையையும் விளக்குகின்றார். அவர் கருத்து மிக ஆழ

மாக இருப்பினும், எல்லாரும் புரிந்து கொள்ளத் தக்க தாக அவர் அதனைத் தெளிவுபடுத்துகிறார். இந்த வசனங்கள் ஒரு இறையியல் விளக்கம்போலிராமல், ஓர் ஆவிக்குரிய தியானம்போலவே தோன்றுகின்றன. அவற்றைப் பின்வருமாறு பிரிக்கலாம்.

1. 4 : 7-12 அன்பின் இலக்கணம்
2. 4 : 13-16a அன்பைப் பற்றிய நிச்சயம்
3. 4 : 16b-19 அன்பின் பரிபூரணம்
4. 4 : 20-5;4 அன்பைப் பரிசோதிக்கும் முறை

1 யோ. 4 : 7-12 அன்பின் இலக்கணம்

யோவான் இங்கே அறிவுறுத்துகின்ற உண்மைகளை நாம் ஐந்து குறிப்புக்களில் சுருங்கச் சொல்லலாம்:

(i) நாம் ஒருவரில் ஒருவர் அன்புகூரல் வேண்டும் (வ. 7,11).

(ii) ஏன்? ஏனெனில், அன்பு தெய்வீக தன்மையுடையது. கடவுள் தாமே அன்பாயிருக்கிறார் எனவும் கூறலாம் (வ. 7,8).

(iii) ஆகவே, அன்புள்ளவன் எவனும் கடவுளால் உண்டானவன், கடவுளை அறிந்தவன் ஆவான்; அன்பற்றவன் கடவுளை அறியாதவன் (வ. 7,8a).

(iv) கடவுளின் அன்பு எத்தகையது? அது இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பியதில் செயல்முறையாக வெளிப்படுத்தப்பட்டது (வ. 9,10).

(v) கிறிஸ்தவச் சகோதரரிடையே இத்தகைய அன்பு நிலைபெறுவதன் மூலம், காணப்படாத கடவுளின் பிரசன்னம் உணரக் கூடியதாகிறது(வ.12).

1யோ. 4:7 **பிரியமானவர்களே** - மூலத்தில் வந்த சொல் அன்பு என்று பொருள் படுகிற 'அகபீ' என்பதோடு தொடர்புடையது. ஆதலால் 'அன்பானவர்களே' என்று மொழிபெயர்ப்பது பொருந்தும். யோவான் சபையார் மேல் வைத்த அன்பை முன்னிட்டு கோரிக்கை செய்யும் போது இச்சொல்லைப் பயன்படுத்துகிறார் (4^{11}ஐயும் காண்க).

கடவுளால் பிறந்தவன் — 2^{29} காண்க.

கடவுளை அறிந்து கொள்கிறவன் — $2^{3,4}$ காண்க.

1 யோ. 4:8 **கடவுள் அன்பாகவே இருக்கிறார்** - இக் கூற்று கடவுள் ஆள்தன்மையுடைவரும் செயலாற்றுகிறவரும் ஆவர் என்று உணர்த்துகிறது. ஏனெனில் அன்பு என்பது, ஓர் ஆள் இன்னோர் ஆளோடு கொள்கிற தொடர்பினைக் குறிக்கிறது. ஆகவே கடவுள் அன்பாயிருக்கிறார் எனில், அவர் ஆள்தன்மையுடையவராக ஏனைய ஆட்களோடு தொடர்பு கொள்ளக் கூடியவராயிருத்தல் வேண்டும். மேலும், அன்பு ஒரு மனநிலை மட்டும் அன்று, அது செயலில் வெளிப்படல் வேண்டியதாகும்(வ. 9 காண்க). ஆகவே கடவுள் அன்பாய் இருக்கிறார் என்றதால் அவர் செயலாற்றுகிறவருமாய் இருக்கிறார் என்றாயிற்று.

இன்னும் இக்கூற்று கடவுள் எப்படி செயலாற்றுகிறார் என்பதையும் உணர்த்துகிறது. கடவுளிடத்தில் பல தன்மைகள் உள்ளன. அவற்றில் ஒன்று அன்பு என்கிற எண்ணம் இதனால் தவிர்க்கப் படுகிறது. அன்பைக் கடவுளிடத்தில் காணப்படுகிற இதர தன்மைகளுக்குச் சமமாகக் கருதக் கூடாது. அன்பு அவரது பிரதானமான தன்மை ஆகும். அது அவர் நடப்பிக்கிற ஒவ்வொரு செயலிலும் கலந்திருக்கிறது. படைத்தல், ஆட்சிசெய்தல், முற்குறித்தல், தேர்ந்தெடுத்தல், நியாயந்தீர்த்தல் இவை

எல்லாம் மீட்பைப் போலக் கடவுளின் அன்பின் செயல்களே ஆகும்.

இந்த உண்மைகளை அக்காலத்துக் கிரேக்க அறிவு நெறிக் கொள்கையினர் மறுத்தனர். இக்காலத்திலும் இந்தியாவில் வேதாந்திகள் மாத்திரம் அல்ல, வேறு பலர் அவற்றை மறுப்பர். உதாரணமாகச் சிலர் "அன்பே சிவம்" என்பர். அது யோவான் கூற்றுக்கு ஒத்ததாகத் தோன்றுகிறது. ஆயினும் உண்மையிலே பெரிய வேறுபாடு உண்டு. எப்படியெனில், இது கடவுளிடத்தில் காணப்படுகிற தன்மைகளை விளக்குகிற ஒரு கூற்றன்று. ஆள்தன்மையுடைய கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும் இதிலே தோன்றவில்லை. அதற்குப் பதிலாக, ஓர் ஆளில் காணப்படக் கூடிய தன்மைகளில் ஒன்றாகிய அன்பு 'கடவுள்' எனப்படுகிறது. அதாவது, அன்பு எல்லாவற்றிலேயும் முக்கியமானது, சிறந்தது, நாட வேண்டியது. யோவானின் கூற்றில் கடவுளைப் பற்றிய ஒரு நற்செய்தி உண்டு. இதிலோ, "அன்பை நாடுங்கள்" எனும் ஒரு சட்டமேயன்றி வேறில்லை.

1 யோ. 4:9 இந்த வசனம் 3[16], யோ. 3[16] ஆகிய வசனங்களுக்கு ஒத்தது. அது கடவுளின் அன்பு எப்படிச் செயலாற்றுகிறது என்பதை உணர்த்துகிறது. கடவுள் தமக்கு எல்லாவற்றிலேயும் மிக அருமையான பொருளைக் கொடுத்தார். அவர் அப்படிக் கொடுத்ததின் நோக்கம், நாம் அவரால் பிழைக்க வேண்டும் என்பதே. அதாவது நாம் அவரால் மெய்வாழ்வை அடைய வேண்டும் என்பதே (1[1,2] காண்க).

1 யோ. 4:10 **கிருபாதாரப் பலியாக... அனுப்பினதனாலேயே** - கடவுள் தம்முடைய ஒரே குமாரனை ஒரு அரசனாகவோ, ஒரு செல்வராகவோ உலகத்தில் அனுப்பவில்லை,

அவர் அவரைச் சிலுவையில் மாண்டு, நம் பாவங்களைப் போக்கும் ஒரு பலியாக அனுப்பினார் (2^2 காண்க). இதுவே அன்பு. இதனைப் பார்க்கிலும் வேறெதுவும் அன்பு என்னப் படுவதற்குத் தகுந்ததன்று. மனிதர்கள் அழகாக அன்பைப் பற்றிப் பேசலாம். ஆயினும் இந்த வெளிப்பாட்டினாலே யன்றி உண்மையான அன்பு இன்னதென்று உணர்ந்து கொள்ள முடியாது. இதிலே அன்பை பற்றிய கிறிஸ்தவப் போதனையிலுள்ள ஒரு சிறந்த தனிக் கருத்து விளங்கு கிறது. கிறிஸ்தவ நற்செய்தியின்படி அன்பு வெறும் ஒரு கோட்பாடோ, குறிக்கோளோ அன்று. அது கடவுள் தாமே உலக வரலாற்றின் அரங்கில் செயல்முறையாக வெளிப் படுத்திய ஒன்று. அந்தச் செயலே அன்பின் அளவை யும், ஆழத்தையும் நமக்குக் காண்பித்ததோடு, நாம் ஒரு வரில் ஒருவர் அன்பு கூர வேண்டிய கடமைக்கு ஆதாரமா யிருக்கிறது (வ. 11).

1 யோ. 4 : 11. வ. 8-11 இல் சொல்லப்பட்ட கருத்துக் களின் அடிப்படையில் யோவான் மறுபடியும் மிக உருக்க மாகத் தம் கோரிக்கை செய்கிறார்.

1 யோ. 4 : 12 **கடவுளை ஒருவரும் ஒருபோதும் கண்ட தில்லை** - யோவான் தம் நிருபத்திலும் (1^{1-2}), தம் நற் செய்தி நூலிலும் (1^{18}, 14^9) கிறிஸ்துவைக் கண்டவர்கள் கடவுளைக் கண்டிருக்கிறார்கள் என வற்புறுத்திக் கூறுகிறார். அது உண்மைதான். ஆயினும் அவ்வாறேயன்றி கடவுளை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை என்பது வேதத்தின் போதனை. அவரை நேரடியாகத் தரிசிப்பது மறுமையிலே மாத்திரம் கிடைக்கக் கூடிய ஒரு மேன்மை. இம்மையிலே நாம் அவருடைய சத்தத்தைக் கேட்பதனால் அவரோடு உறவாடலாம், அல்லது ஒரு சில வசனங்களில் (உ-ம்) 1 கொ. 13^{12}, 2 கொ. 3^{18}) செல்லப்பட்டதுபோல அவரை நிழலாட்டமாய், அதாவது ஆவிக்குரிய முறையில், பார்க்க லாம்.

கடவுளை நேரடியாகக் காண வேண்டிய ஆசை இயற்கையாக மனிதன் உள்ளத்தில் எழக்கூடியதாகும். அதனை நிறைவேற்றுவதற்கு அவன் உண்டாக்கிக் கொண்ட ஒரு வழி விக்கிரகவணக்கம். அது தவறான வழி ஆயினும், அதனைக் கடைப்பிடிப்பவர் கடவுளைத் தரிசித்துவிட்டோம் என்று எண்ணி மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றனர். அந்த ஆசையை நிறைவேற்றுவதற்கு யோவான் இங்கு வேறொரு வழியைச் சுட்டிக் காட்டுகிறார். யாதெனில், கிறிஸ்தவச் சகோதரர் ஒருவரில் ஒருவர் அன்பு வைத்து ஐக்கியத்தில் நிலைத்திருக்கும்போது, அவர்கள் மத்தியில் கடவுளின் பிரசன்னத்தை உணர்ந்து கொள்ளலாம். அது கடவுளின் முகத்தைத் தரிசிப்பதன்று எனினும், அவ்வாறு நாம் நம் சகோதரர்மூலம் கடவுளின் அன்பை நிறைவாக ருசித்து அனுபவிக்கலாம், நாம் கடவுளிடம் பெற்ற அன்பை அவர்களுக்கு எடுத்துக் காட்டலாம். கடவுளின் தரிசனத்திற்காகவும் அன்புக்காகவும் தவிக்கிற உள்ளம் அத்தகைய ஐக்கியத்தில் திருப்தி அடையும்.

1 யோ. 4:13-16a. 2. அன்பைப் பற்றிய நிச்சயம்

யோவான் கடவுள் அன்பாயிருக்கிறார் எனவும், நாம் ஒருவரில் ஒருவர் அன்பு கூருகிறோமேயானால் கடவுள் நம்மில் நிலைத்திருக்கிறார் எனவும் கூறினார் ($4^{8, 12}$). "அது எப்படித் தெரியும்? அதற்கு அத்தாட்சி என்ன?" என்ற சந்தேகங்கள் சபையார் மனதில் எழுந்திருக்கக் கூடும். ஆகவே யோவான் மறுபடியும் அவாகள் சந்தேகங்களைத் தீர்க்கவும் அவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தவும் முற்படுகிறார்.

1 யோ. 4:13 (i) அந்த அன்பின் ஐக்கியத்திற்கு முதல் அத்தாட்சி, கடவுள் நமக்குத் தந்தருளிய பரிசுத்த ஆவி. அவர் நம் உள்ளத்தில் தங்கிச் சாட்சி இடுகிறதனால்

நாம் கடவுளின் அன்பில் நிலைத்திருக்கிறோம் என்று நிச்சய மாக அறிந்து கொள்ளலாம் (3^{24} காண்க).

1 யோ. 4:14 முதல் (ii) இரண்டாம் அத்தாட்சி, இயேசு கிறிஸ்துவின் திரு அவதாரம். மேற்சொன்ன முதலாம் அத்தாட்சி தனிக் கிறிஸ்தவன் தன் உள்ளத் தில் அடையும் ஒரு ஆவிக்குரிய அனுபவம். இரண்டாம் அத்தாட்சி உலக வரலாற்றில் நடந்த ஒரு நிகழ்ச்சி. அது நடந்ததற்கு அப்போஸ்தலர் (நாங்கள்) கண்ணாரக் கண்ட சாட்சிகள் (1^{1-3} காண்க). ஒருவன் அந்தச் சாட் சியை ஏற்றுக் கொண்டு, தான் அப்படி ஏற்றுக் கொண்ட தாக வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் போது, அவன் கடவுளோடு அந்த அன்பின் உறவில் சேருகிறான்.

பிதாவானவர் குமாரனை உலகரட்சகராக அனுப்பியிருக் கிறார்— இதுவே அப்போஸ்தலரது சாட்சியின் பொருள். இதன்படி கிறிஸ்து உலகத்தின் இரட்சகர் என்று அழைக் கப்படுகிறார். அந்தச் சிறப்புப் பெயரின் கருத்தினை நாம் ஆராய்வோம்.

அ) கிரேக்கர்கள் தங்கள் தெய்வங்களையும், ரோமர் கள் தங்கள் பேரரசர்களையும் இரட்சகர் என அழைத்து வந்தனர்.

ஆ) பழைய ஏற்பாட்டில், குறிப்பாக ஏசாயா அதி. 40-55 ஆகிய பாகத்தில், இரட்சகர் என்பது யாவே எனும் இஸ்ரவேலருடைய கடவுளுக்குச் சூட்டப்பட்ட பெயர் (உ-ம். எசா. 43^{3}).

(tii) புதிய ஏற்பாட்டில், அது பிதாவாகிய கடவுளுக் கும், இயேசுகிறிஸ்துவுக்கும் சூட்டப்படுகிறது (உ-ம். லூக்கா 2^{11}. யோ. 4^{42}, பிலிப்3^{20} 2 தீமோ. 1^{10}).

(iv) ஆகவே அது யூதருக்கும் கிரேக்கருக்கும் பொருள் வாய்ந்த ஒரு பெயராய் இருந்தது. யூதருக்கு அது, யாவே

வாக்களித்த மீட்பு இயேசுவில் நிறைவேறியிருக்கிறது என்றும், இயேசுவே மனிதக் குலத்தை பாவத்கினின்றும் மரணத்தினின்றும் விடுவிப்பவர் என்றும் உணர்த்தியது. கிரேக்கருக்கு அது, அவர்கள் தெய்வங்களோ அரசர்களோ அல்ல'. இயேசுவே உண்மையான ஈடேற்றம் தரக்கூடியவர் ஆவர் என்று உணர்த்தியது.

1 யோ. 4:16a. இந்த வாக்கியம் இந்தச் சிறு பகுதிக்கு முடிவாக அமைகிறது. மேற்கண்ட இரு சான்றுகளின் அடிப்படையில் நாம் (அதாவது, கிறிஸ்தவர் அனைவரும்) கடவுளின் அன்பையும் அதன் மூலம் நாம் கடவுளோடு கொண்டுள்ள உறவையும் நிச்சயமாக அறிந்திருக்கிறோம்.

1 யோ. 4:16b-19. 3 அன்பின் பரிபூரணம்

அன்பின் தன்மையையும் அதற்குரிய அத்தாட்சிகளையும் விளக்கிய யோவான் இங்கே, பூரண வளர்ச்சி அடைந்த அன்பு ஒரு மனிதனின் வாழ்க்கையிலே எவ்வாறு காணப்படும் என்று குறிப்பிடுகிறார்.

1 யோ. 4:16b. யோவான் முந்திய வசனங்களில் சொன்ன கருத்துக்களைத் தொகுத்துக் கூறுகிறார். அன்பே கடவுளின் சிறந்த தன்மை ஆதலின், அன்பில் நிலைத்திருக்கிறவன் கடவுளில் நிலைத்திருக்கிறான் (4^8 காண்க)

முன்னால் சொல்லப்பட்ட தெய்வீக அன்பு ஒருவன் கடவுளோடு உறவு கொண்டதை மெய்ப்பிக்கும் சான்றும். அன்பில் நிலைத்திருப்பது, கடவுளின் அன்பைத் தன் உயிருக்கு ஆதாரமாகவும் பலமாகவும் கொள்வதோடு, மற்ற எல்லா உயிர்கள் மேலும் அன்பு கொள்வதே ஆகும். (கடவுளின் அன்பில் நிலைத்திருப்பதெப்படி என்றறிய, யோ. 15^{10} காண்க).

1 யோ. 4:17 இந்த வசனத்தின் பொருளை இவ்வாறு விளக்கலாம். "நமது அன்பு பூரணப்பட்ட அன்பாயிருந்தால், நாம் நியாயத்தீர்ப்பு நாளில் கடவுள்முன் தைரியத்தோடு நிற்கக் கூடியதாகும்; எப்படி அவ்வளவு தைரியமாயிருக்க முடியும் எனில், இயேசு கிறிஸ்து எவ்வாறு தம் பிதாவுடன் அன்பின் உறவில் நிலைத்திருக்கிறாரோ, அவ்வாறே நாமும் இந்த உலகத்திலேயே அவரது உறவில் நிலைத்திருக்கிறோம்." இதன்படி யோவான் பூரணப்பட்ட அன்பு எத்தகையது என்று விளக்குகிறார். நிறைவான அன்பு உடையவர்கள் கடவுள்முன் பயமில்லாமல் நிற்கக் கூடும். ஏனெனில், கடவுளின் மைந்தனாகிய இயேசு கிறிஸ்து தம் தந்தையோடு கொண்டுள்ள நெருங்கிய தொடர்பை அவர்களும் இந்த உலக வாழ்க்கையின் மத்தியிலேயே அடைந்திருப்பர். இயேசு கிறிஸ்து தம் தந்தைக்கு முன் அஞ்சுவாரோ? அப்படியாயின், கடவுளின் அன்பை அறிந்த அடியார்களும் அஞ்சுவது அவசியம் இல்லை. இதுவே அன்பில் பூரணப்பட்டவனது நிலை.

---

4 : 17 நாம் மேலே தந்த விளக்கப்படி, இவ்வசனத்தின் பொருள் "நாமும் கிறிஸ்துவைப் போல கடவுளோடு நெருங்கிய தொடர்பு கொண்டமையால், நாம் நியாயத் தீர்ப்பு நாளில் தைரியமுள்ளவர்களாய் இருப்போம்; தைரியமுள்ள அந்த நிலையிலேயே நமது அன்பு பூரணம் அடைகிறது" என்பதாகும். வேறு சிலர் இவ்வாறு விளக்கம் தருகின்றனர்: "நாம் கடவுளோடு நிலைத்திருக்கிறோம், அவர் நம்மில் நிலைத்திருக்கிறார் (வ. 16b); அந்தத் தொடர்பில் நமது அன்பு பூரணம் அடைகிறது: அதன் விளைவாக நாம் நியாயந்தீர்ப்பு நாளில் தைரியமுள்ளவர்களாயிருப்போம்; ஏனெனில் நாம் கிறிஸ்துவைப்போல் இந்த உலகத்திலே கடவுளோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளோம்". அடிப்படையான கேள்வி, நம் அன்பு எதில் பூரணம் அடைகிறது, நாம்நியாயத்

அவர் இருக்கிற பிரகாரமாக — அவர் என்பது கிறிஸ்துவைக் குறிக்கிறது. அப்பொழுது அவர் எப்படி இருக்கிறார்? அவர் எப்போதும் கடவுளோடு பிரிக்க முடியாத ஐக்கியத்தில் இருக்கிறார். நாமும் கூட அந்த ஐக்கியத்தில் இருக்கிறோம். (4^{16b} காண்க). அந்த ஐக்கிய உறவே நாம் கடவுள் முன் கொண்டுள்ள தைரியத்திற்கு அடிப்படை.

தைரியம் கொள்ளத் தக்கதாக — "நியாயத்தீர்ப்பு நாளில் நமக்குத் தைரியம் உண்டு. அதிலேயே நமது அன்பு பூரணபட்டிருக்கிறது" என்று திருப்பினால் இவ் வாக்கியத்தின் பொருள் சரியாய் விளங்கும். தைரியம் என்பதைப் பற்றி, 2^{28} காண்க.

நியாயத்தீர்ப்பு நாளில் — யோவான், கிறிஸ்துவின் மீட்புச் செயலினால் உண்டான எல்லா நன்மைகளையும் நாம் இம்மையிலே பெற்று அனுபவிக்கிறோம் என்பதை வற்புறுத்திக் கூறி வருகிற போதிலும், கடவுளின் மீட்புத் திட்டத்தில் இனி நடைபெற வேண்டிய அம்சங்களும் உண்டு என மறக்கவில்லை. அத்தகைய அம்சங்களில் ஒன்று இயேசுவின் இரண்டாம் வருகை (2^{28} காண்க). இன்னொன்று இங்குக் குறிக்கப்படுகிற இறுதி நியாயத்தீர்ப்பு (யோ. 5^{28-29} காண்க).

1 யோ. 4:18. முந்திய வசனத்தின் கருத்தை விளக்குகிறார் யோவான். நாம் பூரண அன்பின் உறவில் கடவுளோடு சேர்ந்திருந்தால், அவருக்கு பயப்படமாட்டோம்

தீர்ப்பு நாளில் தைரியமாயிருப்பதிலா, நாம் கடவுளிலும் கடவுள் நம்மிலும் நிலைத்திருப்பதிலா என்பதே. பொருளில் பெரும் வேறுபாடில்லை. இரண்டும் அன்பின் பூரண நிலையோடு தொடர்புடையனவே. எனினும் முதலில் கொடுத்த விளக்கம் யோவானின் பொதுவான போக்குக்குப் பொருத்தமாகக் காணப்படுகிறது.

என்றார். அது எவ்வாறெனில், அன்பிலே பயத்திற்கு இடம் இல்லை. பயம் தண்டனையை எதிர்பார்க்கிறதனால் ஏற்படும். ஆகவே அதில் வேதனை உண்டு. அன்பு பெற்றவனோ தன்னில் அன்பு கூருகிறவர் தன்னைத் தண்டிப்பார் என்று எதிர்பார்க்கிறதில்லை. அவர் அப்படித் தண்டிக்க மாட்டார் என்று அவனுக்கு நன்கு தெரியும். ஆகையால் அவனில் அன்பு கூருகிறவரைக் குறித்து அவனுக்குப் பயம் இல்லை. மரியாதை இருக்கலாம், பயமோ இல்லை. அது போல, நாம் கடவுளின் நிறைவான அன்பை பெற்று அவரில் நிலைத்திருக்கும் போது, தண்டனையை எதிர் பார்க்கிற பயம் முற்றிலும் நீங்கி விடும். நியாயத்தீர்ப்பிலும் நாம் அஞ்சாமல் அவர்முன் நிற்போம்.

1 யோ. 4:19 இஃதெல்லாம் சரி, ஆயினும் இப்படிப் பட்ட நிலையை அடைந்திருக்கிறேன் என்று யார் சொல்லத் துணிவர்? அந்தக் கேள்விக்கு யோவான், "நாம் அடையாமலிருக்கலாம், எனினும் கவலைப்பட வேண்டாம். அன்பு நாம் நமக்குள் உண்டாக்கிக்கொள்ள வேண்டிய ஒன்றன்று, அது கடவுளின் அன்பினால் நம்மில் உண்டாக் கப்பட்டது; அது நமது சுய முயற்சியின் பலன் அன்று, அவரது அருளீவே" என மறுமொழி அளிக்கிறார். இங்கே நாம் எப்படி அன்புகூர முடியும் என்கிற கேள்விக்குத் தெளிவான ஒரு விடை கொடுக்கப்படுகிறது. கடவுள் முந்திக்கொண்டு நம்மீது அன்பு கொள்கிறார். அவரது முந்திக் கொள்ளும் அன்பை நாம் உணர்ந்து கொண்டு நமது வாழ்க்கையில் அனுபவிக்கும்போதுதான் நாம் அவர் மீதும் நம் பிறர் மீதும் அன்பு கொள்ள முடியும்.

இந்த உண்மை மனோசாஸ்திரிகளாலும் ஒப்புக் கொள்ளப்படும். அவர்கள் அதனைத் தாய்க்கும் பிள்ளைக் கும் இடையுள்ள தொடர்பைக் கொண்டு விளக்குவர். ஒரு பிள்ளைக்கு முக்கியமாகத் தேவைப்படுகிறது

அதன் தாயின் அன்பு. அவளது அன்பு மட்டும் பிள்ளையின் கவலையையும் பயத்தையும் இருதயத் தாகத்தையும் தீர்த்து அதற்கு மனநிறைவைத் தர முடியும். அப்படி மன நிறைவைப் பெற்றுக் கொண்டால்தான் அந்தப் பிள்ளை தன்னையும் தன் சொந்தத் தேவைகளையும மறந்து, அன்புகூரக் கற்றுக் கொள்ள முடியும். அதுபோல நாம் நம் தேவைகள் எல்லாம் கடவுளின் அன்பினுல் நிறை வாக்கப்படும் என்று உணர்ந்து கொண்டால்தான் பிறர் தேவைகளை நிறைவாக்க நம்மைச் செலவிடும்படிக்கு விடுதலை பெற முடியும். ஏனெனில் நம்மைப் பற்றிய கவலைகளும் பயமுமே நாம் அன்பில் வளராதபடி தடை செய்வனவாகும்.

இந்த வசனத்தை 4[10] உடன் ஒப்பிடலாம். அதில் கடவுளின் அன்பு மெய்யன்பை நமக்கு வெளிப்படுத்துகிறது, அதனுலேயன்றி அன்பு இன்னதென்று நமக்குத் தெரியாது எனப் பார்த்தோம். இங்கே, கடவுளின் அன்பு நம்மிடமும் அன்பை உண்டாக்குகிறது, அதனுலேயன்றி நாம் அன்புகூர முடியாது எனப் பார்க்கிறோம். கிறிஸ்துவில் செயலாற்றிய கடவுளின் அன்பு அன்பின் தன்மையை நமக்கு வெளிப்படுத்தியதோடு, அன்புகூரும் சக்தியையும் நமக்குத் தருகிறது.

4:19 நாமும் அன்புகூருகிறோம். இதனை 'அன்புகூருவோமாக' என்றும் திருப்பலாம். ஆயினும் யோவான் இங்கு கிறிஸ்தவர்களது கடமையைப்பற்றி அல்ல, அவர்களது நிலையைப்பற்றிப் பேசுகிறபடியால நிகழ்கால வினைமுற்றே பொருந்தும் என்க. 'அவரில்' என்பதைச் சேர்த்து வாசிப்பது சில பிரதிகளின் பாடம். அந்தப் பாடம் பழைய தமிழ் மொழிப் பெயர்ப்பில் காணப்படுகிறது. எனினும் கடவுள் முந்தி நம்மில் அன்புகூர்ந்தபடியால், நாம் அவரில் மாத்திரம் அல்ல, பொதுப்பட எல்லாரிலும் அன்புகூருகிறோம், என்பது யோவானின் கருத்து ஆதலால் 'அவரில்' என்பதை விட்டுவிடுவது நல்லது.

இத்துடன் அன்பைப் பற்றிய யோவானின் போதனை உச்சநிலையை அடைகிறது. நாம் இதனை ஏனையோர் கருத்துக்களுடன் ஒப்பிடும்போது இதன் சிறப்பினை அறியலாம். அன்புடைமை என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் பல உயரிய கருத்துக்களை வெளியிடுகிறார் என்பதை நாம் ஏற்கனவே ஆங்காங்குப் பார்த்திருக்கிறோம். உதாரணமாக,

அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

என்பதால் அவர் அன்பு தன்னைப் பிறருக்காக உயிர்த்தியாகம் செய்யும் தன்மையுடையது என்று அழகாக விளக்குகிறார் (3[16] காண்க). மேலும்,

என்பிலதனை வெயில்போலக் காயுமே
அன்பிலதனை அறம்

என்பதில் அவர் அறக்கடவுள்முன் அன்பற்றவன் நிற்க முடியாது என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார் (4[8] காண்க). இஃதெல்லாம் மிக்க உண்மை. எனினும் அவர், அந்த அறக்கடவுள் திரு அவதாரம் எடுத்து 'அன்புடையார் பிறர்க்கு என்புமுரியர்' என்பதில் தம் உலக வாழ்க்கையால் புத்தம்புதிய பொருளைப் புகட்டினார் என்றும், அதனால் அன்பின் சிகரமாகிய அவர் அன்புதெரியாதிருந்த நம் உள்ளத்திலும் அன்பினைப் பிறப்பிக்கிறார் என்றும் கூறவில்லை. அவ்வுண்மைகளை வெளிப்படுத்தியது கிறிஸ்துவின் நற்செய்தியே.

1 யோ. 4 : 20-5 : 4. 4 அன்பைப் பரிசோதிக்கும் முறை.

யோவான் அன்பின் தன்மையையும் அதன் நிறைவையும் விளக்கியுள்ளார். இப்பொழுது அவர் தம் விளக்கத்தைச் சபையில் எழுந்த பிரச்சினையோடு, தொடர்புப்

படுத்துகிருர். அங்கு 'நாங்களே கடவுளில் அன்பு கொள்வோர்' எனச் சொல்லிக் கொண்ட ஒரு கூட்டத்தினர் இருந்தனர். அவர்களே சபையில் குழப்பத்தை உண்டாக்கிய கள்ளப் போதகர்கள். அவர்களது கூற்றுப்பொய் என வெளிப்படுத்துவதற்கு யோவான் இங்கே ஒரு பரிசோதனையைச் சபையாருக்குக் கற்றுத்தருகிருர். அது அவர் முன்னுல் கற்றுத் தந்த பரிசோதனைகளுக்கு ஒப்பானது. எப்படியெனில், இதுவும் அவ்வாறு சொல்லிக் கொள்வோரது உண்மை நிலையை அறியும்படி அவர்களது ஒழுக்கத்தை ஆராய நம்மை ஏவுகிறது (2⁴,⁹,3¹⁰ காண்க). நமது ஆவிக்குறிய நிலை நம் செயல்களில் காணப்படும் என்பது யோவானின் கொள்கை. இந்தப் பரிசோதனையைச் சொல்லித் தந்தபிறகு யோவான் அது நம்பத்தக்கது என்று மெய்ப்பிக்கும் சில ஆதாரங்களைக் காட்டுகின்ருர்.

1 யோ. 4 : 20 தான் கடவுளில் அன்புகொள்கிருன் என்று சொல்லுகிறவன் தன் சகோதரனில் அன்பு கொள்கிருனு என்பது யோவானின் பரிசோதனை. இல்லையெனில் அவன் கடவுளிலும் அன்பு கொள்ளவில்லை என்பதும், அவன் பொய்யன் என்பதும் தெளிவு. கடவுளில் அன்பு கூருகிறேன் - இதுவும் சபையில் தோன்றிய கள்ளப் போதகர்கள் தங்களைக் குறித்து பெருமையாகச் சொல்லி வந்த ஒரு கூற்று என்க ($1^{6}, ^{8}, ^{10}, 2^{4}, 6, ^{9}$ முதலியன காண்க).

1 யோ. 4 : 20ᵇ (i) யோவானின் பரிசோதனைக்கு முதலாம் ஆதாரம்: இப் பரிசோதனை அன்பின் தன்மையிலே அமைந்துள்ளது. எப்படியெனில், அன்பு ஓர் எல்லைக்குள் அடைக்கப்பட முடியாது, அது அனைத்துலகத்தன்மையது. ஒருவன் சிலர்மேல் அன்பு கொண்டு மற்றவர்களைப் பகைப்பின் அவன் அந்த சிலர்மேல் கொண்ட அன்பு மெய்யன்பாயிருக்காது. எனவே கடவுளில் உண்மையாய் அன்பு கொள்பவன், தன் சகோதரரிலும் அன்பு கொள்வான் என்பது

உறுதி. மேலும், ஒருபோதும் கண்டிராத ஒருவன் மேல் அன்பு கொள்வதைவிட தான் கண்ட ஒருவன் மேல் அன்பு கொள்வது எளிது. ஆகவே அந்த எளிதான காரியத்தைச் செய்யாதவன் அதனைவிடக் கடினமான காரியத்தைச் செய்திருப்பான் என்று ஒப்புக்கொள்ள முடியாது.

அன்பு கூர முடியாது - இது தர்க்கமுறையின் அடிப் படையில் முடியாத ஒரு நிலையைக் குறிக்கிறது. அதாவது, அப்படிப்பட்டவன் கடவுளின் அன்பு கூருகிறான் என்பது ஒப்புக் கொள்ளக் கூடியதன்று.

1 யோ. 4:21 (iii) இரண்டாம் ஆதாரம்: அவர் கொடுத்த கட்டளை. இங்கே குறிக்கப்பட்ட கட்டளை அநேக மாய் இயேசு மார்க்கு 12²⁹⁻³¹ இல் அருளிய நியாயப் பிரமாணத்தின் சுருக்கம் ஆகும். அப்படிக் கிறிஸ்து கடவுள் மேல் வைத்த அன்பையும் பிறர்மேல் வைத்த அன்பையும் ஒன்றாக இணைத்து விதித்திருக்க, தன் சகோ தரனில் அன்பு வைக்காதவன் 'கடவுளில் அன்பு கொள்கி றேன்' என எப்படிச் சொல்ல முடியும்? இன்னும் சொல்லப் போனால், இயேசு கிறிஸ்து தம்மை எளியவரோடு ஒன்று படுத்திக் கூறியதால் (மத். 25⁴⁰), பிறரில் அன்பு கொள் வதே கடவுளில் அன்பு கொள்வதாகும் எனலாம். இவ்வி ரண்டுக்கும் இத்துணை நெருங்கிய தொடர்பு இருப்பதால், யோவான் முந்திய வசனத்தில் தந்த பரிசோதனை சாலப் பொருந்தும் என விளங்குகிறது.

4:20 இங்கும் கிரேக்க கையெழுத்துப் பிரதிகளில் வேறுபட்ட பாடங்கள் இருக்கின்றன. சிலவற்றில் 'அன்பு கூர முடியாது' என்கிற பாடமும் வேறு சிலவற்றில் எப்படி அன்புகூருவான்' என்ற பாடமும் உண்டு. 'அன்பு கூரமுடி யாது' என்பது மிகப் பழையதும் நம்பிக்கைக்குரியதுமான பிரதிகளின் பாடம். ஆதலால் அதனைப் பின் பின்பற்றுவது மேல்.

அவரிடத்திலிருந்து பெற்றிருக்கிறோம் — அந்த கட்டளையை நேரடியாக அருளியவர் கிறிஸ்து எனினும், இந்த இடத்தில் 'அவர்' என்பது அநேகமாகக் கடவுளைக் குறிக்கிறது. கிறிஸ்துவின் மூலம் கடவுள் அதனை அருளினார் எனக் கொள்க (2^{29} காண்க).

1 யோ. 5 : 1 முதல் (iii) மூன்றும் ஆதாரம்: இயற்கையின் பிரமாணம். உலக வழக்கப்படி ஒருவன் ஓர் ஆளிடம் நட்பாயிருக்கும்போது, அவன் அந்த ஆளின் பிள்ளைகளின் மேலும் நட்பு கொள்வான். அது போலக் கிறிஸ்தவர்கள் அனைவரும் கடவுளின் பிள்ளைகள், கடவுள் அவர்களுக்குத் தந்தை. அப்படியாயின் கடவுள்மேல் அன்பு கொள்பவன் இயற்கையாகவே கடவுளின் பிள்ளைகள் மேலும் அன்பு கொள்வான். அப்படி அவன் அன்பு கொள்ளவில்லை எனில், அவன் கடவுளிலும் அன்பு கொள்ளவில்லை என்று தெளிவாயிற்று. இதனாலும் 4^{20} இல் தந்த பரிசோதனை மெய்ப்பிக்கப்படுகிறது.

1 யோ. 5 : 1. 4^{20} இல் வந்த 'சகோதரன்' எனும் சொல், கடவுளின் குடும்பத்தைப் பற்றிய இக்கருத்திற்கு நம்மை வழிநடத்துகிறது. இந்த வசனத்தை 2^{29},3^{10} ஆகிய வசனங்களுடன் ஒப்பிடும்போது கடவுளால் பிறந்தவன் யார் என்று தெளிவாய் அறியலாம். கடவுளின் பிள்ளை நேர்மை செய்பவனும், தன் சகோதரனில் அன்புகூருபவனும் இயேசுவே கிறிஸ்து என நம்புவானும் ஆவான்.

இயேசுவே கிறிஸ்து என்று நம்புகிற எவனும் - கிறிஸ்தவ விசுவாசத்தின் பொருள் சுருக்கமாகக் கூறப்படுகிறது (2^{22} காண்க).

1 யோ. 5 : 2. இந்த வசனம் முந்திய வசனத்தின் தொடர்ச்சி எனலாம். கிரேக்கத்தில் "இதனால்" என்பது முதலில் நிற்கிறது. அது முந்திய வசனத்தைக் குறிக்கிறது

என்று கொள்வது பொருந்தும். அப்போது இவ்வசனத்தின் பொருளாவது, "தந்தையின்மேல் அன்பு கொள்பவன் அவர் பிள்ளைகளின் மேலும் அன்பு கொள்வான் என்பதனாலேயே, நாம் கடவுளின் மேல் அன்பு கொண்டு அவர் கட்டளைகளைக் கடைப்பிடிக்கும்போது கடவுளின் பிள்ளைகளின் மேல் அன்பு கொள்வோம் என்று அறிந்து கொள்ளுகிறோம்" என்பதாம். அதாவது, இவ்வசனம், முந்திய வசனத்தில் சொல்லப்பட்ட இயற்கைப் பிரமாணத்தை விளக்கப்படுகிற விஷயத்துடன் தொடர்புப்படுத்தி யோவானின் வாதத்தை நிறைவாக்குகிறது.

1 யோ. 5:3 இந்த வசனம், "நாம் கடவுளில் அன்பு கூர்ந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது என்கிற கூற்றிற்கு ஒரு விளக்கம். அந்தக் கூற்றில் யோவான் கடவுளில் அன்புகூருவதை அவர் கற்பனைகளைக் கைக்கொள்வதுடன் சேர்த்துச் சொன்னார். இங்கு அவர் அதற்கு ஆதாரமாக, கடவுளின் கட்டளைகளைக் கைக்கொள்வதும் அவரில் அன்புகூருவதும் ஒன்றுதான் எனக் கூறுகிறார்.

அவருடைய கற்பனைகள் பாரமானவை அல்ல — கடவுளின் கட்டளைகள் என்பதைக் குறிக்கும்போது, வாசிப்போரது மனதில் ஒரு தளர்ச்சி ஏற்படலாம். அவர்கள், "ஐயோ, கடவுளின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பது அவ

5:2 வேறு சிலர், 'நாம் கடவுளில் அன்பு கூர்ந்து அவர் கட்டளைகளைக் கைக்கொள்ளும் போது, கடவுளின் பிள்ளைகளில் அன்பு கூறுகிறோம் என்பதை அறிந்து கொள்ளுகிறோம்" என்று திருப்புவர். இந்தப் பொருள் தமிழ் மொழிப் பெயர்ப்புகளிலும் காணப்படுகிறது. ஆயினும் கடவுளின் பிள்ளைகளில் அன்பு கூருகிறோமா என்பதே கேள்வி (4²⁰ காண்க) ஆகவே இந்த விளக்கத்தைவிட முன்னால் கொடுத்தது சரி.

ரில் அன்புகொள்வது எனில், நாங்கள் ஒருபோதும் அவ ரில் பூரணமாக அன்புகூரமுடியாது" என நினைக்கக்கூடும். அந்த எண்ணத்தைத் தவிர்க்கும்படி யோவான் "அவர் கட்டளைகள் பாரமானவை அல்ல" எனக் கூறுகிறார். அத னால் அவர் கட்டளைகளை எளிதாக நிறைவேற்றிவிடலாம் என்று நினைப்பது தவறு. அவற்றை நிறைவேற்றுவது அரிதே. ஆயினும் அவை நம்மை நசுக்கும் ஒரு பாரமா யிருப்பது அவசியம் இல்லை. ஏனெனில் கடவுள் தம் கட் டளைகளோடு அவற்றைக் கடைப்பிடிக்கும் சக்தியையும் நமக்கு அருளுகிறார். அத்துடன் நாம் தவறி விழும்போது அவர் நம்மைத் தூக்கி எடுத்து நம் குற்றங்களை மன்னித்து மறுபடியும் நம்மைத் தமது திருப்பணிக்கு அனுப்புகின் றார். இவ்வாறு இருக்க, அவர் கட்டளைகள் பாரமானவை என்று எப்படிச் சொல்ல முடியும்? அதற்கு நேர்மாறாக. என் நுகம் மெதுவு, என் சுமை இலேசு என்று ஆண்டவர் சொன்ன அருள்மொழி அவர் அடியார்கள் அனுபவத்தில் முற்றிலும் உண்மை (மத். 11³⁰).

1 யோ 5:4 அவருடைய கற்பனைகள் பாரமானவை அல்ல என்பதற்கான காரணம் கடவுளின் பிள்ளைகள் உலகின் மேல் பெறும் வெற்றியே, முன்னால் யோவான் சபையார் உண்மையில் நிலைத்திருப்பதால் கள்ளப் போதகர் மேல் வெற்றி பெற்றிருக்கின்றனர் எனக் கூறினார் (4⁴). இங்கே கிறிஸ்தவர்கள் உலகின் மேல் வெற்றி பெறுகின்றனர்

---

5 : 4 ஜெயிக்கும்... ஜெயித்த — இந்த கிரேக்க வினைச் சொற்களின் காலத்தைக் கவனிக்கற்பாலது. முந்தியது (ஜெயிக்கும்) நிகழ்காலம். அது, கடவுளால் பிறந்ததெதுவும் உலகத்தைத் தொடர்ந்து ஜெயித்துக்கொண்டே இருக்கிறது என்று உணர்த்துகிறது. இரண்டாவது தனிப்பு இறந்த காலம் (aorist). அது, நாம் கடந்த காலத்தில் குறிப்பிட்ட ஒரு சமயத்தில் நமது விசுவாசத்தின் மூலம் உலகத்தை

என்கிருர். உலகம், கடவுளுக்கும் அவரது அன்புக்கும் எதிர்த்து நிற்கிற யாவற்றையும் குறிக்கிறது எனக் கொள்ளலாம் (2^{16} காண்க). முதலில் உலகத்தை வென்றவர் கிறிஸ்துதாமே (யோ. 16^{33}). நாம் அவரை விசுவாசத்திஞல் ஏற்றுக்கொண்டு கடவுளின் பிள்ளேகளாகும்போது (யோ. 1^{12} காண்க), அவர் பெற்ற வெற்றியில் நமக்கும் பங்கு உண்டு.

நமது விசுவாசமே உலகத்தை ஜெயித்த ஜெயம் — விசுவாசமே நாம் கிறிஸ்து அடைந்த வெற்றியில் பங்குகொள்ளும் வழி. அந்த விசுவாசத்தின் பொருளும் ஆதாரங்களும் பின் வருகிற வசனங்களில் விளக்கப்படுகின்றன. எனினும் விசுவாசம் என்பது மூளே அளவுக்குச் சில உண்மைகளே ஒப்புக் கொள்ளுவதை மாத்திரம் குறிப்பதன்று. விசுவாசம், இயேசுவைப் பற்றிய சத்தியத்தை ஏற்றுக்கொள்வதோடு நம்மை அவருக்கு ஒப்புக் கொடுத்து அவருக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதே ஆகும்.

D. 5:5-21 விசுவாசத்தின் முழு நிச்சயம்

இந்தப் பாகத்தில் யோவானின் வாதம் முடிவு அடைகிறது. இந்த நிருபத்தை எழுதுவதில், சபையாரை அன்பிலும் விசுவாசத்திலும் உறுதிப்படுத்தல் வேண்டும் எண்பதே அவரது நோக்கம். அதற்கென மெய்க்கிறிஸ்தவர்களையும் பொய்க்கிறிஸ்தவர்களையும் வேறுபடுத்தி அறிந்து கொள்ளும் பல பரிசோதனைகளைச் சொல்லித்தந்துள்ளார்,

---

ஜெயித்துவிட்டோம் என்று உணர்த்துகிறது. எந்தச் சமயம்
அது? ஒரு வேளே நாம் மனந்திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக்
கொண்ட சமயம், அல்லது அந்தச் சபையார் (அவர்கள் தான்
'நாம்' எனப்படுகிருர்கள்) கிறிஸ்துவில் நிலேத்து நின்றதால்
கள்ளப் போதகரை வென்ற சமயம் எனலாம்.

கடையொக (5^{4}). உண்மையான விசுவாசத்தில் நிலை நின்றதால் சபையார் அடைந்த வெற்றியைக் குறிப்பிட்டார். அந்த உண்மையான விசுவாசம் அவர்களது இரட்சிப்புக்கும் அவர்களது முழுக் கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் அடிப்படை, ஆதலால் யோவான் இப்போது அதன் பொருளையும் அதற்காதாரமான அத்தாட்சிகளையும் விவரித்துக் கூறுகிறார் (5^{5-12}). அதன் பின் அந்த விசுவாசத்தால் நாம் நிச்சயமாய் அறிந்துகொண்ட சத்தியங்களை விளக்குகிறார் (5^{13-20}). பலவாறு சந்தேகப்பட்டுவந்த இந்தச் சபையாருக்கு முக்கியமாகத் தேவைப்பட்ட காரியம் மன உறுதியே. ஆகவே யோவான் நிச்சயமான ஒரு வெற்றித் தொனியோடு தமது நிருபத்தை முடிப்பது மிகப் பொருந்தும் என்க. இந்த வசனங்களைப் பின் வருமாறு பிரிக்கலாம்.

1. வ. 5-6a விசுவாசத்தின் பொருள்
2. வ. 6b-12 விசுவாசத்திற்கான சாட்சி
3. வ. 13-20 விசுவாசம் நிச்சயித்துக் கொள்ளும் உண்மைகள்
4. வ. 21 இறுதி எச்சரிப்பு

1 யோ. 5:5,6a விசுவாசத்தின் பொருள்:

முந்திய வசனத்தில் யோவான் நமது விசுவாசமே உலகத்தை ஜெயித்த ஜெயம் எனக் கூறினார். விசுவாசம் நாம கிறிஸ்துவுக்குள் பெறும் வெற்றிக்கு அடிப்படை. அன்றியும் அது நம் வாழ்க்கையில் காணப்பட வேண்டிய சிறந்த நற்பண்பாகிய அன்புக்கும் அடிப்படை ஆகும். ஏனெனில், நாம் கடவுளின் அன்பை உணர்ந்து கொண்டால் மட்டும் அன்பு கூர முடியும் (4^{19} காண்க). மேலும் விசுவாசத்தினாலேயல்லாமல் கடவுளின் அன்பை உணர்ந்து கொள்ள முடியாது. கடவுள் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பியதால் வெளிபடுத்தப்பட்ட அன்பு

விசுவாசத்தினால்தான் உணரப்பட முடியும். ஆகவே கிறிஸ்தவ வாழ்க்கை, விசுவாசம் இன்றி அமையாது என லாம். விசுவாசமானது இவ்வளவு முக்கியமானபடியால், யோவான் இங்கு அதன் பொருளை முன்னிலும் அதிக விவரமாய் விளக்க முற்படுகிறார்.

5. இயேசுவானவர் தேவகுமாரன்— இதனை விசு வாசிக்கிறவன் உலகத்தை ஜெயிக்கிறவனாவான். இந்தக் கூற்றில் உண்மையான விசுவாசத்தின் பொருள் அடங்கி யிருக்கிறது. அது, இயேசு கடவுளோடு தனிப்பட்ட முறையில் தொடர்புடையவர், அவர் கடவுளிடத்தி லிருந்து இந்த உலகில் புறப்பட்டு வந்தவர், கடவுளின் தன்மையுடையவர், கடவுளை நிறைவாக வெளிப்படுத்தக் கூடியவர் என்று பொருள்படும். யோவான் இதே வாசகத்தைக் கொண்டு விசுவாசத்தின் பொருளை 4^{15} இல் விளக்குகிறார். 2^{22}, 4^{2}, 5^{1} ஆகிய வசனங்களிலோ அவர் இயேசுவே கிறிஸ்து என்பதை விசுவாசத்தின் சுருக்கமாகக் கூறுகிறார். கிரேக்கர் மத்தியில் கிறிஸ்து என்பதும் கடவுளின் நிறைவான வெளிப்பாடு எனும் பொருளில் பயன்படுத்தப்பட்டு வந்தமையால், இரண் டுக்கும் இடையே பெரும் வேறுபாடு இல்லை. இரண்டி லும், உலகத்தில் பிறந்து வாழ்ந்து இறந்து உயிர்த் தெழுந்த மனிதனாகிய இயேசுவே கடவுளைப் பூரணமாய் வெளிப்படுத்தினார் எனும் புரட்சிகரமான கருத்து வலி யுறுத்தப்படுகிறது. இந்த விசுவாசத்தினாலேயன்றி உல கின் மேல் வெற்றி பெற முடியாது என்கிறார் யோவான்.

6a இயேசுவானவர் தேவகுமாரன் என்பது விசு வாசத்தின் சுருக்கம். எனினும் அதன் பொருளை விவர மாக விளக்க வேண்டியதாயிருந்தது. ஏனெனில் அதன் பொருளைப் பற்றி வேறுபட்ட கருத்துக்கள் இருந்தன. ஆகவே யோவான் இயேசு கிறிஸ்துவாகிய இவரே

தண்ணீரினாலும் இரத்தத்தினாலும் வந்தவர் எனக் கூறுகிறார்.

இயேசு கிறிஸ்துவாகிய இவரே — இயேசு என்பது அவரது மனிதப் பெயர். அது அவரது மெய்ம்மனிதத் தன்மையைக் குறிக்கிறது. கிறிஸ்து என்பது அவரது தெய்வீகத் தன்மையைக் குறிக்கிறது. ஆகவே இந்தத் தொடர், இயேசு கிறிஸ்து என்பவர் மெய்ம்மனிதனும் மெய்க் கடவுளுமாய் இருந்தார் என்றும், அந்த மனிதத் தன்மையும் தெய்வத் தன்மையும் அவரது ஒரே ஆள் தத்துவத்தில் ஒன்றாக இணைக்கப்பட்டன என்றும் உணர்த்துகிறது.

ஜலத்தினாலும் ரத்தத்தினாலும் வந்தவர்— இரு தன்மையுடைய இந்த இயேசு கிறிஸ்துயோர்தான் ஆற்றில் திருமுழுக்குப் பெற்றார், சிலுவை மரத்தில் தமது இரத்தம் சிந்தி மரணம் அடைந்தார் என்பது இத் தொடரின் பொருளாகும். தண்ணீர், இரத்தம் என்பவை அவரது உலக வாழ்க்கையில் நடைபெற்ற இந்த இரண்டு முக்கிய நிகழ்ச்சிகளைக் குறிக்கின்றன போலும்.

ஜலத்தினால் மாத்திரம் அல்ல — யோவான், இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணமும் வரலாற்று நிகழ்ச்சி என வற்புறுத்திக் கூறுகிறார். ஏனெனில் சபையில் பொய்ப் பிரசாரம் செய்து வந்த கள்ளப்போதகர் அதனை மறுத்தனர். அவர்களது எண்ணப்படி, தெய்வீக ஆளாகிய கிறிஸ்து மனிதனாகிய இயேசுவின் மேல் அவரது திருமுழுக்கின் போது வந்திறங்கினார், ஆயினும் தெய்வம் பாடுறவோ, இறக்கவோ முடியாது என்பதால், சிலுவை

---

5 : 6 தண்ணீரினாலும் இரத்தத்தினாலும் வந்தவர் - வேறு சிலர், இச் சொற்கள் முறையே ஞானஸ்நானத்தையும் நற்கருணையையும். அல்லது சிலுவையில் ஈட்டியினால் குத்தப் பட்ட இயேசுவின் விலாவிலிருந்து பாய்ந்த தண்ணீரையும் இரத்தத்தையும் (யோ. 19[34]) குறிக்கின்றன என்பர்.

யில் அறையப்படுமுன்னே அந்தத் தெய்வீக ஆளாகிய கிறிஸ்து இயேசுவை விட்டு பரத்திற்குத் திரும்பிச் சென்றார்; இயேசு வெறும் மனிதனாகச் சிலுவையில் மரணம் அடைந்தார். இதற்கு மறுப்புத் தரும்படி, யோவான் இயேசு கிறிஸ்து தண்ணீரினால் மாத்திரம் அன்று ரத்தத்தினாலும் வந்தார் என்கிறார். மேலும் பின்வருகிற வசனங்களில் அந்தக் கூற்றினைச் சில பலமான சான்றுகளைக் கொண்டு மெய்ப்பிக்கிறார்.

விசுவாசம் என்பது நம்மை நாமே கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்து, அவருக்குக் கீழ்ப்படிந்து வாழுவதைக் குறிக்கிறது என்று நாம் மேலே பார்த்தோம. ஆயினும் நாம் நம்மை அவருக்கு ஒப்புக் கொடுக்க முடியுமுன்னே, அவரைப் பற்றிய சத்தியத்தை அறிந்து கொள்ளவும் ஒப்புக் கொள்ளவும் வேண்டும். நாம் அந்தச் சத்தியத்தைத் தவறாகப் புரிந்து கொண்டால், நிச்சயமாக நமது நடத்தையும் ஒழுக்கமும் அதனால் பாதிக்கப்படும். இந் நிருபத்தில் நாம் காண்கிற சபையில் அவ்வாறே நடந்தது. அதனால் தான் யோவான் இவ்வளவு விரிவாக நமது நற்செய்தியின் சத்தியத்தை அவர்களுக்கு விளக்குகிறார், நாமும் அதே காரணத்தால் நமது நற்செய்தி கூறும் சத்தியங்களை நமது ஆற்றலுக்குத் தக்கவாறு ஆராய்ந்து புரிந்து கொண்டு காப்பாற்றுவது நம் ஒவ்வொருவருடைய பொறுப்பாகும். நாம் அதில் தவற நேரிடில், நம் வாழ்க்கையில் வெற்றியையும் நித்திய ஜீவனையும் கடவுளோடுள்ள தொடர்பையும் அடைய முடியாது என்பதே யோவான் இந்நிருபத்தில் ஆணித்தரமாகத் தருகிற செய்தி.

மேலே விசுவாசத்திற்கும் அன்புக்கும் உள்ள தொடர்பை நாம் கவனித்தோம். இந்தக் கள்ளப் போதகர் கிறிஸ்துவைக் கொண்ட தவறான எண்ணம் அதற்குப்

பொருத்தமமான ஓர் எடுத்துக் காட்டாக இருக்கிறது. இவர்களது விசுவாசம், தேவகுமாரன் நமக்காகத் தம் உயிரைக் கொடுக்க வில்லை என்பது. அதனால் கடவுள் தம் குமாரனைச் சிலுவை மரணத்திற்கு நம்பொருட்டு ஒப்புக் கொடுக்குமளவுக்கு நம்மீது அன்பு கொள்ளவில்லை என்றுயிற்று. அவர்கள் கடவுளின் அன்பைக் குறையுள்ளதாகவே கருதினர். அவ்வாறிருக்க, அவர்கள் காட்டிய அன்பும் குறைவுள்ளதாக இருப்பது ஆச்சரியம் இல்லை.

1 யோ. 5:6b-12 விசுவாசத்திற்கான சாட்சி

தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து தண்ணீரினாலும் ரத்தத்தினாலும் வந்தார் என்பது நம் விசுவாசத்தின் பொருள். அது மெய் என்று எப்படித் தெரியும்? யோவான் அந்தக் கேள் விக்கு விடையாக, நமது விசுவாசம் கடவுள் தாமே தந்த மூவகையான சாட்சியில் அமைந்துள்ளது எனவும், அந்தச் சாட்சி நமது விசுவாசத்தை மெய்ப்பிக்கிறது எனவும் கூறுகிறார்.

1 யோ. 5:6b **சாட்சியிடுகிறவர் ஆவியானவர்** — மூவகையான சாட்சியில் முதல் இடம் பெற்றவர் பரிசுத்த ஆவியானவர். அவர் எப்படிச் சாட்சி இடுகிறார் எனில், யோவான் முன்னால் கூறியபடி அவர் நம் உள்ளத்தில் தங்கிச் செயலாற்றுகிறார் (3²⁴, 4¹³). இதனால் நாம் விசுவாசித்தது மெய் என உறுதியாக அறிந்து கொள்கிறோம். மேலும் பரிசுத்த ஆவி திருச்சபையின் வாழ்க்கையில் செயலாற்றி அதன் கூட்டுறவின் மூலமாகவும் அதன் வெவ்வேறான பணிகளின் மூலமாகவும் இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சி இடுகிறார். இப்படி அவர், தெய்வமனிதனாகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் மரணம் அடைந்தார் என்கிற நிச்சயத்தை விசுவாசிகளின் உள்ளத்தில் உண்டாக்குகிறார். யோவானின் நற்செய்தி நூலின்படி, இயேசுவும் தாமே தம்மைப் பற்றிச்

சாட்சி இடுவதை ஆவியானவரின் முக்கியத் தொழில்களில் ஒன்ருகக் குறிப்பிட்டார் எனக் காண்க (யோ. 14^{26},15^{26},16^{14},^{15}).

ஆவியானவர் சத்தியமே - ஆவியானவர் சத்திய ஆவியாதலால் (யோ. 16^{13} காண்க), அவர் சாட்சி இடுகிற இத்தொழிலுக்கு ஏற்றவர் ஆவர் மட்டும் அல்ல, அவர் சத்திய ஆவி யாதலால், அவர் இடுகிற சாட்சி நம்பத் தக்கதாகும்.

1 யோ. 5:7, 8 பரிசுத்த ஆவியானவரோடு சாட்சி இடுபவை, நீரும் இரத்தமும் ஆகும். இதன் பொருளைப் பற்றி நீண்ட ஆராய்ச்சியும் விவாதமும் நடந்திருக்கிறது. முதற்கண் இதற்கும் 6ஆம் வசனத்தின் முற்பகுதிக்கும் தொடர்பு உண்டு எனத் தெரிகிறது. ஓர் அளவு தொடர்பு உண்டு எனினும், இவ்விரண்டு சொற்களை முன்னுள் பொருள் கொண்டதுபோல இந்த இடத்திலும் பொருள் கொள்வது பொருந்தாது. ஏனெனில், இயேசு திருமுழுக்குப் பெற்றதன் உண்மைக்கு அவரது திருமுழுக்கே ஆதாரமாயிருக்க முடியாது. வேருெரு சான்றைக் கொண்டு தான் அதனை மெய்ப்பிக்க முடியும். அவ்வாறே அவர் சிலுவை மரணம். ஆகவே இந்த வசனத்தில், தண்ணீர் எனும் சொல் திருச்சபையில் வழங்கப்படும் திருமுழுக்கையும், இரத்தம் என்பது திருவிருந்தையும் குறிக்கிறது என்று பொருள் கொள்வது சரியாகத் தோன்றுகிறது.

அப்பொழுது திருமுழுக்கு, திருவிருந்து ஆகிய இவ்விரு நியமங்களும் எவ்வாறு இயேசு கிறிஸ்துவைப் பற்றிச் சாட்சி இருக்கின்றன என்கிற கேள்வி எழுகிறது.

5:7 சாட்சி இடுகிறவர்கள் மூவர் - உபாகமம் 19^{15} இது கருத்திற்கு ஆதாரமாய் இருக்கலாம்.

(i) திருமுழுக்கு - திருச்சபை திருமுழுக்காட்டும் பழக்கம், இயேசு தாமே யோர்தான் ஆற்றில் முழுக்கு முனிவராகிய யோவானால் திருமுழுக் காட்டப் பெற்றதிலும் அடியார்களுக்குத் திருமுழுக்காட்டக் கட்டளை கொடுத்ததிலும் அமைந்துள்ளது. மேலும் திருமுழுக்கு இயேசுவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் காண்பிக்கிறதாகப் பவுலால் விளக்கம் பெறுகிறது (ரோமர் 6^{3-11}). எனவே திருச்சபை அந்தக் காலமுதல் இடைவிடாமல் கையாளுகிற இந்தப் பழக்கமே இயேசுவைக் குறித்து ஒரு சாட்சி எனில் அது தவறு அன்று.

5:7-8 பழைய தமிழ் வேதத்தில், "பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம் மூவரும் ஒன்றுயிருக்கிறார்கள்; பூலோகத்திலே" எனும் சொற்கள் சேர்க்கப்படுகின்றன. எனினும் அப் பழைய திருப்புதலிலும் அவை அடைப்புக் கோடுகளுக்கிடையே போடப்படுகின்றன. அவை அதில் அடைப்புக்கோடுகளுக்கிடையேபோடப்படுகிறதற்கும் புதுத் திருப்புதலில் விடப்படுகிறதற்கும் காரணம் என்ன? இச்சொற்கள் பழைய கிரேக்க கை எழுத்துப் பிரதி ஒன்றிலும் இடம்பெறவில்லை. ஸ்பானியா தேசத்தைச் சேர்ந்த கள்ளப்போதகரான பிரிஸ்கிலியான் என்பவன் 385 ஆம் ஆண்டில் எழுதிய ஒரு நூலில் அவை முதல் முதலல் காணப்படுகின்றன. அதன்பின் அவை 'வால்கேட்' எனும் வேதத்தின் லத்தீன் மொழிப் பெயர்ப்பில் நுழைந்துவிட்டன. கடைசியில் 1516ம் ஆண்டில் வெளியிடப்பட்ட கிரேக்கப் புதிய ஏற்பாட்டின் பதிப்பு ஒன்றில் அவை இடம்பெற்றன. அதற்குமுன் எழுதப்பட்ட எத்தனையோ கிரேக்கக் கை எழுத்துப் பிரதிகளிலும் திருச்சபைப் பெரியோரின் விளக்குரைகளிலும் அவை காணப்படாமையினால், அவை யோவான் எழுதாத ஒரு பிற்சேர்க்கை எனவும் நமது வேதத்தில் இடம்பெறல் வேண்டாம் எனவும் திட்டமாய் முடிவு செய்யலாம்.

(ii) திருவிருந்து - இயேசு கிறிஸ்து தம் வாழ்க்கையின் இறுதிநாள் இரவில் அப்பத்தைப் பிட்டதால் தம் சரீரம் சிலுவையில் நசுக்கப்படுவதையும் திராட்சரசத்தை ஊற்றியதால் தம் இரத்தம் சிந்தப்படுதலையும் காண்பித்தார். அதன்பின் தமது மரணத்திற்கு ஒரு நித்திய ஞாபகார்த்தமாக, "என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளினார். அதுமுதல், திருச்சபை அவரது கட்டளைக்கு இணங்கத் திருவிருந்தினை அனுசரித்து வருகிறது. அவர் சொன்னது போல அவர் மரணம் அடையவும் உயிர்த்தெழவும் இல்லையாகில் திருச்சபை அப்படிச் செய்திருக்குமோ? ஆகையால் திருவிருந்தும் ஒரு சாட்சி, நமது விசுவாசத்திற்கு ஓர் ஆதாரம் எனலாம்.

இம்மூன்றுக்கும் ஒரே நோக்கமுண்டு - இம்மூன்றும் ஒன்றோடொன்று இசைந்து, வ. 5-6ªஇல் சொல்லப்பட்ட விசுவாசப் பொருளுக்கு சாட்சி இடுகின்றன. அவற்றில் வேறுபட்ட கருத்தோ முரண்பாடோ இல்லை.

1 யோ. 5:9,10 இந்த இரண்டு வசனங்களில் யோவான் நமது விசுவாசத்திற்கு ஆதாரமான சாட்சியைத் தொடர்ந்து விளக்குகிறார். அதைப் பற்றி நான்கு உண்மைகளை அறிவுறுத்துகிறார்:

(i) இந்தச் சாட்சி கடவுள் தாமே தம்முடைய குமாரனைக் குறித்துத் தந்த சாட்சி (வ 9^b), பரிசுத்த ஆவியானவர் கடவுளால் அனுப்பப்பட்டார் (யோ. 14^{26}). திருமுழுக்கும் திருவிருந்தும் கடவுளால் அவர் குமாரன் மூலம் எற்படுத்தப்பட்டன. ஆகவே கடவுள் தாமே இந்த மூவகையான சாட்சியைத் தந்தார் எனலாம்.

(ii) அது கடவுளால் தரப்பட்ட சாட்சி ஆயின், அது முற்றிலும் நம்பப்படத் தக்கது (வ. 9^a) நாம் வழக்கமாக

மனிதர் கூறும் சாட்சியைச் சந்தேகப்படாமல் ஏற்றுக் கொள்கிறோம். இது கடவுள் கூறும் சாட்சி யாதலால், மனிதர் கூறும் சாட்சியை விட அதிக நம்பிக்கைக் குரியதாயிருக்கிறது.

(iii) விசுவாசி இந்தச் சாட்சியைத் தனக்குள்ளே உடையவனுவான் (வ.10[a]): நாம் விசுவாசத்தினுல் இந்தச் சாட்சியை ஏற்றுக் கொண்டு இயேசுவின் மேல் நம்பிக்கை வைக்குங்கால், ஆவியானவர் நமது உள்ளத்தில் வந்து தங்குகிருர். நம் உள்ளத்தில் தங்கி அங்கேயே கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியிடுகிருர் (3^{24},4^{13} காண்க). இதனுலே நாம் அசையாத ஒரு நிச்சயத்தை அடைகிறோம்.

(iv) இது கடவுள் தந்த சாட்சி ஆதலால், அதனை ஏற்றுக் கொள்ள மறுக்கிறவன் கடவுள் பொய் சொல்லுகிருர் என்று தான் எண்ணுகிறதைத் தனது செயலினுல் உணர்த்துகிருன் (வ. 10[b]). நான் கடவுள் சொல்லுகிறதை நம்ப இல்லை யெனில், நான் அவர் சொல்லுகிறது பொய் என்று கருதுகிறேன் என்பது தெளிவாகிறது. ஆகவே கடவுள் தம் மகனைப் பற்றிக் கூறிய சாட்சியை ஏற்றுக் கொள்ளாதவன், கடவுள் மீது பொய் சொல்லுகிற குற்றத்தைச் சுமட்டுகிருன் எனக் கூறலாம் (1^{10} ஐயும் காண்க). யோவான் கள்ளப் போதகர் இந்நிலையில் இருக்கிருர்கள் என்று மறைமுகமாக உணர்த்துகிருர், ஏனெனில் கடவுள் தம் குமாரன் தண்ணீரினுலும் இரத்தத்தினுலும் வந்தார் என்று சாட்சியிடவே, அவர்கள் அதனை மறுக்கிருர்கள்.

1 யோ. 5:11 இங்கு யோவான் கடவுள் கூறுகிற சாட்சியின் பொருளைச் சுருக்கமாகக் குறிப்பிடுகிருர். நமது தமிழ் மொழிப் பெயர்ப்புக்கு மாருக இவ்வசனத்தின் முதல் உறுப்பில் மட்டும் அல்ல இரண்டு உறுப்புக்களி

ஒமே அச்சாட்சியின் பொருள் விளக்கப்படுகிறதுஎனக் கொள்க.

கடவுள் நமக்கு நித்திய ஜீவனைத் தந்தருளினர் - கடவுளின் சாட்சி கூறும் முதல் கூற்று. நித்திய ஜீவன் என்பது மேலே விளக்கப்பட்டது (1^{1-20} காண்க). அதுவே இந்நிருபத்தின் செம்பொருள் என்று யோவான் ஆரம்பத்தில் கூறினர்.

இந்த ஜீவன் அவர் குமாரனில் இருக்கிறது - கடவுளின் சாட்சி கூறும் இரண்டாவது கூற்று. கடவுள் இந்த ஜீவனைத் தம் குமாரன் மூலமாக வழங்குகிறார், அது அவரில் பூரணமாக நிலைத்திருக்கிறது. அவரோடு தொடர்பு கொள்வதனுல் அது மனிதருக்குக் கிடைக்கும் என்பதெல்லாம் இக்கூற்றின் பொருள்.

5^{12} கடவுள் தந்த நித்திய ஜீவன் அவர் குமாரனில் இருக்கிறது என்றதால், அவரை ஏற்றுக் கொள்கிறவன் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளுகிறுன், அவரை வெறுத்துத் தள்ளுகிறவன் அதனைப் பெற்றுக் கொள்ள முடியாது என விளங்குகிறது. இவ்வாறு மிகத் தெளிவாக யோவான் தமது செய்தியின் சாரம்சத்தைக் கூறுகிறுர் நமது இரட்சிப்பு இயேசுவிலும், நாம் அவரோடு கொள்ளும் தொடர்பிலும் அமைந்துள்ளது. ஆகவே தங்கள் செயல்களினுலும் போதனையினுலும் இயேசுவைத் தள்ளுவோர் நித்திய ஜீவனைத் தள்ளுகிறுர்கள். யோவான் யாரை - மனதிற் கொண்டு இதனைச் சொல்கிறுர் என்பது நமக்குத் தெளிவாயிருக்கும் (2^{23} காண்க).

1 யோ. 5:13-20 விசுவாசம் நிச்சயித்துக்கொள்ளும் உண்மைகள்

யோவான் நமது விசுவாசத்தின் பொருளையும் அதற்குரிய ஆதாரத்தையும் விளக்கியுள்ளார் (5^{6-12}). இப்

பொழுது அந்த விசுவாசத்தினுல் நமக்குக் கிடைக்கிற நிச்சயத்தை விளக்கப் போகிருர். அத்தகைய ஒரு நிச்சயம் நமக்குக்கிடைக்கக்கூடியதாயிருக்கிறது எனவும்அது நமது கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாதது எனவும் முன்னுலே பார்த்தோம் (உ-ம் 2³). இங்கே யோவான், நாம் எந்த விதமான காரியங்களை நிச்சயமாக அறிந்து கொள்ளக் கூடும் என்று தெளிவுபடுத்துகின்ருர்.

1 யோ. 5:13 யோவான் இந்த நிருபத்தை எழுதுகிற நோக்கத்தை உணர்த்துகிருர். அது, அந்தச் சபையார் தங்கள் நிலையைக் குறித்து நிச்சயம் அடைய வேண்டும் என்பதே. அவர்கள் ஏற்கனவே தேவ குமாரனின் நாமத்தில் நம்பிக்கை வைத்திருக்கிருர்கள். அதனுல் அவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றிருப்பர். ஆயினும் அதனைப் பற்றி அவர்களிடம் நிச்சயம் இல்லை. அவர்கள் இயேசுவின் மேல் வைத்த விசுவாசத்தின் அடிப்படையில், தங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்று நிச்சயமாய் அறிந்து கொள்ள வேண்டும் என்பதே யோவானின் பேராவல்.

இதன் வசனத்தை யோ. 20³¹ உடன் ஒப்பிடலாம். அங்கே யோவான், வாசிப்போர் இயேசுவின் மேல் நம்பிக்கை வைத்தல் வேண்டும் என்றும், அப்படி வைத்ததனுல் நித்திய ஜீவனை அடைதல் வேண்டும் என்றும் தம் நற்செய்தி நூலை எழுதுகிருர் எனச்சொல்லுகிருர். அப்படி விசுவாசத்தினுல் நித்திய ஜீவனை அடைந்தவர்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் இன்னெரு படி முன்னேறி நிச்சயம் கொள்ளும்படிக்கு அவர் தமது நிருபத்தை எழுதுகிருர் என்பதை நாம் 1 யோ. 5¹³ மூலம் அறியலாம். அதனுல் நாம் எவ்வாறு கிறிஸ்தவ வாழ்க்கையில் படிப்படியாய் வளர்ச்சி அடைதல் வேண்டும் என்று விளங்குகிறது. இந்த வசனம் முந்திய வசனங்களில் கூறப்பட்ட விசுவாசத்திற்கும், பின்வரும் வசனங்

களில் கூறப்படும் நிச்சயத்திற்கும் இடையுள்ள தொடர்பை விளக்குகிறதால், அது அந்த இரண்டு பகுதிகளையும் இணைக்கும் ஒரு பாலம் எனலாம்.

இவைகளை எழுதியிருக்கிறேன் - இவைகள் என்பது இம் முழு நிருபத்தையும் குறிக்கிறது.

அ] 1 யோ. 15 : 14 - 17 ஜெபத்தைப் பற்றிய நிச்சயம்: நாம் நிச்சயமாய் அறிந்துகொள்ளக் கூடிய காரியங்களில் யோவான் முதலாவது கடவுள் நம் விண்ணப்பங்களைக் கேட்டு நாம் வேண்டிக் கொண்டவற்றைத் தருகிறார் என்பதைக் குறிப்பிடுகிறார். அவர் முன்னால் நாம் ஜெபத்தில் கொள்ளக்கூடிய தைரியத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார் (3:21-22); இங்கே அதே பொருளைச் சற்று விரிவாக விளக்குகிறார்.

1 யோ. 5: 14 தைரியம் - 2^{28}, 3^{21} காண்க. இரண்டு காரியங்கள் நமக்கு உறுதியாய்த் தெரியும்; ஆதலால் நாம் கடவுளின் முன்னிலையில் தைரியத்துடன் வந்து நிற்கலாம். அந்த இரண்டு காரியங்களாவன:

(i) நாம் எதையாவது அவர் சித்தத்தின்படி கேட்டுக்கொண்டால், அவர் நமக்குச் செவிசாய்ப்பார். நாம் செய்கிற விண்ணப்பங்கள் கடவுளால் கேட்கப்படுவதற்கு சில நிபந்தனைகள் உள்ளன. முதலில், இங்கே கூறப்பட்டதுபோல, நாம் நம்முடைய சொந்த விருப்பங்களுக்கு முதலிடம் கொடுக்காமல் அவர் விரும்புகிற காரியங்களை நாடல் வேண்டும். இதற்கு இயேசு கற்பித்த ஜெபமும், அவர் தாமே ஏறெடுத்த ஜெபமும் சிறந்த எடுத்துக்காட்டுக்கள் ஆகும் (மத். 6^{10}, மாற். 14^{36}). இன்னும், கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதும் (3^{21-22}) இயேசுவின் நாமத்தில் கேட்டுக்கொள்வதும் (யோ. 14^{13}). இயேசுவினிடத்தில் நிலைத்திருப்பதும்(யோ. 15^{7})நம் விண்ணப்பங்கள் கேட்கப்படுவதற்கான நிபந்தனைகளாகக் கூறப்படுகின்றன.

1 யோ. 5 : 15 ii) கடவுள் நமது ஜெபத்திற்குச் செவிசாய்ப்பதோடு நாம் வேண்டிக்கொள்கிற காரியங்களைத் தருகிறார் என்பதும் நமக்குத் தெரியும். கடவுள் கேட்கிறார் எனில், அவர் தராமலிருக்க முடியாது. ஆகவே நாம் அவர் சித்தப்படி கேட்டுக் கொண்டவற்றைப் பெற்றுக் கொண்டோம். நாம் கேட்டுக்கொண்டதும் அவர் தந்து விட்டார் என்று நிச்சயமாய் அறியலாம். இதுவே நம் ஜெபத்தில் காணப்படல் வேண்டிய நம்பிக்கை. இதனால் நாம் ஆண்டவரை நோக்கி, 'அன்புள்ள தகப்பனே, நான் வேண்டிக் கொண்டதை நீர் கேட்டதற்காகவும், ஏற்கனவே அதனைத் தந்தருளியதற்காகவும் உமக்கு ஸ்தோத்திரம்' என்று சொல்லி ஒவ்வொரு ஜெபத்தையும் முடிக்கலாம் (மாற். 11[24] காண்க).

1 யோ. 5:16 யோவான் ஜெபத்தைப் பற்றி மேலே தந்த போதனைக்கு ஓர் உதாரணத்தைக் கொடுக்கிறார். ஒரு கிறிஸ்தவன், தன் சகோதரன் பாவம் செய்வதை காண்கிறான். பாவம் செய்கிற அந்தச் சகோதரன் மனந்திரும்பிக் கடவுளிடம் மன்னிப்புப் பெற்று வாழ்வடைதல் வேண்டும் என்பது கடவுளின் திருவுளச்சித்தம் என்பதில் ஐயம் இல்லை. ஆகவே அவனைப் பாவம் செய்யக் கண்டவன் ஆண்டவரிடம் அவனுக்காக வேண்டுதல் செய்யும் போது, அவர் அந்த வேண்டுதலுக்குச் செவிசாய்த்துப் பாவம் செய்தவனுக்கு மனந்திரும்புதலையும் மன்னிப்பையும் தந்தருள்வார்.

---

1 யோ. 5:16. அவன் வேண்டுதல் செய்து, அவனுக்கு ஜீவனைக் கிடைக்கச் செய்வானாக — எழுத்தின்படி இவ் வாக்கியத்தை இவ்வாறு திருப்பலாம்: "......வேண்டுதல் செய்வான், அவனுக்கு ஜீவனைக் கொடுப்பான்" (அல்லது "கொடுப்பார்": கிரேக்கத்தில் இவ்விரண்டுக்கும் இடையே வேறுபாடில்லை). அப்பொழுது, இரண்டாம் வினைச் சொல்லுக்கு எழுவாய் யார்; தன் சகோதரனைப் பாவம் செய்யக்கண்டவனா; கடவுளா என்கிற கேள்வி

மரணத்துக்கேதுவல்லாத பாவம், மரணத்துக் கேதுவான பாவம்-பாவம் இருவகைப்படுகிறது என்கிறார் யோவான். அவர் முன்னால் சொன்ன உதாரணம் மரணத்திற்கேது வல்லாத பாவம் செய்கிறவருக்கு மட்டும் பொருந்தும் என்று வற்புறுத்திக் கூறுகிறார். மரணத்திற்கேதுவான பாவம் செய்கிறவருக்காக அப்படி வேண்டுதல் செய்யக் கூடாது என அவர் சொல்லவில்லை, எனினும் அவர் அப்படி வேண்டுதல் செய்வது நல்லது அன்று, அதனால் பயன் இல்லை என்று கருதுகிறாற்போல் தெரிகிறது. இந்த இருவகைப் பாவங்கள் என்ன? மரணத்திற்கேதுவல்லாத பாவம் நம்மை உடனடியாகக் கடவுளைவிட்டுப் பிரிக்காத பாவம், நம்மை நித்திய மரணத் தண்டனைக்கு நேராக

எழுகிறது. இரண்டாம் வினைச் சொல்லுக்கும் ஒரு புதிய எழுவாய் குறிக்கப்படாமையினால், "தன் சகோதரனைப் பாவம் செய்யக் கண்டவன்" என்பது "கொடுப்பான்" என்பதற்கும் எழுவாயாகத் தோன்றுகிறது. ஆயின் ஒரு கிறிஸ்தவன் இன்னொரு கிறிஸ்தவனுக்கு வாழ்வளிக்க முடியுமா? முடியும் என்பதற்கு, யாக்கோபு $5^{15,20}$ ஆகிய வசனங்களை ஆதாரமாகக் கொள்ளலாம். அப்படிக்கொள்வோர் எழுத்தின்படி "......வேண்டுதல் செய்து அவனுக்கு ஜீவனைக் கொடுப்பான்" என்று மொழி பெயர்த்தல் தகும். எனினும் புதிய தமிழ் மொழி பெயர்ப்பினைத் தயாரித்தவர்கள் அந்தக் கருத்துச் சரியா என்று ஐயப்பட்டு, "கொடுத்தல்" எனும் வினைச் சொல்லைக் "கிடைக்கச் செய்தல்" என்பதாக மாற்றியிருக்கிறார்கள். மேலும் மூலத்தில் வந்த எதிர்கால வினைமுற்றிற்குப் பதிலாகக் "கிடைக்கச் செய்வானாக" எனும் வியங்கோள் வினைமுற்றினைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

இப்படிப் பொருள்கொள்வதும் திருப்புவதும் வேறு சிலருக்குப் பொருத்தமற்றதாகத் தெரிகிறது. அவர்கள், "கடவுள்" எனும் சொல் மூலத்தில் வரவில்லை. ஆயினும், "கடவுள்" என்பதை இரண்டாம் வினைச் சொல்லுக்கு எழுவாயாக வரு

வழிநடத்தாத பாவம் எனலாம். யோவான் உண்மையான கிறிஸ்தவர்களும் அவ்வப்போது அத்தகைய சிறு பாவங்களைச் செய்யலாம் என்று ஒப்புக் கொண்டதை நாம் முன்னுலே பார்த்தோம் ($1^{7}-2^{2}$). அவற்றிற்குப் பரிகாரம் உண்டு என்றும் சொன்னுர். மரணத்திற்கேதுவான பாவத்திற்கோ பரிகாரம் உண்டு என்பது போல் தெரியவில்லை. இதிலே யோவான் இயேசுவோடும் எபிரேயர் நிருப ஆக்கியோனேடும் இசைந்து மன்னிக்கப்பட முடியாத பாவம் ஒன்று உண்டு என அறிவுறுத்துகிருர் (மாற். 3^{29}, எபி.6^{4-6} காண்க). அந்தப் பாவம் யாது? யோவான் முன்னுல் தந்த போதனையின் அடிப்படையில் ஆராயுங்கால், கள்ளப் போதகத்தை ஏற்று இயேசுவே தேவ குமாரன் என மறுத்துத் திருச்சபையின் ஐக்கியத்தை விட்டு வெளியேறுவதே மரணத்திற்கேதுவான பாவம் எனலாம். அப்படியாயின், யோவானின் கருத்திற்கும் எபிரேயர் நிருப ஆக்கியோனின் கருத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அவரும் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை

வித்துக்கொள்ளல் வேண்டும் என்பர். அது சரியெனில், "...... வேண்டுதல் செய்வான், கடவுள் அவனுக்கு ஜீவனைக் கொடுப்பார்" எனத் திருப்பலாம்.

வேதத்தின் பழைய தமிழ் மொழிபெயர்ப்பில் அந்தப் பொருள் வருகிறது. ஆயினும் அதனைத் தயாரித்தவர்களும் ஆதாரமின்றி ஒரு மாற்றத்தைச் செய்திருக்கிருர்கள். எப்படியெனில், அவர்கள் "வேண்டுதல் செய்வான்" என்கிற எதிர்கால வினைமுற்றினை "வேண்டுதல் செய்வானுக" என்கிற வியங்கோள் வினைமுற்ருக மாற்றியிருக்கிருர்கள். யோவான் "வேண்டுதல் செய்வான்" என்று எழுதியதால், ஒரு கிறிஸ்தவன் தன் சகோதரனுக்காகச் செய்யவேண்டிய கடமையை அல்ல, எந்தக் கிறிஸ்தவனும் இயற்கையாகவே தன் சகோதரனுக்காகச் செய்யும் உதவியை உணர்த்த விரும்பினுர் என்க. ஆகவே இந்த இடத்தில் வியங்கோள் வினைமுற்றுப் பொருந்தாது.

மறுதலித்துப் பின்வாங்கிப் போகிற பாவத்திற்குப் பரிகாரம் இல்லை என்கிருர் (எபி. 10^{26-27}). அதற்குக் காரணம், கடவுள் உண்மையாய் மனந்திரும்புகிற ஒரு பாவியை மன்னிக்காமல் புறக்கணிப்பதன்று; அவர் உண்மையாய் மனந்திரும்புகிற யாவரையும் மன்னிக்க எப்பொழுதும் தயாராயிருக்கிருர். ஆயின் கிறிஸ்துவை விட்டுப் பின் வாங்கியவன் உண்மையாய் மனந்திரும்பி மறுபடியும் கிறிஸ்துவை நாடுவது அரிது, அசாத்தியம் (எபி. 6^{6}). அதனுல்தான் அவனது பாவம் மரணத்திற் கேதுவானது எனச் சொல்லப்படுகிறது.

5:17 இருவகைப் பாவங்களைக் குறிப்பிட்ட யோவான் இங்குப் பாவம் என்பதற்கு ஒரு பொது விளக்கம் தருகின்ருர். நேர்மையற்றஎந்தச் செயலும் பாவமாகும் என்கிருர் (3^{4} காண்க). ஆகவே அதனைப் பொருட்படுத்தாமலிருக்க வேண்டாம். எனினும் நேர்மையற்ற எந்தச் செயலும் மரணத்தை விளைவிக்கக் கூடிய பாவம் என்று எண்ணப்படுவதில்லை. அதற்காக மனந்திரும்புவதற்கு இடம் இருக்கும். எனவே, கிறிஸ்தவன் அப்படிப் பாவம் செய்கிற தன் சகோதரனுக்காகப் பரிந்து பேசுகிற பொறுப்புடையவனுயிருக்கிருன். கிறிஸ்தவ ஐக்கியத்தில் சகோதரர் ஒருவருக்காக ஒருவர் ஆற்ற வேண்டிய சிறந்த உதவிகளில் இது ஒன்ருகும்.

[ஆ] 1 யோ. 5 : 18 நம்மைக் காக்கிற இயேசுவின் வல்லமையைப் பற்றிய நிச்சயம்: கடவுளால் பிறந்திருக்கிறவன் என்பது மெய்க்கிறிஸ்தவனைக் குறிக்கிறது (2^{29}, 3^{9} காண்க). அத்தகையவன் பாவம் செய்யான் என்கிருர்

---

1 யோ. 5:18. பாவம் செய்யான் என்று நமக்குத் தெரியும் — ஒருவேளை இந்த முழு வசனமும் நமக்குத் தெரிந்த பொருளைக் குறிக்கிறதாயிருக்கலாம். அப்படியாயின், '......பாவம் செய்யான், ...காக்கிருர், ...தொடான் என்று நமக்குத் தெரியும்' என்று மொழிபெயர்த்தல் வேண்டும்.

யோவான். அதனால், கிறிஸ்தவன் ஒருபோதும் ஒரு பாவமும் செய்வதே இல்லை என்று பொருள் கொள்வது தவறு. யோவான் தாமே ஒரு கிறிஸ்தவச் சகோதரன் மரணத்திற்கேதுவல்லாத பாவம் செய்ய நேரிடக்கூடும் என்று இப்பொழுதுதே சொல்லியிருக்கிறார் (5^{16-17}). ஒரு கிறிஸ்தவன் வேண்டும் என்று வழக்கமாகப் பாவம் செய்துகொண்டே இருப்பதில்லை என்பதே அவருடைய கருத்தாகும் (3^{6-7}). பாவம் செய்வது கிறிஸ்தவனுக்கு வழக்கம் இல்லை எனில், அதற்குக் காரணம் என்ன? கடவுளால் பிறந்தகிறிஸ்து அவனைப் பாதுகாக்கிறார். யோவான் இயேசுவையும் கடவுளால் பிறந்தவர் என அழைக்கிறதால், இயேசு நமக்கு ஒரு சகோதரர், நம்மைப் போல் சோதிக்கப்பட்டவர். ஆதலால் நம்மேல் அனுதாபம் கொள்ளவும் நமக்கு உதவி செய்யவும் அவரால் முடியும் என்பது உணர்த்தப்படுகிறது. ஆயினும் கிறிஸ்தவன் கடவுளால் பிறந்த முறை வேறு, கிறிஸ்து கடவுளால் பிறந்த முறை வேறு என்பதைக் காட்டுவதற்கு, யோவான் பிறந்திருக்கிறவன் என்றும் பிறந்தவர் என்றும் வேறு படுத்திக் கூறுகிறார். 3^{9} இல் கடவுளின் தன்மை கிறிஸ்தவனிடம் இருப்பதால் அவன் பாவம் செய்ய முடியாது எனக் கண்டோம். இங்குக் கிறிஸ்துவின் பாதுகாவல் கிறிஸ்தவனின் வெற்றி வாழ்க்கைக்கு காரணமாகச் சொல்லப்படுகிறது. இதே கருத்தினை நாம் யோ. $17^{12,15}$ இலும் காணலாம். இந்தப் பாதுகாவலின் பயனாக, முழு உலகமும் பிசாசின் ஆதீனத்திற்கு உட்பட்டுக் கிடந்தும் (5^{19}), பிசாசானவன் கிறிஸ்தவனைத் தீண்டவோ தனக்குக் கீழ்ப்படுத்தவோ முடியாது.

(இ) 1 யோ. 5:19 நாம் கடவுளால் உண்டானவர்கள் என்கிற நிச்சயம்: உலக மக்களுள். கடவுளால் உண்டானவர்கள், பிசாசினால் உண்டானவர்கள் ஆகிய முற்றிலும் வேறுபட்ட இரு வகுப்பினர் உண்டு என யோவான் முன்

ஞல் குறிப்பிட்டுள்ளார் (3^{8-10}). மேலும் அவர் அந்த இரண்டு வகுப்பினரை வேறுபடுத்தி அறிந்து கொள்வதற்குப் பல பரிசோதனைகளை விளக்கியுள்ளார். அந்தப் பரிசோதனைகளைக் கொண்டு நாம் கடவுளால் உண்டான வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று திட்டமாய் அறிந்திருக்கிறோம் என்பது அவர் இங்கே கூறுகிற கருத்து. முன்பு போலவே, 'நாம்' என்பது கிறிஸ்துவில் நிலைத்திருக்கிற திருச்சபையாரைக் குறிக்கிறது.

கடவுளுக்கும் சாத்தானுக்கும் இடையிலே ஒரு பெரும் பிளவு. கடவுளின் பிள்ளைகளாகிய நாம் கடவுளின் பக்கத்தில் நிற்கிறோம். மறு பக்கம், கடவுளுக்கு எதிர்த்து நிற்கிற மனித சமுதாயம். அதனைச் சாத்தான் தன் கையில் வைத்து ஆண்டு நடத்துகிறான். அது முழுவதும் அவனது அதிகாரத்திற்குள் கிடக்கிறது. ஆயினும் மெய்யான ஒளியாகிய கிறிஸ்து உலகில் உதித்து அவனை வென்றதால் அவனது ஆதிக்கம் ஒழிந்து போகிறது ($2^{8,15-17}$ காண்க).

(ஈ) 1 யோ. 5:20 மெய்யான கடவுளை அறிந்திருக்கிறோம் என்கிற நிச்சயம்: உண்மைப் பொருள், அறிவு என்பவை கிரேக்கத் தத்துவ சாஸ்திரிகள் அதிகமாகப் பயன் படுத்தி வந்த சொற்கள். அவர்கள் கருத்துப்படி,

---

1 யோ. 5:20. தந்திருக்கிறார் என்றும் நமக்குத் தெரியும் — இங்கும் 'நமக்குத் தெரியும்' என்கிற சொற்கள் சற்றுப் பின்னால் வருவது பொருந்தும். 'தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவில்...... இருக்கிறோம்' எனும் தொடரும் நமக்குத் தெரிந்த பொருளுக்குள் அடங்கியிருக்கும்படி, '...மெய்ப்பொருளானவரில் இருக்கிறோம் என்றும் நமக்குத் தெரியும்' என்று மொழிபெயர்ப்பது தகும்.

இவரே மெய்யான கடவுள் — புதிய தமிழ்த் திருப்புதலின்படி, 'இவரே' என்பது மெய்ப்பொருளாகிய கடவுளைக் குறிக்கிறது. பழைய தமிழ்த் திருப்புதலின்படி இயேசு கிறிஸ்து மெய்க்

நாம் காணக்கூடிய இந்த உலகமும் அதிலுள்ள யாவும் மாயையே. உண்மைப் பொருளானது அதற்குக் கடந்து நிற்கிறது. அதனைக் கடவுள் என அழைக்கலாம். ஆயின் அதற்கு ஆள் தன்மை இல்லை. அதனை அறிகிற அறிவை அடைதல் அவர்களது தத்துவ ஆராய்ச்சியின் முழு நோக்கமாம். அந்த அறிவினால் மட்டும் மாயை உலகத்திலிருந்து விடுதலை கிடைக்கும். இந்தக் கருத்துக்கள் வேதாந்தப் போதனையோடு தொடர்புடையன என்பது கவனிக்கத் தக்கது. அவை அக்காலச் சபையில் தோன்றிய கள்ளப் போதகர்களாலும் பரப்பப்பட்டு வந்தன.

ஆகவே யோவான் நாம் நிச்சயமாய் அறிந்த காரியங்களைக் குறிப்பிடும் போது, தம் எதிரிகள் பயன்படுத்திய

கடவுளாகக் குறிக்கப்படுகிறார். மூலத்திலுள்ள சொற்களின் ஒழுங்கு இரண்டு திருப்புதல்களுக்கும் இடம் அளிக்கின்றது. புதிய திருப்புதல் யோவானின் பொதுவான போக்குக்கு ஏற்றது என்பதனால் தற்காலத்தில் அறிஞர் பலர் அதனையே ஆதரிக்கின்றனர். ஒருவேளை 'மெய்ப்பொருளானவரே மெய்யான கடவுள்' என்று பொருள்கொள்வது அவ்வளவு அர்த்தமுள்ளதாகத் தெரிகிறதில்லை. ஆயினும் இந்த வார்த்தைகளை முந்திய வார்த்தைகளோடு தொடர்புபடுத்தி, 'இயேசு கிறிஸ்துவின் மூலம் இந்த மெய்ப்பொருளானவரைச் சந்திக்கிறோமே, அப்படி இயேசு கிறிஸ்துவின்மூலம் வெளிப்படுத்தப்பட்ட அந்த மெய்ப்பொருளானவரே அன்றி வேறெதுவும் மெய்யான கடவுள் அன்று, வேறெதிலும் நித்திய ஜீவனும் இல்லை' என்கிற பரந்த பொருளில் எடுத்துக்கொள்வதே பொருத்தமான அர்த்தத்தைத் தரும். மற்றபடி பழைய திருப்புதலின்படி, 'இவரே' என்பதை கிறிஸ்துவைக் குறிக்கிறதாகக் கொள்ளலாம். அப்பொழுது இந்த வசனத்தில் யோவான் கிறிஸ்துவைக் கடவுள் என அழைக்கிறார். அவர் தம் நிருபங்களிலும் நற்செய்தி நூலிலும் வேறே ஓர் இடத்தில் மட்டும் அப்படிச் செய்துள்ளார் (யோ. 20^{28}).

கலைச் சொற்களை எடுத்துக் கொண்டு கிறிஸ்தவப் பொருளில் அவற்றை உபயோகிக்கிறார்; அவர்கள் அல்ல, நாமே உண்மைப் பொருளாகிய கடவுளை அறிந்திருக்கிறோம் என்று கூறுகிறார். இந்த மெய்யறிவு தத்துவ ஆராய்ச்சியினால் அல்ல, தேவகுமாரன் இந்த உலகத்தில் வந்து நமக்கு உணர்வை தந்ததனாலே கிடைத்துள்ளது. அந்த இயேசு கிறிஸ்துவோடு உறவு கொள்வதனால் மட்டும் மெய்ப்பொருளாகிய கடவுளை அடைய முடியும். நாம் இயேசு கிறிஸ்துவின் மூலம் சந்தித்து அறிகிறவர் தான் மெய்யான கடவுள், அவரோடு தொடர்பு கொள்வதே நித்திய ஜீவன். இயேசு கிறிஸ்து மெய்ப்பொருளை வெளிப்படுத்தி, அதனை அறிகிற அறிவைத் தந்தார் என்றதால், அந்த மெய்ப்பொருளிடம் ஆள் தன்மை உண்டு எனவும், அவர் நம்முடைய தந்தை என்று அழைக்கப்படக் கூடியவர் எனவும் உணர்த்தப்படுகிறது. நாம் கிறிஸ்துவின் மூலம் இப்படிப்பட்ட மெய்யான கடவுளை அறிந்து அவரோடு உறவு கொண்டு அவரில் நிலைத்திருக்கிறோம் என்று நமக்குத் தெரியும் என்பதே யோவான் கூறுகிற உறுதியான காரியங்களில் கடைசியானது.

யோவான் மெய்யான கடவுளைப்பற்றிச் சொல்லுகிறவற்றை இவ்வாறு தொகுத்துக் கூறலாம்.

(i) அவரை அறிகிற அறிவு, இயேசு கிறிஸ்து உலகில் வந்து நமக்கு உணர்வைத் தந்ததனால் கிடைத்துள்ளது.

(ii) இயேசுவில் இருப்பதும் அவரில் இருப்பதும் ஒன்று தான்; அதாவது இயேசுவோடு உறவு கொள்வதனால், கடவுளோடு உறவு கொள்கிறோம்.

(iii) இந்த உறவே நித்திய ஜீவன் (யோ.17^3 காண்க).

மெய்ப்பொருளானவர் இந்தச் சொல் கிரேக்கத் தத்துவ சாஸ்திரிகளாலும் அறிவு நெறிக் கொள்கையினராலும் அதிகமாய்ப் பயன்படுத்தப்பட்டது. என மேலே

பார்த்தோம். அது பழைய ஏற்பாட்டின் கிரேக்கத் திருப்புதலிலும் இடம் பெற்றது என்பது கவனிக்கத் தக்கதாகும். அதனால் அதில் யூத வேதசாஸ்திரக் கருத்தும் இருந்தது. அதன்படி, உலக வரலாற்றின் அரங்கில் தம்மை வெளிப்படுத்திய கடவுள் உண்மையுள்ளவர், நம்பிக்கைக்குரியவர் என்றும் அவரைப் பார்க்கிலும் வேறு தெய்வங்கள் வீணும் பொய்யுமானவை என்றும் உணர்த்தும் படி இச்சொல் பயன்படுத்தப்பட்டது (யாத். 34[6], ஏசா. 65[16]). இந்த வசனத்தில் இந்தக் கருத்துக்களும் யோவானின் மனதில் இருந்திருக்கலாம்.

1 யோ. 5:21 இறுதி எச்சரிப்பு

யோவான் தமது கடிதத்தை ஓர் எச்சரிப்போடு முடிக்கிறார். அவர் முன் சொன்ன எல்லா ஆலோசனைகளின் உட்கருத்தினை இங்குத் தொகுத்துக் கூறி முடிப்பார் என்று நாம் எதிர்பார்க்கிறோம். ஆயின் இவ் வாக்கியத்தைப் பார்த்தவுடனே நம் மனதில் ஒரு சந்தேகம் எழுகிறது. நாம் விட்டு விலக வேண்டிய விக்கிரகங்கள் யாவை?

சிலர் அதனை எழுத்தின் படி எடுத்துக் கொள்கிறார்கள். அந்த நிருபம் அநேகமாய் ஆசியாவிலுள்ள சபைகளுக்கு எழுதப்பட்டது. ஆசியாவில் ஏராளமான விக்கிரகக் கோயில்கள் இருந்தன. அவற்றில் எபேசுவிலுள்ள தியானா எனும் தேவியின் கோயில் மிகப் பெயர் பெற்றது. அந்தச் சமுதாயத்தில் விக்கிரக ஆராதனையும் அதனோடு சம்பந்தமான பழக்கவழக்கங்களும் மிகவும் பரவலாக இருந்தன. எனவே அங்குள்ள கிறிஸ்தவர்கள் அதில் பங்குபெற இழுக்கப்பட்டிருக்கலாம். இப்படி நோக்கும் போது, யோவான் இங்குத் தம் அன்பான சபையாரைப் பார்த்து அஃதெல்லாவற்றையும் விட்டு ஓடுங்கள் என்று

எச்சரிப்பது ஒருவாறு பொருத்தமாகக் காணப்படுகிறது. எனினும் யோவான் முன்னுல் கூறியதிலிருந்து அத் தகைய சோதனை அங்குள்ள சபையாருக்கு ஒரு பெரிய பிரச்னையாயிருந்ததாகத் தோன்றவில்லை. யோவான் கடைசியிலே அதனைக் குறிப்பிடுகிருர் எனில், இந்த வச னத்திற்கும் முன்னுல் தந்த போதனைக்கும் தொடர்பு இல்லை என்றே நாம் சொல்லல் வேண்டும்.

இந்தக் காரணங்களினுல்: இங்கே கூறப்படுகிற விக்கிரகங்களை வேறு பொருளில் கொள்வது தகும். வேதத் தில் விக்கிரகம் என்னும் சொல் மரத்தினுலாவது கல்லினு லாவது செய்யப்பட்ட ஒரு சிலையை மட்டும் குறிக்காது. எந்தப் பொய்யான தெய்வமும் ஒரு விக்கிரகம்; நாம் நமது வாழ்க்கையில் எதற்கு முதல் இடம் (அதாவது கடவுளுக்குத் தர வேண்டிய இடம்) கொடுக்கிருேமோ, அது ஒரு விக்கிரகம்; மெய்யான கடவுளுக்குப் பதிலாக நாம் எதனை வணங்குகிருேமோ, அது ஒரு விக்கிரகம். யோவான் இந்த நிருபத்தில் கடவுளைப் பற்றிய தவருன எண்ணங்களைக் கண்டித்துக் கொண்டே இருக்கிருர். ஏனெனில் அவை மனிதர் தங்கள் சொந்த ஞானத்தினுல் உண்டாக்கிக் கொண்டவை; அவற்றைக் ஏற்றுக் கொண்ட வர்கள் மெய்யான கடவுளை விட்டு விலகி வழி தவறும்படி இழுக்கப்படுகின்றனர். முந்திய வசனத்தில் மெய்யான கடவுளைக் குறிப்பிட்ட யோவான், தவருன இந்தக் கொள்கைகள் நம்மை அவருக்கு நேராய் வழி நடத்தக் கூடியவை அல்ல, அவை கூறுகிற தெய்வம் விக்கிரகம் தான், அதனையும் வேறெந்த விக்கிரகத்தையும் விட்டு விலகி உங்களைக் காத்துக் கொள்ளுங்கள் என எச்சரிக் கிருர். இப்படி எடுத்துக் கொள்ளும் போது இந்த வசனம் யோவான் முழு நிருபத்திற்கும் பொருத்தமான ஒரு முடிவாகக் காணப்படுகிறது.

நமக்கும் இது பொருத்தமான செய்தியைத் தருகிறது. இந்த நாட்களில் இந்து மதம் மறுமலர்ச்சியுற்றுக் கிறிஸ்தவக் கருத்திற்கு ஒத்த பல கொள்கைகளைக் கைக்கொண்டிருக்கிறது. அதனால் இந்துக்களோடு பழகுகிற கிறிஸ்தவர்களுக்கு மனக் குழப்பமும் சந்தேகமும் ஏற்படுகிறது. சிலர் இதனால் வஞ்சிக்கப்பட்டு, ''நம் கருத்துக்களுக்கும் அவர்கள் கருத்துக்களுக்கும் வேறுபாடில்லை, அவர்கள் சொல்லுகிறபடியே எல்லா மதங்களும் ஒன்றுதான்'' என்று முடிவு செய்து அவர்களோடு ஒத்துப்போகின்றனர். ஆயினும் சற்று ஆழமாக ஆராயுங்கால் அவர்கள் கருத்துக்கள் முற்றிலும் வேறுபட்ட அடிப்படையில் அமைந்துள்ளன என்று தெரியவருகிறது. ஆகவே நாம் இந்துக்களோடு பழகவேண்டாம் என்று சொல்வதற்கு இல்லை; அவர்களோடு பழகுவது மிக அவசியம். மற்றபடி அவர்களுக்குச் சாட்சி பகர முடியாது. எனினும் அப்படிப் பழகும்போது, 'எது மெய், எது பொய், எது கிறிஸ்துவின் உண்மைக்கு மாறானது, எது ஏற்றுக்கொள்ளக்கூடியது' என்று பகுத்தறிந்து, நம்மை அவர்களது வழிக்கு இழுக்கப்பட விட்டுவிடக்கூடாது. கடவுளைப் பற்றிய தவறான எண்ணங்களுக்கும் கடவுளைத் தவறான முறையில் வழிபடுவதற்கும் விலகி, நம்மைக் காத்துக்கொள்ளல் வேண்டும் என்று யோவான் நம்மையும் எச்சரிக்கிறார்.

யோவான் எழுதிய
இரண்டாம், மூன்றும் நிருபங்கள்

யோவானின் மூன்று நிருபங்களும் ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டன என்பதற்கு, அவற்றின் உரை நடையும் கருத்தொற்றுமையும் சான்றுகள் ஆகும். மேலும் முதலாம் இரண்டாம் நிருபங்களில் சபையில் ஒரே விதமான சூழ்நிலை காணப்படுகிறபடியால், அவை ஏறக்குறைய ஒரே காலத்தில் எழுதப்பட்டன எனவும் கூறலாம் (முகவுரை பக்கம் 2 காண்க). முதலாம் நிருபம் ஆசியாவிலுள்ள சபைகளுக்கு எழுதப்பட்ட ஒரு பொதுவான நிருபமாகக் கருதப்படுகிறது. அதிலே யோவான், சபையில் தோன்றிப் பின் சபையைவிட்டு வெளியேறின கள்ளப் போதகரைக் குறித்து அங்குள்ள சபையாரை எச்சரிக்கிருர். இரண்டாம் நிருபம் ஒரு தனிச் சபைக்கு எழுதப்பட்டதாகத் தெரிகிறது. அதிலும் யோவான் பல இடங்களில் பரவியிருந்த கள்ளப் போதனையைக் குறித்து எச்சரிக்கிருர், எனினும் அந்த கள்ளப் போதனையும் அதனைப் பரப்பி வந்த போதகர்களும் அந்தச் சபைக்கு இன்னும் வந்தெட்டவில்லையாம். ஆகவே யோவான் அந்த ஆபத்து அங்கே வரும்போது சபையார் எப்படி நடந்து கொள்ளல் வேண்டும் என்பதைப் பற்றிச் சில புத்திமதிகளைத் தருகிருர். இரண்டாம் நிருபத்தில் வருகிற கருத்துக்கள் பெரும்பாலும் முதலாம் நிருபத்தில் வந்த கருத்துக்களே.

மூன்ரும் நிருபம் ஆசியாச் சபைகளில் ஒன்றைச் சேர்ந்த ஒரு தனிக் கிறிஸ்தவனுக்கு எழுதப்பட்டது. அவன் பெயர் காயு என்பது. அவன் தன் சபையில் ஓர் அளவு செல்வாக்குள்ளவனுய் இருந்திருத்தல் வேண்டும். அந்தச் சபையில் ஒரு தனிப்பட்ட பிரச்சினே எழுந்திருந் தது. தியோத்திரேப்பு எனும் ஓர் ஆள் யோவானின் அதி காரத்தை எதிர்த்து அவர் அச்சபைக்கு அனுப்பிய தொண்டர்களே விரட்டிவந்தார்போலும். அதனுல் அவ னும் அவனேச் சேர்ந்த கட்சியினரும் அச் சபையைத் தங்கள் வசமாக்கியிருந்தனர் எனலாம். யோவாள் அந்த நிலேயில் காயு எவ்வாறு நடந்துகொள்ளல் வேண்டும் என்று தம் நிருபத்தில் ஆலோசனேயைத் தருகிருர். மூன் ரும் நிருபத்தில் முதல் இரண்டு நிருபங்களிலும் கூறப் பட்ட கள்ளப் போதனேயைப் பற்றி ஒரு குறிப்பும் இல்லே. யோவான் தியோத்திரேப்பு என்பவன் பல தீமைகளேச் செய்து வந்தார் எனச் சொல்லுகிருர், ஆயினும் அவன் கள்ளப் போதகர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவன் எனச் சொல்லவில்லே. ஆகவே மூன்ரும் நிருபத்தில் காணப்படு கிற யோவானுக்கு விரோதமான எதிர்ப்பையும் முதல் இரண்டு நிருபங்களிலும் காணப்படுகிற கள்ளப் போதனே இயக்கத்தையும் தொடர்புபடுத்த இடம் இல்லே.

இந்நிருபங்களேப் பின்வருமாறு பிரிக்கலாம்:

1.	வாழ்த்து	2 யோ.	1-2
2.	புகழுரை	,,	4
3.	அன்பு	,,	5-6
4.	உண்மை	,,	7-11
5.	முடிவுரை	,,	12-13
1.	வாழ்த்து	3 யோ.	1-2
2.	புகழுரை	,,	3-8
3.	ஆலோசனே	,,	9-12
4.	முடிவுரை	,,	13-14

2 யோ. 1-3 வாழ்த்து:

இந்நிருபம் தம்மை மூப்பன் என்று கூறிக் கொள்ளு கிற ஒருவனால் தெரிந்தெடுக்கப்பட்ட அம்மாள் எனப் பட்ட ஒருத்திக்கு எழுதப்படுகிறது. இவ்விரு பெயர்களின் அர்த்தம் என்ன என்பதை ஆராய்வோம்.

மூப்பன் என்கிற சொல் நான்கு விதங்களில் பயன் படுத்தப்படுகிறது:

[அ] பொதுவாக அது வயது சென்றவன் எனப் பொருள்படும் (உ-ம் 1 தீமோ. 5[1]).

[ஆ] ஒவ்வொரு சபையிலும் ஆளுகை செய்யும் குழுவினரும் மூப்பர் என்று அழைக்கப்பட்டனர் (உ-ம் தீத்து [15]).

[இ] அப்போஸ்தலர் காலத்திற்குப் பின் ஆசியாவி லுள்ள சபைகளை மேற்பார்வை இட்ட சில தலைவர்கள் மூப்பர்கள் என்னப்பட்டனர். அவர்களில் மூப்பனாகிய யோவான் என்பவன் ஒருவனாயிருந்தான் (இது ஏறக் குறைய 130ஆம் ஆண்டில் இராப்போலி எனும் ஊரின் அத்தியட்சரான பேப்பியஸ் என்பவர் எழுதிய ஒரு நூலி லிருந்து தெரிய வருகிறது).

[ஈ] அப்போஸ்தலர்களும் சில சமயங்களில் இப்படிக் குறிக்கப்பட்டனர் (உ-ம். 'பேதுரு 5[1]; பேப்பியஸ் என்பவ னின் நூலிலுள்ள சில குறிப்புக்களும் இப்பொருளில் எடுத்துக் கொள்ளப் படலாம்).

தம்மை மூப்பன் என்று குறிக்கிற இந்நிருபங்களின் ஆக்கியோன் பல சபைகளில் அதிகாரமும் மதிப்புமுள்ள ஒரு தலைவனாக எண்ணப்பட்டமையால், மேற்சொன்ன முதல் இரண்டு அர்த்தங்கள் இங்குப் பொருந்தா. மற்ற இரண்டில் எது பொருந்தும் என்று ஆராயுங்கால், இந்த நிருபங்களின் ஆக்கியோன் அப்போஸ்தலனாகிய யோவானு

 G.B. Sathyanesan, B.A.

வேருெருவனு எனும் கேள்விக்கு எப்படி விடை அளிக்கப் படுகிறதோ, அதற்குத் தக்கபடி இதனையும் பற்றித் தீர் மானம் செய்யலாம். எப்படியாயினும், இந்த ஆக்கி யோன் தம்மை மூப்பனுகக் குறிக்கிறுர் என்பதனுல் அவர் அப்போஸ்தலனுயிருக்க முடியாது என்று வாதாட இடம் இல்லை. இந்தக் குறிப்பினை மட்டும் அடிப்படையாக வைத்து, இந்த ஆக்கியோன் அப்போஸ்தலனுகிய யோவான்தானு இல்லையா என்று திட்டமாய் முடிவு செய்ய முடியாது.

'தெரிந்தெடுக்கப்பட்ட அம்மாள்' என்கிற தொட ருக்கும் வியாக்கியானம் பலவாருகத் தரப்பட்டுள்ளது.

[அ] ஆக்கியோன் நமக்குப் பெயர் தெரியாத குறிப் பிட்ட ஒரு கிறிஸ்தவப் பெண்ணை இச்சொற்களைக் கொண்டு குறிக்கிறுர் என்று சிலர் கருதுகிறுர்கள். அப்படி யாயின் 'தெரிந்தெடுக்கப்பட்ட' (அதாவது, கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்ட) என்பதும் 'கிறிஸ்தவ' என்பதும் ஒரே பொருளுடைய சொற்கள் ஆகும்.

[ஆ] மூலத்திலுள்ள கிரேக்கச் சொற்களை வேறுவித மாக மொழி பெயர்ப்பின், இத்தொடர் ஒரு பெண்ணின் பெயராக இருக்கலாம். அதாவது, இச் சொற்களை "தேர்ந் தெடுக்கப்பட்டவள்" 'எனப்பட்ட அம்மாள்' என்றும் 'தேர்ந்தெடுக்கப்பட்டவளாகிய "எஜமாட்டி" என்பவள்' என்றும் திருப்பலாம்.

[இ] வேறு சிலர், ஆக்கியோன் இப்படி ஒரு குறிப் பிட்ட கிறிஸ்தவச் சபையைக் குறிக்கிறுர் என்று விளக் கம் கூறுவர். இதற்குப் பேதுருவும் இப்படி ஒரு சபையைக் குறிக்கிறுர் என்று ஆதாரம் காட்டுவர் (1 பேதுரு 5 [13] மூலத்தின் நேர் பொருள், பாபிலோனில் உடன் தேர்ந் தெடுக்கப்பட்டவள் என்பது; சபை என்ற சொல் மூலத்

தில் இல்லை). மேலும் இந்த அம்மாளைப் பற்றி இந்த நிருபத்தில் கிடைக்கிற மற்ற தகவல்களைக் கவனிக்கும்போது, அவள் ஒரு தனிப் பெண் அல்ல, ஒரு சபைதான் என்று தெரிகிறது (உ-ம் அவள் எல்லோருக்கும் தெரிந்தவள், வ. 2; அவளுக்கு அநேகப் பிள்ளைகள் உண்டு, வ. 4; அதே விதமாகக் குறிக்கப்பட்ட ஒரு சகோதரியும் அவளுக்கு உண்டு, வ. 13). அவள் பிள்ளைகள் அச்சபையின் அங்கத்தினர், அவள் சகோதரி வேறொரு சபை எனக் கொள்ளலாம்.

இந்தக் காரணங்களினால் இத்தொடரை ஒரு சபையைக் குறிப்பதாக எடுத்துக் கொள்வது பொருத்தமாகக் காணப்படுகிறது.

2 யோ. 2 அடுத்தபடியாக யோவான் நான் உங்களில் அன்பு கூறுகிறேன் என்று தாம் இந்தச் சபையோடு கொண்டுள்ள தொடர்பினைக் குறிப்பிடுகிறார். யோவானுக்குமட்டும் அல்ல, வேறெல்லாக்கிறிஸ்தவர்களுக்கும் மிகவும் பிரியமான ஒரு சபை இது. அந்த அன்பின் உறவுக்குச் சத்தியமே காரணமாம். இந்நிருபங்களில் சத்தியம் என்பது கடவுள், மனிதன், மீட்பு இவற்றைப் பற்றிக் கிறிஸ்துவினால் வெளிப்படுத்தப்பட்ட உண்மையைக் குறிக்கிறது. அது நாம் அறிவுக்காக அறிந்து கொள்ள வேண்டிய ஒன்று மட்டும் அன்று, அது நம் வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்பட வேண்டியதும் ஆகும். இங்கே சத்தியமானது எல்லாக் கிறிஸ்தவர்களையும் இந்தச் சபைமேல் அன்பு கொள்ள ஏவுகிறது. அதாவது சத்தியமாகிய கிறிஸ்துவை அறிகிற அறிவு கிறிஸ்தவர்களை ஒருவரோடொருவர் அன்பின் கட்டில் இணைக்கிறது என்று கூறப்படுகிறது. மேலும் கிறிஸ்துவை அறிகிற இந்தச் சத்திய அறிவு நம்மில் நிலைத்திருந்து நம்மைக் கிறிஸ்துவில் காத்து ஆண்டு நடத்துகிறது எனப் பார்க்கிறோம்.

2 யோ. 3 **கிருபையும் இரக்கமும் சமாதானமும்......நம்மோடு நிலைத்திருக்கும்** — இது யோவான் தமது நிருபத்தின் துவக்கத்தில் கூறுகிற வாழ்த்து. இம் மூன்று பெயர்ச் சொற்களும் தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட நிருபங்களில் வருகிற வாழ்த்துக்களிலும் காணப்படுகின்றன. (1 தீ. 1:2; 2 தீ. 1:2). ஆயினும் அங்கு வருகிற வினைச்சொல் 'உண்டாவதாக' என்பதும் இங்கு வருகிறது 'நிலைத்திருக்கும்' என்பதும் ஆகும். அதனால் யோவான் இம்மூன்று காரியங்களும் தமது நிருபத்தை வாசிக்கும் மக்களுக்கு ஏற்கனவே நிலைபேருகக் கிடைத்துள என்று உணர்த்துகிறார் என்பது கவனிக்கத்தக்கது.

கிருபை — இச் சொல் கடவுள் தகுதியில்லாதார்மேல் பாராட்டுகிற அன்பினைக் குறிக்கிறது. கிறிஸ்தவரல்லாத கிரேக்கர்கள் தங்கள் கடிதங்களில் பழக்கமாகக் கூறிவந்த வாழ்த்து இச் சொல்லோடு தொடர்புடையது.

இரக்கம் — இது கடவுள் பாவிகள் மேல் காட்டுகிற பொறுமையையும் திக்கற்ற நிலையிலுள்ளோர்மேல் கொள்கிற அனுதாபத்தையும் குறிக்கிறது.

சமாதானம் — இது கடவுளோடுள்ள உறவில் மனிதனுக்குக் கிடைக்கும் நிறைவான வாழ்வைக் குறிக்கிறது. அக்கால யூதரும், தற்கால இஸ்லாமியரும் கூறுகிற வணக்கம், எபிரேய மொழியில் இப்பொருளில் பயன்பட்ட சொல்லோடு தொடர்புடையது.

பிதாவாகிய கடவுளிடமிருந்தும் ...... இயேசுகிறிஸ்துவினிடமிருந்தும்—இப்படி யோவான் இம்மூன்று பாக்கியங்களின் பிறப்பிடத்தைக் குறிக்கிறார். அவர் பிதாவையும் குமாரனையும் தொடர்புப்படுத்திக் கூறியதால், பிதா எதனைச் செய்கிறாரோ அதனைக் குமாரன்மூலம் செய்கிறார் எனவும், குமாரன் பிதாவோடு ஒத்துழைத்து பிதாவின் சித்தப்படி செயலாற்றுகிறார் எனவும் உணர்த்துகிறார்.

சத்தியத்திலும் அன்பிலும் — இவ் விரு சொற்களில் இந் நிருபத்தின் செம்பொருள் அடங்கியுள்ளது எனலாம். அக்காலச் சபைகளில் கிறிஸ்துவின் நற்செய்தியின் உண்மை கள்ளப் போதகர்களால் தாக்கப்பட்டது; சபையின் ஐக்கியம் அவர்கள் உண்டாக்கிய கலகத்தினுல் சிதைந்துவிட்டது. ஆகவே யோவான் சத்தியத்தையும் அன்பையும் சபையில் நிலைநாட்ட வேண்டும் என்கிற நோக்கத்துடன் எழுதுகிருர். சத்தியத்திலும் அன்பிலும் என்றதின் பொருள் கிருபை, இரக்கம், சாமாதானம் ஆகியவை நம்மோடு நிலைத்திருக்குமேயாகில் அவற்ருேடு சத்தியமும், அன்பும் சபையில் பெருக்கம் எடுத்து வழிந்தோடும் என்பதே.

2. யோ. 4. புகழுரை

யோவானின் காலத்தில் நிருபங்களை எழுதுவோர் தொடக்கத்தில் வணக்கம் சொல்லியபிறகு, தங்கள் நண்பரைக் குறித்துக் கிடைத்த ஒரு நல்ல செய்தியினுல் தாங்கள் அடைந்த மகிழ்ச்சியைத் தெரிவிப்பது வழக்கம். அவ்வாறே யோவான் இங்கு 'நான் மிகவும் சந்தோஷப்பட்டேன்' என்று கூறுகிருர். அவர் சந்தோஷத்திற்குக் காரணம், இந்தச் சபையைச் சேர்ந்தவர்களில் சிலர் சத்தியத்தில் நடக்கிருர்கள் என்கிற செய்தியே. சத்தியத்தில் நடப்பது, கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்ட உண்மைக்குத் தக்கபடி தனது வாழ்க்கையை அமைத்து நடத்துவதாகும் 2 யோ, 3 காண்க). 'உன் பிள்ளைகளில் சிலர்' என்றதால், யோவான் வேறுசிலர் உண்மைக்கு மாருக நடந்துகொள்கிறதைக் கண்டிருந்தார் என்று நாம் உணரக்கூடும். அவர்கள் ஆசியாச் சபைகளில் பரவியிருந்த கள்ளப் போதனையினுல் இழுக்கப்பட்டிருந்தனர் என்று ஊகிக்க இடம்உண்டு. எப்படியாயினும், யோவான் கண்ட இந்தச் சகோதரர் தங்கள் சொந்த ஊரையும் அங்குள்ள சபையையும் விட்டு

விட்டு யோவான் வாழ்ந்த இடத்திற்கு வந்திருந்தனர். அதனால் யோவான் அவர்களைக் கண்டு அவர்களது சொந்தச் சபையாருக்கு அவர்களைப்பற்றிய இந்தச் செய்தியைத் தெரிவிக்கிறார். கள்ளப்போதனையினாலும் ஒழுக்கக்கேடுகளினாலும் நிறைந்த அந்தச் சூழ்நிலையில் சபையின் பிள்ளைகளில் சிலராவது கிறிஸ்துவை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு சாட்சியாய் வாழ்ந்து வந்தது யோவானின் உள்ளத்திற்கு மிக்க மகிழ்ச்சியை அளித்தது எனக் காண்க.

......**நாம் பெற்ற கட்டளைக்கிசைய** — எந்தக் கட்டளை இங்கே குறிக்கப்படுகிறது என்பது சந்தேகத்திற்குரியது. ஏனெனில் நாம் சத்தியத்தில் நடக்கவேண்டும் என்கிற கட்டளையை ஓரிடத்திலும் காணோம். ஒருவேளை யோவான் அன்பினைப்பற்றிய கட்டளையை (1 யோ. 4²¹), அல்லது அன்பினையும் விசுவாசத்தையும் சேர்த்து விதிக்கிற கட்டளையைக் (1 யோ. 3²³) குறிக்கிறார் எனலாம்.

2 யோ. 5-6. 3 அன்பு:

யோவான் சபையாரை ஒருவரில் ஒருவர் அன்புகூர மிக உணர்ச்சியுடன் தூண்டுகிறார். சபையில் கள்ளப் போதனை நுழைந்ததனால் உண்டான முதல் விளைவு அன்புத் தாழ்ச்சியே. அதனை எப்படியும் தவிர்க்கல் வேண்டும் என்பது யோவானின் பேராவல்.

2 **யோ. 5. அம்மாளே** —இச் சொல் இங்கும் சபையைக் குறிக்கிறது (2 யோ. 1 காண்க).

வேண்டிக்கொள்ளுகிறேன் — யோவான் ஆண்டவரால் நியமனம் பெற்ற அப்போஸ்தலனாயிருந்தும் சபையாருக்குக் கட்டளையிடுகிறதில்லை, அன்புடன் வேண்டிக் கொள்ளுகிறார்.

விட்டு யோவான் வாழ்ந்த இடத்திற்கு வந்திருந்தனர். அதனுல் யோவான் அவர்களைக் கண்டு அவர்களது சொந்தச் சபையாருக்கு அவர்களைப்பற்றிய இந்தச் செய்தியைத் தெரிவிக்கிருர். கள்ளப்போதனையினுலும் ஒழுக்கக்கேடுகளினுலும் நிறைந்த அந்தச் சூழ்நிலையில் சபையின் பிள்ளைகளில் சிலராவது கிறிஸ்துவை உறுதியாய்ப் பற்றிக் கொண்டு சாட்சியாய் வாழ்ந்து வந்தது யோவானின் உள்ளத்திற்கு மிக்க மகிழ்ச்சியை அளித்தது எனக் காண்க.

......நாம் பெற்ற கட்டளைக்கிசைய — எந்தக் கட்டளை இங்கே குறிக்கப்படுகிறது என்பது சந்தேகத்திற்குரியது. ஏனெனில் நாம் சத்தியத்தில் நடக்கவேண்டும் என்கிற கட்டளையை ஓரிடத்திலும் காணேம். ஒருவேளை யோவான் அன்பினைப்பற்றிய கட்டளையை (1 யோ. 4[21]), அல்லது அன்பினையும் விசுவாசத்தையும் சேர்த்து விதிக்கிற கட்டளையைக் (1 யோ. 3[23]) குறிக்கிருர் எனலாம்.

2 யோ. 5-6. 3 அன்பு:

யோவான் சபையாரை ஒருவரில் ஒருவர் அன்புகூர மிக உணர்ச்சியுடன் தூண்டுகிருர். சபையில் கள்ளப் போதனை நுழைந்ததனுல் உண்டான முதல் விளைவு அன்புத் தாழ்ச்சியே. அதனை எப்படியும் தவிர்க்கல் வேண்டும் என்பது யோவானின் பேராவல்.

2 யோ. 5. அம்மாளே —இச் சொல் இங்கும் சபையைக் குறிக்கிறது (2 யோ. 1 காண்க).

வேண்டிக்கொள்ளுகிறேன் — யோவான் ஆண்டவரால் நியமனம் பெற்ற அப்போஸ்தலனுயிருந்தும் சபையாருக்குக் கட்டளையிடுகிறதில்லை, அன்புடன் வேண்டிக் கொள்ளுகிருர்.

நான் இதை ஒரு புதிய கற்பனையாக எழுதாமல்......... யோவான் தாம் செய்த வேண்டுகோளுக்கு ஆதாரம் காட்டுகிறார். அன்புகூரவேண்டும் என்பது, யோவான் தாமே புதிதாகப் பிறப்பித்த ஒரு கட்டளை அன்று. இயேசுவிடமிருந்து உலகத்தில் இருந்த ஆதிகாலத்தில் தாமே தந்தருளிய கட்டளையாகும் (1 யோ. 2^{7}, 3^{11} காண்க).

2 யோ. 6 ஒருவரில் ஒருவர் அன்புகூரவேண்டும் எனக் கூறிய யோவான் இப்போது அன்பு இன்னதென்று விளக்குகிறார். அன்பு கடவுளின் கட்டளைகளின்படி நடப்பதே ஆகும். யோவான் முந்திய வசனத்தில் சகோதரர் மேல் வைத்த அன்பைப்பற்றிப் பேசினார். ஆயினும் இங்கே கடவுள் மேல் வைத்த அன்பைக் குறிப்பிடுகிறார்போலும் (1 யோ. 5^{3} காணக). அல்லது இதனைச் சகோதரர் மேல் வைத்த அன்பு, கடவுள் மேல் வைத்த அன்பு இந்த இரண்டிற்கும் பொதுவான ஒரு விளக்கமாக எடுத்துக்கொள்ளலாம். ஏனெனில் அடிப்படையில் இவ்விரண்டும் ஒன்றுதான். அவற்றைப் பிரிக்கமுடியாது. இரண்டிற்கும் கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வது சிறந்த பகுதி ஆகும்.

......அதில் நடக்கவேண்டும் என்பதே இந்தக் கற்பனை- 'அதில்' என்பது 'அன்பில்' என்று பொருள்படுகிறது. அன்பு கடவுளின் கட்டளைகளின்படி நடப்பது எனில், அவர் கட்டளைகள் யாவை என்கிற கேள்விக்கு யோவான் இவ்வாறு விடை அளிக்கிறார். நாம் அன்போடு வாழ்தல் வேண்டும் என்பதே அவற்றில் பிரதானமானது என்கிறார்.

2 யோ. 7-11. உண்மை:

அன்பும், உண்மையும் இந்நிருபத்தின் செம்பொருள் ஆகும் என்பதை நாம் முன்னாலே கவனித்தோம் (2யோ.3).

நான் இதை ஒரு புதிய கற்பனையாக எழுதாமல்......... யோவான் தாம் செய்த வேண்டுகோளுக்கு ஆதாரம் காட்டுகிறார். அன்புகூரவேண்டும் என்பது, யோவான் தாமே புதிதாகப் பிறப்பித்த ஒரு கட்டளை அன்று. இயேசுகிறிஸ்து உலகத்தில் இருந்த ஆதிகாலத்தில் தாமே தந்தருளிய கட்டளையாகும் (1 யோ. 2[7], 3[11] காண்க).

2 யோ. 6 ஒருவரில் ஒருவர் அன்புகூரவேண்டும் எனக் கூறிய யோவான் இப்போது அன்பு இன்னதென்று விளக்குகிறார். அன்பு கடவுளின் கட்டளைகளின்படி நடப்பதே ஆகும். யோவான் முந்திய வசனத்தில் சகோதரர் மேல் வைத்த அன்பைப்பற்றிப் பேசினார். ஆயினும் இங்கே கடவுள் மேல் வைத்த அன்பைக் குறிப்பிடுகிறார்போலும் (1 யோ. 5[3] காணக). அல்லது இதனைச் சகோதரர் மேல் வைத்த அன்பு, கடவுள் மேல் வைத்த அன்பு இந்த இரண்டிற்கும் பொதுவான ஒரு விளக்கமாக எடுத்துக்கொள்ளலாம். ஏனெனில் அடிப்படையில் இவ்விரண்டும் ஒன்று தான். அவற்றைப் பிரிக்கமுடியாது. இரண்டிற்கும் கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வது சிறந்த பகுதி ஆகும்.

......அதில் நடக்கவேண்டும் என்பதே இந்தக் கற்பனை- 'அதில்' என்பது 'அன்பில்' என்று பொருள்படுகிறது. அன்பு கடவுளின் கட்டளைகளின்படி நடப்பது எனில், அவர் கட்டளைகள் யாவை என்கிற கேள்விக்கு யோவான் இவ்வாறு விடை அளிக்கிறார். நாம் அன்போடு வாழ்தல் வேண்டும் என்பதே அவற்றில் பிரதானமானது என் கிறார்.

2 யோ. 7-11. உண்மை:

அன்பும், உண்மையும் இந்நிருபத்தின் செம்பொருள் ஆகும் என்பதை நாம் முன்னாலே கவனித்தோம் (2யோ.3).

யோவான் அன்பைப்பற்றிச் சுருக்கமாகப் பேசியிருக்கிறார் (2யோ. 5-6). இப்பொழுது அவர் உண்மையையும் அதனை எதிர்த்த பொய்யையும் பற்றிப் பேசுகிறார். இந்தப் பகுதிக்கும் 1யோ.2^{18-28}, 4^{1-6} ஆகிய பகுதிகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மூன்றிலும் யோவான் ஒரே வகையான கள்ளப் போதனையைக் குறிக்கிறார். 1யோ. 2^{19}-இல் யோவான் அந்தப்போதகர் சபையைவிட்டு வெளியேறியிருக்கிறார் எனக் கூறினார். ஆயினும் யோவான் இங்கே குறிப்பிடுகிற சபைக்கு அவர்கள் இன்னும் வரவில்லை என்றும், இந்தச் சபையாருக்கு அவர்கள் நேரடியாகத் தெரியவில்லை என்றும் தோன்றுகிறது (2 யோ. 10 காண்க).

2யோ. 7 முதலில் யோவான் ஒரு வஞ்சகக் கூட்டத்தினர் உலகில் தோன்றி இருக்கிறார்கள் என்றும், அவர்கள் அநேகர் என்றும் சொல்லுகிறார். அவர்கள் எப்படி வஞ்சகராயிருக்கின்றனரெனில் அவர்கள் இயேசு கிறிஸ்து மெய்மனிதனாக வாழ்ந்தார் என்கிற உண்மையை மறுக்கிறார்கள் (1 யோ. 2^{22},4^{2} காண்க). அதனால் யோவான் அவர்களை அந்திக்கிறிஸ்துவாகவும் அழைக்கிறார் (1 யோ. 2^{26}, 4^{6}-வஞ்சகர்: 1 யோ. 2^{22}, 4^{3}-அந்திக்கிறிஸ்து).

மாம்சத்தில் வருபவரான இயேசு கிறிஸ்து — இதனை 1 யோ. 4^{2} ஓடு ஒப்பிடும் போது, ஒன்றில் வந்தவர் என்பதும் மற்றொன்றில் வருபவர் என்பதும் வருகிறபோதிலும், கருத்து இரண்டிலும் ஒன்றுபோல் காணப்படுகிறது. இந்தக் கள்ளப்போதகர்கள் அறிவுநெறிக் கொள்கையயின் அடிப்படையில், 'தெய்வீக ஆளாகிய கிறிஸ்து வேறு, மனிதனாகிய இயேசு வேறு' எனக் கூறினர். மேலும் ஆவிக்கும் மாம்சத்திற்கும் தொடர்பு ஏற்பட முடியாது என்பதனால், அந்தக் கிறிஸ்து மனித உருவத்தையும், மனித ஆள் தன்மையையும் எடுத்துக்கொண்டு உலகத்தில்

யோவான் அன்பைப்பற்றிச் சுருக்கமாகப் பேசியிருக்கிறார் (2யோ. 5-6). இப்பொழுது அவர் உண்மையையும் அதனை எதிர்த்த பொய்யையும் பற்றிப் பேசுகிறார். இந்தப் பகுதிக்கும் 1யோ.2^{18-28}, 4^{1-6} ஆகிய பகுதிகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மூன்றிலும் யோவான் ஒரே வகையான கள்ளப் போதனையைக் குறிக்கிறார். 1யோ. 2^{19}-இல் யோவான் அந்தப்போதகர் சபையைவிட்டு வெளியேறியிருக்கிறார் எனக் கூறினார். ஆயினும் யோவான் இங்கே குறிப்பிடுகிற சபைக்கு அவர்கள் இன்னும் வரவில்லை என்றும், இந்தச் சபையாருக்கு அவர்கள் நேரடியாகத் தெரியவில்லை என்றும் தோன்றுகிறது (2 யோ. 10 காண்க).

2யோ. 7 முதலில் யோவான் ஒரு வஞ்சகக் கூட்டத்தினர் உலகில் தோன்றி இருக்கிறார்கள் என்றும், அவர்கள் அநேகர் என்றும் சொல்லுகிறார். அவர்கள் எப்படி வஞ்சகராயிருக்கின்றனரெனில் அவர்கள் இயேசு கிறிஸ்து மெய்மனிதனாக வாழ்ந்தார் என்கிற உண்மையை மறுக்கிறார்கள் (1 யோ. 2^{22},4^{2} காண்க). அதனால் யோவான் அவர்களை அந்திக்கிறிஸ்துவாகவும் அழைக்கிறார் (1 யோ. 2^{26}, 4^{6}-வஞ்சகர்: 1 யோ. 2^{22}, 4^{3}-அந்திக் கிறிஸ்து).

மாம்சத்தில் வருபவரான இயேசு கிறிஸ்து — இதனை 1 யோ. 4^{2} ஓடு ஒப்பிடும் போது, ஒன்றில் வந்தவர் என்பதும் மற்றொன்றில் வருபவர் என்பதும் வருகிறபோதிலும், கருத்து இரண்டிலும் ஒன்றுபோல் காணப்படுகிறது. இந்தக் கள்ளப்போதகர்கள் அறிவுநெறிக் கொள்கையையின் அடிப்படையில், 'தெய்வீக ஆளாகிய கிறிஸ்து வேறு, மனிதனாகிய இயேசு வேறு' எனக் கூறினர். மேலும் ஆவிக்கும் மாம்சத்திற்கும் தொடர்பு ஏற்பட முடியாது என்பதனால், அந்தக் கிறிஸ்து மனித உருவத்தையும், மனித ஆள் தன்மையையும் எடுத்துக்கொண்டு உலகத்தில்

வந்தார் என மறுத்தனர். அதனால், இயேசு கடவுளை நிறைவாக வெளிப்படுத்தமுடியாது, அவர் சிலுவை மரணம் நம்மைக் கடவுளோடு ஒப்புரவாக்கவில்லை என்றாயிற்று.

2 யோ. 9. இந்த வசனத்தில் அந்தக் கள்ளப் போதகரைப் பற்றி இன்னும் சில காரியங்கள் தெரிய வருகின்றன:

[அ] அவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கவில்லை. கிறிஸ்துவின் போதனை என்பது, மனிதனாக உலகத்தில் பிறந்து வாழ்ந்து சிலுவையில் மரணம் அடைந்து உயிர்த்தெழுந்த இயேசுவே கிறிஸ்து என்கிற சத்தியத்தைக் குறிக்கிறது. இவர்கள் அதனை மறுத்ததனால் கிறிஸ்தவ நற்செய்தியை முற்றிலும் ஒழித்து விட்டனர் எனலாம்.

[ஆ] அவர்கள் அந்த மெய்ப் போதனைக்கு மிஞ்சிப் போயினர். இதன் பொருள், அவர்கள் முன்னேறிச் செல்லவும் முற்போக்காளராய் விளங்கவும் ஆர்வம் கொண்டனர் என்பதாம். அவர்கள், அப்போஸ்தலர் ஆதியிலே கொண்டு வந்த நற்செய்தியினால் திருப்தி அடையாமல், அதனைக் கிரேக்கத் தத்துவக் கருத்துக்களோடு தொடர்புபடுத்தி அதற்கு மாறான பல கொள்கைகளை அதனோடு இணைக்க முற்பட்டனர். புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்றதாக நற்செய்தியைப் புதிய முறைகளில் விளக்குவது தன்னில் தானே தவறன்று, அது அவசியமே. யோவான் தமது நற்செய்தி நூலிலும், பவுல் தம் நிருபங்களிலும் அப்படியே செய்தனர். எனினும் அப்படிச் செய்கையில், வேறு உருவத்தில் ஆயினும் நற்செய்தியின் அடிப்படையான உண்மைகளைக் காத்துக் கொள்ளல் வேண்டும். இங்குக் குறிக்கப்பட்ட போதகர் அப்படிச் செய்யாமையே மகா தவறு.

[இ] அதன் விளைவாக அவர்கள் கடவுளையும் அவருடைய குமாரனையும் இழந்து விட்டார்கள். கடவுளோ

வந்தார் என மறுத்தனர். அதனால், இயேசு கடவுளை நிறைவாக வெளிப்படுத்தமுடியாது, அவர் சிலுவை மரணம் நம்மைக் கடவுளோடு ஒப்புரவாக்கவில்லை என்றாயிற்று.

2 யோ. 9. இந்த வசனத்தில் அந்தக் கள்ளப் போதகரைப் பற்றி இன்னும் சில காரியங்கள் தெரிய வருகின்றன:

[அ] அவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கவில்லை. கிறிஸ்துவின் போதனை என்பது, மனிதனாக உலகத்தில் பிறந்து வாழ்ந்து சிலுவையில் மரணம் அடைந்து உயிர்த்தெழுந்த இயேசுவே கிறிஸ்து என்கிற சத்தியத்தைக் குறிக்கிறது. இவர்கள் அதனை மறுத்ததனால் கிறிஸ்தவ நற்செய்தியை முற்றிலும் ஒழித்து விட்டனர் எனலாம்.

[ஆ] அவர்கள் அந்த மெய்ப் போதனைக்கு மிஞ்சிப் போயினர். இதன் பொருள், அவர்கள் முன்னேறிச் செல்லவும் முற்போக்காளராய் விளங்கவும் ஆர்வம் கொண்டனர் என்பதாம். அவர்கள், அப்போஸ்தலர் ஆதியிலே கொண்டு வந்த நற்செய்தியினால் திருப்தி அடையாமல், அதனைக் கிரேக்கத் தத்துவக் கருத்துக்களோடு தொடர்புபடுத்தி அதற்கு மாறான பல கொள்கைகளை அதனோடு இணைக்க முற்பட்டனர். புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்றதாக நற்செய்தியைப் புதிய முறைகளில் விளக்குவது தன்னில் தானே தவறன்று, அது அவசியமே. யோவான் தமது நற்செய்தி நூலிலும், பவுல் தம் நிருபங்களிலும் அப்படியே செய்தனர். எனினும் அப்படிச் செய்கையில், வேறு உருவத்தில் ஆயினும் நற்செய்தியின் அடிப்படையான உண்மைகளைக் காத்துக் கொள்ளல் வேண்டும். இங்குக் குறிக்கப்பட்ட போதகர் அப்படிச் செய்யாமையே மகா தவறு.

[இ] அதன் விளைவாக அவர்கள் கடவுளையும் அவருடைய குமாரனையும் இழந்து விட்டார்கள். கடவுளோ

டுள்ள தொடர்பு இயேசுவே தேவகுமாரன் என்கிற விசுவாசத்தில் அமைந்துள்ளது. அந்த விசுவாசச் சத்தியத்தை மறுக்கிறவன் எவனும் கடவுளின் அன்பையும் உறவையும் பெற முடியாது. இக்கள்ளப் போதகரது நிலை அதுவே (1 யோ. 2^{22-23} காண்க).

2 யோ. 8. இதனால்தான் யோவான் இவ்வளவு கண்டிப்பாக அந்தச் சபையாரை எச்சரிக்கிறார். அவர்கள் அந்தக் கள்ளப் போதகரால் வஞ்சிக்கப்படாதபடிக்கு மிகவும் கவனமாயிருத்தல் வேண்டும். கள்ளப் போதகர்களது வலையில் அகப்பட்டால், சபையாரும் கடவுளை இழந்து விடுவர்; அவர்கள் இதுவரையிலும் கிறிஸ்தவ வாழ்க்கையில் எடுத்துக் கொண்ட எல்லா முயற்சிகளும் வீணாய்ப்போகும்; இறுதி நாளில் அவர்கள் ஆவலோடு எதிர்பார்க்கிற பிரதிபலனாகிய கிறிஸ்துவின் நேரடியான தரிசனத்தை அவர்கள் பெற்றுக் கொள்வதில்லை (1 யோ. 2^{28},3^{1-2}).

2 யோ. 10. இத்தகைய பேராபத்தான சூழ்நிலையில் சபையார் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி யோவான் இங்குச் சில செயல் முறைக்கான ஆலோசனைகளைத் தருகிறார். உண்மையான நற்செய்திக்கு மாறாகப் போதிக்கிறவர்கள் வரின், அவர்களை வீட்டில் ஏற்றுக் கொள்ளவும் வேண்டாம், அவர்களுக்கு வணக்கங் கூறவும் வேண்டாம் என்கிறார்.

இதனால், இந்தப் போதகர் முதலில் தோன்றிய சபையை விட்டு வெளியேறியபின், அவர்கள் வேறு பல சபைக்குச் சுற்றித் திரிந்து, தங்கள் போதனையைப் பரப்பி வந்தனர் எனத் தெரிகிறது. யோவான் 'உங்களிடம் வந்தால்' என்றதால், அவர்கள் இன்னும் அச்சபைக்கு வரவில்லை என்று ஊகிக்கலாம். அவர்கள் வந்து பிரசாரம் செய்வதைத் தடுக்கும்படி, யோவான் இங்குக் கூறுகிற

டுள்ள தொடர்பு இயேசுவே தேவகுமாரன் என்கிற விசுவாசத்தில் அமைந்துள்ளது. அந்த விசுவாசச் சத்தியத்தை மறுக்கிறவன் எவனும் கடவுளின் அன்பையும் உறவையும் பெற முடியாது. இக்கள்ளப் போதகரது நிலை அதுவே (1 யோ. 2^{22-23} காண்க).

2 யோ. 8. இதனால்தான் யோவான் இவ்வளவு கண்டிப்பாக அந்தச் சபையாரை எச்சரிக்கிறார். அவர்கள் அந்தக் கள்ளப் போதகரால் வஞ்சிக்கப்படாதபடிக்கு மிகவும் கவனமாயிருத்தல் வேண்டும். கள்ளப் போதகர்களது வலையில் அகப்பட்டால், சபையாரும் கடவுளை இழந்து விடுவர்; அவர்கள் இதுவரையிலும் கிறிஸ்தவ வாழ்க்கையில் எடுத்துக் கொண்ட எல்லா முயற்சிகளும் வீணாய்ப்போகும்; இறுதி நாளில் அவர்கள் ஆவலோடு எதிர்பார்க்கிற பிரதிபலனாகிய கிறிஸ்துவின் நேரடியான தரிசனத்தை அவர்கள் பெற்றுக் கொள்வதில்லை (1 யோ. $2^{28}, 3^{1-2}$).

2 யோ. 10. இத்தகைய பேராபத்தான சூழ்நிலையில் சபையார் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி யோவான் இங்குச் சில செயல் முறைக்கான ஆலோசனைகளைத் தருகிறார். உண்மையான நற்செய்திக்கு மாறாகப் போதிக்கிறவர்கள் வரின், அவர்களை வீட்டில் ஏற்றுக் கொள்ளவும் வேண்டாம், அவர்களுக்கு வணக்கங் கூறவும் வேண்டாம் என்கிறார்.

இதனால், இந்தப் போதகர் முதலில் தோன்றிய சபையை விட்டு வெளியேறியபின், அவர்கள் வேறு பல சபைக்குச் சுற்றித் திரிந்து, தங்கள் போதனையைப் பரப்பி வந்தனர் எனத் தெரிகிறது. யோவான் 'உங்களிடம் வந்தால்' என்றதால், அவர்கள் இன்னும் அச்சபைக்கு வரவில்லை என்று ஊகிக்கலாம். அவர்கள் வந்து பிரசாரம் செய்வதைத் தடுக்கும்படி, யோவான் இங்குக் கூறுகிற

முன்ற சிறந்தது. ஏனெனில் சபையில் ஒருவரும் அவர்களை வரவேற்று உபசரிக்காவிடில், அவர்கள் அங்குத் தங்க முடியாமல் உடனே அடுத்த ஊருக்குக் கடந்து செல்லல் வேண்டும். 3 யோ. 5-8, 12 காண்க).

2 யோ. 11.யோவான் மேற்சொல்லிய ஆலோசனைக்கு ஆதாரம் காட்டுகிறார். ஒருவன் அந்தப் போதகருக்கு உதவி செய்யின், அல்லது அவர்களுக்கு வணக்கங் கூறிச் சற்றேனும் ஆதரவு காட்டி ஊக்குவிப்பின், அவன் அவர்களுடைய கிரியைகளில் பங்குள்ளவனாக எண்ணப்படுவான்; அவர்களது குற்றம் அவன் மேலும் சுமரும்.

நாம் இந்த இரண்டு வசனங்களைப் படிக்கும்போது, நமது மனதில் ஒரு சந்தேகம் ஏற்படும். யாதெனில் யோவான் இங்குக் கூறுகிற ஆலோசனை அவர் முன்னால் அன்பைப் பற்றித் தந்த போதனைக்கு எவ்வாறு பொருந்தும்? இந்தக் கள்ளப் போதகருக்கு ஒரு வார்த்தையைக் கூடச் சொல்லாமல் அவர்களைப் புறக்கணிப்பது எப்படி அன்பாகக் கருதப்பட முடியும்? இந்தச் சந்தேகத்திற்குப் பின்வருமாறு விடை அளிக்கலாம்.

முதலில், சபையின் நிலை மிக ஆபத்தானது என நாம் உணரல் வேண்டும். சபையார் பெரிய அறிஞர்களோ, கல்விமான்களோ அல்லர். இப்போதுள்ளபடி புதிய ஏற்பாடு ஒரு வழிகாட்டியாக அவர்கள் கையில் இல்லை. இறையியலைப்பற்றிய இந்தவிவாதங்கள் அவர்களுக்கும் புதுமையாகவும் மிகக் கருகலாகவும் தோன்றியிருக்கும். ஆகவே அவர்கள் அந்தப் பொய்யான கொள்கைகளினால் எளிதில் இழுக்கப்பட்டு, வழிதவறிப் போயிருக்கக்கூடும். மேலும் பரவி வந்த தவறான கொள்கைகள் நற்செய்திக்கு நேர் விரோதமானவை. அவற்றை ஏற்றுக்கொண்டவர்கள் கடவுளின் தொடர்பை இழப்பதற்கு ஏதுவானவை, திருச்சபையை முற்றிலும் அழிக்கக்கூடியவை.

இந்நிலையில் அன்பு காட்ட வேண்டிய கடமையை நிறைவேற்றுவதெப்படி? பிறனுக்கு என்னென்ன நன்மையைத் தருமோ, அன்பு அவற்றைத் தேடி அவற்றிற்காகப் போராடும், ஆகவே இந்நிலையில் அன்பு இந்தச் சபையாரை உண்மையில் நிலைநாட்ட முயலும். சபையாரைக் கள்ளப் போதனையினால் இழுத்துக்கொண்டு செல்லப்பட விடுவது அன்பாயிருக்காது. எனினும் கள்ளப் போதனை எனும் தொற்றுநோய் சபையில் பரவாதபடி தடுக்க, கண்டிப்பான நடவடிக்கை தேவை. ஆடுகளில் மெய்யன்பு கொண்ட மேய்ப்பானாகிய யோவான் தம் மந்தையை உண்மைக்குள் காப்பாற்றும்படி அத்தகைய நடவடிக்கையும் எடுக்கத் தயங்கவில்லை என்று இங்கே பார்க்கிறோம். இன்னொரு சமயத்தில் கேடான ஒழுக்கம் என்கிற தொற்றுநோய் சபையில் தலைதூக்கினபோது, பவுலும் கண்டிப்பான நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தயாராயிருந்தார் (1 கொ. 5^{1-8}). நாமும் இத்தகைய தீமைகள் சபையில் வளர்ந்தோங்க இடம் கொடுப்பது அன்பு அன்று என உணர்ந்து கொண்டு, நம் சபைகளை உண்மையிலும் அன்பிலும் காத்துக்கொள்ள அவ்வப்பொழுது இப்படிப் போராடல் வேண்டியதாயிருக்கலாம்.

இன்னுமொரு சிறு சந்தேகம். யோவான் கள்ளப் போதகருக்கு அன்பு காட்டினாரா? கடவுள் அவர்களிலும் அன்பு கூர்ந்தார், அவர்கள் சீர்திருந்தல் வேண்டும் என விரும்பினார். யோவானோ என்னத்தைச் செய்தார்? அவர்களோடு எதிலும் தொடர்புகொள்ளக்கூடாது என்று கட்டளையிட்டு, அவர்களுடைய தவறுகளினால் உண்டாகும் பலனை அனுபவிக்க அவர்களைக் கைவிட்டார். அவர்களை நல்வழிபடுத்த முயற்சி செய்யவில்லை. நாம் இதனை அன்பு என்று கருதமுடியுமா? அன்பு எப்பேர்பட்ட பாவி ஆயினும் ஒருவனையும் கைவிடுவதில்லை; தண்டித்தல் வேண்டுமாயினும் சீர்திருத்தல் வேண்டும் என்கிற நோக்கத்துடன் தண்

டிக்கும் (1 கொ. 5^{8} காண்க), சபை அவ்வளவு நெருக்கடியான நிலையில் இருந்தமையால், யோவான் அவர்களது தலையும் கருத மறந்தாராம்

2 யோ. 12-13. முடிவுரை:

தமிழர் 'மற்ற விசேஷங்களைப்பற்றி நேரில் கண்டு பேசலாம்' என்று தங்கள் கடிதங்களை முடிப்பது போல, யோவான் 'எழுதவேண்டிய பல காரியங்கள் உண்டு எனினும் நான் இப்போது அவற்றை எழுதாமல் நேரில் கண்டு சொல்லலாம் என்று இருக்கிறேன்' எனச் சொல்லி முடிக்கிறார். இதனால் யோவான் பிரயாணம் செய்து அந்தச் சபையைச் சந்திக்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தார் என அறிகிறோம். அப்பொழுது அவர் 2 யோ. 7-11 ஆகிய வசனங்களில் சுருக்கமாகக் கூறப்பட்ட காரியங்களை விரிவாக எடுத்து விளக்குவார் என்று நாம் ஊகிக்கலாம். அவர் அப்படிச் செய்வதால், சபை முழுவதும் அன்பிலும் உண்மையிலும் உறுதியாய் நிலைத்திருந்து கிறிஸ்துவுக்குள் நிறைவான மகிழ்ச்சி அடையும் (1 யோ. 1^{4}, யோ. 15^{11}).

தேர்ந்தெடுக்கப்பட்டவளாகிய உன் சகோதரி — இது இன்னொரு சபையைக் குறிக்கிறது (2 யோ. 1 காண்க). அவள் பிள்ளைகள் அச்சபையின் அங்கத்தினர் ஆவர். அநேகமாக யோவான் அச்சபையில் தங்கி எழுதுகிறார் எனலாம்.

---

3 யோ. 1-2. வாழ்த்து

மூப்பனாகிய நான் — நிருபத்தின் ஆசிரியர் தம்மை மூப்பன் என்று குறிக்கிறார். இச்சொல் ஓர் அப்போஸ்தலனைக் குறிக்கலாம், அல்லது அப்போஸ்தலர் காலத்துக்குப்பின் ஆகிய சபைகளில் தலைவர்களாய் இருந்தவர்களில் ஒருவனைக் குறிக்கலாம் (2 யோ. 1 காண்க). செபதேயுவின் குமாரனாகிய யோவான் அப்போஸ்தலன்

தான் இக் கடிதங்களை எழுதினுர் என நாம் வைத்துக் கொள்வோமேயாஞல் (முகவுரையைக் காண்க), அவர் இங்கே தமது சொந்தப் பெயரை எழுதாமல் தம்மை மூப்பன் என்று மட்டும் குறிக்கிறபடியால், மூப்பன் என்பது அவருக்குரிய ஒரு சிறந்த பட்டப் பெயராக வழங்கியிருக்கலாம் என ஊகிக்க இடம் உண்டு.

காயுவுக்கு - ரோமர் மத்தியில் காயு என்பது ஒரு சாதாரணப் பெயர் தான். புதிய ஏற்பாட்டில் காயு எனப்பட்டவர்கள் பலர் உண்டு. உ-ம். அப். 19^{29}, 20^{4} 1 கொ. 1^{14}; ரோமர் 16^{23}. இன்னும் நான்காம் நூற்ருண்டில் எழுதப்பட்ட கிறிஸ்தவ நூல் ஒன்றில் அப்போஸ்தலஞகிய யோவான் காயு என்னப்பட்ட ஒருவனைப் பெர்கமு எனும் சபைக்கு அத்தியட்சராக நியமித்தார் என்று சொல்லப்படுகிறது. எனினும் இந்தக் காயு அவர்களில் ஒருவன் என்பதற்குச் சான்று இல்லை. இவனைப் பற்றி அறிய இந்த நிருபத்தையே ஆராய்தல் வேண்டும்.

அப்படி ஆராயப் புகின், முதலில் அவன் யோவானுக்கு நெருங்கிய ஒரு நண்பன் என்று இந்த முதலாம் வசனத்தினுல் தெரிய வருகிறது. அவன் யோவானின் ஆத்மீகப் பிள்ளைகளில் ஒருவன் ஆதலால், யோவான் தாமே அவனை இயேசுவினிடம் கொண்டு வந்திருந்தார் எனலாம்(வ. 4). அவன் உண்மையான கிறிஸ்தவனும் சகோதரரை உபசரிக்கும் வாஞ்சையுடையவனுமாயிருந்தான் (வ. 4, 5). அவனது சபையில் யோவானுக்கு விரோதமாக எதிர்ப்பு எழுந்த போதிலும், அவன் யோவான் சார்பில் நிலைத்து நின்ருன்; அதனுல் யோவான் இப்படி அவனுக்கு எழுத முடிந்தது. இஃதெல்லாவற்றையும் பார்க்கும் பொழுது சிலர் அவன் அச்சபையில்

ஒரு பொறுப்பாளியாய், அல்லது ஒரு பெரியவனாய், இருந்தான் என்று முடிவு செய்கின்றனர்.

நான் உண்மையாய் நேசிக்கிற - எழுத்தின்படி, 'நான் உண்மையில் நேசிக்கிற' எனத் திருப்பலாம். அதாவது, 'கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்ட உண்மைக்கு ஏற்றவாறு' என்பது பொருள்.

3 யோ. 2. அக்கால மக்கள் ஒருவருக்கொருவர் எழுதின கடிதங்களில் இத்தகைய ஒரு ஜெபத்தைத் தொடக்கத்தில் சேர்ப்பது வழக்கம். யோவான் இங்குத் தம் நண்பனது ஆன்ம சுகத்தைப் பற்றி மகிழ்ச்சி அடைந்து, அதுபோல அவன் உலகப் பிரகாரமான காரியங்களிலும் சுகமாயிருக்க வேண்டும் என்று ஜெபிக்கிறார்.

உன் ஆத்துமா வாழ்வடைந்திருக்கிறது - மூலத்தின் நேர்ப்பொருள், 'உன் ஆத்துமா நல்ல முறையில் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறது' என்பதாகும். அடுத்த தொடரிலும் அதே வார்த்தை மறுபடியும் வருகிறது,- '...போல நீ எல்லாவற்றிலும் நல்ல முறையில் பிரயாணம் செய்து கொண்டு சுகமாயிருக்கும்படி ...' அது நல்ல நிலையில் இருத்தல் என்று பொருள்படும் ஓர் உருவகம் எனலாம். அது காயுவின் ஆன்மா இவ்வுலகத்தின் வழியாகப் பல சோதனைகளின் மத்தியில் மேல்வீடு நோக்கி யாத்திரை பண்ணுகிற காட்சியை நம் மனக் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது.

3 யோ. 3-8 புகழுரை

இவ்வசனங்களில் யோவான் காயுவின் ஆன்மா சுகமான நிலையில் இருக்கிறது என்று தமக்கு எப்படித் தெரியும் எனச் சொல்லுகிறார். சில கிறிஸ்தவச் சகோதரர்

 G.B. Sathyanesan, B.A.

காயுவின் சபையிலிருந்து அவனைப் பற்றி நல்ல செய்திகளை யோவானிடம் கொண்டு வந்தனராம். யோவான் அதனைக் கேட்டு மிக மகிழ்ச்சி அடைந்ததாகக் கூறுகிறார் (வ.3-4). குறிப்பாக, காயு பிரயாணம் செய்கிற கிறிஸ்தவச் சகோதரரை வரவேற்று உபசரிக்கிறான் என்ற செய்தி யோவானிடம் கிடைத்தது. அதனாலும் அவர் அவனை மெச்சுகிறார் (வ.5-8).

தங்கள் கடிதங்களின் தொடக்கத்தில் தங்கள் நண்பர்களைப் பற்றிக் கிடைத்த செய்திகள் தங்களுக்கு மிக மகிழ்ச்சி அளிக்கின்றன என்றும் கூறுவது அக்காலக்கிரேக்க மக்களுக்கும் இக்காலத் தமிழருக்கும் வழக்கம். யோவான் தம் நண்பனது ஆன்மீக சுகத்தினால் அதிக மகிழ்ச்சி அடைவது கவனிக்கத் தக்கதாகும்.

3 யோ. 3 **நீ சத்தியத்தில் நடக்கிறாய், உன் சத்திய நடக்கை** - யோவானின் மன மகிழ்ச்சிக்கும் அவர் முந்திய வசனத்தில் காயுவின் ஆன்மாவின் நிலையைக் குறித்துச் சொன்ன கூற்றிற்கும் முதல் ஆதாரம். நாம் இங்கே மறுபடியும், உண்மை நாம் அறிந்து கொள்ளக் கூடியது மட்டுமன்று, நாம் செய்ய வேண்டிய ஒன்றாகும் என்று பார்க்கிறோம் (1 யோ. 1[6] முதலியன காண்க). காயு அதனை உணர்ந்து கொண்டு கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்ட உண்மையைத் தனது வாழ்க்கையில் கடைப்பிடித்தான் எனக் காண்க.

இந்த நிருபங்களில் உண்மை என்கிற சொல் வருகிற ஏனைய இடங்களில், அதற்கு நேர்விரோதமான பொய்க் கொள்கைகளும் உண்டு என்றும், அவை அந்த அறிவு நெறிக் கொள்கையினர் பிரசாரம் செய்தவையே என்றும் அதனால் மறைமுகமாக உணர்த்தப்படுகிறது. 2 யோ. 4, 7 காண்க). அப்படி நோக்கும்போது யோவான் இங்கு 'நீ சத்தியத்தில் நடக்கிறாய்' என்றதனால், அதேசபையில்

சத்தியத்தில் நிலைத்திராதவர்களும் இருந்தனர் என நாம் ஊகிக்கலாம். ஆயினும் இத்திருப்பத்தில் கள்ளப் போதகரைப் பற்றியோ அவர்கள் கொள்கைகளைப் பற்றியோ நேரடியான குறிப்பு இல்லை. இந்த வசனம், அத்தகையோர் காயுவின் சபையிலும் செயலாற்றி வந்தனர் என்பதற்குத் தன்னில்தானே போதிய சான்று அன்று.

சகோதரர் வந்து சாட்சி சொன்னபோது - இவர்களும் 5 ஆம், 10 ஆம் வசனங்களில் குறிக்கப்பட்டவர்களும் அதே ஆட்கள் என்று தோன்றுகிறது. அவர்கள் யோவான் தாமே தங்கியிருந்த மைய ஸ்தானத்திலிருந்து புறப்பட்டுப் பல இடங்களுக்குச் சுற்றித் திரிந்து அங்குள்ள சபைகளைப் பற்றிய செய்திகளை யோவானிடம் திரும்பக் கொண்டு போயினர். இவ்வாறு யோவான் அந்தச் சபைகளின் நிலையை அறிந்து கொள்ள முடிந்தது. அல்லாமலும் தமது செல்வாக்கையும் அதிகாரத்தையும் அச்சபைகளின் மேல் செலுத்தி வந்தார். 2 யோ. 7-11 ஆகிய பகுதியில் யோவானுக்கு எதிராகப் பொய்ப் பிரசாரம் செய்து கொண்டு சுற்றித்திரிந்த ஒரு கூட்டத்தினரை நாம் பார்த்தோம். இங்கே யோவான் தாமே உண்மையைப் பரப்புவதற்கு அதே முறையைக் கையாண்டார் எனப் பார்க்கிறோம்.

3 யோ. 4. என் பிள்ளைகள் - யோவான் காயுவைத் தம் பிள்ளைகளின் வரிசையில் சேர்த்ததால், அவன் யோவானால் கிறிஸ்துவினிடம் வழிநடத்தப்பட்டவன் என்று நாம் மேலே குறிப்பிட்டோம் (பிலே. 10 காண்க). வேறு சில அறிஞர் 'என் பிள்ளைகள்' என்பது யோவானின் ஆதீனத்திலுள்ள சபைகளைச் சேர்ந்தவர்களைக் குறிக்கிறது என்று பொருள் கொள்வர்.

அதிகமான சந்தோஷம் எனக்கில்லை - யோவான் இப்படி ஒரு உண்மையான ஆத்மீக மேய்ப்பனின் உள்ளத்தையும் சிந்தையையும் வெளிப்படுத்துகிறார்.

3 யோ. 5. இங்கே காயுவைப் பற்றிய யோவானின் நல்லெண்ணத்திற்கு இரண்டாம் ஒரு காரணத்தை நாம் பார்க்கிறோம். காயு யோவான் அனுப்பிய சகோதரரை வரவேற்று உபசரித்து வந்தான். இவ்வாறு அவன் ஆசியாவிலுள்ள சபைகளை நல்வழியில் நடத்தவும், நற்செய்தியைப் பரப்பவும் யோவானுக்கு உதவி செய்தான். சபை மக்கள் இப்படி யோவானோடு ஒத்துழைக்கவில்லையெனில், சபைகளின் ஒற்றுமை சிதைந்துபோயிருக்கக் கூடும். பல ஒழுங்கீனங்களும், தவறான கொள்கைகளும் கண்டிக்கப்படாமல் சபைகளில் வளர்ந்தோங்கியிருக்கலாம். ஆகவேதான் யோவான் காயு செய்கிற இச் சேவையை மெச்சுகிறார்.

விசுவாசக் கிரியையே — 'பற்றுறுதி காட்டுகிற செயல்' என்பது சரியான மொழிபெயர்ப்பு. காயு இச் சேவை செய்கிறதனால், தான் யோவானுக்கு உண்மையுள்ள சீஷன் என்று காட்டுகிறான்.

3 யோ. 6 யோவான் அனுப்பிய தூதுவர் அவரிடம் திரும்பியபொழுது, சபையின் பொதுக் கூட்டத்தில் தாங்கள் செய்த ஊழியத்தையும் காயு தங்களுக்குத் தந்த வரவேற்பையும் குறித்து எல்லாருக்கும் முன்பாக அறிக்கை செய்தனராம்.

3 யோ. 7 இந்த வசனத்தின் மூலம் நாம் யோவானின் நாடோடிப் பிரசங்கிமாரைப் பற்றி இன்னும் சில காரியங்களை அறியலாம். அவர்கள் பிற மதத்தினரிடம் ஒன்றும் வாங்க மாட்டார்களாம். அந்தக் காலத்தில் பல்வேறு மதங்களைப் பிரசாரம் செய்து வந்த சன்னியாசிகள் இருந்தனர். அவர்கள் பொது மக்களிடம் தர்மம் கேட்டுப் பணம் சேர்த்துக்கொண்டனர். யோவானின் தொண்டர்களோ எல்லாரிடமும் பணம் கேட்காமல் கிறிஸ்தவர்களிடம் மட்டும் வாங்குவர். அதனால் அவர்கள் தங்களை

மாகவும் குறைபாடற்றவராகக் காத்துக்கொள்ள நினைத்த னர். பொய்ப் பிரசாரம் செய்த நாடோடிப் பிரசங்கிமா ரும் கிறிஸ்தவரிடமிருந்தும் வாங்கினரோ என்று நமக்குத் தெரியாது. யோவானின் தொண்டர்கள் அப்படிச்செய்த படியினால் யோவான் இவர்களைப் பாராட்டுகிறான், மற்ற வர்கள் ஒருவேளை அப்படிச் செய்யவில்லை என்று ஊகிக்க லாம். இன்னும் யோவான் இந்தத் தொண்டர்கள் கிறிஸ் துவின் நாமத்தின்பொருட்டாக இந்த ஊழியத்தில் ஈடுபட் டனர் எனக் கூறுகிறார். அதாவது, அவர் நாமத்தின் மகிமை யைத் தங்கள் இலக்காகக் கொண்டு அந்த நாமத்தில் தங்கள் முழு நம்பிக்கையையும் வைத்து ஊழியத்திற்குப் புறப்பட்டிருந்தனர். இயேசு தம்முடைய சீஷருக்குக் கொடுத்த கட்டளைக்கேற்ப அவர்கள் பிரயாணத்திற்கு முன்னேற்பாடு செய்யாமல் கிறிஸ்தவ மக்களிடம் ஆதரவு பெறுவதாக நம்பினர் (மத். 10^{9}, மாற்கு 6^{8-9}).

வழிவிட்டனுப்புவது — மூலத்தில் வருகிற சொல், தொண்டர்களை உபசரிப்பதோடு அவர்களது பயணத் திற்கு வேண்டிய முழுச் செலவுக்கும் பொறுப்பு ஏற்றுக் கொள்வதைக் குறிக்கும். காயு இவ்வளவு செலவு செய்யக் கூடியவனாயிருந்தபடியால், அவன் ஒரு பணக்காரனாயிருந் திருத்தல் வேண்டும் எனலாம்.

நலமாயிருக்கும் —யோவான் எதிர்காலத்தில் பேசுகிற படியால், காயு அவர் அனுப்பும் தொண்டர்களை உபசரிக்க வேண்டிய இன்னொரு தருணம் வருகிறது என்று கொள்ள லாம் (3 யோ. 12 காண்க).

3 யோ. 8. உபசரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் — அந்நி யரை உபசரிக்கும்பொறுப்பு புதிய ஏற்பாட்டில் பல இடங் களில் வலியுறுத்தப்படுகிறது (உ-ம். எபி. 13^{2}). உரோமப் பேரரசில் நிலவி வந்த அமைதியான சூழ்நிலை வியாபாரத் திற்காகவும், வேறுபல காரணங்களுக்காகவும் பயணம்

செய்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பைத் தந்தது. அப்படிப் பயணம் செய்வோரில் பலர் கிறிஸ்தவர்களாயிருந்திருப்பர். இந்த முறையில்தான் கிறிஸ்தவ நற்செய்தி முதன் முதலில் ரோமாபுரிக்கு வந்தெட்டியது என்று ஊகிக்கப் படுகிறது. ஆகவே அந்நியரை உபசரிப்பது கிறிஸ்தவத் திருப்பணியை ஆதரிக்கும் ஒரு சிறந்த முறை.

அப்படிப்பட்டவர்களை — யோவான் எல்லாரையும் வரவேற்றல் வேண்டும் எனச் சொல்லவில்லை. உண்மையில் தங்களைக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்துச் சத்திய சுவிசேஷத்தை எடுத்துக்கூறுபவரே உபசரிக்கத் தக்கவராவர் (2 யோ. 10,11 காண்க).

சத்தியத்திற்கு உடன் ஊழியராகும்படி — சத்தியம் தன்னில் தானே செயலாற்றும் தன்மையுடையது. நாம் பயணம் செய்கிற திருத் தொண்டர்களை உபசரிக்கும் பணியில் பங்கு கொள்வதனால், அந்த சத்தியத்தோடு ஒத்துழைத்து, அது மேன்மேலும் பரவும்படிக்கு உதவிபுரிகிறோம்.

3 யோ. 9-12 ஆலோசனை:

இந்தப் பகுதியில் காயுவின் சபையில் எழுந்த பிரச்சினையைக் குறித்து யோவான் அவனுக்கு ஆலோசனை தருகிறார். அச்சபையின் நிலை என்ன என்பதைப் பற்றி இவ்வசனங்களில் கிடைக்கிற சான்றுகளைக் கொண்டே அனுமானித்தல் வேண்டும்.

3 யோ. 9. சபைக்குச் சிலவற்றைஎழுதினேன் - இங்குக் குறிக்கப்பட்ட நிருபம் யாது என்று நமக்குத் தெரியாது. சிலர் அது ஒரு வேளை யோவான் எழுதிய இரண்டாம் கடிதமாயிருக்கலாம் என நினைக்கக் கூடும். ஆயினும் இந்த நிருபத்தில் வருகிற முக்கியமான பிரச்சினை இரண்டாவ

தில் இடம் பெறவில்லை. இரண்டாவதில் வருகிற முக்கியமான விஷயமாகிய கள்ளப் போதனை இதில் குறிக்கப்படவில்லை. ஆகவே இங்கே யோவான் குறிப்பிடுவது அவரது இரண்டாம் நிருபம் என்று கருத இடமில்லை; இது காணமற் போன ஒன்றாயிருத்தல் வேண்டும். அதில் யோவான் இச்சபையில் காணப்பட்ட ஒழுங்கீனங்களைப் பற்றி எல்லாச் சபையாருக்கும் பொதுப்பட எழுதியிருப்பார் என்று நாம் ஊகிக்கலாம்.

தியோத்திரேப்பு எங்களை ஏற்றுக் கொள்ளுகிறதில்லை — யோவான் சபைக்கு எழுதிய கடிதம் பயன் தரவில்லையாம். அதற்குக் காரணம், தியோத்திரேப்பு என்பவன் அதில் சொல்லப்பட்ட ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. எங்களை என்றதால், தியோத்திரேப்பு யோவான் அனுப்பிய கடிதத்தை அசட்டை செய்ததுடன் யோவனின் அதிகாரத்தையும் புறக்கணித்தான் என்று தெரிய வருகிறது. எவ்வாறு புறக்கணித்தான் என்பது தொடர்ந்து வருகிற வசனங்களில் விளக்கப்படுகிறது.

முதன்மையாயிருக்க விரும்புகிற தியோத்திரேப்பு - சபையிலே எழுந்த குழப்ப நிலைக்கு இந்தத் தியோத்திரேப்புவே காரணன் எனத் தெரிகிறது. யோவானின் அதிகாரத்தைப் புறக்கணிக்க அவனை ஏவினது, முதன்மையாயிருக்க விரும்பிய பேராசை. அத்தகைய போட்டி இயேசுவின் சிஷருள் அவ்வப் பொழுது எழுந்தது. அச்சமயங்களில் இயேசு அதனைக் கடுமையாய்க் கண்டித்தார் (உ-ம் மத். 18^{1-5}, மாற். 10^{35-45}, லூக். 22^{24-27}). இதே நோய் நம் காலத்தில் பல சபைகளில் பரவி எவ்வளவு கேடு உண்டாக்குகிறது என நாம் சொல்ல வேண்டியதில்லை.

3 யோ. 10. இந்த வசனத்தின் அடிப்படையில் நாம் யோவானுக்கு எதிராகத் தியோத்திரேப்பு என்பவன்

என்னத்தைச் செய்தான் என்று தெளிவாகக் காணக் கூடும்.

[அ] அவன் யோவானின் அதிகாரத்திற்கு அடங்க வில்லை. இது 9-ஆம் வசனத்தில் கூறப்படுகிறது.

[ஆ] அவன் யோவானுக்கு விரோதமாய்ப் பொல்லாத வார்த்தைகளை அலப்பினான். இது அவன் அன்பிலும் கிறிஸ்தவ நற்பண்புகளிலும் வளர்ச்சி அடைந்திராத நிலையைச் சுட்டிக் காட்டுகிறது. இப்படிச் செய்கிறதால் அவன் யோவானுக்கு விரோதமாய் எதிர்ப்பு எழுப்பவும் சபையாரைத் தன் பக்கமாக இழுத்துக் கொள்ளவும் முயன்றான்.

[இ] அவன் சகோதரரை ஏற்றுக் கொள்ளவில்லை. அதாவது அவன் யோவான் அனுப்பிய தூதுவர்களைத் தானே ஏற்றுக் கொள்ளவில்லை.

[ஈ] அவன், ஏற்றுக்கொள்ள மனமுடையவர்களைத் தடை செய்தான்.

[உ] அவன், அப்படிப்பட்டவர்களைச் சபைக்குப் புறம்பே தள்ளினான். யோவான் அனுப்பிய தொண்டர்களைக் கொண்டு அவர் சபைகளின்மேல் தமது அதிகாரத்தைச் செலுத்தினார் என்பதை நாம் மேலே கவனித்தோம் (3 யோ. 3). தியோத்திரேப்பு யோவானின் செல்வாக்கைச் சபையிலிருந்து நீக்கி அச்சபையைத் தன்வசப் படுத்த வேண்டுமாயின், அவன் எப்படியும் தொண்டர்கள் அங்கே வராதபடி தடுப்பது அவசியம். அதற்கென அவன் கையாண்ட முறை இது. அவன் தானே அவர்களை ஏற்றுக் கொள்ளாமலிருப்பதோடு, அவர்களை ஏற்றுக் கொள்ள விரும்பிய யோவானின் சார்பாளரைப் பலவாறு பயமுறுத்தி சபைக்கு வெளியே தள்ளினான். யோவானின்

தூதுவர்களைச் சபையில் ஒருவரும் ஏற்றுக் கொள்ளா விடில் அவர்கள் அங்கு வரமுடியாது என்பது அவனுடைய நோக்கம். அவ்வாறு நிறைவேறியிருப்பின் யோவான் அச் சபையின்மேல் தனது அதிகாரத்தைச் செலுத்த முடி யாமற் போய் இருக்கும்; தியோத்திரேப்பு அதில் சர்வாதி காரியாயிருந்திருப்பான்.

யோவான் இந்த நிலையில் எந்த நடவடிக்கை எடுக் கப் போகிறார் என்பதையும் இந்த வசனங்களின் வாயி லாக அறியலாம்:

[அ] கூடுமாயின் அவர் தாமே அந்தச் சபையைச் சந்திப்பார். அப்போது அவர் சபைக்கு முன்பாகத் தியோத்திரேப்பு தமக்கு எதிராகச் செய்கிற காரியங்களை எடுத்துரைத்து அவனைக் கண்டித்து அந்தச் சபையின் மேல் தமது அதிகாரத்தை மறுபடியும் நிறுவ முயல் வார். 'நான் வருவேனாகில்' என்றதால் அங்கே போக முடியுமோ இல்லையோ என அவருக்குத் திட்டமாய்த் தெரியவில்லை போலும். எப்படியும் அந்த ஆசை அவரி டம் இருந்தது என 14ஆம் வசனத்திலிருந்து தெரிய வரு கிறது.

[ஆ] 3 யோ. 11 இப்பொழுது அவர் தம் உண்மை யுள்ள நண்பனாகிய காயுவிடம் சில புத்திமதிகளைக் கூறுகி றார். அந்தச் சபையில் காயுதான் யோவான் சார்பில் உறுதியாய் நின்று அவரை ஆதரிக்கிறவனும். எனவே யோவான் அவனைத் தியோத்திரேப்புவின் கூட்டத்தில் சேராதபடிக்குக் காத்துக்கொள்வது மிகவும் அவசியம். அந்த நோக்கத்துடன் யோவான் 'தீமையானதைப்' பின் பற்றாதே என்று எழுதுகிறார். 'தீமையானது' என்பது தியோத்திரேப்புவின் ஒழுங்கீனமான நடத்தையைக் குறிக் கிறது என்று பொருள்கொள்வது பொருந்தும். அவ்வாறு

நோக்கின், பின்பற்றவேண்டிய நன்மை யோவானுக்கு உண்மையுள்ளவனுகி, அவர் அனுப்பிய சகோதரரை ஏற்றுக்கொள்வதாகும்.

தீமை செய்கிறவன் கடவுளைக் கண்டதேயில்லை - இச்சொற்கள் தியோத்திரேப்புவைப் பற்றி யோவான் கொண்ட எண்ணத்தைக் காண்பிக்கின்றன. அவன் செய்கைகள் அவன் கடவுளை அறியவில்லை என்பதற்குச் சான்ருகும். இவ்வாறு யோவான் தாமே தம் முதல் நிருபத்தில் விளக்கிய பரிசோதனையைக் கொண்டு தியோத்திரேப்புவை மதிப்பிடுகிருர் (1 யோ. 3^{10}).

கடவுளால் உண்டானவன் — இதன் பொருளை அறிய 1 யோ. 3^{8} காண்க.

[இ] 3 யோ. 12. தேமேத்திரியு என்பவன் யோவான் காயுவின் சபைக்கு அனுப்பப்போகிற இன்னொரு தூதுவன் எனத் தோன்றுகிறது. ஒருவேளை அவன்தான் இந்த நிருபத்தைக் காயுவினிடம் கொண்டுவந்தவனுயிருந்திருக்கலாம். எவ்வாருயினும் இவன் மூலமாக யோவான் அச்சபையை நல்வழிப்படுத்த இன்னொரு முயற்சி செய்கிருர். இதனை மனதிற்கொண்டு யோவான் தொண்டர்களை உபசரிக்கும் பணியில் தம்முடன் தொடர்ந்து ஒத்துழைக்கக் காயுவை முன்னுலே ஏவினுர் எனக் கூறலாம் (3 யோ. 7).

இங்குக் குறிப்பிடப்படுகிறதைத் தவிர, தேமேத்திரியு என்பவனைப் பற்றி வேறெதுவும் நமக்குத் தெரியாது. எனினும் இந்த வசனத்தை அடிப்படையாகக்கொண்டு நாம் அவனைச் சிறந்த ஒரு கிறிஸ்தவனுகத் தாராளமாகச் சொல்லலாம். அவன் மூன்று வகைகளில் நற்சாட்சி பெற்றவன்.

(i) எல்லாராலும் - அதாவது, அவனை அறிந்த ஒவ்வொருவரும் அவனைப்பற்றிப் பாராட்டிப்பேசினர்,

(ii) சத்தியத்தினுல் — அவனது முழு வாழ்க்கையும் நடத்தையும் கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்ட உண்மைக்கு இசைந்தனவாக விளங்கின. அதனுல் அவனது வாழ்க்கை தானே 'இவன் சத்தியத்தில் நிலைத்திருக்கிறவன்' என்று பேசினதுபோல் தெரிகிறது.

(iii) யோவானுல் — மூப்பன் என்று எண்ணப்பட்ட யோவானும் அவனைப் பற்றித் தம் சாட்சியைச் சேர்த்துச் சொல்லுகிருர். காயு யோவான் சொல்லுகிறதெல்லாம் உண்மை என்று முன்னமே கற்றுக்கொண்டவன்.

யோவான் ஒருவேளை இந்த நிருபத்தை தேமேத்திரியுவின் கையில் அனுப்பினுர் என மேலே பார்த்தோம். அப்படியாயின், யோவான் அவனைக் காயுவினிடம் சிபாரிசு செய்யல் வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்நிருபத்தை எழுதினுர் எனக் கூறலாம். அக்காலத்தில் பிரயாணிகள் அத்தகைய கடிதங்களைத் தங்கள் கையில் கொண்டு போவது வழக்கம். அது எவ்வளவு அவசியம் என்பது யோவானின் இரண்டாம் மூன்றும் நிருபங்களிலிருந்து தெரியவருகிறது. அவற்றில், அத்தகைய பிரயாணிகள் எல்லாரும் நல்ல நோக்கத்தோடு யாத்திரை செய்யவில்லை என நாம் காண்கிறோம். புதிய ஏற்பாட்டில் வேறு சில இடங்களிலும் சிபாரிசுக் கடிதங்களைக் கொண்டுபோகும் இப்பழக்கம் குறிக்கப்படுகிறது (உ-ம்) ரோமர் 16^{1-2}, 2கொ· 3^{1}, கொலோ. 4^{7-8}.

3 யோ. 13-15 முடிவுரை:

இந்த வசனங்கள் 2 யோ. 12ஐப் போல் காணப்படுகின்றன. இதுவே அக்கால மக்கள் தங்கள் நண்பருக்கு எழுதிய கடிதங்களை முடிக்கும் முறையாம். இதிலே யோவானின் அச்சபையின் நிலையைச் சீர்படுத்தக் கடிதங்களை எழுதுவதனுல் இனிப் பயன் இல்லை, தாமே அங்கே

போய் அம்மக்களை நேரில் கண்டு பிரச்சினையைத் தீர்த்தல் வேண்டும் என்று குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

3 யோ. 15. உனக்குச் சமாதானம்: இது யூதர்கள் வழக்கமாய்க் கூறிய வணக்கம். 'ஷலோம்' என்கிற மூல எபிரேய வார்த்தை முஸ்லீமியர் பயன்படுத்தி வருகிற 'சலாம்' என்கிற வணக்கச் சொல்லோடு தொடர்புடையது. அது கடவுளோடு உறவு கொண்டதால் உண்டான பூரண ஆரோக்கிய நிலையைக் குறிக்கிறது; ரோமர் 5^{1}, 1^{3}, 1 பேதுரு 5^{14} காண்க.

இந்த நிருபத்தைப் படித்த பிறகு ஆசியாவிலுள்ள திருச்சபையின் வளர்ச்சியைப் பற்றி இது நமக்குத் தருகிற சான்றுகளை மொத்தமாக ஆராய்வது நல்லது. அதற்கென்று நாம் முதலில் ஏனைய ஆதரங்களிலிருந்து தெரிய வருகிற செய்திகளைக் கவனிப்போம். அப்போஸ்தலர் நடபடிகளில், பவுல் ஒவ்வொரு சபையிலும் அதனதன் காரியங்களைச் செம்மையாய் நடத்துவதற்கு மூப்பர் குழுவை ஏற்படுத்தினர் என்பதை நாம் பார்க்கிறோம். (அப். 14^{23}). அந்தக் குழுவிலுள்ள அங்கத்தினர் அனைவரும் சமமான பொறுப்பும் அதிகாரமுமுள்ளவர்களாவர். அவர்கள் மூப்பர்கள் என்றும் அத்தியட்சர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். (அப். 20^{17}, ^{28}). மேய்ப்பர் நிருபங்களில் அதே ஒழுங்கு காணப்படுகிறது. (உ-ம். தீத்து 1^{5-9}). ஆயினும் அச்சபைகளின் மேல் பார்வை இப்பொழுது அப்போஸ்தலன் ஒருவனுடைய கையில் அன்று, அப்போஸ்தலனால் நியமிக்கப்பட்ட அவனுடைய பிரதிநிதியின் கையில் இருக்கிறது. அந்தியோகியா சபையின் அத்தியட்சரான இக்னாத்தியு என்பவர் தம் கடிதங்களை ஆசியாச் சபைகளுக்கு எழுதிய காலத்தில் (ஏறக்குறைய 110 கி. பி.), அந்த முந்திய நிலை மாறி ஒவ்வொரு சபையிலும் அந்த மூப்பர் குழுவோடு

அதற்குத் தலைவனாக ஒவ்வொரு அத்தியட்சர் காணப் படுகிறார். மேலும் அப்போஸ்தலர்கள் நியமித்த பிரதி நிதிகள் மறைந்திருக்கிறார்கள்.

இந்த வளர்ச்சியில் யோவானின் மூன்றாம் நிருபத்தில் கண்ட நிகழ்ச்சிகள் எந்த இடம் பெறுகின்றன? அதனை அறிய தியோத்திரேப்பு என்பவனின் இடம் யாது என்பதை ஆராயல் வேண்டும். சிலர் அவன் அச் சபையின் அத்தியட்சர் என்பர். ஆயின் யோவான் கூறியதிலிருந்து அவன் ஒழுங்காகப் பதவிக்கு நியமிக்கப் பட்டவன் எனத் தெரிகிறதில்லை. வேறு சிலர் அவன் மூப்பர் குழுவில் அங்கத்தினனாகி, மற்ற மூப்பர்களையும் சபையாரில் பலரையும் தன் வசப்படுத்திக் கொண்டு ஓர் அத்தியட்சருக்குரிய அதிகாரத்தைப் பறித்துக் கொண்டான் என்பர். வேறு சிலர், அவன் சாதாரணச் சபையான்தான் என்றும், அவன் அந்த அடிப்படையில் ஒரு கட்சித் தலைவனாகிக் கடைசியில் முழுச் சபையையும் தன் விருப்பப்படி ஆட்சி செய்ய முடிந்தது என்றும் கூறுவர்.

இம்மூன்று விளக்கங்களில் எது சரியென்று நம்மால் சொல்ல இயலாது. எனினும் இங்கே நாம் காண்கிற நிலை, ஏனைய புது ஏற்பாட்டு நூல்களில் (அதாவது அப். நடபடிகளிலும், மேய்ப்பர் நிருபங்களிலும்) காணப்படுகிற நிலைக்கும், இக்னாத்தியு என்பவரின் நிருபங்களில் காணப்படுகிற நிலைக்கும் இடைப்பட்ட ஒரு நிலையாகத் தெரிகிறது. ஏனெனில் தியோத்திரேப்பு அப்போஸ்தலர்களது ஆட்சியையும், அவர்கள் பிரதிநிதிகளது ஆட்சியையும் ஒழித்துவிட்டு, ஒவ்வொரு தனிச் சபையும் சுயாதீனமாக இயங்குவதற்கு வாய்ப்புத்தரப் போராடினவன் என்று தோன்றுகிறது. அது ஓர் அளவுக்கு நல்லது தான். எப்படியும் இக்னாத்தியு என்பவரின் காலத்திற்

குள்ளே அத்தகைய ஒரு சுயாதீன நிலை ஆசியா சபை களில் நிலவியிருந்தது. ஆயினும் அவன் முதன்மையா யிருக்க விரும்பிய நோக்கமும், பொல்லாதவார்த்தைகளை அலப்பிச் சபையாரைப் பலாத்காரம் செய்து, தனது நோக்கத்தை நிறைவேற்ற முனைந்த முறையும் கண்டிக்கப் படவேண்டியவையே. சபையின் வாழ்க்கையில் எதனை மாற்ற முற்படினும் அம்முறையைக் கையாளுவது சரி அன்று.

நமது காலத்திலும் "இளஞ்சபைகள்" என்னப்படுகிற ஆப்பிரிக்க, ஆசியச் சபைகள் மேல்நாட்டுச் சபைகளின் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றுக் கொண்டதை நாம் பார்த்திருக்கிறோம். ஒரு வேளை, இன்னும் சில காரியங் களில் மேல்நாட்டுச் சபைகளின் செல்வாக்கு அதிகமாகச் செயல்பட்டுக் கொண்டே இருக்கிறது எனலாம். அதனை நீக்க வேண்டும் என்கிற ஆசை இந்தியக் கிறிஸ்தவர்களின் உள்ளத்தில் எழுவது இயற்கைதான். ஆயின் வேதம் தியோத்திரேப்புவை நமக்கு முன்பாக வைத்து, நாம் உள்ளத்தில் கொண்ட நோக்கத்தையும், நாம் சுதந்திரம் பெறக் கையாளுகிற முறைகளையும் சீர்தூக்கிப் பார்க்க நம்மை ஏவுகிறது. சபையின் வாழ்க்கையில் எந்தத் தக ராறு ஏற்படினும், நாம் எவ்வளவு தூரம் அன்பினால் தூண்டப்பட்டு அன்பாகச் செயல்படுகிறோம் என்று நம்மை நாமே சோதித்தறிதல் வேண்டும். மேலும் ஒரு தனிச்சபை வேறெந்தச் சபையும் இல்லாமலிருந்தாற் போல் தன் சொந்த விருப்பப்படி இயங்க முடியாது. ஒவ் வொரு சபையும் கிறிஸ்துவின் முழுச் சரீரத்திலும் ஒரு அங்கமாகும். ஆகவே எல்லாச் சபைகளிலும் சில பொது வான முறைகளும் ஒழுங்குகளும் இருப்பது மிகவும் அவசி யம் (1 கொ. 4^{17}, 11^{16}, $14^{33, 36}$ காண்க) என்று மறந்து போகக் கூடாது.

கடைசியிலே இந்த நிருபங்களில் நாடோடி பிரசங்கியாரைப் பற்றி நமக்குத் தரப்படுகிற புத்திமதிகளைச் சற்று ஆராய்வது நலமாயிருக்கும். இரண்டாம் நிருபத்தில் யோவான் இவர்களைக் குறித்துச் சபையாரை எச்சரித்தல் வேண்டியிருந்தது. ஏனெனில் அவர்கள் தவறான கொள்கைகளைச் சபைகளில் பரப்பி வந்தனர். ஆயினும் மூன்றும் நிருபத்தில் காயு, சுற்றித் திரிந்த தொண்டர்களை உபசரித்தமையால் யோவானால் மெச்சப்படுகிறான். ஏனெனில் இந்தத் தொண்டர்கள் நற்செய்திக்கேற்றவாறு ஊழியம் செய்து, நற்செய்தியின் சத்தியங்களை அறிவித்து வந்தனர். ஆகவே அக்கால நாடோடிப் பிரசங்கியாரில் நல்லவர்களும், கெட்டவர்களும் இருந்தனர்.

இரண்டாம் நூற்றாண்டின் முற்பாகத்தில் எழுதப்பட்ட 'டிடகே' எனும் கிறிஸ்தவ நூலில் அதே பிரச்சினை காணப்படுகிறது. அக்காலத்தில் தீர்க்கதரிசிகள் எனப்பட்ட ஒரு வகுப்பினர் பல இடங்களுக்குச் சுற்றித் திரிந்து ஊழியம் செய்தனராம். அவர்களில் சிலர், உண்மையில் ஆண்டவருடைய செய்தியைத் தந்து பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டுப் பணி புரிந்தனர். வேறு சிலரோ, வேலை செய்யாமல் தங்கள் வாழ்க்கையைக் கழிக்க விரும்பி கேடான, ஒழுக்கத்தையும், பொய்யான கோட்பாடுகளையும் பரப்பிச் சபைகளைக் குழப்பநிலைக்குள்ளாக்கினர் (டிடகே, அதி. 11-13 காண்க).

நமது காலத்தில் அதே பிரச்சனை இருந்து கொண்டே இருக்கிறது. சிலர் சுயேச்சை ஊழியர் சபைசபையாகத் திரிந்து சபைகளில் ஆசி பெருகவும், எழுப்புதல் உண்டாகவும் தக்கதாக உண்மையாய்க் கடவுளின் செய்தியை அறிவித்து வருகிறார்கள் என்பதை நாம் யாவரும் அறிவோம். ஆனால் எல்லாரும் அப்படி இல்லை. எனவே, யோவானும்

டிடகே எனும் நூலின் ஆசிரியரும் கூறுகிறபடி, இத்தகைய நாடோடிப் பிரசங்கியாரைப் பரிசோதனை செய்தல் மிக அவசியமான ஒரு காரியம் ஆகும்.

யோவானும் டிடகே எனும் நூலாசிரியரும் அடிப்படையிலே இரண்டு பரிசோதனைகளை நமக்குச் சொல்லித் தருகின்றனர். முதலில் நாம் அத்தகையோரது போதனையைக் கவனித்தல் வேண்டும். அது வேதத்தில் வெளிப்படுத்தப்படுகிற நற்செய்திக்கு ஏற்றதாயிருப்பின், அதனையும், அவர்களையும் ஏற்றுக்கொள்வது தகும். இல்லையேல், நாம் நம் சபைகளில் ஊழியம் செய்ய அவர்களுக்கு இடம் கொடுக்கலாகாது. இப்படிப் பரிசோதனை செய்தல் சுலபமான காரியம் அன்று என ஒப்புக்கொள்ளல் வேண்டும். ஏனெனில் அதற்கு நம் சபையாருக்கும். சபைப் பெரியவர்களுக்கும் நல்ல வேத அறிவு தேவை. அது அநேகருக்கு இல்லாதிருப்பது நம் சபைகளில் காணப்படுகிற ஒரு பெரிய பலவீனமாயிருக்கிறது. இரண்டாவதிலே, நாம் இந்த நாடோடி பிரசங்கியாரது ஒழுக்கத்தைக் கவனித்தல் வேண்டும். அது உண்மையாகவும் அவர்கள் கூறுகிற செய்திக்கு ஏற்றதாகவும் காணப்படின், நாம் அவர்கள் நம் சபைகளில் ஊழியம் செய்ய இடம் கொடுக்கலாம்.

இந்தப் பரிசோதனைகள் ஒருவேளை எல்லாராலும் கைக்கொள்ளப்பட முடியாது. அவ்வாறாயின், யோவான் தம் மூன்றாம் நிருபத்தில் வேறொரு ஆலோசனையை நமக்குத் தருகிறார், அங்கு அவர் காயுவினிடம் அனுப்புகிற தெமேத்திரியு என்பவனைப்பற்றி நற்சாட்சி கூறி அவனைச் சிபாரிசு செய்கிறார். இந்த முறையை நம் சபைகளில் கடைப்பிடிப்பது மிகுந்த பயன்தரக் கூடும். நம் சபைத் தலைவர்கள், ஒரு வேளை அந்தந்தத் திருமண்டலத்தின் அத்தியட்சர், தங்கள் ஆதீனத்தில் பணிபுரிய விரும்

புகிற நாடோடிப் பிரசங்கியாரைத் தாங்களே பரிசோதனை செய்து, அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கவர்களாயிருப்பின், அவர்களுக்கு ஒரு சிபாரிசு கடிதத்தைக் கொடுக்கலாம். அப்போது அவர்கள் ஒரு சபைக்கு வந்து பிரசங்கம் செய்ய முற்படும்போது, அந்தச் சபையார் அத்தியட்சர் கொடுத்த சிபாரிசு கடிதத்தைக் கேட்டுப் பார்க்கலாம். அது இல்லையெனில், அந்த ஊழியர் அத்தியட்சரால் அங்கீகரிக்கப்படவில்லையென்பது பொருள். இவ்வாறு நம்முடைய அத்தியட்சர்கள் தங்கள் பொறுப்பிலுள்ள சபைகளைப் பட்சிக்கிற ஓநாய்களுக்கு இரையாகாதபடி அவர்களைக் காத்துக்கொள்ளும் தங்கள் கடமையை நிறைவேற்றலாம்.

திருப்பணிவிடையாளர் பாடப் புத்தகங்கள் - 1970

1. எசேக்கியேல் — S. ஜேம்ஸ் பால்
2. பரி. யோவானின் நிருபங்கள் — A. R. McGlashan
3. கிறிஸ்தவ வழிபாடு — தயான்சந் கார்
4. கடைசி கால சம்பவங்கள் — D. M சாமுவேல்

A commentary on the Epistles of St. John

By

The Rev. A. R. McGlashan, M. A.,
Lecturer, Tamilnad Theological College, 1966 - 1969
TIRUMARAIYUR.

Copies can be had from:

The Diocesan Office, Tirunelveli-2
The Diocesan Book, Depot, Tirunelveli-2.
C. L. S. P. B. 501, Madras.
The Editor, C. S. I. Series, Tirumaraiyur.

PRICE: Rs. 1.75